உ

கணபதி துணை

மணிமேகலா

அல்லது

தவராஜ ரருள்பெறுஞ் சிவராஜ நாட்டரசி

ஓர் அற்புத பைந்தமிழ் நாவல்

தமிழ்ப் பண்டிதர்

மயிலை - சோமசுந்தர முதலியாரால்

இயற்றப்பட்டு

சென்னை:

கார்டியன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915

[விலை ரூபா ௧. ௪

உ சிவமயம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

20 - 6 - 1937.

MADRAS: G. C. LOGANATHAM BROS.,
THE GUARDIAN PRESS, 1915.

8

To

Sreeman

S. Rm. M. Ct. Pethachi Chettiar Avl.

M. R. A. S.

Zamindar of Andipatti

Vice-President of Madura Tamil Sangam

and

Chairman of the Municipal Council, Karur

In appreciation of

His Devotion to his Love for Tamil Literature

This Work is Dedicated by his friend

the Author

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை, முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப்புலவரும்

சைவசித்தாந்த மஹாசமாஜகாரிய நிருவாகருள்

ஒருவருமாகிய

மணிமங்கலம்

ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

பொறித்த

சிறப்புப்பாயிரம்

உண்ணவுண்ண உவட்டா உயரிய அமிழ்தம் புரையும் தமிழ் மொழியானது கற்றற்கும் கேட்டற்கும், ஒருவர் கருத்தை மற்றொருவர்க்கு உணர்த்தற்கும் பாடுதற்கும், எளியதும், சாத்துவிககுணத்தைப் பெருக்கும் மெல்லோசை இன்பம் கெழீஇயதும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்களைக் குறுவாழ்க்கைத்தாய உயிர்கள் எய்துதற்கு உரியதுமாய தனிமொழியாம். இதன்கண் ஒருவற்கு இம்மை, மறுமை, இறுதியின்பம் ஆகிய மூன்றும் அடைதற்பாலனவாய அரிய நூல்கள்பல மிளிர்தலின் இது குன்றலிலா வளங்கெழு மொழியெனக் கூறல் மிகையாகாது. நிற்க. இப்பழந்தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் முக்கூற்றதாம். இம்மூன்றனுள் நாடகத் தமிழே தனிசிறந்ததாகும். என்னைகாரண மெனிற் கூறுதும்; நாடகத் தமிழ் இயற்றமிழையும் இசைத்தமிழையும் விரவி யிருத்தலினானும் கற்றார், கல்லாதார் ஆகிய இருதிறத்தார்க்கும் இன்பூட்டும் இயல்வாய்ந்ததாயும், மக்கள் மனஉணர்வையும் அறிவையும் கௌவித் தன் மாட்டீர்த்துக் கோடும் ஆற்றலமைந்ததாயும், உலகநடை பலவற்றையும் புனைந்து புலனுக்கு உணர்வு சலிக்காவண்ணம், அழகுறக் காட்டுவதாகவும் விளங்குதலின் என்க. நன்மை, தீமைகளின் இயல்பனைத்தும் இனிது தெளித்துரைக்கும் நாடகம், எல்லா நலத்தையும் எல்லாத் தீமையையும் எல்லா எழிலையும் ஒருங்கே ஒரிடத்திதே காட்டும் புதுவதோர் உலகம் போன்றதாம்.

இனி, நாடக வரலாற்றைச் சிறிது ஆராயப்புகின் அஃது உலக இயற்கையில் நடைபெறும் ஓர் ஒழுகலாறே என்பது நுண்ணறிவுடையார் யாவர்க்கும் துண்ணெனத் தோன்றும். யாங்ஙனமெனில், ஒருவன் மற்றொருவன் சாலச் சிறந்த ஒரு தொழிலையேனும் இறப்பவும் இழிந்த ஒரு வினையையேனும் முடிப்பக் காணின் அதனைப் பெரிதும் வியந்து நோக்கி, அவ்வாறே பிறனொருவனுக்கு நனி விளங்கற்பொருட்டும், தான் துய்த்த இன்பம் அவன் நுகர்தல் நிமித்தமாகவும் தான் கண்ட வண்ணம் கருவிகளாற் செய்து காட்டுமன்றே. அதனைப் பொருவதே நாடகம் என்பது பெறப் படுதலின், அஃது உலக இயற்கை நிகழ்ச்சியே என்பது தேற்றமாம் என்க.

அல்லதூஉம், வையத்து வாழும் மாந்தர் தத்தம் அறிவு, உணர்வுகட்கு நன்று இயைந்தவற்றினையே ஓம்பி ஒழுகலும் இன்புறுதலும் வழக்காறுதலின் நாடகமே அவர்க்கு இறப்பவும் உவப்பிக்கும் நற்கருவியாம் என்பது கிளவாமே அமைந்து கிடக்கும் என்பது.

இத்தகைய நாடகங்கள் பரவை வழக்கினின்றும் செய்யுள் வழக்கேறிய காலம் வரையறுத்துக் காட்டற்குரியன ஏதும் இக்காலத்துக் கிடைத்தற்கு அருமையாக இருத்தலின் அதனைத் தெரித்துக் கூறுதற்கு இயலவில்லை எனினும், சிறிதேறத்தாழ இரண்டாயிரம் அகவைகட்கு முன்னரே நந்தம் தேனொழுகுந் தீவிய செழுந்தமிழ் மொழியில் கூத்தநூல் பல குழுமித் திகழ்ந்தன என்றுரைத்தல் இழுக்காதென்க.

அந்தோ! அந்தோ!! என்னே! தமிழ்மக்கள் ஆற்றிய தவப்பேறு! அக்காலத் திலங்கியனவாக உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் என்னும் அருந்தமிழ்வாணர் எடுத்தாண்ட பன்னூல்களுள் எந்நூலையேனும் கைவலம் பெற்றுக் களிப்புற்றேமோ? பெயர் மாத்திரையிற் கேட்டுப் பேரவாக்கணமிழ்ந்து அவை கிடைக்கப் பெருமையின் உள்ளம் புழுங்கினோ மன்றோ?

மதிவாணர் நாடகத் தமிழ்நூல் சில புலவர் மாட்டுளதெனக் கேட்டலுற்று ஒருபால் உவகையும் அது வெளிவராது மாசுண்ட மணியென மறைந்து கிடைத்தலின் ஒருபால் துயரும் ஒருங்கே எய்துகின்றேம். இனி, 'தூயஞான நிறைந்த சிவச்சுடர்தானேயாகிய தன்மையாளன்' என விதந்தோதப்பெறும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பிய உரையின் கண், இசைத்தமிழ் நூல்களும், நாடகத் தமிழ் நூல்களும் காமவுணர்வை எழுப்புவன என எண்ணிப் பிற்காலத்துச் சான்றோரால் ஒதுக்கப்பட்டன என்று கூறியிருத்தலின் அக்காரணம் பற்றி அவை ஓம்பாதொழிந்தனவோ அறியகில்லேம்.

கோவைப் பிரபந்தமும் நாடகத்தமிழென்றே கருதப்படும். எத்துணையோ எண்ணிறந்த நூல்கள் இன்றும் நாடகப் பொருண்மை கருக்கொண்டு வெண்மை நீங்கி ஒண்மையோங்கி ஒளிர்கின்றன. அவையிற்றைக் கருவியாக வைத்து ஆயிரமாயிரமாக நூல்களைப் பெருக்கி அறிவைப் பரப்பிச் சிறக்கலாமெனினும், நந்தம் அருந்தமிழ் புலவாணர்கள் இன்னும் தங்கள் பெருந்துயிலுணர்ந்து அறிவு தலைகூடப் பெற்றனராகக் காண்கிலம். இடையில் இடுக்குற மகத்துப்புக்கச் சனியெனப் புகுந்த முறைமையையே பெரிதெனக்கருதிப் பண்டைத் தொல்லாசிரியர் முறைமையையுங் கைவிட்டு, அந்தாதி, நிரோட்டகம், யமகம், திரிபு முதலிய சொற்குழுஉக்களை உணர்தற்கே நீண்ட காலம் கழிப்பிப் பின்றைத் தாமும் அங்ஙனே சிலவற்றைப் புதுவதாகப் பாடி இன்புற்றுப் புலமை நிரம்பாதும் கற்கற்பாலனவற்றை நன்கு கல்லாதும் வாளாது கழிந்தொழிகின்றனர்.

'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங் கல்லார் அறிவிலாதார்' என்னும் அருமைத் திருக்குறளின் பொருளையேனும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினானே' என்னும் நுண்ணிய இலக்கண விதியையேனும் கவனியாக் குறை என்னே!

எதிர்காலத்து இவ்விவை இவ்வாறு முரண்படும் என்பதை முன்னரே உணர்ந்து அக்காலத்துக் கியைய ஒள்ளியான் ஓர் புலவன் நூல்செயற்பாலன் என்னும் நுண்பொருள் தெரிக்கும் 'எதிரதுபோற்றல்' என்னும் உத்தியையுங் கருதாதொழிவது காலக்கொடுமைகொல்! ஊழின் வலிகொல்!! நிற்க

இதுபோழ்து நம்கெழுதகை நண்பர் **வித்துவான் சைவஸ்ரீ சோமசுந்தர முதலியார் அவர்கள் 'மணிமேகலா'** என்னும் தலைக்குறி புனைந்த ஒருநாடகத்தை விடியல் எழூஉம் வெள்ளியெனத் தமிழகம் கண்ணுற்றுக் களிமீக்கூர எழுதி வெளியிட்டனர். அந்நூலின் அருமை பெருமைகளை யாம் நோக்கின அளவில் ஒரு சிலகூற ஒருப்பட்டுப் பாயிரமாக இதனைஎழுதத்துணிந்தேம்

முதற்கண் கதை நடையைக் கவனிப்பின் அதுமிக அழகுறப் படிப்போர் மனவெழுச்சியைச் சாலப் பெருக்கி உணர்வு சலியாவண்ணம் நன்கு எழுதப்பட்டுளது. சிருங்காரம், நகை, சோகம், வீரம் முதலிய சுவைகள் துறுமிச் சிறக்கின்றது.

'சுவைபலவென்று கூறுவார் கூறுக; யாங்கூறுவது இன்பச்சுவை யொன்றனையுமே' யென வடநூலுட் போஜராஜன் பாராட்டியாங்கு இந்நூலாசிரியரும் இன்பச் சுவையினையே பதமுறக் காட்டுகின்றார். அது தானும் இழிகுணமாகிய காமத்

தின் பாற்படாது உயர்குணமாய காதலின் பாற்ருய், உள்ளத் துணர்வே பற்றி நிகழ்வதாய் அமைக்கப்பட்ட அழகு வியத்தன் மாலைத்தென்க.

இனி, நகைச்சுவையில் நம் நண்பர் துறைபோனவர் என்பது அவருடன் ஒரு நாழிகைப்பொழுது உரையாடுநர்க்கும் விளங் கும். நகைச் சுவை நடத்தற்பொருட்டு ஆண்டாண்டுப் பொருள் களில் எடுத்து விதக்கும் நுண்மை புலவரானும் போற்றற் பாலது.

எவ்வாற்ருனும் எழிலார்ந்து துலக்கு முறுவது பத்திச்சுவை யாம், இது பத்தி மேலீடுடைய அன்பர்கட்குப் பேரின்பம் பயக் கும் என்பதில் எட்டுணையும் ஐயப்பாடின்று. இந்நூல் இடையில் வரும் சோகாசம் கன்மனத்தினரையுங் கரையச் செய்யும் கவின் பெற்றது ; சலகைா உள்ளத்தையும் கலக்குவது.

இடையிடையே மிடைந்துள்ள பழமொழிகளும் கட்டுரை களும் ஆசிரிய வசனங்களும் இந்நூலை அணிசெய்கின்றது. இந் நூல் ஆசிரியர் தாமாகப் பாடிச் சேர்த்துள்ள பாக்கள் செம் பாகமாகவும் சமயவாற்றலைத் தெளிவிப்பனவாகவும் எதுகை நயம், மோனைநயம், ஓசையின்பம், பொருளமைதி, கற்பனை அழகு முதலிய பலவளஞ் செழுமி அவாது பாவன்மையைப் புலப்படுத்துகின்றன.

தெய்வச்சேக்கிழார் பெருமானுர் முதலிய அருளாளர் திரு நாமங்களைக் கிளந்தெடுத் தோதுவது அவாது சான்ருேர் பக்தி யை விளக்குகின்றது. ஒவ்வொரு சொல்லும் தீம்பலாவின் தேம் பழச் சுவை மான மதுரம் பொதிந்து தமிழ் மணம் கமழ்கின்றது. நடையோ இன்னேசை மேவிப் பளிக்குப் பாறையி லுருட்டிய வாழைக் கொழுங்கனியெனத் தீவிரம்,மந்தம் முதலிய கதிவழுக்க ளின்றி நடைபெறுகின்றது.

கதாநாயகன், கதாநாயகி முதலிய பாத்திரங்களின் குணங் கள் மதிக்கத்தக்கனவாக அமைந்துள்ளன. பாத்திரங்களுக்கு எடுத்த குணங்களைக் கடைவரையில் பிறழாமற் காட்கின்ருர். இதனை நாடக அரங்கின்கண் நடிக்க விரும்புநர் சில பகுதிகளை எண்மையாக விலக்கிக் கொள்ளலாமாகலின் அவர்க்கும் இது பயப்பாடுடையதேயாம். இந்நூலாசிரியர் இன்னும் இந்நூல் போல் பன்னூல்கள் இயற்றித் தமிழுலகத்திற் குபகரித்தல் வேண்டுமென்றும், இது நின்று நிலவவேண்டுமென்றும் எல் லாம் வல்ல பெருமான் திருவருளை வழுத்துகின்றேம்.

மணி. திருநாவுக்கரசன்.

SELECT OPINIONS

Rao Sahib T. RAMAKRISHNA PILLAI AVL.

B.A., F.R.H.S., F.M.U.

A member of the Board of the Dravidian languages; Chairman of the Tamil Board of Examiners of the University of Madras; Author of 'Padmini', 'Life in an Indian Village,' 'Tales of Ind', etc.

The book entitled Manimekhala by Mr. M. A. Somasundara Mudaliar is excellent and I Congratulate the author on this his maiden attempt.

MR. P. SAMBANDA MUDALIAR AVL., B.A., B.L.,

HIGH COURT VAKIL, MADRAS.

I have read "Manimekhala" by Mr. Somasundara Mudaliar; I welcome it as a sign of the times, that an ancient language should have its literature enriched by work of this kind.......It is readable.

All lovers of the Tamil tongue should encourage such works.

MR. S. R. SRINIVASA PILLAI AVL.

AUTHOR OF KIRUBAMBIKAI &c.

I ran through some pages of your Novel entitled "Manimekala" and it is with much pleasure I give the following opinion :—

Apart from the excellent style of the language, the brevity of expressions, the appropriateness of the stanzas appearing here and there and the harmony of the plot which is in reality appreciable, I consider your Novel is capable of serving a singularly grand purpose in as much as it creates a strong desire in every reader to know more about Saint Sekkilar and his incomparable work. It is therefore my earnest desire that the Novel will find a place in every Tamilian hand.

சாத்துகவிகள்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்களியற்றிய

பன்னிருசீர்க்கழிநெடில் விருத்தம்.

சிவமணமுஞ் சிவசாத னமணமுஞ் சிவஞானந்
　　திகழப் பெற்ற
செந்தமிழின் செம்மணமு நவரசகற் பனைமணமுஞ்
　　செறிந்தி லங்கி
நவநவமாய் விளங்குறுசொற் களின்மணமும் படிப்போர்க
　　ளுவில் வீச
நண்ணியதோர் மணிமேக லாவெனுநூ லினையியற்றி
　　நலக்கச் செய்தான்
பவமொழிக்கும் பூசியினைப் பெருஞ்செல்வ மாயுன்னும்
　　பாக்ய முற்றோன்
பசுருமருண் யொழித்தேவ ரிணையடியைக் கனவினிலும்
　　பரவி வாழ்வோன்
தவவிலக்கி யவிலக்க ணக்கடலி லேதிளைத்த
　　தகுதி யாளன்
தனிமயிலைச் சோமசுந் தரனாவ லோனாகுஞ்
　　சதுரன் றானே.

சென்னை கவர்ன்மெண்ட் பெண்கள் கலாசாலைத்

தமிழ்ப் பண்டிதர்

கா. நமச்சிவாய முதலியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

முத்தமிழும் விரவிவரும் நலங்கொண்ட
　　நாடகமே முந்நீர் வைப்பில்
எத்திறத்தும் பயனுளதா மென்றோர்ந்திங்
　　கிசைப்புலவர் இயற்றி யிட்டார்
அத்தகைய நலத்தினையே யினிதளிப்பா
　　னாடகமொன் றளித்தா னின்று
வித்தகநன் மணிமேக லாவென்னும்
　　பெயர்நிலவி விளங்க மாதோ.

அன்னவன்யா ரெனிற்சைவ நெறிநின்று
மெய்யடியார் அடைவே யென்றும்
மன்னவரு நிதியென்ன மனங்கொண்டோன்
தண்டமிழின் மணமிக் குள்ளோன்
பொன்னனைய குணமுடையான் பிரசங்க
மாரிபொழி புயலே யன்னான்
தன்னரிய பெயர்சோம சுந்தரமா
லெனவிளங்குந் தமிழ்வ லோனே.

வித்துவான்

ஸ்ரீமான் ஆ. மே. சென்னகேசவுலு நாயுடவர்கள் மாணவரும்

கோ. பாசூர் பிள்ளையவர்கள் குமாரருமாகிய

ஸ்ரீமான் கோ. பா. தங்கவேற் பிள்ளையவர்கள்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நாவலிற் சிறந்த நாவலென் றரிய
நாவலர் யாவரும் வியந்திங்
காவலுற் றிடமா திருநிணைப் பொலிவு
மரும்பொருள் பெறுஞ்சொலின் மலிவு
மாவிலக் கணமு நிறைந்தொரு மணிமே
கலையென வகுத்தவன் றன்னைப்
பூவிலக் குமியைப் பொருவுநல் லணங்கே
புகன்றிடக் கேட்டிடு வாயே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மண்டலைகள் வந்தெறியும் வண்புணரி சூழ்தருமிம்
மண்ட லத்தின்
கண்டலைமை யாந்தலமாய்க் கபாலீசன் றனைமுன்னங்
கவுரி யாரங்
கொண்டலைநண் பாக்கொண்ட குலமயிலி னுருக்கொண்டு
குறித்த தான
வண்டலையுந் தண்டலையு மலர்த்தடமும் புடையுடுத்த
மயிலை யானே.

நாரகலா மனநலத்தா னவின்றிடும்வே ளாண்குலத்தா
னயக்குந் திவ்ய
சாரகலா வினிற்சிறந்தோன் றண்ணருள்மா ருக்கயிலேச்
சயிலத் தோனே
பாரகனு வினுமறவாப் பண்பனென்ற னண்பனினிப்
பார்சை வப்ர
சாரகனு கியபுலமை நிறைசோம சுந்தரப்பேர்த்
தமிழ்வ லோனே.

வாலாஜாநகர் முனிசிபல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஆ. கமலநாத முதலியார் அவர்கள் இயற்றியது

செந்தமிழ் முழுதுஞ் செவ்வனே கற்ருேன்
தேடரும் பெரும்புகழ் பெற்ருேன்
சிந்தையை யென்றுஞ் சேக்கிழார் பெருமான்
திருவடித் துணையினில் வைத்தோன்
விந்தைசேர் சைவ நற்பிர சங்க
மெனுமழை விடாதுபெய் நாவோன்
சந்தமார் சோம சுந்தரனென்னுஞ் சதுர்பெறும்
பெய ருறும் புலவன்.

நலத்தினில் மிகுந்த மாந்தர்கட் கான
நல்வழி பற்பல நாட்டிக்
குலத்தியல் மேலாங் குணத்தியல் கோதில்
குடிபிறப் பியல்பையுங் காட்டிப்
புலத்தினிற் சிறந்தோர் புகன்றநூற் பொருளைப்
போந்தபல் விடத்திலும் பூட்டிச்
சலத்தினை வெல்லுந் தகுதியுஞ் சைவ
சமயமெய்த் திறமையுங் காட்டி

ஒழுக்கமுந் பூதி சாதனச் சிறப்பு
மொருங்கமைத் துலகினுக் குதவா
வழுக்களைக் களைந்து பெறப்படு மின்ப
வளத்தினி லெவற்றினு மிகுத்து
மெழுக்கெனப் படிப்போ ருளத்தினை யுருக்கு
விண்மணி மேகலா வென்னு
முழுக்கவின் படைத்த நாவலொன் றளித்தான்
முத்தமிழ்க் கீதொரு முத்தே.

உ

சிவமயம்

நன்றி கூறல்

முன்னுரையாக யான் சொல்லக் கிடந்தது ஒன்று மிலது. நன்றி கூறுதலாகிய தொழிலே செய்யக்கிடப்பது.

பின்னுரையாய் மிளிர்கின்ற முன்னுரை பகர்ந்த பாவலர் திலகராகிய கெழுதகை நண்பர் ஸ்ரீ மணி-திருநாவுக்கரசு முதலியார் அவர்கட்குப் பன்முறை மனமுவந்த வந்தனம் முனமுவந்து தந்தனம்.

இந்நூல் வெளிவந்து தமிழுலகத்துக்குப் பயப்பாடுடைத்தாக விளங்குதற்குக் காரணமாக இருந்த அன்பிற் சிறந்த நண்பர்கள் அனைவர்க்கும் உள்ள முவந்த வந்தனம் அளிக்கின்றேம்.

இந்நூலை முதன்முதல் அன்புகூர்ந்து அச்சுக்குக் கொடுத்து உதவிபுரிந்த ஸ்ரீமாந் ஓ. ஸி. முருகேச முதலியார் (Proprietor, Winterbotham and Co, Madras) அவர்களையும் மேஸர்ஸ் ஜி. ஸி. லோகநாதம் பிரதர்ஸ் அவர்களையும் பெரிதும் நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளேம்.

எம்பால் அன்பு சிறந்து சாத்துகவிகள் காலந்தாழ்க்காமல் தந்த தமிழ்ப்புலவர்கட்கும், அபிப்பிராயங்கள் அளித்த பிரபு கனவான்கட்கும் நெஞ்சார்ந்த வந்தனங் கூறுகின்றேம்.

இந்நூல் முடிதற்கு மூலகாரணமாக இருந்த General Traffic Manager's Office M. and S. M. Ry., பிரமஸ்ரீ குடந்தை கோபாலாசாரியார் அவர்கள் பால் எழுமையும் மறவா உழுவலன்பு பாராட்டுங் கடப்பாடுடையேம்.

எல்லாவற்றிற்கும் பரமகாரண பூதராயுந் தோன்றாத் துணையாயும் நின்று முடிப்பித்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுர் அழகிய அருளை எண்ணி எண்ணி உருகும் பேறு பெறுவேமாக.

> 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
> வானகமும் ஆற்றல் அரிது'
> 'கைம்மாறு கருதாக் கடப்பாட்டு மாரிமாட்டு
> என்னாற்றுங் கொல்லோ வுலகு.'

மயிலை-சோமசுந்தரன்..

உ

பாத்திரங்கள்

சுசீலர்	கதாநாயகன்
சுசீலை (மணிமேகலா)	கதாநாயகி
நீலலோசனா வனஜலோசனா மரகதா	தோழிகள்
ஜெயசீலன்	சுசீலையின் தந்தை
விஜயப்பிரதாபசீலர்	சுசீலரின் தந்தை
சிவபூஷணன் மதிசீலர் ஜயநந்தர்	சுசீலரின் தோழர்கள்

சேவகன் முதலினோர்.

நிகழ்விடம்

விஜயபுரம்	சித்திரமாளிகை வாணிவிலாசம் கல்யாணகூடம் சிங்காரமாளிகை சுசீலபவனம் நந்தனவனம்

ஏனைய பாத்திரங்கள் இரண்டாம் பாகத்தில் குறிக்கப் பெறுவர்.

தமிழ்ச் சிறப்பு.

தமிழ்தமிழென் றெவ்வெவருந் தாலசைத்து மிம்மகிமை
தமியனுக்கின் றுணர்த்தினையே தமிழணங்கே! வாழியரோ.

இமிழ்திரையா ரார்கலிசூ ழிவ்வுலகு மெவ்வுலகும்
அமிழ்தமெனப் பாராட்டு மருமைமிகுந் தமிழணங்கே!

பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றறியாப் பேதையற்கச்
சீரின்பந் தருவதருஞ் செந்தமிழென் றுணர்த்தினையே.

சொற்றிடினும் வாய்மணக்குந் தொட்டிடினுங் கைம்மணக்குங்
கற்றிடினும் புகழ்மணக்குங் கவின்றெரிந்தல் தகவேயோ.

தீங்கனியே நீயுரைத்த தீங்கவியைச் செவிமடுத்தேன்
ஈங்குனியேன் செயல்மறந்தேன் எழிலணங்கே! ஓங்குகவே.

இனித்தநறுந் தேனினுமிக் கினிமையெமக் கூட்டுகின்ற
தனித்துலவுந் தகைமைதனைச் சாற்றலுமென் னளவேயோ.

புலவரெலாங் கூட்டுணவிப் புவனமெலாம் வழங்கிடவே
நிலவுமுன்றன் பெருமைதனை நிகழ்த்திடலென் னளவினதோ.

சிவானந்தத் தேன்ததும்புந் தெள்ளுதமிழ்ப் பெரும்பயனும்
பவானந்தப் பேறடைந்தேம் பண்ணுதவம் பலித்ததுவே.

தமிழறியுந் தெய்வமெனத் தனிமுதலும் விளங்குமெனில்
தமிழருமை யறியாதார் தவம்புரியாத் தன்மையெனே.

மெய்ம்மறையுங் காண்பரிய விழுப்பொருளைத் தூதுசெலச்
செய்ததெனி லத்தமிழின் றிறத்தினையா ருரைப்பவரே.

அகத்தியனூர் முதலாய அளவில்பெரு முனிவரெலாஞ்
சகத்தினின்மேம் பட்டதெலாந் தண்டமிழா லன்றுகொலோ

(215-ம் பக்கம் பார்க்க.)

தமிழ்ச் சிறப்பு

அழகென்னுஞ் செம்பதத்தை யழகுசெய
வவதரித்த வாற்றைக் கேண்மோ
அழகென்னு மொழியின்முத லக்காமெவ்
வெழுத்தினுக்கு மாதியாம் போல்
அழகென்னுஞ் சொலினிரண்டா மக்காமெப்
பாடையினு மமையா வாறுன்
அழகமைந்த ததிசயமே அவ்வியப்பைக்
கடையெழுத்தே அறியு மாலோ.

(தெளிவுரை.) அழகு என்னும் அழகிய சொல்லை அழகு செய்யப்பிறந்த அதிசயத்தைக் கேட்பாயாக.

அ.—எல்லாப் பாஷைகளிலும் உள்ள எழுத்துக்கள் அனைத்தினுக்கு முதலாதல்போல, உலகின்கண் மற்றைய மாதர்கட்கமைந்துள்ள அழகினு முதன்மையான போழது வாய்ந்து,

ழ.—வேறு எப்பாஷைகளினுங் கிடைக்கப்பெருததாய்த் தமிழொன்றனுக்கே உரியதாயிருத்தல் போன்று, பிறர்பாற் காண்பதற்கரிய விசேடம் அமைந்து விளங்குகின்ற உனது ஒப்புயர்வற்ற எழிலின் சிறப்பே வியக்கத்தக்கது. அவ்வுண்மையை

கு.—உலகம் (உயர்ந்தோர்மாட்டே என்பது பிரமாணமாதலால் அத்தகைய சாமுத்திரிகாலட்சணமுணர்ந்த) பெரியோரே அறிவர்.

(161, 162-ம் பக்கங்கள் பார்க்க.)

உ

வெற்றிவேலுற்றதுணை

மணிமேகலா

அல்லது

தவராஜ ரருள்பெறுஞ் சிவராஜ நாட்டரசி

முதல் அங்கம்

களம் 1

இடம்—*விஜயபுரம், சித்திரமாளிகையிலுள்ள வாணி விலாசம்.*

காலம்—*மாலை.*

பாத்திரங்கள்—*வனஜலோசனு, மாகதம், சுசீலை.*

வனஜலோசனு.—*என்னடி மரகதா? போதுபோகிறதுந் தெரியவில்லையோ?*

மரகதம்.—*[வாசித்துக்கொண்டிருக்கின்றனள்.]*

வன.—ஐயையோ! நல்லாயிருக்குதடி. அது என்ன படிப் படி அப்படி வாசித்துக்கொண்டிருக்கின்ருயே? என் முகத்தையும் பாராமல் கொஞ்சநேரம் வாசிக் கின்ருய். சற்று மேலே பார்த்து யோசிக்கின்ருய்.

மர.—வாசிப்பதை விட்டு வனஜா வதனத்தைப் பார்ப்ப தால் வருவதென்னடி? வெறுமனே யோசனைசெய்து

கொண்டிருக்கின்றேன் என்று நினைத்துக்கொண் டாய்?

வன.—அப்படியா? காரணத்தோடா கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாய்? ஆனல் என்ன புத்த கங்களடி அவை? ஒன்று பெரிதாயு மற்றொன்று சிறியதாயு மிருக்கின்றதே.

மர.—பெரிய புத்தகங்களே யாகும் இவ்விரண்டும்.

வன.—பெரிய புத்தகமென்றும் ஓர் சிறிய புத்தகத்திற் குப் பேரிருக்குமா?

மர.—ஒன்று பெரிய புத்தகமென்றும் மற்றொன்று சிறிய புத்தகமென்றும் எவ்வாறு தெரிந்துகொண்டாயடி?

வன.—ஒன்று பார்வைக்குப் பெரியதா யிருந்தபடியால் பெரியதென்றும் மற்றொன்று சிறியதாயிருந்தபடி யால் சிறியதென்றுஞ் சொல்லினேன்.

மர.—பார்வைக்குப் பெரியனவாகத் தோற்றுவனவெல் லாம் பெரியனவென்றுஞ் சிறியனவாகக் காணப் படுவனவெல்லாஞ் சிறியன வென்றுஞ் சொல்லி விடலாமா?

வன.—ஏன் சொல்லலாகாது?

மர.—உம். பனைமரம்போல உயர்ந்தும் ஒதியனைப்போல் பருத்து மிருக்கின்ற உன்னை யொப்பாரைப் பெரிய வர்களென்றும் அங்குஷ்டப் பிரமாணமாயுள்ள அகத்திய முனிவரைச் சிறியவரென்றுஞ் சொல் வாய்போலும்.

வன.—ஆம். அதில் தடையென்ன? இதை யறியாதவளா பெரிய புத்தகங்களை வாசிக்கப் போகின்றாய்?

மர.—அடி பேதாய்! உன்னுடன் இவ்வீண் வார்த்தைகள்

பேசுவதால் என்னறிவுங் குன்றும்போலும். இக் காரணத்தின் பொருட்டல்லவா நீ யழைத்தபோது விடை கொடாதிருந்தனன். எட்டேகால் இலட்சணமே! உன் அவலட்சணந் தெரிந்துதான் உன்னை மாணவகியாகச் சேர்க்காமல் புட்பந் தொடுக்கும் உத்தியோகங் கொடுத்திருக்கின்றனர் சுசீலையம்மையார். செல்லடி செல். மாலை தொடுத்தாயிற்ரு? உனக்கும் இவ்வேதங்களுக்கும் வெகுதூரம்.

வன.—என்ன? நான் சுசீலையம்மைக்கு மாணவகியல்லவா? ஏனடி எனக்கும் அப்புத்தகங்களுக்கும் வெகு தூரம்?

மர.—அகத்திய மகாமுனிவரைச் சிறியவர் என்னலாம் என்ற உன்போன்ற அறிவிலிகளுக்கு இப்புராணங்களின் பெருமை யென்னடி தெரியும்? கழுதை யறியுமா கந்தபொடி வாசனை?

வன.—அவ்வித பெருமை யுடையனவா அப்புராணங்கள்?

மர.—பெருமை யுடையன எனவுமா கேட்கின்ருய்? என்ன சன்மமடி உன் சன்மம்? இவ்வுலகும் எவ்வுலகும் புகழ்ந்து போற்றும் அந்நூல்களின் பெருமை நீ அறியாமலிருப்பதும் புண்ணியக் குறைவேயாகும்.

வன.—உலகில் உள்ள மற்ற நூல்களெல்லாம் பெருமை யுடையன வல்லவோ?

மர.—தன்னை யறியா மக்களாற் செய்யப்பட்ட நூல்களெல்லாம் பயனும் பெருமையு முடையனவாகா.

வன.—இதுவரையில் அந்நூல்களின் பெருமையைப்

பற்றிதானே பேசிவருகின்றோம். "பயனும்" என்று ஓர் சொல் ஏனடி சேர்த்தாய்?

மர.—வேலையாய்த்தான் கூறியிருப்பேன். என்னையும் உன் போல் வேளையில்லா வேளையில் வேலையைவிட்டுப் பயனிலாச் சொற்களைப் பகர்வேன் என்று நினைத்துக்கொண்டாய்?

வன.—என்னென்ன பேசுகிறாயடி மாகதா? ஒன்று கேட்டதற்கா ஒன்பது பேசுகிறாய்? வாஸ்தவந்தான். வேளையில்லா வேளைதான். அம்மையார் வரும் வேளைதான். வேலையையும் விட்டுதான். வீணாகவா? ஆவலாய்த்தானே கேட்கின்றேன்.

மர.—என்னடி கேட்கிறாய்?

வன.—அதுதானடி. என்னமோ சொல். சொன்னாயே மறந்துவிட்டேனே இதற்குள்.

மர.—எனக்கு ஞாபகமில்லையே. என்னடி செப்பினன்?

வன.—பயன்! பயன்! நூலுக்குப் பயனென்னடி?

மர.—ஈதறிந்திலையா? பயனிலதேல் பெருமை யேதடி நூலுக்கு?

வன.—அம்மையார் சொன்ன ஞாபகமாய்த்தானிருக்கிறது.

மர.—ஞாபகமாய்த்தா னிருக்கிறதா? அவ்வளவு சந்தேகமா? நேற்று மாலைதானே சொல்லிக்கொண்டிருந்தனர். "அறம்பொருளின்பம் வீடடைதனூற் பயனே" என்றாரே இலக்கண நூலார்.

வன.—ஆமாம். நமது சுசீலையம்மையார் அதற்குப் பொருளுஞ் சொல்லினாரல்லவா?

மர.—ஆம். இந்நூல்கள் தர்மார்த்த காமமோட்சம் என்னுஞ் சதுர்வித புருடார்த்தங்களின் இலக்கணங்

களை உணர்த்தி அந்நெறி நின்றவழி வீட்டின்ப மாம் பெரும்பயனை யெய்துவிக்கும் பெற்றித்தாத வினன்றே அங்ஙனம் கூறினன்.

வன.—ஆனால் இந்நூல்கள் தன்னையறிந்த பெரியோர் களாற் செய்யப்பட்டனவோ?

மர.—எத்தனை முறை சொல்வதடி? தன்னை யுணர்ந்து தலைவனையுங் கண்ட பெரியோர்களாற் செய்யப் பட்டனவே.

வன.—ஆயின், அந்நூல்களின் பெயர்களையும் அப்பெரி யோர்கள் பெயர்களையுங் கேட்க அதிக ஆவலுள்ள வளாயிருக்கிறேன் ஆதலால் சொல்லடி.

மர.—கவனித்துக் கேளடி. இன்று முதல் என்னை உபாத் தியாயினி யென்றே கருதல் வேண்டும். தெரியுமா?

வன.—[நகைத்துக்கொண்டு] சரிதான் சொல்லடி உபாத்தி யாயினி!

மர.—இவ்வாறு நகைத்துக்கொண்டு கேட்டலும் அடாது. அடி கிடியென்று அழைக்கவும் படாது.

வன.—பின் என்னவென் றழைப்பது?

மர.—அம்மா என்றழைத்தல் வேண்டும்.

வன.—அப்படியே அம்மாடி.

மர.—அம்மாடியா? நான் மாடியுமல்ல. மெத்தையுமல்ல சரிதான் போடி.

வன.—நீ மாத்திரம் சொல்லலாமோ? என்னடி நீ படித் துப் பாழாய்ப் போனது.

மா.—நான்தானு நீ. நான் பெரியவள் அல்லவா?

வன.—பெரியவளா? எதிலடி பெரியவள்?

மர.—கல்வியிற் பெரியவள்.

வன.—கல்வியில் பெரியவளாய்விட்டதனாலேயே பெரியவளாய் விடுவாயா ?

மர.—

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

என்றாடி. பெரியோர். கல்வியினுஞ் சிறந்த பொருளும் உலகில் உளதா? கல்வியிற் சிறந்தாரே பெரியோராவார். "கல்வியிற் பெரியர் கம்பர்" என்று கேட்டதில்லையா இதுவரையில்?

வன.—சரிதான். அந்தப் பழமொழியைப் பார்த்துத்தான் நீயும் கம்பரைப்போல் பெரியவளாக உத்தேசித்திருக்கிறாயோ? புலியைப் பார்த்துப் பூனை சூடிட்டுக் கொண்ட கதைபோலிருக்கிறதடி இது. அவர் கம்பரானார். நீ கம்பமாய்விடடி. இனிமேல் மரகதா என்ற பேரும் மண்ணில் மறைந்துவிடும் போலிருக்கிறதே. என்ன செய்வதடி? அதிருக்கட்டும். சுசீலையம்மாளுக்கு இப்படி ஓர் பேரில்லையே! நீலலோசனாவும் கம்பரென்றாகிலும் கம்பியென்றாகிலும் பேர் வைத்துக்கொள்ளவில்லையே! அவர்களைப் பார்க்கினுமா நீ சிறந்தவள்.

மர.—இதுவரையில் உளறியதால் என்னடி பிரயோசனம்? உன் வாய்மதமடக்குதற்கு நீலாளே தகுந்தவள். எனது அபிப்பிராயத்தை அறியாமல் மனம் போனபடி மரகதா வென்னும் பேர் மண்ணில் மறைந்து விடும்போலுமென்று பரிகசிக்கின்றாயே. கல்வியிற்

பெரியர் கம்பரென்றேனே யல்லாது யான் பெரியவ ளென்று கூறினேனு? ஊமையினும் உளறுவாயன் மேல் என்றது போல் உன்னை யொத்த மட்டிகளைப் பார்க்கினும் கல்வியிற் பெரியவள் நான் என்பதே என் கருத்தல்லாமல் சுசீலை யம்மையினுஞ் சிறந்தே னென்பதன்றே. அவ்வம்மையாரைப் "பாலசாஸ் வதி" என்று யாவரும் அழைத்து வருகிறார்களே நீ யறியாயா? புலவர்களெல்லாம் கம்பர் என்ற பேரையே புனைந்துகொள்ளவேண்டுமோ? இலக்கண மாக மாத்திரம் பேசக் கற்றுக்கொண்டதினல். என்ன பிரயோசனம்? கல்வி ஆராய்ச்சி வேண்டாமா?

> கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
> சொல்லா திருக்கப் பெறின்

எனக் குறட்பா கூறியவாறு வாசித்தோர் முன் வாய் திறவாதிருத்தலே நலமாகும். எல்லாந் தெரிந்த வள்போல் உளறுவதால் உள்ள கவுரவமும் நிலைக் காதடி!

[சுசீலை பாங்கியர்கள் சம்பாஷித்துக்கொண்டிருந்தவற்றையெல்லாம் மறைவாய் நின்று கேட்டுக்கொண்டே வருகின்றனள்.]

மர.—அம்ம! இவ்வருமறைகளின் இலக்கணங்க ளறியா மல் புத்தகங்களென்றும், அவைகள் சிறியனவென் றும் பேசுகின்றனள் இப்பேதை.

சுசீலை.—மரகதா! இவளை யான் இளவயது முதல் அறி வேன். நின்போல்வாளைப் பேதையென்னல் நின் பேதமையையே காட்டுகின்றது. விஜயப்பிரதாபசீலர் சமத்தான வித்வான்களுள் ஒருவராயிருந்து வேலா

யுதக்கடவுள் திருவடியடைந்த வெற்றிக்கொடி நாட்டிய வேலாயுதப் புலவசிகாமணியின் புத்திரியாவாள் இவள். அத்தனைப் பிரிந்து சித்தங் கலங்கி யிருக்கின்ற ஆதாவற்ற இவ்வரிவையை அருமையாய்க் காக்குமாறு ஆஞ்ஞை செய்துள்ளார் அரசர். ஆகலால் இனி அவளுடன் இனிய வார்த்தைகளே பேசி அவள் இன்புறுமாறு அளவளாவி யிருத்தல் வேண்டும் நீயும் நீலலோசனனும். வித்தைக்குச் சத்துரு விசனம் என்பதை யறியாயா? நீ மாத்திரம் என்ன கற்றுவிட்டாய்? கல்விக்கடலைக் கடந்தார் யாவர் இக்காசினியில்? கிஞ்சித் அறிவுடைய கேவலம் நமக்கென் தெரியும்?

கல்வியோ கரையில கற்பவை நாட்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல

என்ற உண்மையை நீ எவ்வாறு மறந்தனை? வினை வசத்தால் நேரும் பிணி பலவன்றி வறுமையென்னும் பிணியும் வந்தடைந்தபோது வித்தையை யெவ்வாறு விர்த்திசெய்யக்கூடும்? தரித்திரமென்னுந் தலைவனும் மறப்பெனும் பகைவனும் வாரிக்கொண்டது போக எஞ்சி நின்றதைக்கொண்டே இடறி வீழ்வது அழகாமா? அவள் தற்கால நிலமை யறிந்துகொள்ளாமற் பேசல் யான் நிந்திக்கத்தக்கதே!

மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்தி டப்பறந்து போம்.

என்று உரைத்திருக்கின்றனரே.

வன.—தக்க பிராயத்தில் தாய்தந்தையரை யிழந்த எனக்குத் தங்களைக் கூட்டிவைத்த தயாநிதியாகிய தணிகைவேலனை மறவேன். (வருந்துகின்றாள்.)

சுசீலை.—ஏன் வருந்துகின்றாய் ? இறந்தாரைக் குறித்து எண்ணி எண்ணி ஏங்குவதால் என்ன பயன் ? நின் தந்தை தாயரைப்போல நீயும் விடாமுயற்சியோடு வித்தையை விர்த்தியாக்கிப் பிரகாசித்தல் வேண்டும்.

வன.—பெண்ஜன்மந்தானே, கல்வி யேதுக்கு என்கிறார்களே சில பெரியோர் ?

சுசீலை.—பெண்கல்வி அனுவசியமென மறுக்கும் பெரியோர்களைப் பெரியோர்கள் என்று அழைக்கப் பிரியமில்லை யெனக்கு. பெண்பாலரேனுமாக ! ஆண்பாலரேனுமாக ! கல்வியில்லார் களர்நிலத்தை யொப்பார். "ஓதுவதொழியேல்" என்று ஒளவைப்பிராட்டியார் யாவருக்கு உணர்த்தினர் ? ஆண்பாலர்களுக்காகவே கூறினரா ?

வன.—அல்ல.

சுசீலை.—அல்லவெனில் பெண்பாலார்களுக்கே கூறினரா ?

வன.—அல்ல.

சுசீலை.—(மரகதாளைநோக்கிப்) பின் யாவருக்கோ ?

மர.—இருபாலர்பொருட்டுமே பொதுவாக உரைத்தனர் மூதாட்டியார். உரை கூறுவாரும் ஆண்பாலருக்கேயென்று உரைத்தாரில்லை.

சுசீலை.—ஆம். இங்ஙனமே, "ஓதாதார்க்கில்லை உணர்வொடு ஒழுக்கம்" என்பதற்கும், இன்னனைய பிறவற்றிற்கும் பொது நோக்கமாகப் பொருள் கொள்ள வேண்டியது.

வன.—நமஸ்காரம் அம்மணி ! நன்று சொன்னீர் ! எனது பிதா சிறுவயதிற் படிப்பித்து வந்த போதும் "பாடையேறினும் ஏடது கைவிடேல்" என்று பட்சமாகப் புத்தி சொல்வர். தாங்கள் சொல்வன வெல்லாம் தந்தையார் உபதேசிப்பது போலவே இருக்கின்றது. இந்நன்றியை யென்றும் மறவேன்.

சுசீலை.—கவனிப்பாயாக ! கண்ணப்ப நாயனாருக்குக் கண் கொடுத்த கண்ணுதற்பெருமானே மக்களெல்லாங் கடைத்தேறுமாறு கருணைமேலீட்டால் கண்ணளித் திருந்தும் ஒளி மழுங்கிக் கிடக்கச் செய்து கல்லாது களித்திருப்போர்கள் கர்ம சரீரிகளாவர்களல்லவா ? அந்தகர்கட்கும் இவர்கட்கும் பேத மில்லையெனும் படியாகச் சுந்தரக் கண்ணிழந்து மந்த மதியினர் களாயிருப்பதால் என்ன பயன் ? "இளமையிற் கல்" என்றனளே பூலோக வாணியும். பருவத்தே பயிர் செய்தலன்றோ நன்று ?

வன.—கல்லாத மக்களுக்குங் கண்களிருக்கின்றனவே.

சுசீலை.—ஊனக்கண்களா ? அறியாது கூறுகின்றாய்.

> "கண்ணுடைய ரென்போர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லாதவர்"

என்றார் நாயனார்.

கல்லார்களது கண்கள் கண்டனவற்றை யெல்லாம் இச்சித்து எடுத்த சன்மத்தைக் கெடுத்துக் கேட் டைத் தருவன ஆகையால் அவைகள் இருந்தும் இல்லாதனவே ! உணர்விலாதார் உடற்சுமை கொண் டென் பயன் ? உண்பதும் உடுப்பதும் உறங்குவ துமே உத்தமமான உத்தியோகமெனத் தீர்மா

ளித்து வீண்போது போக்குகின்ற விலங்கனையார் ஆவர். பூமிக்குப் பாரமாகவே பூத்தவராவார். நின்னுல் மக்களெனப்பட்டார் மக்களாகார். மாக்களே யாவர்.

“ கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்ருன் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். ”

என்ற பாட்டிற் கிலக்காவார். கற்ருர்வாய்ப் போந்து கல்விச்செல்வத்தைப் பெற விரும்பாதார் கலைமகள் திருநோக்கம் எய்தப் பெருதார். அவர்களை இந்நில மடந்தை கொன்னே தாங்குகின்றனள் என எண்ணு கின்றேன்.

வன.—சிலர் படியாமலேயே பெரியவர்களாயிருக்கின்ருர் களே !

சுசீலை.—உண்மைதான். பெரியவர்கள்தான். படிப்புவா சனை யறியாதாருள் பெரியவர்களாயிருக்கலாம் ஒரு வேளை. அப்பெரியவர்களைப் பற்றி எனக்கொன்றுந் தெரியாது. உன்போல்வார் மெச்சத் தகுந்தவர்கள் போலும். பெரியோர்கள் அவர்களைப் பெரியோர்கள் என்னுர்கள். நானும் சொல்லேன். உயரமாய் வளர்ந் திருப்பதாலும், ஆயுள் அதிகமாயிருப்பதாலுமா பெரியோர்களாய் விடுவார்கள் ? ஆயுள் வளர்வது போல் அறிவும் வளரவேண்டுமல்லவா ? கல்வியில் லாவிடத்து அறிவு எங்ஙனம் வளரும்? அறிவு விளங்காவிடத்து அறியாமை எங்ஙனம் அகலும்? மடமையே முடுகி வளருமிடத்து இவை நல்லன

இவை தீயன எனப் பகுத்தறிதலும் நல்லொழுக்கம் உடையராதலும் தருமமுதலியன புரிதலும் யாங்ஙனம்? அப்புண்ணிய மடையப் பெறுதார்க்கு வானவர்நாடு எங்ஙனம் வழி திறந்திடும். நிற்க

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்றாரே தெய்வப்புலவர்.

வன.—கல்வியில்லாப் பெரியர் காசினியிற் றோன்றாமை நன்றோ?

சுசீலை.—ஆம்.

வன.—கற்றறிந்த பெரியோரோ?

சுசீலை.—இன்னும் அறிந்திலையா வனஜா! புகழுடம்புடையர் எனப் பொய்யாமொழிப்புலவர் பெருமானே சொல்லி யிருக்கின்றனரே.

வன.—என் தந்தையும் அல்லவா அப்புகழுடம்பெய்தி யிருப்பர்?

சுசீலை.—ஆம். ஆம். அஃதோர் கடாவா?

வன.—என்னம்மா? கடாவா என்கிறீரே!

சுசீலை.—"கடா" என்றால் கேள்வியென்று பொருள்.

வன.—கல்லாதவர்களுக்குப் பொருளால் புகழ் இல்லையா?

சுசீலை.—பிணியுமூப்பும் நிறைந்த அவர்களது பொய்ப்புகழைப் பற்றி இனி கேளாதே. புல்லறிவாளர் எங்ஙனம் புகழுடையவராவர்? புகலார்கள் புகழுடையரெனப் புத்திமான்கள். அப்பொருள் ஒருகாலத்து சோரர் முதலியோரால் களவாடப்படுமன்றோ? "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்றறியாயா?

வன.—ஆம் தெரிந்தேன் இப்போதே!

சுசீலை.—பங்காளிகளாலும் பகைவர்களாலும் கள்வர்களாலும் காவலர்களாலும் கவாமுடியாததும், கனலால் வேகாததும், புனலாற் போகாததும், புலவோர் போற்றத்தக்கதும், மன்னர்கள் வழுத்தத்தக்கதும் மாதவத்தோர் வாழ்த்தத்தக்கதும், யாவர் கொள்ளைகொள்ளினும் குறையாததும், யாவருக்கு அளித்திடினும் அழிவெய்தாது அபிவிர்த்தியாய்த் தழைத் தோங்குவதும், அருட்செல்வந் தருவதும், அழியாப் புகழளிப்பதுங் கல்விச் செல்வமே யாகும். அக்கல்விச்செல்வர் எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் தலைநிலத்தே வைக்கப்படுவர். மண்ணில் வாழ்வாராயினும் வானோரென்றே வணங்கப்படுவர். வெண்டாமரை வேதனும் தண்டமிழ்வாணரை யொவ்வான். இறந்தும் இறவாதவரே யாவர்.

வன.—வேதனுமா? சிருட்டிகர்த்தா அல்லவா? ஏன் ஒவ்வான்?

சுசீலை.—அவ்வயனால் படைக்கப்பட்ட வெற்றுடம்பு மாய்வன ஆதலானும் வாணரால் செய்யப்பட்ட மெய்யுடம்பு மாயாவாதலானும் அவ்வாறு அறைந்தருளினர் அறிஞர்.

வன.—“மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு”
என்றார் பெரியார் அல்லவா?

சுசீலே.—ஆம்.

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்றது மெய்ந்நூலும்.

வன.—அம்மணி! மாந்தருக்குச் சாந்துணையும் அருந் தமிழே அருந்துணையும் பெருந்துணையு மென் றறிந்து கொண்டேன்.

மர.—அம்மணி! இவளுக்கு அக்கல்விப் பயனையுஞ் சொல்லி முடியுங்கள்.

சுசீலே.—"கற்றதனால் (வாயெடுக்கு முன்).

வன.—ஆயபயன் என்கொல் வாலறிவ - னற்றாள் தொழாஅ ரெனின்" என்னுஞ் செய்யுள் பயக்குஞ் செம் பொருளை யறிவேன். தாயே! இனி "செல்வம்" என்னும் விஷயத்தைக் குறித்துஞ் சிறிது உபந் நியசித்தல் வேண்டும்.

மர.—நாளை யாகட்டும் வனஜா! ஏன் கஷ்டம் கொடுக் கின்றாய்?

வன.—நீ அனுபவமில்லாதவளானபடியால் அவ்வாறு சொல்கின்றாய். சரீரம் உள்ள பொழுதே யல்லவா கற்க வேண்டுவன கற்றும் இன்னும் கேட்க வேண்டு வன கேட்டும் அடையவேண்டிய பயனை அடைந்தும் ஆனந்திக்க வேண்டும்.

"நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று."

என்னும் அனுபவப்பாவை மறந்தாவிட்டாய்? அச்

செய்யுளால் யாக்கை, இளமை, செல்வம் முதலியன நிலையற்றன வென்று கற்றுங் கேட்டும் அனுபவத்திற் கண்டும் வருகின்றோம் அல்லவா? நம்போல்வார்க்கு நல்லறிவு கொளுத்தும் பொருட்டல்லவா திருக்குறள், நாலடியார் முதலிய பெருநூல்கள் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை என்னும் விஷயங்களை வெள்ளிடை மலை போல் தெள்ளிதின் உணர்த்துகின்றன. அவ்வநித்தியமான செல்வத்தையுஞ் செல்வமென மதித்துப் பேசுவார்களும் நாம் "செல்வர்" "செல்வர்" எனத் தருக்குற்றுப் பேசித் திரிவோர்களுஞ் செல்வர்களாவார்களா? பலர் அறிவின் அந்தகாரத்தாலும் அகங்கார முதிர்ச்சியாலும் ஆன்ம லாபத்தைப் பொருட்படுத்தாது அற்ப லாபத்தையும் அற்ப சுகத்தையுமே பெரிதாய்க் கருதி வாழ்கின்றார்கள். அவர்கள் உயிர்க்குறுதி தேடாது செல்வர்களே யல்லாது செல்வர்களாகார்கள். "செல்வம்" "செல்வம்" என்றாற் போவோம் போவோம் என்றும் "செல்வர்கள்" "செல்வர்கள்" என்றால் போவார்கள் போவார்கள் என்றும் பொருளாகுமடி போக்கற்றவளே! போவார்களைக் குறித்து ஏனடி புலம்புகின்றாய் புலனற்றவளே! அதனால் விளையுங்கொலை முதலிய தீங்குகள் பலவாகுமல்லவா? அன்றியுஞ் சோர பயமுஞ் சுற்றத்தினர் பகையுஞ் சம்பவிக்கு மல்லவா? தவமுனாற்றிப் பெற்று வளர்த்த தாயரென்றுந் தந்தையரென்றுந் தாட்சண்யம் பாராட்டுவார்களா? ஆபாச ஞானமே யன்றோ அளிக்கும் அவ்வாட்கொல்லி?

கண்ணுதற் கடவுளையுங் கருவிகரணங்களோய்ந்த தொண்டர்களையுங் கண்டு களிப்பார்களா கண்களிருந்தும்? நல்லார்களென்றும் அல்லார்களென்றும் அறிவார்களா அறிவிருந்தும்? நன்னூல்களை வாசித்து நல்லன பேசுவார்களா வாயிருந்தும்? கற்றோர்க்கு மற்றோர்க்குங் கொடுப்பர்களா கரங்களிருந்தும்? செவியாரக் கேட்டானந்திப்பார்களா செந்திலாண்டவன் புகழைச் செவிகளிருந்தும்? நடப்பர்களா நம்பர் தங்கோயிலுக்குக் கால்களிருந்தும் பலர்? ஆதலினன்றோ அச்செல்வத் தருக்குற்றோர்களை அந்தகர்களென்றும், ஊமைகளென்றுஞ், செவிடர்களென்றும், அங்கவீனர்களென்றும், பிணங்களென்றுங் கூறி யிருக்கின்றன நூல்கள். தனவந்தர்கள் எண்ணிறந்தோர் தாணியில் இருந்தார்களல்லவா? இப்போதும் இருக்கின்றார்களல்லவா? இவர்களுள் இறந்தொழிந்தார்களும் ஒழிகின்றார்களும் பலர் பலர் அல்லவா? அவர்களோ டொழிந்து போயிற்று அச்செல்வம்? அக்கருந் தனத்தை அவர்கள் கருப்பத்திலிருந்துதித்தபோதுடனே கொடுவந்தார்களா? "பிறந்து இடைநடுவே குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியா திறக்குங்குலாம" ரையா செல்வர்க ளென்கின்றாய்? உத்தமர்கட் குதவா நவீன சீமான்களுஞ் சீமான்களா? நடுவே முளைத்த இச்செல்வத்தாலா பெரியோர்களாய் விடுவார்கள்? நகையாடாரா நல்லிசைப் புலவோர் அவர்களைக் காணின்? அன்னவர்களது அருவருக்கத் தக்க பொருளைக் கண்டு அகமகிழ்வார் யாவரடி?

மதி யுடையார் மதிப்பாரா? மதியார் மதியார் ஒரு சிறிதும்.

வன.—மகாராசர்களையும் அவர்களூற மாடமாளிகைகளை யுங் கண்டு மதியாமலா இருக்கின்றனர் நம்மனோர்?

சுசீலை.—மதியற்றவளே! மகாராசர்களையு மாடமாளிகை களையுங் கண்டு மகிழ்வாரா மாண்புலமை மிக்கார்? மகிழார். மகிழார். மகாராசர்களல்லாத மகாராசர் களைக்கண்டு மயங்குகின்றாயே இன்னும்! பெரும் பாலு மாதர்களெனப்படாத உன்போலு மாதர்களே பிறராக்கங்கண்டு பேராசை யென்னும் பேய்வசப்பட் டுப் பெரும் பாசவலையிற் சிக்குண்டு பணியுமணி யும் பகையென எண்ணாமல் பரமனடி உன்னாமல் பணப்பிணியா லுழன்று பாழாகின்றனர். அப்பா மார்களைப்பற்றிப் பரிதபிக்க வேண்டியதே. வெறும் பானை பொங்குமா வனஜா! செய்த வினைக்கீடா கவே செல்வந் தருவன் சிவபெருமான் என்று அறி யாததென்னே? கல்வியறிவுள்ள சில பெண்களும் கலங்குகின்றார்களே! நல்வினை செய்யாதார் நகைகளை யணிந்துகொளள ஏன் அவாவுதல் வேண்டும?

வன.—செருக்கொழித்த செல்வர்களும் பலர் இருக்கின் றனரல்லவா? அயலார் பொருளை அவாவாமலும் அழுக்காறு கொள்ளாமலும் உள்ள அரிவைமார்க ளுஞ் சிலரிருக்கின்றனரல்லவா?

சுசீலை.—செல்வமிருந்துஞ் செருக்கின்றிச் செந்நாப்புலவ ரைச்சேர்ந்தொழுகிச் சிவனடியைச் சிந்திப்போர் சிவபதமே யடைவர். பணிகள் உளவேனும் இலவே னும் அவைகளை யணிந்துகொள்ளவும் வீண்

பெருமை பாராட்டவும் விருப்பங்கொள்ளாமல் வாழ்கின்ற சிற்றிடையார் சிலரே. அத்தகையரும் அரியரே.

வன.—அம்மணி! அருந்தமிழ்வாணரை யாதரிக்கும் அன்பும் அறிவுமுடையாரே அருநிதிபடைத்தோராவர் எனப் போதித்த போதனையே போதனை. ஆயினும் போக்கல் வேண்டுஞ் சில சந்தேக வேதனை. இனி இப்பேர்வழிகளைப் பெரிய மனிதர்கள் என்றும் மகராசர்களென்றும் வழங்கப்படாதா?

சுசீலே.—அப்பட்டம் புனையும் பண்புடையார்களே பாத்திரர்களாவார்கள். அருகர்களாகாதார் அபாத்திரர்களே. பெருந்தகைமை யுடையவர்களே பெரியோர்களாவார்களென்று பலமுறையும் பகர்ந்தேனன்றோ?

வன.—அம்மணி! கேட்பதற்கு அஞ்சுகின்றேன். மற்றொன்று.

சுசீலே.—என்கொலோ?

வன.—அவ்வாறு கல்வியாராய்ச்சியில் காலங்கழியாமல் காசாசைக் கொண்டு கர்மத்தையே சேகரித்துக் கொள்வோர்கள் சிலநாள் சீரழிந்த வாழ்வையே சிறப்பென்று இறுமாந்திருந்து இறந்த பின்னரும் பிறப்பார்களோ மகாராசர்களாகவே?

சுசீலே.—கேட்கவேண்டிய கேள்வியே கேட்டனை! சாற்றுவன் கேளடி சந்தேகக்களஞ்சியமே! பிறைசூடியாய பிரபுவின் அருளால் மானுடமகாராசர்களாய்ப் பிறப்பின் அன்றோ மாரடித்துக கொள்வார்கள் அவ்வாறு. இனி எனக்கு இதைப்பற்றிப் பேசுதற்குக் கருத்தில்லை. ஏனெனில், நீயே அறிந்துகொள்ளவேண்டும்.

"கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே"

என்றார் பெரியார். ஆயினும் உனது அறிவிற் பதியுமாறு விளக்குவேன் கவனிப்பாய். அழிநிதி கண்டு களிபெருவகை கொண்ட இழிகுண முடையார் பலர் மண்ணுலகத்தினின்று மாண்ட பின்னர் விண்ணுலகத்திற் கேகும் விழி யிலாது எவரும் எள்ளத்தக்கவாறு கேவலமாகக் கிடப்பன, நடப்பன, பறப்பன; ஊர்வனவாக உதித்து, உழல்வர் என உரைக்கின்றன உண்மை நூல்கள். இவர்களையும் இவர் போல்வாரையும் மகா ராசகர்களென்னாது தகாராசர்களென்பதில் தாழ் வில்லை. இனித் திருவொற்றியூரில் எழுந்தருளியி ருக்கும் தியாகராசனே மாதவத்தோர் போற்று மகாரா சனடி! தில்லைச் செல்வ நடராசனே பிறவித்தொல்லை யறுத்து எல்லையில்லா வின்பந்தரும் மகபதியேத்து மகாராசனடி. அன்றியும் அப்பேரம்பலத்தான் பேச ரிய பெருமை மிக்க திருவடித்தாமரைகளைப் பேணுந் திறமே நித்தியமாய திருவென்றும், இவ்வுலகத் துள்ள எவ்வகைச் செல்வமும் அழிதன்மாலைய வென்றுங், "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" எனத் தெளிந்தும், உள்ளத்துற வடைந்து உலகப்பற்றை யொழித்து ஓடும் இருநிதி யும் ஒக்க நோக்கிய உத்தமோத்தம மகைஸ்வர்ய சிகாமணியாய பட்டினத்துச் சிவஞான மாதவப் பெருந்தகையாரையும் அவரை யொப்பாரையுமன்றோ செல்வர்களென்னல் வேண்டும். நல்வழியில் ஈட்டிய

இத்திருவெண்காட்டடிகளார் இருநிதிக்கு நிகருமுண்டோ?

வன.—[கீழே விழுந்து பணிந்து எழுந்து] அப்பெரியார் பேரைக் கேட்கும்பொழுதே பெரும் பக்தி யுண்டாகின்றது. அடியார்களுக்கு அன்னதானஞ் செய்ய மனமின்றி அபாரமாசப் பணச்செலவிட்டுக் கட்டப்பட்ட கட்டடங்களாற் பயனில்லையோ?

சுசீலை.—சொற்கட்டடங்களின் சுவை சுவைத்துச் சொரூப சிற்சுகத்தை அனுபவிக்க முயலாது கற்கட்டடங்களைக் கட்டிக்கட்டிக் காவல் காப்போர் காலனுலை வரும்வேலை கலக்கமுற்றுக் கண்ணீர் வடித்துக் காணியாட்சியாய்க் கொள்வர் கூற்றுவனுலகையே என்று கூறுகின்றனர் அறிஞர். அக்கட்டடங்களும் யாவும் அவசியமேயாயினும் உலகில் உள்ள வரையில், அவைகளாற் பயனேயில்லையடி.

வன.—ஆனுல் எல்லாம் அவசியமாவதுபோல் பொருளும் அத்தியாவசியந்தானே?

மர.—சொல்லுமுன்னே அறிந்துகொள்பவள் தான் சூக்ஷும புத்தியுடையவள். இதுவரையில் நமது அம்மையார் எடுத்தெடுத்துரைத்தும் என்ன பிரயோசனம்? இப்போதாகிலும் கவனித்துக்கேள்! இலௌகிகத்தார்க்கு எவ்வகைப் பொருளும் இன்றியமையாதனவே யாயினும் விலையுயர்ந்த மதிக்கத்தக்க பொருள்களை மதித்து அற்ப விலையுள்ள மதிக்கத்தகாத இல்லங்களைச் சுத்தப்படுத்தத்தக்க பிரயோசனந்தரும் விளக்குமாறு போன்ற பொருள்களை அவமதித்துத் தள்ளுவதுபோல.

சுசீலை.—சூக்கும அறிவில்லாதவளே! சுருங்கக்கூறுகின்றேன் கேள்! சிவபோகத்தை நாடிய சிவநேயச்செல்வர்கள் சிதையுஞ் செல்வத்தைப் பொருளாக மதியார் என்பதே எனது துணிபு.

வன.—அம்மணி! இனி அவ்வரிய நூல்களின் பேரும் அவற்றின் சீரும் தெளிவாகச் செப்பவேண்டுகின்றேன்.

சுசீலை.—நினக்கு இத்தகைய அன்பும் ஆனந்தமும் உதித்ததைக் குறித்து மகிழ்கின்றேன். நின்பொருட்டுச் சிரமத்தை நோக்காது செப்புவல்.

" இங்கித ஞமங் கூறி னிவ்வுல கத்து முன்னாள்
தங்கிய இருளின் மாக்கட் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை யேனைப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போ னீக்குந் திருத்தொண்டர் புராண
மென்பாம்."

என்றனர் ஆசிரியர் பெருமானாப அருண்மொழித் தேவரே.

வன.—ஆ! திருத்தொண்டர் புராணமா? அத்தகைய புராணமா இது? உம். மற்றென்னோ?

சுசீலை.—

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

வன.—கேட்பதற் கருமையாகவே யிருக்கின்றதம்மணி. திருவாசகமென்னுந் தேனா?

சுசீலை.—அருமையா ? சிவா ! இப்பெரிய நூல்களை உலகை முய்யும்பொருட்டு முன்னின்று முடித்தருளிய முழு முதற்கடவுளே இவ்வேதங்களின் அருமையும் பெருமையும் அளப்பரியன என்றாராயின் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் பல்பிணியுமுடைய நாமாவெடுத் தியம்பவல்ல அதிகாரிகள் ? குன்றத்தூர் என்னுந் திருத்தலத்தில் திருவவதாரஞ் செய்தருளிய தெய்வச் சேக்கிழார்ப் பெருமானும் திருவாதவூரடிகள் என்னும் மாணிக்கவாசக சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளிய அரிய வேதங்களன்றோ ? அகப்பற்றும் புறப்பற்றும் அற நீத்த அறுபான்மும்மை நாயன்மார் பெருமையும் பத்திச்சுவையுஞ் சொட்டச் சொட்டப் பரமபதி "உலகெலா" மென அடியெடுத் தருளப் பாடியருளிய மகிமை பகாற்பாலதாமோ ? எண்ணுந்தோறும் கண்ணூறு கரை புரளுகின்றதடி மாகதா ! நஞ் சிற்சபேசன் பெருங்கருணைத் திறனிருந்தவாறென்னே! இப்புவியில் எப்புராணமும் [பன்னிரண்டாந் திருமுறையாகிய] இப்பெரிய புராணத்தினுக் கிணையாகாதென்று அறிவாயாக.

வன.—வாணியின் வரப்பிரசாதத்தைப் பெற்ற கம்பர், காளிதாசர், காளமேகப்புலவர், இரட்டைப்புலவர் முதலிய கவீஸ்வரர்கள் யாத்தனவும் ஏனைய புராணங்களும் விசேடமுடையன அல்லவோ ?

சுசீலை—யான் அவை விசேடமுடையனவல்ல என்றேனா? வேதங்கள் சிறந்தவையே யாயினும் ஞானநூல்களாய உபநிடதங்களை நோக்க அவை கர்ம காண்டங்களாய் முடிவதுபோல நின்றூற் கூறப்பட்டன

சிறப்புடையனவாயினும் பக்தியாய சிவமணங் கம ழூங் திருத்தொண்டர் புராணத்தை நோக்க அவை யனைத்துஞ் சாதன நூல்களேயாம். அம்பலத்தாடி யே அப்பேராசிரியராய அருள்வள்ளலாரை அதிட் டித்து நின்று முடித்தருளினர் இத்திருமுறையை யாதலால் அச்சேக்கிழார்ப் பெருமானையும் அப் புரா ணத்தையும் எஞ்ஞான்றுந் தொழுது அன்பென் னுங் கடலுட்படிந்து ஆனந்தித்திருப்போமாக.

வன.—அம்மணி! தங்கள் திருவாக்கால் அவ்வருட்பாக் களில் ஒவ்வோர் செய்யுள் கேட்டு ஆனந்திக்க வேண்டும்.

சுசீலை.—மரகதா! நீ சொல்.

மர.—என்ன தடை! இதோ.

திருச்சிற்றம்பலம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மான
அற்புதக் கோலநீடி அருமறை சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

திருவாசகம்

அம்மையே யப்பா வொப்பிலாமணியே
வன்பினில் விளைந்த வாரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

[சுசீலை நீங்குகிறாள்]

வன.—என்னை யறியாமலே ஒருவித பக்தி உண்டாகின்றது. மாகதா!

மர.—உண்மையாகவா?

வன.—உண்மையாகவே கேட்டு ஆனந்தித்தேன். நமது தலைவிக்கு நாம் என்ன கைம்மாறு செய்வோமோ தெரிந்திலது.

[சேவகன் வருகின்றான்]

வன.—அங்கே வருகின்றவன் நமதாண்மனை சேவகனா?

மர.—யான் அறியேன். ஏன் இங்கும் அங்குஞ் சுற்றிப் பார்த்துக்கொண்டே வருகின்றான் அவன்?

வன.—[சேவகனை நோக்கி] யார்? இங்கு ஏன் வந்தாய்?

சேவ.—காயிதங் கொண்டாந்தே.

மர.—யாருக்கு?

சேக.—இதோ! அவர் மகளுக்கு.

மர.—அவர் மகளென்றால்?

சேவ.—அதாம்மா! எங்க ராசாமகள் இங்கில்லே!

வன.—[விலாசத்தைப் பார்த்து] யார் கொடுத்தது?

சேவ.—ஜெயசீல ராஜா கொடுத்தார்.

மர.—இதற்குப் பதில் வாங்கிவரச் சொன்னாரா?

சேவ.—இல்லே. நான் போவட்டுமா? போவணும்.

வன.—போ.

[சேவகன் போகிறான்]

[மாகதம் சுசீலைக்குக் கடிதத்தைக் கொண்டு போகின்றனள்]

களம் 2

இடம்—சித்திரமாளிகையிலுள்ள கல்யாணகூடம்.

காலம்—மாலை.

பாத்திரங்கள்.—சுசீலை, வனஜலோசனை, மரகதம்.

[சுசீலை கடிதத்தைப் பிரித்து வாசிக்கின்றனள்.]

செல்வச்சிரஞ்சீவி

சுசீலையம்மைக்கு ஆசீர்வாதம்.

சுபம். விரும்பற்பாலது மஃதே. சென்ற வாரம் வரைந்தவாறு விஜயபுரத்திற்கு வருதற்கு நேர்ந்த தடை யாதோவென்னில் உனது திருமண விஷயமாக மதனபுரத்திற்குச் சென்றிருந்தனன். வீரகாந்தன் புதல்வன் மதனகாந்தனே உனக்கேற்ற வரன் என நிச்சயித்து வாக்களித்தனன். வருமாதம் திருமணம் நடைபெறும் என்பதில் ஐயமில்லை. எனது மைத்துனர் விஜயசீலருக்கு இவ்விவாக விஷயமாக யாதுஞ் செப்பவேண்டாம். நாளை அல்லது இரண்டு மூன்று நாட்களுள் யான் வருகின்றேன்.

இங்ஙனம்

ஜேயசீலன்

சுசீலை.—[தனிமொழி](வருந்தியமனத்தினளாய் மஞ்சத்து) என்ன ? திருமணமா ? யாருக்கு ? காந்தனுக்கா ? யாவன் அவன் ? திருவாலவாயமர்ந்தருளும் பெருமானே! சுந்தரேசா ! ஆ ! சொக்கேசா ! துணையிலேன். நீயன்றி இச்சமயத் தொருவரும் காணேனே. எளியாள் குறையகற்றுவார் யாரோ? என் தந்தை யான் எண்ணிய வண்ணமுற்றுவிப்பாரென நினைந்தேனே. நின்செயலீதோ ? இந்நிருபம் இங்ஙனம் வரைந்தனனே. யான் யாதுசெய்ய வல்லேன். [தனது காதலரை நினைந்து] துரையே? நின்னையேனே விழைந்தேன். யான் கொண்ட எண்ணமெல்லாம்

வீணுயினவே. எனதுள்ளத்தைக் கொள்ளைகொண்ட இன்னுயிரை யிழங்கவா? எண்ணிலனே இவ்வாறுமென்று. யானும் எனதென்னும். எண்ணமெல்லாம் பொய்யோ? ஆம். எயனேலெ மெய்யென்றதே மெய்யோ? ஆம். என் தந்தையே எனக்கியமனு யிவ்வோலையை யனுப்பினன் போலும். தந்தாய்! மதனகாந்தனுக்கா மாலைசூட்ட? உம். நீயோ வென் தாதை? என் மனமகலாத மதன காந்தனன்றோ என்னை மணம் புரியத்தக்க மணாளன். இன்னும் இவ்வுலகில் வாழவோ செய்தனை? இல்லை. இல்லை. தெரிந்தேன். தெரிந்தேன். ஒழியத்தான். தாழ்ந்தொழியத்தான். வாழ்வு தாழ்ந்தொழியத்தான் வந்தது நாள் போலும். அவனோடு எவ்வண்ணம் வாழ்வதோ? ஈதோ வாழ்வு? சீ! வாழ்வே! நீயுஞ் சம்மதிப்பாயோ? ஈதோ நீ வேண்டினை? நின் வாழ்க்கை யிங்ஙனமாயிற்றே. ஆ! இளவரசே! நீயன்றோ சுசீலை விழைந்த சுகுமாரன்? சுகக் கடலே! நீயன்றோ திக்கெலாம் போற்றுந்திறன்? காதல் மணியே! நீயன்றோ கருமாரனுங் கண்டு நாணும் பெருமாரன்? குணக்கடலே! நீயன்றோ என் குறை தீர்க்குங் குமான்? என்று காண்பேனோ என் வடிவழகை? என் னிரு கண்களும் போதுமா? எண்ணிலாத கண்கள் வேண்டுமன்றோ? கண்காள்! யாது நோக்குகின்றீர்கள்? இம்மாட கூடகோபுர மண்டபங்களைக் கண்டா மகிழ்கின றீர்கள்? இலதேல் இச்செடிகளையுங் கொடிகளையுங் கண்டா ஆனந்திக்கின்றீர்கள்? சிச்சி! வேண்டாம். வேண்டாம் விழிகாள்! காதல் மீதுறச் செய்யுங் கட்டழகனையே நாடுங்கள். நற்பயனைப் பெறுவீர். அஃதன்றோ ஆனந்தம். என்ன ஆச்சர்யமிது? இடதுகண் துடிக்கிறதே. நற்

சகுனந்தான் போலும். காண்பேன். கலி தீர்வேன். இப்போதோ எப்போதோ தெரிந்திலேனே. என் மாதவமே! அத்தவத்தின் பெரும் பயனே! கருணையிற் கடலையும் கலைஞானத்தில் ஆதிசேடனையும் அறிவிற் குருவையும், பொறுமையிற் பூமடந்தையையும், ஒளியிற் சூரியனையும், கீர்த்தியிற் சந்திரனையும், கொடையிற் கொண்டலையும், போகத்திற் புரந்தரனையும், அளவிலாநிதியில் அளகேசனையும் வென்ற விறல் வேந்தே! நீரும் வெறுப்பீரோ? வன்சிறை யிழந்த புட்போலானேனே வள்ளால்! [உருவெளித் தோற்றங் கண்டு] வருக வருக. முன்னே வந்தெதிர் தோன்று முருகனோ நீ? என்னுருவோநின்னுருவம்? என்று மனுபவியாத ஓர்வித இன்பமன்றோ உதிக்கின்றது இன்று? இன்பமென்பது இப்படித்தானிருக்குமோ? இத்தகைய இன்ப முதிப்பதற்குக் காரணம் என்னோ? தாங்களோ? ஆம். ஆம். இதுகாறும் அனுபவித்திலனே இவ்வாறுய இன்பத்தை. இன்ப உருவினனோ நீ? இன்ப வாரிதியே! இன்றல்லவோ அறிந்தேன் உனதின்பவுருவ வருமை. [மஞ்சத்தின்மீதிருந்து சுசீலையைத் தழுவப் போகிறாள்] என்ன? யாரைத் தழுவுகின்றாயடி? அடி சுசீலா! உன்போலும் பெண்களுமுண்டா இவ்வுலகில்? இப்படியுந் தழுவுவாருளரா? அறிவிழந்தனையா? என்ன பயனடி பெற்றனை? இங்ஙனஞ் செய்தபோது நின்னை யொப்பார் கண்டால் நகையாடாரா? [திரும்பிப் பார்க்கின்றனள் தோழிகளை.] இல்லை. இல்லை. நித்திரை செய்கின்றனள் நீலலோசனை. வனஜாட்சி யினி வருவள் போலும். உருவெளித்தோற்றமே இது! என் காதலே இவ்வாறு மயங்கச் செய்தது போலும்.

(சுசிலனை நினைந்து பாடுகிறாள்)

மன்னேயோ! மணியேயோ! மரகதத்தின்
ஒளியேயோ! மாண்ட வேட்கை
என்னேயோ! என்னேயோ! என்காத
னாயகனே! எங்கே யுள்ளாய்
என்னைய மணவாள ரெனவுன்னி
உயிர்வாழ்ந்தே னென்சீ மானே!
மன்னேயோ நின்றனைசை தனைநீத்து
நிற்பிரிந்து வாழே னந்தோ.

இனம்பிரிந்த மானென்ன நினைப்பிரிந்தே
யிருத்தலினு மிறத்த லேநன்
றினம்பிரிந்த வன்றிலெனு மெழிற்பறவை
யிவ்வுலகி லிருப்ப தின்றென்
இனம்பிரிப்பா னெண்ணிடினு மென்னுடைய
மனம்பிரிக்க இசையு மோதான்
இனமுறியா னெனவறியா னிழைத்திட்டா
னிக்கொடுமை யியம்பற் பாற்றோ.

காண்டருநின் திருமுகத்தைக் கண்டுகளிப்
பெய்தாத கண்ணென்ன கண்ணோ
சேண்டருநின் னமிர்தமொழி கேளாத
செவியென்ன செவியோ வச்ச
நாண்டொருநற் குணமுறினு நாயகநிற்
புகழாத நாவென்ன நாவோ
மாண்புடைய நின்புகழை யுன்னாத
மனமென்ன மனமோ ஐயா!

என்னெஞ்சம் படும்பாட்டை இளங்கோவே
யறிந்திலையா லென்செய் கேனோன்
என்னெஞ்ச மென்னெஞ்சோ என்னரசே!
நினையன்றி யெண்ணா தையா!

கன்னெஞ்சன் தாதை யென்றன் கருத்தறியா
தெழுதினனிக் கடித மீது
என்வஞ்சத் தாற்பொறித்தா னியானறியே
னீயுணரி னென்செய் வாயோ.

"அல்லலே பெண்ணெனப் பிறத்த லாங்கதின்
அல்லலே இளமையிற் சிறத்த லாங்கதின்
அல்லலே கட்டழ குடைமை யாங்கதின்
அல்லலே இரவலர் சார்பி னுருதல்."

என்ற துண்மைதானே? ஆம். இன்றே கண்டேன். பாட்டைமாத்திரம் அறிந்தேன் யுக்த வயதடையாமுன்னம். அதன் பயனை இப்போதே அனுபவிக்கின்றனன். என்ன? அனுபவிக்கின்றாயா? அனுபவியாது யாது செய்யப் போகின்றனை? அறியாதவள்போல் பிதற்றுகின்றேனே. வினைக்கீடாக இன்பதுன்பங்களை நுகரும் பொருட்டன்றோ உற்பவித்தனை. ஆம். பிறந்தேனே வினையளவாக. இறந்தேனா? இல்லையே! இறந்திருந்தால் இத்தொல்லை யிருக்குமா? இராதே என்செய்வேன்? உம். ஏதேதோ நினைக்கின்றதே நெஞ்சம். இப்பாடு படுதற்கே ஆளாக்கினையோ பரமேசா!

"யானை முதலா வெறும்பீ றாய
வூனமில் லோனியி னுள்வினை பிழைத்து
மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து

மாறு திங்களி னூறலர் பிழைத்து
மேழு திங்களிற் ஞூழ்புவி பிழைத்து
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துத்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்து"

என்ற வண்ணம், பற்பல கஷ்டங்களினின்றும் தப்பிப் பிழைத்தது இத்துயரமெய்தற்கோ? அல்லது இச்செய்தியைக் கேளாமுன்னமே ஒழிந்திருந்தாலு மிவ்வாறு வருந்தேனே! உஸ். எப்படிச் சகிப்பதோ? இவ்விதமே சுகிப்பதோ? ஓ துன்பமே! இத்துயர்க்குரியாள் யானோ? [கைநெறிக்கிருள்] என்னைக் கலங்கச் செய்கின்றனையே! என்போலும் உன் வலையிற் பட்டு வருந்துவார் யாரோ? இவ்விதம் வருந்தலாமா? ஏன் இவ்விதம் செய்கின்றனை? எங்கிருந்து வந்தனையோ? துன்புறுத்தற்கு வேறு ஒருவரும் கிடைத்திலரோ? நின் செவி எங்குளதோ? சீ! எனக்கேனடி இந்தக் காயம்? உன்னையும் ஒருபொருளாய் மதித்துப் பேசுவதெல்லாம் வீணே. காலனை உயிர்ப்பிச்சை கேட்டதுபோலன்றோ இருக்கிறது? ஆ! அறிந்தேன். ஐங்கணைக் கிழவா! நீதானோ? சரி சரி. அந்தோ! வேண்டேன். துன்பமென்னும் தூதனை விடுத்தனையே போதாதா? நித்திரையென்னும் நண்பனைக்கொல்லவோ விடுத்தனை அப்பகைவனுகிய தூதனை. திரைகடற்பட்ட துரும்பானேனே! பாம்பின்வாய்த்தேரை யானேனே! வீசினையே வலையை! நிறுத்தாயா வொரு கணம்? பொறுக்காயா? யான் தரிக்கிலேனே! விடடா! விட்டுவிடடா! சீ! நீ கெட்டாய். மதிகெட்டாய். நீக்கமற நிறைந்தநின்மலனே! நின்னைத் துதித்

தற்கும் நாவெழவில்லையே. எனதறிவு எங்கொளித்ததோ? இழந்தேனே அறிவை. "ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனுள் அசரசர பேதமான யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்த" வள்ளால்! இக்கொடிய சண்டாளனை ஏனோசிருட்டித்தனை? அடா இரக்கமில்லோய்! 'கன்னெஞ்சமுடையனோ நீ? யானொருத்திதானோ பெண்பால்? பெண் மக்கள் பலருளரே! அந்தகனே! நின் கண்ணிற்கு யானோ எதிர்ப்பட்டேன்? யாதோ வஞ்சம்? என் செய்தேன் தீமை? கொடுமை செய்தார்க்கன்றோ நீ கொடுமை செய்தல் வேண்டும்? வருத்தற்கே வந்தனையோ? பெண்பாலை அல்லலுறச் செய்தலோ நின்தொழில்? இவள் தரியாளென எண்ணிலையோ? எண்ணிலையே யென் நிலையை. என் சொலினும் கேட்டிலையே. ஐயகோ! சுசீலமணியே! இவ்வுயிருக்கும் உடலுக்கும் நாயகன் நீ என்றே......... மன்னோ! உன்னாலன்றோ நிலையழிந்தேன்? கலையொழிந்தேன்.

வெய்யமதன் விடுஞ்சரங்கள் வேதனையை விளைத்தனவால்
வெய்யமத னடுங்கணைகள் வேந்தேயா னாற்றகிலேன்
வெய்யமதன் வெந்துயராம் வேலையிடைப் படிந்தயருந்
தையல்மய லொழித்திலையே தரிக்கிலனே மாமணியே.

என் செய்வேன்? தகிக்கின்றானே. எத்தனைப் பாவையர்களை வதைத்தனையோ. இவ்வாறே நொந்தாரோ? எவ்விதம் நைந்தாரோ? யான் அறிகிலேனே. அடா பாவி! ஏனடா இக்கொடுமை? யாரடா பொறுப்பர்? வேறு தொழிலிலதோ நினக்கு? இக்கொடும் பவம் நின்னை விடுமோ? ஐயோ! பேதையெனச் சற்றுங் கருதிலையே. பெண்ணொன்றால் பேயு மிரங்குமே. ஜீவகாருண்ணிய

மென்பதே நீ அறியாயோ? சகிக்கக்கூடியவரையன்றோ வதைத்தல் வேண்டும்? என்பால் ஏன் போர் புரிதல் வேண்டும்? போரா! பெரும்போர் விளைக்கின்றனே. ஆ. நீலலோசனை. [அழைக்கிறாள்].

வன.— ஏனம்மா?

சுசீலை.—அந்தப்புரத்திற்குச் செல்லல் வேண்டும். எங்குச் சென்றாள் நீலாள்?

மர.—இங்குள்ளேன். இதோ வருகின்றனன். வருக. போகலாம்.

[போகின்றனர்]

களம் 3

இடம்—சித்திரமாளிகையிலுள்ள அந்தப்புரம்.
காலம்—இரவு.
பாத்திரங்கள்—சுசீலை, நீலலோசனை, வனஜலோசனை, மாரகதம்.

[சுசீலை மஞ்சத்தின்மீது சோர்வடைந்து கண் திறவாதிருக்கின்றனள்]

நீல.—[சிறுதுயில் கொள்கின்றனள்]

சுசீலை.—[மெல்லிய குரலால்] நீலா!

வன.— யாரது?

சுசீலை.—உஸ்...... நீலலோசனை!

வன.—[எழுந்து] அம்மா!

சுசீலை.—என்னடி செய்கின்றாய்?

வன.—இதோ வந்தனன். [அருகே செல்கின்றனள்]

சுசீலை.—[கண்விழித்துப் பார்த்து] வனஜா! உன்னை யாரடி அழைத்தார்?

வன.—தாங்கள் தான் இப்போது...

சுசீலை.—இங்கு நிற்காதே. போ.

வன.—யாரையம்மா அழைத்தீர்கள்? கோபிக்க வேண்டாம் அம்மணி!

சுசீலை.—[மௌனம்]

வன.—ஏனம்மா! கோபமா?

சுசீலை.—வேண்டாமடா! இறந்தாலும்...

வன.—என்னை இறந்துபோகச் சொல்கின்றீரா? ஏனம்மா? என்ன குற்றஞ் செய்தேன்?

சுசீலை.—அப்பா, உயிர் நீங்கிலதே.

வன.—ஏன் இவ்விதம் கூறுகின்றீர்கள்?

சுசீலை.—மௌனம்.

வன.—என்ன? இளைப்போ? யாது வேண்டும்?

சுசீலை.—என்னால் முடியவில்லையே.

வன.—என்ன முடியவில்லை? எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே! இடுப்பா நோகிறது?

சுசீலை.—இன்னு மிருக்கிறதா? [கோபத்துடன்]

வன.—இன்னும் இருக்கிறதா என்றால்?

சுசீலை.—[நிர்சப்தம்]

வன,—இன்னு மென்றீரே பின்னுமொன்றுஞ் சொல்லவில்லையே.

சுசீலை.—ஒழிதலே மேலாகும்.

வன.—என்னடி இது ஒழிய வேண்டுமோமே. என்னையா ஒழியச் சொல்கின்றீர்கள்?

சுசீலை.—அந்தோ! இவ்வாறு நான் துன்பப்படுவதினும் ஈசன் திருவடி யடைதலே உத்தமம்.

வன.—தேகம் அசௌக்கியமோ? அவிழ்தம் வேண்டுமா?

சுசீலை.—எங்கிருக்கின்றனையோ உயிர்த்....... துரையே!

வன.—யாரையம்மா?

சுசீலை.—மௌனம்.

வன.—வைத்தியரையா? எந்த வைத்தியரை?

சுசீலை.—தலைவிதியோ! காலகதியோ! காதகன் செய்த சதியோ! [தந்தையை இகழ்கின்றாள்.]

வன.—போயழைத்து வரவா?

சுசீலை.—யார் இங்கே?

வன.—நான்தான் வனஜா.

சுசீலை.—மனஜாவும், வனஜாவும்.

வன.—மனஜாவல்ல. வனஜா. வனஜா. ஏனம்மா இவ்விதம் பேசுகின்றீர்?

சுசீலை.—போ. இங்கு நில்லாதே.

[நீலலோசனை வனஜாளுக்கும் சுசீலைக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டு நகைத்து]

நீல.—நல்ல காட்சி இந்தக் கண்காட்சி.

வன.—[சுற்றிப்பார்த்து] நீலாள் நித்திரை செய்கின்றாளே. இச்சப்தம் எங்கிருந்து வந்தது?

நீல.—இரண்டுகால் பிராணியின் வாய்வழியால்.

வன.—உம். நீலா! நீ நித்திரை செய்கின்றாயென்றல்லவோ நினைத்தேன்.

சுசீலை.—[அன்னையை நினைந்து கண்ணீர் விடுகின்றாள்.]

வன.—ஐயையோ! ஏனம்மா வருந்துகின்றீர்?

சுசீலை.—அன்னாய்! உயிருடனிருந்தால் இம்மணஞ் செம்மணமாய் நடைபெறுமே.

வன.—செம்மனமென்றால்? இன்னொரு முறை வாய் திறந்து சொல்லும்.

நீல.—வாயைத்திறந்து சொல்லாமல் மூக்கைத் திறந்தா சொல்வர் அம்மையார்?

வன.—யார் இப்படி எளனஞ் செய்வது? சுசீலைத் தேவியோ? அல்லவே. வேறு யாரோ? வெளியில் யாரேனும் பேசுகின்றார்களோ? [போய்ப் பார்க்கிறாள்] ஒருவருமில்லையே! யாரோ? ஒழியட்டும். இன்று ஏன் இவ்விதம் புத்திமாறிப் பேசுகின்றார் சுசீலை ஏதோ பயமாயிருக்கிறதே. அம்ம! என்ன சொன்னீர்கள்?

சுசீலை.—[பேசாதிருக்கின்றனள்.]

வன.—எது கேட்டாலும் பதிலுரையாமலிருக்கின்ற காரண மென்ன?

சுசீலை.—அடி நீலலோசனா!

நீல.—[நகைத்துக்கொண்டு மௌனமாயிருக்கின்றனள்]

வன.—என்னடி இது? எழுந்திரடி. [கையால் தட்டுகிறாள்]

நீல.—உஸ்.

வன.—தூங்கினது போதும். எழுந்திரடி.

நீல.—[வேண்டுமென்று குறட்டை விடுகிறாள்.]

வன.—என்ன குறட்டையடி இது? கழுதைக் கத்துவது போலிருக்கிறதே. இருக்காதா பின்னே. மூக்கால் அல்லது வாயால் விட்டால் இவ்வளவு சப்தமிருக்காது. இவள் உடம்பெல்லாங் குறட்டை விடுகிறதுபோலிருக்கிறதே. என்னடி? நீ மனுஷியா? ரெயில் இஞ்சினா [Engine]? எழுந்திரு.

நீல.—[அதிகமாகக் குறட்டை விடுகிறாள்]

வன.—அடி பாவி! என்ன தூக்கமடி. பாழுந்தூக்கம். ஐயையோ! கும்பகர்ணனோடு பந்தயம் போட்டுக் கொண்டனையா? வீடுபற்றி வேகிறபோது சுருட்டுக்கு நெருப்பு கேட்ட கதையாயிருக்கிறதே. சீ! எழுந்திரடி. உம். [நீலலோசனா கரத்தைப்பற்றி இழுக்கிறாள்.]

நீல.—உஸ்-உஸ்: சீ.

வன.—உம் - உஸ் - கிஸ்ஸெல்லா மிருக்கட்டும். வேண்டுமென்று செய்கிறா யிப்படி? அம்மையார் அழைக்கின்றனள் இதோ பார்.

நீல.—யார் அது?

வன.—யாருமில்லை. ஊருமில்லை. ஆகட்டும்.

நீல.—போடி. தொந்தரவு செய்யாதே.

வன.—அடி பாவி! உன்னைத் தூக்கித் தொலைக்க யாராலாகுமடி? [எழுப்பி உட்காரச் செய்கிறாள்.]

சுசீலை.—யார் பேசுகிறது? [பெருமூச்செறிகின்றனள்.]

வன.—இதோ வந்துவிட்டேன். [நீலலோசனையை அழைக்கிறாள்.]

நீல.—என்னடி உன் தொல்லை மிகப் பெரிதாய்ப் போச்சே! எங்கடி அழைக்கின்றனை?

வன.—காதில் பஞ்சுவைத்துக் கொண்டிருக்கின்றனையோ? சீக்கிரம் வாடி. [சொல்லிக்கொண்டே ஓடுகிறாள்.]

நீல.—எங்கு ஓடுகிறாயடி? இக்கோத்தில் யாரையடி நினைத்துக் கொண்டாய்?

சுசீலை.—நீலலோசனா!

நீல.—ஏனோ அழைக்கின்றீர்? யாது வேண்டுகின்றீர்?

வருகின்றேன். [மஞ்சத்தின் அருகே நின்று சுசீலையைப் பார்த்து] என்னடி வனஜா! சுசீலையம்மையார் ஒருமாதிரி இருக்கிறரே.

வன.—என்ன உருக்கமடி! உருக்கமெலாம் அம்மை மேலே உருகுதடி பாவைபோலே.

நீல.—இல்லாத உருக்கம் எங்கிருந்தடி உண்டாகும்? உனக்கிருந்தால் எனக்கிருந்ததுபோலல்லவா? அது போகட்டும். இவ்வாறு சோகமுற்றிருக்கின்றனரே சுசீலையார். யாது காரணமோ?

வன.—அதன்பொருட்டுத்தானே உன்னை எழுப்பினேன்.

நீல.—நல்லவளடி நீ-உம். ஒரு காரணமுந் தெரியாதா? தெரியாதாயின் இதுவரையில் என்னடி செய்து கொண்டிருந்தாய்?

வன.—என்ன சமர்த்தடி உன் சமர்த்து? இதுவரையில் தூங்கினதை மறைக்கும் பொருட்டா இவ்விதம் பேசுகின்ருய்?

நீல.—சுசீலைக்கண்ணே! ஈதென்ன கோலம்?

சுசீலை.—அம்மவோ! நட்டாற்றில் விட்டனையே. ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்துபெற்ற அன்னுய்! வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங் கட்டிலிலும் வைத்தென்னைக் காத்த கண்ணனையாய்! குருவி பரவாமற் கோதாட்டிச் செவ்விதின் வளர்த்த சீமாட்டி நீயன்றே? என்னைச் சீராட்டி நீராட்டிப் பாராட்டி வளர்த்த அருமை நீயே யறிவாய். என் திருக்கல்யாண விஷயமாகச் சொன்ன வற்றையெல்லா மறப்பேனே? எனது காதல! நின்னை மறப்பேனு? யார் இங்கு?

நீல.—சுசீலை நாயகமே! எது கருதி இங்ஙனம் வருந்து கின்றனை? மாலைமுதல் இளவரசரைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோமே. அச்சமயத்தில் சந்தோட மாக வார்த்தையாடிக்கொண்டிருந்தீரே. இப்போ தும்மை வருந்தச் செய்தார் யாவர்? வனஜலோசனை ஏதேனுஞ் சொல்லினளோ?

வன.—ஒகோ! ஒன்றுந் தெரியவில்லையோ? தூக்கமோ? அல்லது மயக்கமோ?

நீல.—தூக்கமுமல்ல. மயக்கமுமல்ல. யோசியாதுரைத் தாய். நீயே மதிமயக்கம் கொண்டிருக்கின்றாயடி.

வன.—அப்படியா? கண்ணில்லையோடி. அம்மையார் எக் காரணத்தி னிமித்தமோ ஆருத்துய ரடைந்திருக் கின்றனரே என்றலைந்துகொண்டிருக்கின்றேன். இச் சமயத்தில் என்னை யேனடி யிழுக்கின்றாய். உம். சற்றும் பதைத்திலதே உன் மனம்.

நீல.—கண்ணென்ன! மூக்கென்ன! வெறுமனே போசா தடி. நிரம்பதானடி. வீணாகப் பசப்புகின்றாய்.

வன.—நானா பசப்புகின்றேன். அது என்ன பசப்படி? எரியுங் கொள்ளியை...... உம். அப்புறம். சும்மா யிரடி.

நீல.—உனக்கு மாத்திரம் எங்கிருந்தடி வந்தது யாருக்கு மில்லாத விசனம்? விசனமிருந்தால்தான் என்ன? இப்படியா? எழும்பி எழும்பிக் குதிக்கின்றாயே.

வன.—நானா குதிக்கின்றேன். கொதிக்கின்றதடி— எனக்கு. சுசீலை யம்மையார் பட்டபாட்டை நீ பார்த் திருந்தாலல்லவா தெரியும்.

நீல.—பார்த்திருந்தேன். வேர்த்திருந்தேன். கட்டிக்

காத்திருந்தேன் என்கிறாயே தவிரச் செய்த காரிய மென்னடி ?

வன.—நானு பார்க்கவில்லை. எல்லாம் பார்த்துவிட்டேன்.

சுசீலை.—என்ன மல்யுத்தமடி நீலா ! இதற்கா அழைத்தேன் உன்னை ?

கற்றவரே யறிந்திடுவார் கல்வியினற் பெருமையெலாம்
நற்றவரே யின்புறுவர் நற்றவத்தின் பயனுேக்கிப்
பெற்றவளே யறிந்திடுவள் பெண்மணியி னருமையெலாம்
மற்றவரு மறிவாரோ மஞ்சமலா தென்துயரே.

நீல—இம்மஞ்சமே யறியுமென்றால் யானறியேனு ? கொஞ்சம் யானுமறிவேன். நித்திரையின்றி நெடுமூச்செறிவதென்னே ?

சுசீலை.—சீ ! [சற்றுப் பொறுத்து].

" சங்கு முழங்குந் தமிழ்நாடன் தன்னை நினைந்த போதெல்லாம்
பொங்கு கடலு முறங்காது பொழுதோர் நாளும் விடியாது
திங்க ளுறங்கும் புள்ளுறங்குந் தென்ற லுறங்குஞ் சிலகாலம்
எங்கு முறங்கு மிராக்கால மென்கண் ணிரண்டு முறங்காதே.

[நீலாள் அருகேயிருந்து உபசாரணை செய்யச் சுசீலை நித்திரை செய்கின்றனள்.]

நீல.—நீ சுகமேயாவாய். குயிலையுமன்றோ வியப்பெய்தச் செய்தது நின் குரல். வியப்பென்கின்றேனே ! வியப்பா ! இச்சுகத்தின் பெருமை அளவிடற்கு என்னலாமா ? யாவரும் அதிசயிக்குமாறு பாடுகின்றனையே பாவைமணியே ! என் அருமை நின் அருமை ! என்ன கீதம் ! பொருந்தும். பொருந்தும். என்னை அறியாமலே யுன்னைச் சுகம் என்று அழைத்

தரும் பொருந்தும். யாரை நினைந்து பாடுகின்றனையோ ?

வன.—என்னடி நீ யொருத்தி! உன்னைப்போலப் பெண்களைப் பார்த்ததேயில்லை. நீ எழுந்தது முதல் இதுவரையில் வாயில் வந்தனவற்றை யெல்லாம் பேசிக்கொண்டும், பல்லைக் காட்டிக்கொண்டும், என்ன அருமையாயிருக்கின்றதென்றும், யாரை நினைந்து பாடுகின்றனையென்றும், இதுபோல வெப்போதும் கேட்டதில்லையென்றும், மிக இனிமையாயிருந்ததென்றும் விளையாடுகின்றாயே! இது உனக்கழகாடி? உன்னை எழுப்பினதே தவறுபோலும். இவ்வாறு செய்ததால் மாத்திரம் எழுந்து விட்டார்களோ? சுசீலையாரின் துயரை இன்னும் விர்த்தி செய்வாய்போலத் தோற்றுகிறதே. இதற்கோ வுன்னோடு மல்லாடினேன். நாம் இருவரும் அருகேயிருந்தும் சுசீலை இக்கதி யடைந்திருப்பதை விஜய பிரதாபசிலர் செவியுற்றால் நம்மையன்றோ நிந்திப்பர். இப்படி வருந்துகின்றனளே; இங்ஙனம் இத்தகைய துபருற எப்போதும் கண்டதில்லையே; அதிசயமாக இருக்கின்றதே! காரணம் என்னையோ? நம்முடனும் கூறினர் இல்லையே எக்காரணமும்; எதை எதையோ நினைந்து நினைந்து ஏக்கமுற்றுத் தூக்கமற்று மனமுடைந்து விசனமடைந்து நிலை குலைந்து இக்கோலமாயிருக்கின்றனரே. உன்பால் மிக்க அன்பு பாராட்டி வருபவள் ஆயிற்றே. உன் முகத்தையும் பாராது, அம்மணி! அம்மணி! என்று ஏங்குகின்றனரே.

சுசீலே.—அடி வனஜா! போடி. இரைச்சல் என்ன? முன்னமே ஒழியச் சொல்லவில்லையா?

நீல.—என்னடி பிடித்தாட்டுகிறது உன்னை? இப்படியும் அப்படியும் ஆடுகிறாயே. பயமாயிருக்கிறதே! ஒருவேளை அந்த அரசமரத்திலுள்ள பேய் பிடித்துக் கொண்டதோ? என்னையும் பிடித்துக் கொள்வாயோ? என்னடி முகத்தில்? வியர்வையோ? கண்ணீரோ? அல்லது தண்ணீரோ? [நகைக்கின்றனள்.]

வன.—இன்னுமா பரிகசிக்கின்றாய்? இதுதானு சமயம்? கண்ணவிந்துபோச்சோ வுனக்கு. கண்ணீர்கூட விடுகின்றனரே. காண்டிலையோ?

நீல.—ஆசைக்கிளியே! சுசீலை மணியே! ஏன் கண்ணீர் விடுகின்றனை? நின்னன்னையை நினைந்தோ? அவ்வம்மையை இப்பொழுது நினைத்தற்கு என்னே நிமித்தம்? நின் தந்தையை நினைந்தோ? அவரைப் பழித்தற்கும் அவர் செய்த சதியை நினைந்து அழுதற்கும் ஒருவேளை நியாயமிருக்கலாம். அதன் பொருட்டோ அல்லது எதன் பொருட்டோ? யாதும் பேசிலையே.

வன.—உன்னை நினைந்து ஏனடி துக்கிக்கப் போகின்றனர். சாகப்போகின்றாயோ நீ? அல்லது செத்தே விட்டாயோ? அநாவசியமாக ஏதேதோ உளறுகின்றாயே; துயரை யொழித்தற்குரியனவற்றை யல்லவோ செய்தல் வேண்டும். என்னுடைய அறியாமைதான் உன்னை எழுப்பினது என்று நினைக்கின்றேன். [சுசீலை முகத்தைப் பார்த்துக் கைநெறித்து] ஐயோ!

தந்தையார் நேரே காணின் என்ன நினைப்பரோ? உயிரையும் துறப்பரே.

நீல.—உன்னையொத்த மந்தமதியையுடைய பெண்பாலர் மண்மீது வாழ்வதில் பிரயோஜனமேயில்லை. வாயாட மாத்திரம் நன்று கற்றுக்கொண்டாய். வகையோடு வார்த்தை யாடினல் யாவர்க்கும் சந்தோடமாயிருக்கும். உன் எஜமானியு மதிப்பாள்.

வன.—நீ மாத்திரம் மதிக்கமாட்டாய்போ லிருக்கிறதே.

நீல.—முன்னமே மதித்துவைத்திருக்கின்றேனே.

வன.—நான் வகையோடுதான் பேசுகின்றேன். என்னடி வகை தப்பிப் பேசுகிறேன்?

நீல.—நீயோ மெச்சவேண்டும் உன் வகையை. நீ வகையாகப் பேசினல், "ஏனடி இரைச்சல்" "போடி" என, நீ பேசுவதை ஏன் தடுத்தனர் சுசீலையார். அது போதாதா?

வன.—இரைச்சலிடாதே யென்றுதான் சொல்லினர். சொன்னலென்ன? சொல்லத்தகாதா? போடியென்ற லென்னடி இழிவு?

நீல.—அவ்வம்மைதான் சொல்லத்தகாதா? நீதான் கேட்கத்தகாதா? யாரடி கேட்கத்தகா தென்றனர்?

வன.—இப்பொழுதுதான் ஏளனம் செய்தனையே. இதற்குள்ளாகவா பேச்சை மாற்றுகின்றாய். நீ யொருத்தி போதாதா? அம்மை கூடச் சொல்லவேண்டுமா? நான் எப்போது வாய்திறந்தாலும், உம். இப்போதேன் உன்னோடு? இருக்கட்டும்.

நீல.—எனக்குத்தான் தெரியுமே; கோபமாத்திரம் வந்துவிடுகிறது. வந்து என் செய்ய? இவ்வளவு பேசக்

கற்ற நீ, சுசீலை சொல்லிய சொற்களிலுள்ள நுட்பம் இன்னதென்று அறிந்துகொண்டாயா ?

வன.—[மோவாய்க்கட்டையின்மீது கை வைத்துக்கொண்டு] சொல்லியதைத்தான் கேட்டோமே! கேளாமலா யிருந்தோம். அதில் என்னடி நுட்பம்? எப்படி யிருக்குமடி அந்த நுட்பம். நான் அறியாத நுட்பமா ? உனக்குத் தெரிந்தால் சொல்லக்கூடாதா ?

நீல.—சரி, எனக்குத் தெரியுமே என்னையே கேட்பாயென்று. கூறப்படாத வொன்றை எவ்வாறு கூறுவது ? உனது பெருமாட்டியும் குறிப்பாய்த்தானே யுணர்த்தினர். அது சொல்லக்கூடியதல்லவே. அவ்வாறு சொல்லக்கூடாத வொன்றை நீ குறிப்பாலறியாது ஏதேதோ யுளறுகின்றாயென்றுதான் தடுத்தனர்.

வன.—அவ்வளவு இரகசியமா அது.

நீல.—[புன்சிரிப்புற்று] இரகசியமென்றால் இரகசியம்தான்.

வன.—பரிபாஷையா யிருக்கின்றதே நீ பேசுவது, ஒன்றும் தோற்றவில்லையே.

நீல.—பரிபாஷை தெரிந்த வுனக்குத்தான் பரிபாடை, கரிபாடை, அரிபாடை முதலிய மிருகபாடைகளெல்லாந் தெரியும். நான் கூறவந்தது நீ சொல்லியபடி பரிபாஷை யல்ல.

வன.—ஏதோ இரகசியம் என்றாயே.

நீல.—இரகசியம்தான். முற்றும் இரகசியமுமல்ல. முற்றும் வெளிப்படையுமல்ல.

வன.—இன்றென்ன புதுமையாகவும் விதவிதமாகவும் பேசுகின்றாயே.

நீல.—உண்மை யறியாதவளுக்கு விதவிதமாய்த்தான் இருக்கும். புதுமையாகவும் பழமையாகவும் இருக்கும். இது விஷயத்தைப் பாங்கியாயுள்ள நீயே குறிப்பால் அறியவேண்டிய தல்லாமல் நின்னை யொத்த பெண்பாலரைச் சொல்லுமாறு வற்புறுத்தலாமா ?

வன.—வற்புறுத்துவதோ, என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்வதோ. கற்றாயே நீயும்! இந்த சாமர்த்தியம் எங்கடி கற்றாய் ? நீதான் உன்னை மறந்து நித்திரை செய்துகொண்டிருந்தாயே! நான் அல்லவோ உன் நித்திரையை யொழித்தேன். இல்லாவிடின் நீ விட்ட குறட்டை உன்னைக் கொன்றிருக்குமே. சற்று முன்னேதானே நீ எழுந்தாய். நமது அம்மையார் வருந்திக்கூறிய பற்பலவற்றுள் சிற்சில சொற்களை நீ கேட்டிருக்கலாம். அவ்விதம் அவள் சொல்லியவை யெல்லாம் நீ எவ்வாறு கேட்டாய்? மிகவும் ஜாக்கிரதையாகக் கேட்டதுபோல் போலியாக நடிக்கின்றாயே. ஒருகால் நீ விழித்துக் கொண்டு கேட்டதாகவே யிருக்கட்டும்.

நீல.—சரி, சரி, கடைசியாகச் சொன்ன வாக்கியம் நிரம்பவும் சரி. பிறகு உனது அபிப்பிராயத்தை யெல்லாம் சொல்.

வன.—சொல்லிக்கொண்டே வருகிறேன். உனக்குள்ள ஜாக்கிரதையும், அன்பும், கவலையும் எனக்கும் இருந்துதானிருக்கும். உனக்குத்தானா தெரியும் சுசீலையின் அருமை ? நானறியேனா? ஒருநாளா! இருநாளா! அவ்வளவு பழக்கமில்லையா எனக்கு ?

தலைவியின் பெருமை பாங்கியர்களுக்குத் தெரியாதா? அப்பெருமாட்டியிடம் அன்புபாராட்டி அவர் மனதிற் கேற்றவாறு நடப்பவர்களே பாங்கியர்களாவார்கள். சமயத்திற்குத் தகுந்தவாறு தலைவியாவார் எவ்வெவ்விடயங்களில் சிந்தையைச் செலுத்துவாரோ, எவ்வெக்காரியங்களைச் செய்வான் ஏவுவரோ அவ்வண்ணமே அவ்வக்காலங்களில் அவ்வக்காரியங்களை ஜாக்கிரதையாகச் செய்து வருபவளாயிற்றே. சமயம் நோக்கி நடக்கும் சற்குணவதியாயிற்றே நான். ஆதலின் பாங்கிகட்குரிய இலக்ஷணம் என்னிடம் இல்லையென்று நினைத்தாயா? பாங்கியர்களுக்குரிய நடத்தை நான் அறியேனு? இவ்வளவு காலமாய் நீ பழகியதுபோல் தானே நானும் பழகிவருகிறேன். உன்பால் உள்ள பக்ஷம் என்னிடத் தவ்வம்மைக் கில்லையென்று நினைத்துவிட்டாய் போலிருக்கிறது. இன்னும் வேண்டுமானல் என்னளவில் மிகுந்த ஆசையைப் பலமுறையும் அவ்வம்மையார் காட்டியிருப்பதைக் கவனித்திருக்கிறேன். ஒருவேளை நீ கவனித்திருக்கமாட்டாய்.

நீல.—கேட்கவேண்டுமா? அதற்கென்ன தடை? கவனிக்க சந்தர்ப்ப மிருந்ததில்லை போலும் எனக்கு.

வன.—அப்படியும் இருந்திருக்கலாம். நான் எது சொல்லினும் எப்பொழுதும் தடைகூறக் கேட்டதேயில்லையே, இன்றுமாத்திரம் என் சொல்லை மறுத்து வெறுத்ததாக நீ சொல்வது அதிசயத்தை யுண்டாக்குகிறதே.

நீல.—அதிசயமா? மிகுந்த அதிசயமென்று சொல்லடி. அதிசயத்தோடு போவானேன். மற்றொன்றுகூடக் கூட்டிச்சொல்ல மறந்துவிட்டாயோ? இதுவரையில் சொன்ன வேகத்தில் விட்டுவிட்டாயோ? அல்லது சொல்லியே யிருப்போமென்று நினைத்து விட்டாயோ? அதைச் சொல்வானேன் என்று சொல்லாது விட்டாயோ? இஷ்டமில்லாமலே விட்டுவிட்டாயோ? வெளியிடின் யாது விளையும் என்று விட்டாயோ? உனது மடமையையே காட்டிவிடு மென்று விட்டாயோ?

வன.—நீலா! இன்றுதானு வுன்னை யறிவேன். வாய் சமர்த்தி ஆயிற்றே நீ. நானோ விரைவாகப் பேசுகின்றேன். ஒரு நிமிடத்திற்குள் விட்டாய் விட்டாயென்று எவ்வளவோ நீ விட்டாயே. என்னென்ன பேசுகிறோமென்று உனக்கே தெரியாது போலிருக்கிறது. உன்போல் முன் எண்ணுமல் சொற்களைக் கொட்டிவிடமாட்டேன். யாரிடத்தில் வார்த்தையாடினும் எவ்வாறு பேசவேண்டுமோ அவ்வாறே யோசனையோடு பேசுவேன். சுசீலை எவ்வாறு ஆஞ்ஞைபுரியினும் உன்போலத் திடீரென முன் செய்துவிட்டுச் செய்துவிட்ட பின்னர் வருந்தேன். செய்யவும் துணியேன். எந்த விஷயமாயினும் முன் வருவதை ஓர்ந்தே செய்வன திருந்தச் செய்வேன் என்பதை யறியாதவள்போல் நான் வகையுடன் வார்த்தை யாடுகிறேனில்லை யெனவும், தலைவி செப்பிய நுட்பம் அறிந்திலேனெனவும், மண்மீது வாழ்வதில் பயனில்லை யெனவும், சமயத்திற்குத்

தக்கவாறு நடக்கும் சாமர்த்தியம் இல்லேன் எனவும் வந்தவாறு பிதற்றுகின்றாய். என் னுடன் பன்னாளாய்ப் பழகியும், என் குணங்க ளெல்லாம் செவ்வனே யறிந்தும் இவ்வாறு என்னை இகழ்ந்துரைத்தல் உனக்கழகல்லடி. இகழ்தலால் யாதடி பெறுவாய்? என்னை இகழ்தலால் உண்டா கும் குறை உனக்கில்லையோ. நீ நிரம்பவும் கற்றாய் என்பதில் தடையில்லை. கற்றுவிட்டதால் ஆய்விட் டதா? எவ்வளவு கற்றும் என்ன பிரயோஜனம். நீ கற்றும் கல்லாதவளேயாயினை. கற்ற நடை சற்றும் காணேனே. நான் தவறு செய்திருப்பினும் பேதை மக்களுக்கு இயற்கையே அவ்வாறு செய்தல்.

"பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்ப தொன்றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங் காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்"

என்ற ஆன்றோர் வாக்கை யறிந்தன்றோ புத்திபுகட்டி நல்ல வழியில் நடப்பித்தல் வேண்டும். அச்செய்கை யன்றோ நற்செய்கை. இதை விடுத்து முற்கூறிய வண்ணம் முனிந்திகழ்ந்து பரிகசித்தல் நலமாகுமா? ஏன் இப்போது வீண்பேச்சு. காலாதீதமாகின்றது.

நீல.—நான் சொல்லுவதற்கு முன் உன் கதையை நீயே வீண்கதை யென்று சொல்லிவிட்டாய் போலும். உனக்கே தெரிந்துவிட்டது போலிருக்கிறது உன் கதையின் இலக்ஷணம்.

வன.—இத்தனை நாள் வரையில் இவ்வாறு நீ பேசியவள்

அல்ல. இன்று குதர்க்கமாக வார்த்தை யாடு வதைக் கவனித்தால் பெருந்தேவியின் செயலைப் போல் தோற்றுகிறது.

நீல.—நமது அரசியின் உட்கருத்தை யறியவொட்டாது உன் அறிவை விழுங்கிய பெருந்தேவியாகிய மூதேவி யின் வசப்பட்டேனென வுளறுதே! உளறவும் எண் ணுதே! அன்றியும் பெருந்தேவி யென்பதற்கு நினக்குப் புலப்படாத அர்த்தங்கள் பலவுள. பெருமைபொருந்திய தேவியென்றும், பெருமையின் மிகுந்த தேவியென்றும், பெருமையே உருவாய தேவி யென்றும் பலவகையான பொருள்களுள்ளன. அத்தகைய பெருந்தேவி நமது சுசீலையேயாகும். நீ சொல்லியபடி நான் அவ்வம்மையின் வசப்பட்டிருக் கின்றேனென்பதில் என்னடி சந்தேகம்? அச் சீமாட்டி வசப்பட்டிருத்தலால் அல்லவா அவர் களது அந்தரங்க அபிப்பிராயங்களை அறிந்து கொண்டேன். நின்வசப்பட்டா வுளறி வழியச் சொல்கின்றாய்.

வன.—உளற இஷ்டமில்லாவிட்டாலும் உண்மை தோன் றச் சொல்லலாகாதா?

நீல.—இன்னும் புலப்படவில்லையா?

வன.—புலமும் பொலமும், என்ன வற்புறுத்தியும் பிடி வாதமாயிருந்தால்.

நீல.—உண்மை உரைப்பினும் வீண்வார்த்தை யென் பாயாகில்.

வன.—அப்படிச் சொல்வேனா? அம்மாதிரி எப்போதே னும் சொல்லியதுண்டா?

நீல.—என்னடி இம்மாதிரி பேசுகின்ருய். நீயேஉன் பேச்சை இப்போது வீண்பேச்சு என்று முடிக்கவில்லையா? உன் கட்டுக்கதையை முடித்து ஒரு நிமிடங் கூட ஆகவில்லையே. வாக்கிய முடிபு மறியாமற் கோபத்தால் வந்தவாறு உளறி வழிகின்றனையே.

வன.—சொல்லிய ஞாபகமாகவேதானிருக்கிறது. மறந்து விட்டேனடி. என்ன குற்றமடி கண்டாய்?

நீல.—என்ன மறப்படி? இதுவரையில் உன் சிந்தையை எங்கடி செலுத்தியிருந்தனை? ஒவ்வொரு குற்றத்தையு மெடுத்துக்காட்டிக் கண்டித்தற் கிதுதானு சமயம்?

வன.—நீ செலுத்திய விடத்தில்தான் செலுத்தி இருந்தேன்.

நீல.—செலுத்தி யிருந்தால் இப்பாடேன்?

வன.—சொல்லலாகாதா இன்னும்?

நீல.—சொன்னபின்னர் அதையும் மறந்துவிட்டால்.

வன.—மறவேன். மறவேன்.

நீல.—எனக்குத் தோற்றவள் தானே.

வன.—என்ன? தோற்றவளா? நன்ருயிருக்கிறது. எப்படியாயினும் இரகசியம் வெளியாகவேண்டி யிருத்தலால் அவ்வாறுதான் சொல்லவேண்டும். அவ்விதம் நான் சொல்லாமுன்னம் நன்கு புலப்படுத்தக் கூடாதா? நான் தோற்றவளாய்த்தானிருக்கட்டுமே. அதனுல் எனக்கொரு குறைவுமில்லை.

நீல.—இவ்வாறு கெஞ்சிக் கேட்டிருப்பின் முன்னமே சொல்லியிருப்பேன். அதையெல்லாம் விடுத்து அறிந்தவள்போல் வீண்வாதம் நீ செய்யத் தொ

டங்கினமையாலன்றோ நான் வெற்றிக்கொடி நாட்டக் கருதினேன்.

வன.—மன்றாடிதான் சந்தேகம் தீர்க்கவேண்டும்.

நீல.—மன்றாடியா ? ஆம். மன்றாடியால்தான் சந்தேகம் தீரவேண்டும்.

வன.—மன்றாடி என்றேன். மன்றாடியால் என்கிறாயே.

நீல.—நீ தொகுத்ததை நான் விரித்துரைத்தேன். எவ்வாறுரைப்பினு மொன்றே.

வன.—நீ கூறியதின் பொருளென்ன ?

நீல.—நீ கூறிய வாக்கியத்தின் கருத்தை நீயே யறியாயென்றால் கல்விக் களஞ்சியமாகிய அக்கட்டழகியின் கருத்தை எவ்வாறு அறிவாய்? கவனிப்பாயாக. மன்று, ஆடி என்னும் இரு சொற்களும் ஒன்றுபடப் புணர்ந்தபோது மன்றாடி எனத்திரியும். மன்று என்றால் அம்பலம் என்பது பொருள். ஆடி என்றால் நிர்த்தனம் செய்வோன் என்பது பொருள். நீ அறியாததும் நான் விளக்காததுமான இரகசியத்தை மன்றாகிய சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலத்திலும், மதுரையிலுள்ள வெள்ளியம்பலத்திலும் நிருத்தஞ்செய்கின்ற ஒரு தெய்வமே அறிவித்தல் வேண்டுமென்பதுதான் உனது வாக்கியத்தின் முடிபு.

வன.—நீ கூறிய பொருள் நகை தருகிறது. கம்பர் உன்னைத்தான் தனக்குப் பதிலாக இந்த சமஸ்தானத்தில் பண்டிதையாய் வைத்துவிட்டுப் போனார்போலிருக்கிறது. " தாசி பொன்னிக்குக் கம்பர் அடிமை" யென்ற வாக்கியத்தின் பொருள் அறியாது மயங்

கிய அரசன் முதலாயினோர்க்கு உண்மைப்பொருளை உரைத்து வெட்குமாறு செய்ததுபோல் அல்லவா இருக்கிறது உன் கதை. ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு எழுத்திற்கும் இலக்கணமும் பொருளும் அடுக்கடுக்காய்க் கூற எங்கடி கற்றாய்?

நீல.—இந்த இலக்கணமெல்லாம் மறந்தாவிட்டனே?

வன.—அந்த உலக்கணமெல்லாவற்றையும் உலைக்கூடத்தில் போட்டு எரித்தாயிற்று. எனக்கேன் இவ்விலக்கணக்கவலை. இவ்விரகசியக்கவலை தீர்ந்தால் போதும்.

நீல.—ஒரு முழ நீளம் வாயாடுவதால் வெற்றியடைந்துவிடலாமென நினைந்தாயோ? தோல்விதானே.

வன.—தோ [ஆரம்பிக்குமுன்]

நீல.—தோ தோ வென்றால் முடியாது. தோல்வி யென்னும் மூன்று எழுத்துக்களையும் செவ்வனே உச்சரித்தல் வேண்டும்.

வன.—தோல்விதான்.

நீல.—மறவாதே. ஞாபக சக்தியில்லாதவர்கள் உன்னிடத்தில் கடன் கேட்குமாறு உன் அறிவை கூர்மையாக்குவாயாக.

வன.—இல்லையம்மா! பண்டிதையே! மறவேன்.

நீல.—அவ்விரகசியத்தைப் பின்னர் வெளியிடுவேன். நீயேன் முன்னர் பலவாறாக இகழ்ந்துரைத்தேனென வருந்தினாய்? நான் இகழ்ந்தோ வுரைத்தேன்? உன்னை இகழ்வேனா? இதுகாறும் அவ்வாறு செய்ததுண்டா. எனது அபிப்பிராயத்தை யறியாமலே இகழ்தல் அழகல்ல வென்றும், முனிதல் தகுதி

யல்லவெனவும், நீ ஒருத்தியே வருமுன் காக்கும் உணர்வு மிக்கவளென்றும், யான் வந்தபின்னர் வருந்துபவளென்றும் உரைத்தாய். நான் கோபித்துக் கொண்டேனு? ஏனடி கோபிக்கவேண்டும்? நீ ஏசினுங் கொள்ளேன் ஒரு பொருளாய். வனஜா!

" அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

யென்ற எமது திருவள்ளுவர் வாக்கை மறப்பேனு? உள்ளதை விண்டால் நொள்ளையன் நொந்தவாறு யான் கள்ளமின்றிக் கூறிய வார்த்தைகளின் சாரத்தைக் கிரகிக்குஞ் சக்தியின்றி என துள்ளத் துள்ளவற்றை யெல்லாம் ஆய்ந்தவள்போல என்மீது குற்றஞ் சுமத்துவதால் எனக் கென்னடி குறை? நீ வருந்திக் கூறிய சொற்களைக் குறித்து ஆலோசிக்குமிடத்து, ஒரு சிறிதும் என்னைத் தழுவாமலே உனக்கு விரோதமாய்ப் பேசினே னெனவும் பரிகசித்தேனெனவு மாருக யெண்ணிவிட்டாயென்றே விளங்குகிறது. இவ்விதங்கூட எண்ணலாமா? யார் எந்த விஷயத்தைப் பேசினும் அறிவுடையார் குற்றத்தை நாடார்கள். குணத்தையே நாடுவார்கள். அற்பமான விடயங்களைப் பெரிதாகக் கருதி மல்லாடுகின்ற கல்வியறிவில்லாப் பெண்களுள்ளே என்னையு மொருத்தியாக நினைத்தாயா? இவ்விபரீத எண்ணங் குணந்தரக் கூடியதா? உனது நெஞ்சமே நெஞ்சம். வஞ்ச மிக்க நெஞ்சம். அனுபவமில்லாதவரோடு வார்த்தை யாடுவது போலல்லவா மடமட வென்று பேசிவிட்டாய். நீ பாங்கியாகா யென்

றுவது, பாங்கியர்கட்குரிய இலட்சணங்க ளுனக்கில்லை யென்றுவது, என்னிடத்தில் விசேடித்த குணங்க ளமைந்துள்ளன வென்றுவது, சுசீலை உன்னை நேசியாது வெறுத்தாளென்றுவது, சமயத்திற்குத் தக்கவாறு நடக்கும் பக்குவமில்லை யென்றுவது, என்னுடன் பல நாட்களாகப் பழகாதவ ளென்றுவது கூறினேனு ? ஒருகால் பொறுமை மேற்கொண்டுரைத்தே னெனவும் நினைந்துவிட்டாயோ ? அவ்வாறு பொறுமை கொள்வதற்குங் காரண மொன்றுமில்லையே.

வன.—என்னுடன் பேசும்போது அடிக்கடி நகைத்தனை யல்லவா ?

நீல.—நகைத்தால்.

வன.—என்னை யேசுகின்ற குறிப்பென்றுதான் நினைத்தேன்.

நீல.—நகைத்தல் என்றுல் பரிகசித்தல் என்பதுதான் பொருளோ ?

வன.—அது பொருளோ அருளோ. எனக்கென் தெரியும்.

நீல.—ஒன்றுமறியாளாங் கன்னி அவளைப் பிடித்ததாம் ஆறுமாத சன்னி யென்பதை யொப்பவே பேசுகின்றுயே. [மீண்டும் நகைக்கின்றுள்].

வன.—காரணமின்றி ஏனடி நகைக்கின்றுய் ?

நீல.—மீண்டும் உன் மடமையைக் குறித்துத்தான்.

வன.—மடமை எம்போல்வார்க்குள்ளது இயற்கை தானே.

நீல.—மடமையென்றுல் என்னடி பொருள் ?

வன.—மடமையென்றாலும் பேதமை யென்றாலு மொரு பொருள்தானே ?

நீல.—ஒரு பொருள்தான். அறிவின்மையென்றாலும் பொருந்தும். ஆயினும் விரித்து உரைத்தால் இன்னும் நன்றாய் விளங்காதா ?

வன.—விரித்துரைக்க வகையறியேன்.

நீல.—கவனிப்பாயாக. பேதமையென்றால் அறியாமை யெனப் பொருள் தரினும் அறியாமை யென்பதே பொருளல்ல. அறிந்தும் அறியாதுபோலிருத்தல் என்பதே அதன் கருத்து. நீயோ முற்றும் அறியாதவளே ! பேதையென்னும் பெயருக்குரியவளாகாய். ஆதலால் நின் அறிவில் பதியுமாறு அவ்விரகசியத்தை விளக்குகின்றேன். உனது மடமையை ஒழிப்பாயாக.

வன.—மடமையை ஒழியென்றும் பேதமையை யகற்று என்றும் இரகசியத்தை வெளியிடுகின்றேன் என்றும் வீண் விஷயங்களைப் பேசிக் காலங்கழிக்கின்றாயே தவிர இதுவரையில் யாதும் உரைத்தாயில்லையே. இதனாலேயே அம்மையார் கூறிய செய்யுளிலும் மற்ற வார்த்தைகளிலும் நீ கூறியபடி நுட்பமாகிலும் இரகசியமாகிலும் எவ்வித அருமையான விசேடங்களும் இல்லையென்றே நினைக்கின்றேன். இருப்பின் சற்றும் வருந்தாது நகைப்புற்று காலதாமதஞ் செய்யாய்.

நீல.—என்ன ! வருந்தவா வேண்டும். நீ வருந்த வேண்டியதுதான்.

வன.—பன்மையாகக் கூறாது ஒருமையாக என்னை மாத்

திரம் ஏன் வருந்தச் சொல்கின்றாய். நம்மிருவர்க்கும் உற்றதுதானே.

நீல.—அவ்வண்ணம் நானும் வருந்தவேண்டுவது அநுவசியம். பூனைகண்மூடிக்கொண்டால் புவனமெல்லாம் கண்மூடிக்கொள்ளுமா? பகற்பொழுதை இருள் என்கிற நீ வியாகூலமுற்றே சாகவேண்டியதுதான்.

வன.—பகற்பொழுதை இப்போது யார் இருள் என்றார்? இப்பொழுது இருளே நிறைந்திருக்கின்றதெங்கும். நீயே அங்ஙனம் கூறினாய்.

நீல.—கல்வியில்லாக் குறையால், பகல் என்றால் பகல் என்றும், இருள் என்றால் இருள் என்றும், தடிதடியாக அனர்த்தம் செய்துவிட்டாய்! இன்னும் ஒரு முறை நகைக்கவேண்டியதே!

வன.—நகைத்தாலும் நகை. என் செய்தாலும் செய். இந்த சொற்களுக்குங்கூடவா வேறு அர்த்தம் செய்யப் போகின்றனை?

நீல.—ஆம். மஞ்சத்தயர்ந்துள்ள மதிமிக்காள் செப்பிய பயன்தரக்கூடிய சொற்களிலுள்ள நுட்பமறியாது மயங்குகின்றது மன்றி நுட்பம் யாதுமில்லை எனப் பிதற்றும் உன் மருளே இருளாகும். பகற்போது என்றது உனது அறிவைக் குறித்ததாகும்.

வன.—பகலை அறிவிற்கு ஏன் உவமையாகக் கூற வேண்டும்.

நீல.—பகற்காலம் இருளை மறைத்துப் பிரகாசிப்பது போல அறியாமையை யொழித்து எவ்விஷயங்களையும் விளக்கிப் பிரகாசிக்கும் பெருமையுடையது அறிவு ஆதலால் நான் உரைத்த உவமை பொருந்தும்.

வன.—நின் புத்தியே சிறந்ததாகும். உன்னோடு வாது செய்து வெற்றியடைவது அசாத்தியந்தான். கல்விக்குள்ள சிறப்பே சிறப்பு. இதுவரையில் நின்னுடன் பழகியும் உன் பெருமை யறியாமலும், அரிய நூல்களைக் கல்லாமலும் வீண்காலம் போக்கினேன். இப்போதுதான் விளங்குகின்றது. மாசுதாளும் கல்வியின் பெருமையைக் கற்பித்தாள்.

நீல.—இனியாகிலும் உனது சன்மம் பாழாகாவாறு அறிவை விளக்கி அன்பைப் பெருக்கி ஆருயிருக்குறுதி தரும் அருமையான நூல்களை வாசிப்பாயாக.

வன.—அல்லியாசாணிமாலை, பவளக்கொடிமாலை முதலிய பெரிய புத்தகங்களை வாசித்தால் அறிவு பெருகாதா?

நீல.—அல்லிமாலை, தொசைசாணிமாலை, பவளமாலை, முல்லைமாலை, ரோஜா மாலை முதலிய மாலைகள் உன் கண்களுக்குக் காமாலை வரச்செய்யும். ஒரு பிரயோசனமு மடையமாட்டாய். கடவுளால் கொடுக்கப் பெற்ற கண்களைக்கொண்டு அத்தேவனுக்கு ஆரமாக விளங்குகின்ற தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், பெரியபுராணம் என்னும் இப்பெரிய வேதங்களை வாசிப்பாயாக. நீ கூறிய மால்தரும் புத்தகங்கள் மதியை விர்த்திசெய்யாது. அந்த சிறுகதைகள் உன்னுடைய வாழ்நாட்களை வீழ்நாட்களாக்கிவிடும். நமது தலைவி நம்மிடம் வசனிக்கும்போது சமயத்திற்குத் தக்கவாறு செநதமிழ் நடையாகப் பிறர் அறியாதவாறு சொல்லின் யாது செய்வாய். நான் அருகேயிருப்பின் அறிவிப்பேன். இல்லாவிடில் இலக்கணங்களை உலைக்கூடத்

தில் எறிந்துவிட்டேன் என்று எஜமானியிடம் சொல்லுதல் தருமா ? இலக்கண ஆராய்ச்சி யில்லாவிடில் என்ன பயன்? இப்போது சுசீலையார் சொல்லிய செய்யுளின் பொருள் தெரியாமலல்லவா வாயில் வந்தவாறு பித்தேறியவள்போலப் பிதற்றுகின்றாய். இப்போதாகிலும் வருமுன் காக்கும் உணர்வுடையாள் நானே அல்லது நீயோ வென்றும் வந்தபின் படுபவள் நீயே யென்றும் தெரிந்துகொள்வாயாக.

வன.—வந்தனம் கோடி தந்தனன். அந்த செய்யுளின் அருமையைச் செப்பாயா ?

நீல.—அருமைதான். அருமையென்றாலும் தகும்.

"கற்றாரே யறிந்திடுவர் கல்வியினற் பெருமையெலாம்

என ஆரம்பித்து

மற்றவரு மறிவாரோ மஞ்சமலா தென்துயரே"

யென முடித்த அருமையே அருமை. கற்றநற் காவலன் கருத்துறுங் காதலன் போலும்.

வன.—அவ்வருமையை யான் தெரிந்துகொள்ளவில்லையே. மற்றொரு செய்யுளுஞ் சொல்லினர். தூக்கம் வாவில்லை யென்றுதான் சொல்லினரோ ?

நீல.—வாய்விட்டுச் சொல்லலாமென்றால் என் மனமானது வேண்டாமெனத் தடைசெய்கின்றது. சொல்லத் தகுந்ததாயுந் தோற்றவில்லை. எனக்கும் அச்செய்யுளின் கருத்து முற்றும் விளங்கவில்லை யாதலால் நன்கறிந்துகொண்டு செப்பவேண்டிய தவசியமாயின் செப்புகிறேன். மேல் உணர்த்தியதை யறிந்திலையே

சுசீலே.—[இளவரசாது மாளிகையில் சுசிலருடன் சரசமாக வார்த்தையாடுவதுபோலச் சொற்பனங்கண்டு வலது காத்தின் பெருவிரலைச் சிறிது மடித்து உதட்டின்மீது வைத்துக்கொண்டு குறுநகையுடன்] யாது ? நாத ! முறுவலா? நிலாமுறுவலா ? இளநிலா முறுவலா தோன்றுகின்றதுமக்கு ? உம். தோன்றும். என்ன ? யான் தங்கள் சிங்காரமாளிகையைச் சிங்காரஞ் செய்ய வந்த சிங்காரியா ? சித்திரமாளிகைக்குத் தகுந்த விசித்திர ஒய்யாரியா ? பருவமா? என்ன ? பருவமா ? பாட்டிமையா ? அல்லவா ? இல்லிகவாப் பருவமா ? அதென்ன பருவம் இல்லிகவாப் பருவம் ? கன்னிகைப் பவருவமா ? சரி. பிறகு அக்கன்னிகைப் பருவமடைந்த முதலா ? இக்கன்னிகைதான் இங்கிருக்கின்றனள். நான்தான் உம்முடன் உல்லாசமாய்ப் பேசுகின்றேன். அக்கன்னிகை யென்கிறீர்களே. வேறு கன்னியின் சிநேகங்கூடவா ? சரி. சரி. நான் பிசகிவிட்டேனு ? எப்படி ? அக்கன்னிகைப்பருவம் என்றால் வேறொரு கன்னிகை பருவமடைந்த முதல் என்று யான் பொருள்கொள்ளல் அமைவுடைத்தன்று ? நான் அடைந்த அந்தக் கன்னிகைப் பருவமாகிய (உமக்குரிய) காலமுதல் இன்று வரையில் எனது மதிமுகத்தைக் காணப் போாசையிருந்துஞ் சமயம் வாய்த்திலதா ? வீணுகின்றதா ? தங்கள் யௌவனப்பருவம் வீணுகின்றதா? ஏன் ? அடுத்த மாளிகையிலிருந்தும் என் திருமுகம் கண்டு களிக்கவில்லையா ? அடையவேண்டிய இன்பத்தையும் அடையாதிருக்கீரா ? நீர் அடையா

விட்டால் நான் என் செய்ய ? என்னகுரல் அனையா யென்றீர் ? குயிலனைய குரலுடையளா யான் ? என் செவ்வாயினின்றும் உதித்த அமிர்த மொழி களைச் செவியாரப் பருகி ஆனந்தக்கடலில் ஆழ்ந் தீரா ? என்ன கனி ? தீங்கனியா ? உம். மாங்கனி யல்லவா ? நான் எவ்வாறு கூறினும் பொருந் துமா ? மின்னற்கொடியா நான் ? மனுஷியா யிற்றே ! கொடி என்கிறீர்களே. மன்னர்கள் மெச்சு மின்னற்கொடியா ? இத்தினமே சுதினமா ? எனவ்வாறுரைத்தீர் ? மற்ற தினங்கள் தீயனவோ ? சுசீலனையும் சுசீலையையுங் கூட்ட வந்த சுதினமா ? இப்பாக்கியமே பெரும் பாக்கியமா ? இவ்வாறு பேசுவதால் யாதும் பயனிலதா ? எவ்வாறோ பயன் பெறுவீர் ? கற்பகத்தருவாய நீர் காமவல்லிக் கொடி யாய என்னைக் கட்டியணைத்து [நாணித்தலைசாய்த்து நகைக்கின்றனள்.] ஒரு குற்றமுஞ் செய்யாத என்னை யேன் கட்டவேண்டுமென்கின்றீர். இன்னும் வாக் கியத்தை முடிக்கவில்லையா ? ஆயின் முடிக்க ! கல்வி யென்னும் பல நயங்க ளமைந்ததோர் சொல்லின் இரண்டாவது எழுத்தின் மேலுள்ள ஒற்றை நீக் கிய பின் அந்த மொழி என்ன பொருள் தருமோ அப்போகவாரிதியில் மூழ்கியிருக்கத் தம்மைக் காண் பதே பெரும் பயனா ? சமுத்திரத்தில் முழுகிவிட் டால் சஞ்சலம் விளையுமே. ஆழியிலமுழுந்திய அழ கன் தன்னை மீண்டுங் காண்பனா ? தவறா யுரைத் தீரே ! வேண்டாமா ? என்ன வேண்டீர் ? தவறும் வேண்டீர். இத்தர்க்கமும் வேண்டீரா? யாது வேண்டு

கின்றீர்? என்னையா? உடலையா? உயிரையா? அருகே வந்து என் காத்தைப் பற்றுவீரா? அங்கிருந்தே வார்த்தையாடுங்கள். அருகே வருதல் அழகல்ல. ஆ! ஆ! வேண்டாம். [வெட்கமுற்றவள் போலக் காத்தை யுதறிக்கொண்டு மஞ்சத்திலிருந்து எழுந்து மார்பின்மீது கையை வைத்துக்கொண்டு] யார் இங்கு நிற்கி...... [சுற்றிப்பார்க்கிருள்.] உம். எங்கிருந்தேன்? இப்போது எங்கிருக்கின்றேன்?

வன.—என்ன தேடுகின்றீர்? வேண்டுவது யாது? என்னையா தேடுகின்றீர்?

நீல.—ஆமடி. இரண்டு கண்களும் உன்னைத்தான் தேடுகின்றன.

சுசீலை.—அடி. வனஜா! இங்கு என்னடி செய்கின்றனை? இந்நேரத்தில் இவ்வுபசாரணை யெல்லாம் வேண்டாம். போ. உன்னிடம் போய்ச் சேர் பாழுங் கடிதமே! நீயன்றே இவ்வாறுய துயுருறச் செய்தாய்? நின்னலன்றே நிலை யழிந்தேன்? நின்னைக் காணுதிருப்பின் இத்துன்பம் அணுகாதே! [கடிதத்தைக் கீழே எறிகிருள்].

நீல—[அக்கடிதத்தை யெடுத்துக்கொள்கிருள்] சுசீலை நாயகமே! கவனித்திலனே! சொற்பனவத்தையிலிருந்தனையே! அவ்வவத்தைதான் காரணமோ இங்ஙனம் தாங்கள் மனத்தளர்ச்சி யடைந்தேங்குதற்கு? தாயரை நினைந்தும் தந்தையை வெறுத்துமே இவ்வண்ணம் அலமால் எனக் கருதினேனே! நின் குறிப்பறிகிலேனே. இந்நிருபமே தங்கள் மனதைப் புண்படுத்தியதென்றீரே. [கடிதத்தை வாசிக்கின்றுள்.] ஆம். தந்தைதான்

சிந்தை நோகச் செய்தார். நீர் கூறியதுண்மைதான். ஆயினும் வருந்தற்க என் கண்ணே ! கடிதமெழுதி விட்டதாலேயே கடிமணம் நடந்துவிட்டதா ? இதை யொரு பெரிதாயெண்ணி வியாகுலங் கொள்ளலழகா மா ? ஆ ! இதென்ன கோலம். ஒரு தாமரையை மற்றொரு தாமரையின்மீது வைத்த பான்மைபோல வதன பங்கயத்தின் மீது அங்கைத்தாமரையை வைத்துக்கொண்டிருக்கின்றனையே [முகத்தின்மீதுள்ள காத்தை நீக்கி] எந்நாளும் வாடாதமதி முகம் இன்று மறுமுகமாக மாறிச் சோர்வடைந்திருக்கிறதே வாடாமலரே ! கலைகுறைந்த மதியாயினையே கலை நிறைந்தாளே ! நின்னிலை தளர்ந்தனையே. இந்நிலையி லிருத்தினனே அக்கண்ணிலான் உம்மை ! நின் கலை ஒருபுறம். நின் கோதை ஒருபுறம். கூந்தல் ஒரு பால் அவிழ்ந்து தொங்குகின்றதே. தமக்கென்றே வனஜா தொடுத்த கோதையாயிற்றே. எதை நீத் திருப்பினும் நின் திருக்கோதை மருமலரை நீத் திராதே ! இதென்ன ? அவிழ்ந்துகிடக்கு மலர்களி னின் றொழுகுந் தேனா ? அல்ல. வியர்வையா ? ஆம். [முன்றானையால் துடைக்கிறாள்]. தேகம் அழல்போ லிருக்கிறதே ! அருகே நெருங்க முடியவில்லையே ! நினக்கஞ்சிதான் மேற்றிசைக் கடலிற்போய்க் காந் தானோ கதிரோனும்.

சுசீலை.—[மேலே நோக்குகின்றனள்.]

நீல.—யாது நோக்குகின்றாய் மணியே !

சுசீலை.—[மெல்லிய குரலால்] நினக்குத் தெரிகிறதா ?

நீல.—ஒன்றுந் தெரியவில்லையே.

சுசீலை.—குருடியாய் விட்டாயோ ?

நீல.—நான் குருடியாக வேண்டுமென்று கோருகின்றீர்களா? இளவயதுடையளாயிற்றே யான். அந்த விருத்தாப்பிய கோலம் அடைய இன்னும் நாள் செல்லுமே! தங்கள் திருமணக்கோலத்தைக் கண்டு ஆனந்தித்த பின்னர் அவ்வாறாயினும் ஆகுக.

சுசீலை.—ஒன்றும் தோற்றவில்லை யென்கின்றாயே!

நீல.—என் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லையே!

சுசீலை.—கவனித்துப் பார். இன்னும் தோற்றிலதா?

நீல.—ஏதேனு மிருந்தாலன்றோ தோற்றும். என் கண்ணின் குற்றமல்ல.

சுசீலை.—அதோ பார். ஒரு வில்போல் தோன்றுகின்றது. பார்த்தனையா? அது மாத்திரமா. புட்பம் ஒன்றும் காணப்படுகிறது. தாமரையோ ?

நீல.—உண்மையா யிருக்கலாம். எந்த வில்? கருப்பு வில்லோ ?

சுசீலை.—மிக்க செம்மையுடையதாய்க் காணப்படுகிறதே. கருப்பென்கிறாயே.

நீல.—செழுமை வாய்ந்திலது அவ்வில்லெனச் செப்பிலனே.

சுசீலை.—கரும்பு என்பதை கருப்பு என்றனையோ ?

நீல.—தங்களுக்குத் தெரியாததா. வில்லுடையான் அங்கிருக்கின்றனனா?

சுசீலை.—வில்லையன்றி வேறு பொருள் காண்கிலேன்.

நீல.—நீர் நினையாத பொருள் காணப்படுமோ? வேட்டையாட விரும்பினீரோ ?

சுசீலை.—விரும்பவேண்டுவதை விடுத்து வேட்டையாடு தலையா விரும்பல் வேண்டும்?

நீல.—வேட்டையில் வல்லானை விழைந்தீரோ?

சுசீலை.—நான் வேடுவர் குலத்தில் உதித்தவளல்லவே.

நீல.—வில்லை யேந்துகிற காங்களாகிலும் காணப்படு கின்றனவா?

சுசீலை.—இல்லை. காங்களுங் காணேன். மாங்களுங் காணேன். உரங்களுங் காணேனடி!

நீல.—அவ்வில்லிற்குரியான் நாம் காணக்கூடியவ னல் லனோ?

சுசீலை.—நம்மெதிர் வாரானோ?

நீல.—அவன் மனிதனோ? இல்லாவிடில் மாயையில் வல்லனோ?

சுசீலை.—மாயையில் வல்லவனோ? யாவனோ? அறியேனே.

நீல.—ஒருக்கால் அவ்வில்லாளன் உருவுடையானோ அல் லனோ என்பதை ஆராய்தல் வேண்டும்.

சுசீலை.—அவன் உருவுடையனாயின் எதிர் தோன்றானோ?

நீல.—இப்போதே அறிந்தேன். உருவிலான். உருவி லான்தான்.

சுசீலை.—ஆம். ஆம். மாரனாய்த்தானிருத்தல் வேண்டும். அவ்வில்லுடையான் உருவிலியே. அவன் அரசு புரிதற்குரிய காலம் இதுதான். முன் தாமரையை மாத்திரம் கண்டேன். இப்போது முல்லையும் தோற்றுகிறதே.

நீல.—முல்லை மலரை எய்கின்ற சமயம்போலிருக்கிறது.

சுசீலை.—என்ன முல்லையோ? என்னைக் கொல்லுமுல்லை யடி. பூவையர்கள் மனதிற்கினிய புட்பமென நினைக்

தேனே. ஆ! பிராண...... [பெருமூச்செறிகிருள்].

நீல.—அவன் செலுத்தும் ஆக்கினேயாஸ்திரத்திற்குப் பதிலாக வாயுவாஸ்திரம் விடுவதுபோல நெட்டுயிர்ப் பெறிந்து வாடுகின்றனையே.

சுசீலே.—இப்பாதகனைப் போல் கொடுமை புரிவாரு முளரோ? நம்மோடு போர்புரிந்து அடையும் வெற்றி யும் வெற்றியாமா? கண்ணுதற் கடவுள்முன் இவன் ஆண்மையைக் காட்டுவானாயின், ஆண்மையுடைய வனே யாவான். குடிசையிற் புகுந்து குதிரைச் சவாரி செய்கின்றுனே இவன். சிருஷ்டிகர்த்தா இவனுக்கு ஏனோ இப்பூங்கணைகளைக் கொடுத்தான்? பூவுலகில் நம்மை யொத்த பூவையர்களைக் கொல்லும் பொருட்டேயோ?

நீல.—அல்ல. வாழும்பொருட்டே தான்.

சுசீலே.—இப்புட்ப பாணங்களைக் கொண்டே இவ்வாறு வதைக்கின்ற இவனுக்கு இரும்பு முதலிய கூரிய கணைகளைக் கொடுத்திருப்பின் இன்னும் என்ன செய்வானோ? இப்பூமி என்ன பாடுபடுமோ? பெண் கள் பெண்கள்தான்! சிவசிவா. எண்ணிடில் பகீர் என்கிறதே!

நீல.—முன்னரே தெரிந்துதான் புட்ப பாணங்களைக் கொடுத்தனன் பூவில் வாழும் பிரமன். என்போல் வார் மனம் கொதிக்கலாகுமா? யாரை வதைத் தானே. யார் இட்ட சாபமோ. யாவரும் நகைக்கு மாறு தேகமின்றிப் பேய்போல் அலேகிருன் அப்பாவி!

சுசீலே.—சாபம் விடுமோ? எந்தப் பெரியாரிடத்தில் தன்

சாமர்த்தியத்தைக் காட்டினனே! பெரியவர்களிடத்திலா? பரமசிவனிடத்திலேயே தன் வல்லமையைக் காட்டினவனாயிற்றே.

நீல.—அக்கரியன் பெரியரென்றும் சிறியரென்றும் பாரானே! அறிவுடையனானால் தன் தேகத்தைக் கடவுள் நெற்றிக்கண்ணிற்கு இரையாக்குவானா?

சுசீலை.—அத்தெய்வம் நெற்றிக்கண்ணால் எரித்தும் இன்னும் உயிர் வாழ்கின்றானே! இவனை நிர்மூலமாக்கியிருந்தால் நம்மை இப்படி வதைக்கும் வன்மையிராதே! இறந்தார் மீண்டும் பிழைப்பதுண்டா? விரிசடைக் கடவுளால் நீறாக்கப்பட்ட திரிபுராதியர் பிழைத்தாரா? இல்லையே. இவன் மாத்திரம் உடலை நீத்தும் உயிரோடு வாழ்தல் ஏனோ? நம்மைக் கொல்லுவதற்கோ? ஆம். எரிந்தொழிந்தோன் மீண்டும் பிழைத்தது நம்போன்ற மங்கையர் செய்த தீவினையாயிருக்கலாம். தனக்குள்ள சாமர்த்திய முற்றுஞ் செலுத்திவிட்டான் போலிருக்கிறதே! என்னரிய தேகத்தைச் சின்னபின்ன மாக்கிவிட்டானே! யான் உயிரோடு வாழ்வேனா? என் செய்வேன்?

நீல.—[நகைத்துக்கொண்டு] தாங்கள் யாதும் செய்யவேண்டாம்! ஒரு சிறிதும் அஞ்சவேண்டாம். இந்த அற்ப நோயால் தங்கள் உயிருக்கு எவ்வித கெடுதியும் சம்பவிக்குமெனச் சந்தேகிக்க வேண்டாம். சுகமடையும்பொருட்டே யாகும். துன்பம் போலத் தோன்றுகின்றதன்றித் துன்பமல்ல. நோயாளிக்குத் தக்க அவிழ்தப்பிரயோகம் செய்தாலன்றி

வியாதி நீங்காது. தமக்குரிய பண்டிதரைக் கொண்டே இப்பிணியை யொழித்தல் வேண்டும். இத்துன்பம் தம்மைவிட்டகலும். இன்பமே தரும்.

சுசீலே.—எந்தப் பண்டிதர்? எவ்வாறொழியுமடி? இறக்குந் தருவாயில் இருக்கிறேனே.

நீல.—சொற்பனத்தில் தம்முடன் சரசமாடினவர்தான்.

சுசீலே.—சொற்பனத்திலா?

நீல.—ஆம். கல்வியைக் கலவியாக்கிய கலைவிநோதராகிய தம் கருத்திற் கிசைந்தாரே!

சுசீலே.—என்னடி? மனம்போனவாறு பேசுகின்றாய்! கல்வியைக் கலவியாக்கலாமா? கலவியைக் கல்வியாக்கலாமா? கல்வி கல்வியே; கலவியென்பது கலவியே. கருநிறமுள்ள காக்கையை வெண்மைநிறக் காக்கை யென்பாய்போ லிருக்கிறதே. ஒன்றை மற்றொன்றாக மாற்றலாகுமா. சொற்பனமாவது கலவியாவது. அவ்வாறு செய்தார் யாவரடி?

நீல.—கல்வியைக் கலவியென்றாவது கலவியைக் கல்வியென்றாவது யான் கூறவில்லை. ஒன்றை மற்றொன்றாக மாற்றலுமாகும். அங்ஙனம் தாமே ஆக்கினீர். அதுவும் தாங்கள் வேண்டுமென்றே செய்ததல்ல. உல்லாசமாக உயிர் நேயரோடு விளையாடியபோது அப்பிராணநாதர் சொல்லியதாகவே சொப்பனவத்தையில் சொன்னீர்கள்.

சுசீலே.—நான் சொற்பனவத்தையு மறியேன், சுழுத்தியவத்தையுமறியேன். என் அவதியறியாமல் ஏதேதோ பேசுகின்றாய்.

நீல.—தங்களுக்குமாத்திரமா? எல்லோருக்கும் இயற்கை

தானே! தங்கள் பருவமே அவ்விதம் சொல்லச் செய்தது. யார் யார் எவ்வெப் பருவத்தில் எவ்வெவ் விடயங்களை எவ்வெவ்வாறு செய்தல் சுபாவமோ அவ்வவர்கள் அவ்வப்பருவத்தில் அவ்வவ் விடயங்களை அவ்வவ்வாறு செய்தல் இயற்கையாகும் ஆதலால் கூறுதற்கு அஞ்சிவிடினும், நாணிவிடினும், மறைத்துவிடினும், வெளியிடல் அழகல்ல எனவிடினும் வாய்ப்பறை அறைதலால் வரும் பயனென்ன எனச் சந்தேகித்துவிடினும் தமது கருத்தைக் குறிப்பாலுணர்ந்து அக்கொள்கையை நிறைவேற்றற்கு வேண்டிய சூழ்ச்சிசெய்தல் எனக்கு இன்றியமையாக் கடனுயிருத்தலால் உண்மையையே கூறினேன். அவசியமில்லாதவற்றைப் பேசுதற்கு இதுதானு சமயம்.

சுசீலை.—சமயோசிதக் கற்பனையோ இது ?

நீல.—கற்பனையு மல்ல. மாப்பனையு மல்ல. கட்டுக்கதையு மல்ல.

சுசீலை.—கட்டுக்கதையல்லவா ? அல்லவாயின் என் உள்ளக்கிடையை எவ்வாறு அறிந்தனையோ ?

நீல.—நான் முன் குறிப்பித்தவரே உம்முடைய உள்ளத்தை வருத்துகின்றூர் என்று விளக்கிவிட்டீரே இந்த வாக்கியத்தால். மறைத்துரைத்தாலும் உண்மை உண்மையாய் விளங்காதா? அகக்கருத்தை முகக்குறிப்பா லறியேனு ? அனுபவமில்லாத பெண்களுமன்றே தெரிந்து கொள்வர் பெண்பாலர் அபிப்பிராயத்தை. என்னுடன் இவ்விதங் கபடமாகப் பேசினுல் உலகம் நகையாதா ? எனக்கும் ஆச்சர்யமே

விளைகின்றதே இதை நினைத்தால். என்னையும் வன ஜாள் என்றோ நினைத்தீர். இவ்வித ஆழ்ந்த நெஞ்சா? அளவிடற்கரிய ஆழியின் ஆழத்தை யளவிட்டுரைத் தாலும் தமது நெஞ்சாழத்தை அளவிட்டுரைக்க முடியாது போலிருக்கிறதே. அளவிட்டுரைத்தல் அரிதுதான். மெய்மையே புகலும் தாங்கள் பொய்ம் மொழியும் இன்று கூறுகின்றீரே.

சுசீலை.—ஒருக்கால் இருப்பினும் இருக்கலாம். நீ யேன் வற்புறுத்துகின்றாய்.

நீல.—என்ன ? ஒருமுறையா ? முக்காலும் ஆணை யிட்டுக் கூறலாமே. இப்போதே ஞாபகத்திற்கு வருகிறது. "கற்பகத்தருவாய நீர் காமவல்லிக்கொடியாய என்னைக்கட்டியணைத்து" என்று சொன்னீரே சொற்பன வத்தையி லிருந்தபோது. அதற்குப் பொருளுஞ் சொல்லவேண்டுமா ?

சுசீலை.—சொற்பனவத்தைதானே!

நீல.—சொற்பனவத்தைதானே யென்று இலேசாகச் சொல்லிவிட்டீர்களே. மனோவஸ்தையே சொற்ப னங் காண்டலுக்குக் காரணம் ஆகும்.

சுசீலை.—சொப்பனத்தில் தன்னை யறியாது சொல்வது யாவருக்கும் இயற்கைதான். அதைக்கொண்டே என்மீது இவ்வாறு பழி சுமத்தலாமா ? சொப்பனத் தில் நிகழ்வனவெல்லாம் உண்மையாகப் பயன்தரக் கூடியனவோ !

நீல.—சில பயன் தருவனவும் பல பயன் தராதனவு மாயி னும் நீர் கண்ட சொப்பனத்தாலாய பயனை யடை வீர்! அடைவீர்!! சந்தேகிக்க வேண்டாம். நீர்

மறப்பினும் நல்லொழுக்க மிக்கார் மறவாரே.

சுசீலை.—அந்நல்லொழுக்க முடையார் யாவர்?

நீல.—தங்களுக்கா தெரியாது. சுசீலர் என்றால் தான் தெரியுமோ? இன்னும் தெரியவில்லையா? பால் வெள்ளை நிறமென்று சொல்லவும் வேண்டுமோ?

சுசீலை.—நல்லொழுக்க முடையாரை நாடின் நன்மை தானே?

நீல.—அந்நல்லானையே நாடவேண்டு மென்பதே அடியாளது கருத்துமாகும்.

சுசீலை.—நின் கருத்தின்படி நான் ஒருத்தியே நாடுவதால் என்பயன். எங்ஙனம் ஆகும்? எப்போதோ ஆகும்?

நீல.—அம்ம! ஆம். ஆம்போது ஆம்.

சுசீலை.—ஆம்போது தானே!

நீல.—ஆகின்ற காலம்தான் இது.

சுசீலை.—இன்றே ஆமோ? அருளும் முன்னிற்குமோ? ஒருகால் என் மனக்கவலை சற்று நீங்கி யிருக்குமாறு இவ்வாறு கூறினையோ? காதலைத் தூண்டி விட்டனையே. இவ்விரவை எவ்விதம் கழிப்பதோ? இவ்விரகம் எவ்வாறு தணியுமோ?

நீல.—ஐயம் வேண்டாம். நான் சென்று அன்னவர் உள்ளக் குறிப்பை ஒருவாறு அறிந்து வருகிறேன். சயனத்தின்மீது கவலையற்றிருங்கள்.

[நீங்குதல்.]

சுசீலை. —[தனிமொழி] பல இரவு ஒன்றாய்ச் சேர்ந்த பான்மைபோல் இருக்கிறதே. ஒருநாளும் இராக்காலம் இவ்விதம் நீடித்திருந்த தில்லையே! ஒரு நிமிடம் ஒரு யுகம்போலிருக்கிறதே! யாது செய்வதென்றுந்

தோற்றவில்லையே! அயர்ந்து நித்திரை செய்ய முடிய வில்லையே! காமன்தான் ஒரு காலன் என்றால் இக் காலமும் கருங்காலன்போ லுமடி! யார் செயலோ? என் காலவசமோ? எது எவ்வாறாயினும் இவ்விரவு ஒழிந்தால் போதுமே! ஒழியும் வழியுங் காணேனே! யான் உய்யும் வகையுந் தெரிந்திலனே! ஆ! நள் ளிருட்பிழம்பே! அம்மாரன் உனது நண்பனோ? நீயும் என்னை வெறுத்தனையா? பெண்மக்களெல் லாம் உன்னை உற்றவுறவு என்கிறார்களே! நான் வேண்டுமாறு நீ ஒழியாயா? அவ்வாறு செய்யி னிக் கருநிறம் நீங்கப்பெற்று மறுமையிலேனும் வேறு நல்ல நிறத்தோடு உதிக்கப்பெறுவாய்! நான் வேண்டினுங் கேளாதோ நின் செவி! நான் உயிர் வாழ நின் மனம் பொறாதோ! நான் உலகி லிருக்க வேண்டின் நீ துரிதமாய்ச் செல்லல் வேண்டும். நீயும் ஒழியாய் போலும். ஆ! தென்றற்காற்றே! என்னை யொப்பார்க்கு இன்பந் தருவதே நின்குணமன்றோ! என்னையேன் துன்புறுத்துகின்றாயோ! உன்னைப் புகழாதார் ஒருவருமிலரே. இவ்வுலகமும் நின்னா லன்றோ பிழைத்திருக்கிறது. துறந்த முனிவரும் வாழ்த்துகின்றனர். மன்னர்களும் போற்றுகின்ற னர். செல்வரும் ஏத்துகின்றனர். வறிஞரும் துதிக்கின்றனர். தத்துவ ஞானிகளும் நின்னை மதித்துப் பேசுகின்றார்கள். இதனாலன்றோ நீ நான்காம் பதவியாகிய உயர்ந்த பதவியிலிருக்கின் றனை. ஆகாயமும் நின் மகிமையைக் கருதி நின் னையே நோக்கியவண்ணமா யிருக்கிறதே. கன்னிப்

பருவத்தினரும் மங்கைப் பருவத்தினரும் மடந்தைப் பருவத்தினர் முதலாயினோரும் ஆடவரும் இன்பமனுபவிக்குங் காலத்தும் அல்லாக்காலத்தும் எக்காலத்தும் நின்னைப் பரிசித்து மகிழ்வரே. யாவர் எதை நீத்திருப்பினும் நின்னைமாத்திரம் நீத்திருத்தல் கூடாவன்றோ? இத்தகைய தன்மை வாய்ந்த நின் சொரூபத்தை நான் அறியாதவளா? இன்று என் தேகம் படும்பாட்டை நீ யறியாயா? நின் தன்மை யறியாது கன்னெஞ்சரை நிகர்த்து நின் தன்மையையும் எனக்குக் காட்டிலையே. யாவராலுங் கைவிடப்பட்ட நான் உன்னையே நம்பியுள்ளேன். அழல்போலும் கொளுத்துகிறதே! ஆற்றகில்லேனே! எக்காலத்தும் எக்காரணத்தாலும் நிலைமாறாத நின் இஃற்கைத்தன்மையைக் கண்டால் இவ்வெம்மை ஓடி யொளியுமே நீ இன்னும் வந்திலையே. அம்மாரன் செய்த போதனையோ. அடா வேடா! என்னை யாரென நினைந்தாய்? திக்கற்றவள் எனக் கருதினயோ? எனது நாயகர் வருஞ் சமயமாயிற்று.

தனியிருக்கும் வேளையிலே தனிச்சிலைக்கை மாரா!
 தாங்கரிய பூங்கணையால் தவித்திடநீ செய்தாய்
குனித்திருக்கும் நின்தனுவென் கொற்றவன்றன் றனுவால்
 குனித்திடவே குயிற்றுவனுன் கூறுவன்கேள் வேளே!
இனித்திமிர மிவண்புரியா தேகுவையிக் கணமே
 யினியிருப்பி னின்கதிதா னென்னுமோ வறியேன்
செனித்தவுயி ரெவையிடத்துஞ் செலுத்துமுன தாணை
 செல்லாதிச் சுசிலையிடஞ் செல்லாது செல்வாய்.

நீல.—கண்ணே. தகும். தகும். உமது ஆற்றலும் சுசீலர் ஆண்மையும் அறியா துபத்திரவஞ் செய்கின்றான் அப்பாபி. என்னையும் அங்கு நிற்கவிடுகின்றா னில்லை. உடலொழித்தனர் அக்கடவுள். உயிரையு மொழிப்பார் சுசீலர் என்றே பாடினீரோ.

சுசீலை.—ஆன்மா நித்தியபதார்த்தம் ஆதலாலழியாதது. அழிக்கவுமொண்ணாதது. நெற்றிக்கண்ணையுடையாரும் தேகத்தைத் தானே நீறாக்கினர். அவன் வில்லை யொடித்தெறிய வேண்டுமென்பதே எனது துணிபு. எத்தகைய சக்தியுடையனாயினும் போர்க் குரிய ஆயுதம் இல்லையாயின் என்ன செய்வன்.

நீல.—என்றும் நம்முடைய பேர் நிலைத்திருக்கும்படி யாகத் தாங்கள் சொன்னபடியே செய்வது நலம்.

சுசீலை.—செய்வது நலமென்று நீ வாயாற் சொல்வதும் நானும் வாயாலே தனுவை யொடிப்பதும் நன்றாய்த் தானிருக்கிறது. இளவரசனைக் கண்டனையா ? விரை வில் மீண்டனையே.

நீல.—சுசிலபவனத்தில் மதிசிலருடன் சில வேதாந்த விஷயங்களைப்பற்றி வாதமிட்டுக்கொண்டிருக்கின்ற சுசிலரைக் கண்டேன்.

சுசீலை.—கண்டு.

நீல.—சந்தோடங்கொண்டேன்.

சுசீலை.—நீ கண்டு ஆனந்தங் கொண்டால்.

நீல.—ஆனந்தங் கொண்டு விண்டேனே.

சுசீலை.—என்ன ? விண்டாயா ? என்ன காரியமடி செய்து விட்டாய் ? இதற்கோ போயினாய் ? மதிசிலருடன் வார்த்தையாடும் போதா விண்டாய் ?

நீல.—என் கருத்தை அறியாமலே இவ்விதம் பொறுமையின்றிப் பேசின்.

சுசீலை. — கண்டேன். ஆனந்தங் கொண்டேன். விண்டேன் என்று நீயே சொல்லினையே.

நீல.—விண்டேன் என்றே சொன்னேனே யல்லாது இன்னாரிடத்தில் விண்டேனென்றேனா? யாரிடத்தில் யாது விண்டேன் என்றறிந்து கொண்டீர்? அவர்கள் வார்த்தை யாடுவதைக் கண்டு வந்து தம்மிடத்தில் விண்டேன்.

சுசீலை.—அப்படியா ? என்னைக் குறித்து ஏதேனுங் கூறி விட்டாயோ? மதிசீலர் முதலியோர் அறியவும் நேரிட்டதே. விஜயப்பிரதாபசீலர் செவியுறின், ஐயையோ! யாது கருதுவரோ ? என் கதி என்னுமோ ? அவர் குமாரென்றும் பாரார். குமரியென்றுங் கவனியார். என்னிடத்தில் வைத்துள்ள விருப்பெல்லாம் வெறுப் பாய் விடுமன்றோ. ‘மானமழிந்த பின் வாழாமை முன்னினிதே’ என்று நினைத்தஞ்சியதடி என் மனம். என் பேரைக் குறித்தாயோ ?

நீல.—இல்லை. நான் அங்கு சென்று நின்று அவர்கள் யாது பேசுகின்றனர் எனக் கவனித்த சமயத்தில் தங்கள் குரலைக் கேட்டோடி வந்தனன்.

சுசீலை.—எங்குள்ளார் சுசீலர் ? சிங்கார மாளிகையிலா ?

நீல.—ஆம். அம்மாளிகையில் உள்ள சுசீலபவனத்தில்.

சுசீலை.—ஆம். சைவ சித்தாந்த விஷய ஆராய்ச்சி செய்துக்கொண்டிருப்பார். நீ கூறிய தன்மையே. நம

துய்யான வனத்திற்குச் செல்லலாமா நாம்?

நீல.—செய்க. வருக. செல்லலாம்.

[சுசீலேயும் நீலலோசனுவும் உய்யான வனத்திற்குச் செல்கின்றனர்.]

நீல.—அம்ம! எனக்குத்திரவளிக்க வேண்டுகின்றேன்.

சுசீலே.—என்னைத் தனியே விடுத்தா போகின்றனை ?

நீல.—சித்தாந்த நிலயத்தில் உமது சீராளர் யாது பேசுகின்றனர் என்று கவனித்தல் வேண்டும். உம்மைப் பற்றிப் பேசினும் பேசுவர். இதோ வந்து விடுகின்றேன். அவர் அபிப்பிராயத்தை யறிதற்குத் தக்க சமய மிதுவே. மனேல்லாசமா யிருக்கும் உமக்கு இவ்விடத்தில். ஆதலால் சற்று நோந் தனித்திருக்க வேண்டுகின்றனன்.

சுசீலே.—என்னைக்குறித்துப் பேசவாவது? காரணம்?

நீல.—உமக்கு எழுதியது போலவே உமது மாமனுருக்கும் எழுதி யிருப்பார் ஜயசீலர் என நினைக்கின்றேன். ஆதலால் தம்மைக்குறித்துப் பேச நேரிடும் என்றனன்.

சுசீலே.—எழுதியு மிருப்பார். ஒப்பத்தக்கவாறே பதிலுரைத்தாய். எவ்விஷயமும் கூறுமுன் குறிப்பறிந்து செய்யும் குணமுடையாய்! அவசியமாயின் சென்று சீக்கிரம் வருவாயாக.

[நீலலோசனு நீங்குதல்.]

இரண்டாவது அங்கம்

களம் 1

இடம்—விஜயபுரம் சிங்கார மாளிகையிலுள்ள சுசீல பவனம்.

காலம்—இரவு.

நடர்—சுசீலர், சிவபூடணன், மதிசீலர், ஜயதத்தர்.

சுசீலர்.—நின்னைக் காண்டற்கும் பேசுதற்குங் கூசுகின்றேன். மதியழகர் நினக்குரைத்தமை யெல்லாம் வீணேபோலும்!

சிவபூஷணன்.—யாதோ உரைத்தனர் மதியழகர்? எப்போது?

சுசீலர்.—எப்போதா? இன்று காலையே!

சிவபூ.—[யோசித்து] ஆம். ஆம். நஞ்சுசுந்தரரோ?

சுசீலர்.—ஆம். சோமசுந்தரர். சோமசுந்தரர். காலையுரைத்தமையை மாலையே மறந்தமை மதியின்மையே காட்டுகின்றது. நீ சிவபூஷணன் அல்லை. அவபூஷணனே போலும்!

சிவபூ.—ஏன் அவ்வாறுரைத்தீர்?

சுசீலர்.—சைவபூஷணமாய திருநீற்றை யணியாத நீ சுங்ஙனம் சிவபூஷணன் ஆவாய். இப்போது மதியழகர் இங்கு இருப்பின் அன்றோ தெரியும். இங்கில்லாமையும் [வாக்கியத்தை முடிக்குமுன்னம்]

சிவபூ.—என் அதிர்ஷ்டந்தான்போலும்.

சுசீலர்.—" நீறில்லா நெற்றி பாழ்" உனது நெற்றி இல்லாமையா யிருக்கிறது. வாசா ஞானத்தாலேயே ஞானியாய்விடலாம் என்று நினைந்துளாய்போலும். பழுத்த ஞானியாயினும் திருவெண்ணீற்றைப் பாவப் பூசல் வேண்டும் என்று பஸ்மஜாபாலம் பகர்கின்றதே. பூசப் பூசப் பொன்னிறந் தரும் என்று புகன்றாரே பெரியர்.

திருச்சிற்றம்பலம்

" திருநாம மைந்தெழுத்துஞ் செப்பாராயின்
  தீவண்ணர் திறமொருகாற் பேசாராயின்
ஒருகாலுந் திருக்கோயிற் சூழாராயின்
  உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராயின்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராயின்
  அளியற்றார் பிறந்தவா றேதோ என்னில்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்தும்
  பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே."
" திருவெண்ணீ றணியாத திருவிலூரும்—அவையெல்லா மூரல்ல வடவி காடே."

திருவாசகம்

பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினே டிறப்பு மஞ்சேன்
துணிநிலா வணியி னான்றன் றொழும்பரோ டழுந்தி யம்மா
திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

திருச்சிற்றம்பலம்.

என்றார் அன்றோ தமிழ்வேதத்தாரும்.

சிவபூ—[விடைகொடாது விழிநீர் இறைக்கின்றான்]

சுசீலர்.—விடைபகராது விழிநீர் உகுத்தல் என்னே? கண்ணீர்விடுமாறு யான் கழறியதென்?

சிவபூ.—[தனக்குள்] சிவ. சிவ. ஞானசம்பந்தப்பெருமானே! சீகாழித்துரையே!

சுசீலர்.—இதுகாறும் எங்கிருந்தனை?

சிவபூ.—இங்குதான் இருந்தனன்.

சுசீலர்.—அறியேனே? இங்கிருந்தமை யான் அறிவேன். எங்கோ ஏகியது நின்னுளம்? கண்கள் மழை பொழிந்ததென்னை? யான் கூறியவற்றைக் கருதி வருந்தினையோ?

சிவபூ.—[இருக்கை விட்டு விபூதி யணிந்து கொண்டு உட்கார்ந்து] இளவரசே! தங்கள் நுதலில் விளங்குந் திருநீறே என் சிந்தையைத் தன் வயமாக்கிவிட்டது. யான், ஆ! அம்மயமாய விந்தையே விந்தை. சுந்தரர் உரைத்ததையும் உணர்ந்தேன். உணர்ந்தேன். சுசீலர் சொற்றமை கருதி வந்தித்து வாழ்த்தலே தகுதியன்றி நிந்தித்தல் எங்ஙனே நீதியாகும்? வெண்ணீறணியப் புண்ணியம் இலதோவெனப் புகன்ற மதியழகரே யான் கண்ணீர் வடிக்கக் காரணராயிருந்தனர்.

சுசீலர்.—திருநீற்றுப் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய திருவாளராய திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளை வாழ்த்தலே முறை. என்னை வந்தித்தல் முறையாகா.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தான்எங்கே
எந்தைபிரா னஞ்செழுத தெங்கே.

என்னும் பிரமாணத்தை அறிந்திலையா?

சிவபூ.—அப்பணிந்த அண்ணலுக்கு அலங்கல் அணிந் தருளிய அப்பனையும் அப்பதிகத்தையும் முப்போ தும் எப்போதும் நினைந்துருகலே போன்று ஒப் பற்ற அப்பற்றுடைய நம்மையும் வணங்கலே முறைமை யன்றோ? வண்ணானொருவன் தேகத்தில் தோன்றிய உழமண்ணின் வெண்ணிறங் கண்ட போதே காலில் விழ வெண்ணி ஓடிய சிவபூஷண சீலராய சேரர் பெருமான், அன்னவன் புண்ணிய பூதியின் வண்ணவடிவினனே யென முடிவிலா அன்பு கொண்டு, விண்ணருவியெனக் கண்ணருவி பாய, மெய்ம்மறந்து, அடியற்ற மரமென்ன அடிமிசை பணிந்து விழுந்தெழுந்த பான்மை யறியாச் சைவரு முண்டுகொல்லோ?

“ எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ்
சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே அவரவரைக் கண்டபோ துகந்தடிமைத்
திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்றுசொல்லி யிரண்டாட்டா
தொழிந்து ஈசன் றிறமே பேணி
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

எனச் சைவ சமயாசாரியராய தாண்டகவேந்தர் சாற்றி யருளிய அருமை யறியார் யாரே! சிவசொரூபமாய விபூதி யை யணிந்த விழுமியோரன்றோ தவவேட முடையா ரெனப்படுவர். அல்லாதார் அவவேடமுடையாரே யென் னற்கு ஐயமென்னோ?

சிவபூ—ஆம். சிவவேடம் உடையரே தவவேடம் உடை

யர். நன்றே சொன்னீர். அல்லாதார் அவவேடம் உடையரே. அம்மதியழகரே யன்றோ நங் காழிக்கண் மணியாய கௌணியர் குலவிளக்கின் பெருமையை யும் கருவேர் அறுக்கும் திருநீற்றின் மகிமையை யும் நன்கு விளக்கினர். சிலர் விபூதியின் பெருமை யைப் பிறர் மெச்சுமாறு உபந்நியசித்து விடுகின் றார்களே யன்றி உண்மையாக அப்பற்றுடையரா யிருக்கக் காண்கின்றேன் இல்லை. ஈதென் விந்தை?

சுசீலர்.—அவ்விதம் அன்பிலாமைக்கு அவர் என் செய் வர்? உபந்நியசிக்கும் புண்ணிய மாத்திரம் உடை யர்போலும். நீறு எனச் சொல்லக் கேட்ட மாத்திரை யே நெக்கு நெக்குருகி அப்பரம பூஷணத்தை அணிந் தாரைக் கண்ட அளவே சிவமெனக் கருதி அளவிலா அன்புகொண்டு அகமகிழ்தற்குத் தவஞ்செய் திருத் தல் வேண்டாமா? தீவினையே மிகுதியா யிருப்பின் திருநீறு எங்ஙனம் தரிப்பர். வினைச்சுமை யொழிக்க முயல்வோர் அன்றோ விபூதியைத் தரிப்பர். தரித் தாரைக் கண்டு முடி தாழ்த்துவர்.

“பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும்
பிழையே யன்றி
வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த வழிதேறி
யதீத வாழ்விற்
போயன்மி யஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும்
பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெருவாழ்வு
நான்பெற் றேனால்.”

எனக் காஞ்சிப்புராணங் கழறியதே. திருவருட்பெருஞ்

செல்வம் அளிக்குந் திருநீற்றையும், திரு ஐந்தெழுத்தெனப்படும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தையும், உருத்திராக்க மணியையு மறந்துய்வரோ சிவநேயச்செல்வர். இம்மூன்றனையுங் கொண்டன்றோ துன்பத்திற்குக் காரணமாய தீவினைக்கு மூலமான ஆணவத்தையும் தேகப்பிணியையும் பிறவிப்பிணியையும் அறவொழித்துச் சிவசாயுச்சியத்தை யடைந்தனர் சிவஞானச்செல்வர் பலர். அன்றியும், நீர்வளமோங்கும் நீதிநாடாய சேதிநாட்டைப் பூதிசாதன வழி நிறுத்திய பாதிமதியணிந்த பரமனையே பணியும் பக்த சிரோமணியாய மெய்ப்பொருளுடையனார் அச்சிவ வேடமே மெய்ப்பொருள் எனத்தெளிந்தமையால் அன்றோ (கருமை நிறத்தைத் தன்னுள்ளேவைத்து விளங்குகின்ற விளக்கைப்போல) மனதில் அந்நாயனாரைக் கொல்லவேண்டும் என்னுங் கொடிய வஞ்சகமாகிய களங்கத்தை வைத்துக்கொண்டு தேகமெல்லாம் விபூதியைப் பரவத் தரித்த தவவேடத்தைப் பூண்டுவந்த பகையாசனாகிய முத்தநாதன் என்னுங் கொலைபாதகனைக் கண்டு அடங்கா மகிழ்ச்சி கொண்டு பத்தினியோடு சயனித்திருந்த பள்ளியறையுட் புகுந்தமையுங் கருதாது "மங்கலம் பெருகுமாறு எழுந்தருளிய மாதவ வேடமே வருக வருக" என வணங்கி நின்ற அருமையைச் சற்றேனும் உன்னாத வன்னெஞ்சனாய அச்சமணன் நினைந்தவாறே உடைவாளைக் கொண்டு கொல்லக் கண்டும் அவனுக்கு யாதுந் தீங்கிழையாது அவனைச் செல்லவிடுத்து"இன்றெனக் கையன் செய்த தார்செய வல்லா" ரென்று இன்புற்று, தன்னைச் சூழ நின்று துன்புழந்த அன்புடையாரை நோக்கிப் "பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீரென்று, புரவலன் மன்று

ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார். திருவேடத்தின் பெருமை யறியும் புண்ணியம் இல்லாப் புல்லறிவாளரா யிருப்பின் தம்மைக் கொல்லவந்தோர் எத்தகையரேனும் அவரை இயமலோகத்திற்குக் குடி ஏற்றி விடுவான்றே. இப்போதேனுந் தெரிந்ததையா பூஷணமே!

சிவபூ.—ஆம். திருவேடத்தையே பெரிது மதித்துக் கரு வேடத்தைக் களைந்தனர் எனத் தெரிந்தேன். பேச இனியதும், பூச இனியதும், புண்ணியந்தருவதும், புகழளிப்பதும், புன்மை தவிர்ப்பதும், போதந்தருவ தும், நம்பினோரை நடுவழியில் விடாது நல்வழியிற் செலுத்திச் செல்கதிக்கு வழி காட்டுவதும், எவ் வகை ஆச்சிரமத்தினின் றொழுகுவாராலும், எவ் வுலகத்தாராலும், எவ்வகைச் சமயத்தாராலும் எக் காலத்தும் பொன்னேபோற் போற்றப்படுவதும், சம ணர்கட்கு உயிர்ப்பிச்சை கொடுத்துக் காத்ததும், வேண்டுவார் வேண்டியாங்கு ஈயவல்ல விழுப்பம் உடையதும், எவ்வகைச் சித்தியும் எளிதில் அருள் வதும், கண்மூன்றுடையான் கருணைவடிவமாய் விளங்கி நிற்பதும், என்னெஞ்சுபோன்ற கன்னெஞ் சுடையாரையும் இமைப்போதில் உருக்கி மனோலய சக்தி அளிக்கவல்ல மகிமை யுடையதும், பாசப் பிணிப்பைப் பற்றறுக்கவல்ல பரம ஔடதமா யுள் ளதும், துன்பந்துடைத்து இன்பங் கொடுப்பதும், வேதாகம உபநிடத புராண இதிகாசங்கள் புகழ்ந் தேத்தும் பெருமை யுடையதும், (மேலான ஐசுவரி யம் எனப் பொருள்படுவதால்) முத்தி தத்துவத் தில் முதன்மைபெற்று ஒளிர்வதும், சிவஞான

சொரூபனுய சிவபெருமான் திருமேனியில் மிளிர் வதும், கூன் பாண்டியன், முழுநீறு பூசிய முனிவர், சைவத்திருவே மெய்ப்பொருள் எனத் தெளிந்த மெய்யடியார்க்கு மெய்ப்பயன் அருளியதும் திரு நீறே எனத் தெளிந்தேன்.

[மதிசிலர் பிரவேசித்தல்.]

மதிசீலர்.—இளவரசே! திருநீறு என்னச் சிவபூஷணன் செப்பக் கேட்ட என் செவிகள் செய்த புண்ணியமே புண்ணியம். அப்பூதியின் அருமையையும் பெருமை யையும் மோன இன்பந் தரும் ஞானசம்பந்தப்பெரு மானே அறிவர்.

விபூதி

“ சித்தாந்த மெய்ச்சமயச் சிவநெறிக்கு
வித்தாகித் திருமா லாதி
பெத்தாந்த கணத்தவர்க்கு மெவ்வெவர்க்கும்
பெருவாழ்வு பெருக்கி மும்மைக்
கொத்தாந்த மலமுருக்குங் குறிகாட்டி
நித்தியமாய்க் கொண்டார்க்குற்ற
பித்தாந்த மதப்பிணியைத் தபுமருந்தாந்
திருநீற்றைப் பேணி யுய்வாம்.”

சிவபூ.—இளவரசே! யான் போதல் வேண்டும். அரசர் வரச் சொல்லினர்.

சுசீலர்.—என் தந்தையா ?

சிவபூ.—ஆம்.

சுசீலர்.—செய்வாயாக.

[சிவபூஷணன் போதல்.]

மதிசீ.—இளவரசே! தங்கள் திருவாக்கால் ஒரு திருத் தாண்டகம் ஓதுக.

சுசீலர்.—அப்படியே.

திருச்சிற்றம்பலம்

அருந்துணையை யடியார்த மல்லல்தீர்க்கு மருமருந்தை
அகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும்விட்டு வான்புலன்க
ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வருஞ்சுகத்தைப் போகமாற்றி பொதுநீக்கித்
தனைநினைய வல்லார்க் கென்றும்

[ஜயதத்தர் பிரவேசித்தல்.]

சுசீலர்.—[ஜயதத்தரை நோக்கி] சௌக்கியமோ ?

மதிசீலர்.—நிகண்டு பேதியே! வருக. வருக. இருக்க!

ஜயதத்தர்.—[நகைத்துக்கொண்டு நிற்கின்றனர்]

சுசீலர்.—இரும். செப்பும்.

ஜயத.—இரும்பேது. செப்பேது. நான் கொண்டுவரவில்லை.

மதிசீ.—எமக்குச் செப்பும் வேண்டாம். பித்தளையும் வேண்டாம்.

சுசீலர்.—செப்பும் என்றால் செம்பும் என்பது பொருளல்ல. சொல்லும் என்பதே பொருள்.

ஜயத.—எது சொல்லும் ?

மதிசீ.—நீரே சொல்லும்.

ஜயத.—நீர் சொல்லுமோ ? இதென்ன கர்மம் ? நீங்கள் இருவரும் யோசித்துச் சொல்லுங்கள்.

சுசீலர்.—தண்ணீருமல்ல. வெந்நீருமல்ல. தாமே சொல்லும். உம்மைத்தான் கேட்டோம். உட்காரும்.

ஜயத.—என்னைக் கேட்கவில்லையே. நிகண்டு பேதியைத் தானே கேட்டீர். ஜயதத்தரைக் கேட்கவில்லையே.

சுசீலர்.—[மதிசீலரை நோக்கி] நிகண்டுபேதி என்றால் என்ன ?

மதிசீ.—இவர் சிலநாள் முன் மிகுந்த ஆசையோடு நிகண்டு வாசித்துக்கொண்டிருந்தனர். அவ்வாறு படித்தவற்றைக் கிரகிக்கும்போது சீரணசக்தியின்மையால் பேதியாய்விடுவது வழக்கம் ஆதலால் அப்பட்டம் பெற்றனர்.

சுசீலர்.—அப்படியா ? உம். மகா பெரிய மண்டை போலும்.

ஜயத.—அப்படியா ? வந்தனம் இளவரசே ! விஷயம் பேச வேண்டும்.

மதிசீ.—பன்னாளாயினவே தம்மைக்கண்டு !

சுசீலர்.—ஆம். அவர் யாத்திரைவாசியா யிருந்தாரே தெரியாதா ?

மதிசீ.—யாத்திரை வாசியென்றால் ?

ஜயத.—நீர் கேட்பதே சரி. எனக்குஞ் சந்தேகமே.

சுசீலர்.—இதுகாறும் க்ஷேத்திர தரிசனஞ் செய்யும் பொருட்டுச் சென்றனர் என்றே நினைத்தீரோ ?

மதிசீ.—ஆம். மூர்த்தி தலந்தீர்த்த முறையாற் றரிசிக்கச் சென்றாரென்றே கருதினேன்.

சுசீலர்.—அல்ல.

மதிசீ.—அல்லவென்றால் யாத்திரைவாசியென்ற தென்னை?

சுசீலர்.—அவ்விசேடம் நீர் அறிந்திலீரா ? ஜயதத்தர்பால் என்போலு மனுபவமுடையாரே அவ்விசேடமறிவர்.

மதிசீ.—இருக்கலாம். யானறியக்கூடாதா அவ்விரகசியத்தை ? என்ன விசேடம் ?

ஜயத.—மதிசீலரும் நான் சொன்னதைக் கவனிக்கவில்லையோ? விஷயம் பேசவேண்டும்.

மதிசீ.—எனக்குஞ் சந்தேகமே யென்றதைத்தானே. கவனித்தேன் முன்னரே.

ஜயத.—எனக்குந் தெரியும். நீர் கவனித்தே யிருப்பீர். இருப்பினு மறந்துவிட்டிருப்பீரென்று ஐயுற்றேன்.

மதிசீ.—அங்ஙனம் ஐயுற்றதேனோ?

சுசீலர்.—உம்முடைய ஆற்றல் அறிவு முதலியன அறிந்தவரேயாயினுஞ் ஜயதத்தர், சின்னாளாய் இராசாங்க காரியார்த்தமாகச் சிற்றரசர்கள்பாற் சென்றிருந்தாராதலின் தன்னையு மறந்தே சந்தேகித்திருக்கலாம் எனக் கருதுகின்றேன்.

மதிசீலர்.—"அல்ல" என முன்னர் மறுத்துரைத்த பின்னர் திரிலோக சஞ்சாரியாய் விட்டனரே என நினைந்தேன்.

சுசீலர்.—திரிலோக சஞ்சாரி யாவார் நாரத முனிவரேயன்றோ?

ஜயத.—ஆம். விஷயம் பேசவேண்டும்.

மதிசீ.—வியப்பெய்தினேன். ஆம் என்கின்றனரே. ஜயதத்தர் நாரத முனிவராமே?

ஜயத.—யானோ நாரதன்? திரிலோக சஞ்சாரியாவார் நாரத மகாமுனி யென்றேன்.

சுசீலர்.—இவரும் அம்முனிவராகார். அவரும் இவர் ஆகார்.

மதிசீ.—அம்முனிவரே யாகாவிடினும் அவர் போன்றவரோ?

சுசீலர்.—அவர் போன்றவருமல்லர்.

மதிசீ.—இவர் அம்முனிவருமல்லர். அவர் போல்வாருமல்லர் என்னில்?

சுசீலர்.—இவரே இவர். இவர் போன்றவரே இவர்.

மதிசீ.—போகட்டும். மூவுலக சஞ்சாரி யாகாவிடினும் இவ்வுலகில் சஞ்சரிப்பதால் திரிலோக சஞ்சாரிக்குரிய அம்சங்களுள் ஒரு அம்சமுடையவ ரென்றாகிலும் கூறலாகாதா?

சுசீலர்.—இவ்வுலகத்துஞ் சிற்சில பாகங்களிலேயே சஞ்சரித்து வருகின்றவராதலால் அவ்வம்சமு முடையாரல்லர்.

மதிசீ.—சங்கித வன்மையுடையாதல் பற்றியேனும் அரை அம்ச முடையார் என்னில்?

சுசீலர்.—அம்முனிவரைப்போல் வீணை வாசிக்குந் திறனிருத்தல் வேண்டாமா?

மதிசீ.—அத்திற னுடையான்றோ?

சுசீலர்.—அத்திறனுடையரென் றெங்ஙன மறிவீர்?

மதிசீ.—தாங்கள் தேவாரப் பதிகத்தைப் பண்ணுடன் ஓதியபோது தலையசைத்துக்கொண்டிருந்தாரே.

சுசீலர்.—தலையசையவா கண்டீர் நீர்? அவர் உடலெல்லா மாடக் கண்டேன். அதுபற்றியே சங்கீதப் பயிற்சி மிக்கா ரென்னலாமோ?

மதிசீ.—என்னலாகா. தலைவலியாலு மயக்கத்தாலும் சீதள சம்பந்தத்தாலும் அடிக்கடி தலையசைத்தல் இயற்கைதான். சற்றுமுன்னே அவர் நகைத்த போது உடல் குலுங்கவுங் கண்டேன். நான் தவறியே யுரைத்தேன்.

சுசீலர்.—ஏன் தலையசைத்தீர்?

ஜயத.—தம்மைக் குறித்தே சுசீலரே! பேசவேண்டும் விஷயம்.

சுசீலர்.—என்ன? என்னைக் குறித்தா? என்ன விஷயமது? விஷயம், விஷயம் என்கிறீரே.

ஜயத.—இந்த விஷயம் முடியட்டும் முன்னர். அவ் விஷயம் பின்னர் பார்க்கலாம்.

மதிசீ.—என்னைக் குறித்தோ?

ஜயத.—அல்ல.

மதிசீ.—இளவரசரைப் பற்றியோ?

ஜயத.—உங்களிருவரையுங் குறித்தே!

மதிசீ.—என்ன விசேடம் கண்டீர்?

ஜயத.—தாங்கள் வினவிய வாக்கியத்தில் இரண்டாவது சொல்லில் முதலெழுத்து நீங்கலாக மற்றைய வெழுத்துக்களையே கண்டேன்.

சுசீலர்.—மதிசீல! என்ன? அதிசயமாயிருக்கிறதே!

மதிசீ.—உண்மையே!

ஜயத.—ஆம். ஆம். நன்றுரைத்தீர். அவ்வுண்மையைக் கண்டே தலை யசைத்தேன். அதிசயமென்றது அறியாமையாகும். அபசெயமென்னல் வேண்டும்.

சுசீலர்.—அதென்ன உண்மை? யாமறியாத உண்மையுமுண்டோ? ஏன் அபசெய மென்னல் வேண்டும்?

ஜயத.—உள்ள மையே கண்டனன். அதனாலேயே அபசெயம என்றேன்.

மதிசீ.—மை யென்றால்?

சுசீலர்.—குற்றமெனப் பொருள் கூறுவரோ?

ஜயத.—ஆம். குற்றமெனப் பொருள் கூறுவரோ எனச் சந்தேகிப்பானேன்? இலக்கண வாராய்ச்சி இன்மையே காரணம்போலும்!

மதிசீ.—இலக்கணக் கடலன்றோ இளவாசர்?

ஜயத.—அன்றோ என்னு மொழியினீற்றிலுள்ள ஓகாரத்தை யகற்றுக.

மதிசீ.—அங்குள்ளதை யேனகற்றல் வேண்டும்?

ஜயத.—அவர் அருமையைக் காட்டவேண்டியே யென்று அறியீரா?

மதிசீ.—நீக்கின், அன்று என நிற்கின்றது.

ஜயத.—அவ்வாக்கியத்தை வாசியு மீண்டும்.

மதிசீ.—இலக்கணக் கடலன்றோ இளவரசர்?

ஜயத.—உஸ். ஓகாரத்தை நீக்கி வாசியும்.

மதிசீ.—அங்ஙனம் செய்யேன் யான்.

சுசீலர்.—நானே அவ்வோகாரத்தை நீக்கி விடுகிறேன்.

ஜயத.—"நீக்கி விடுகிறேன்" "நீக்கி விடுகிறேன்" என்றால்? இன்னுமா? சீக்கிரம். ஆகட்டும். வந்தவிஷயத்தைக் குறித்துப் பேசவேண்டும்.

சுசீலர்.—தாங்களே சொல்லிவிட்டால்,

ஜயத.—உம். தாங்களே சொல்லிவிட்டால்தான் தங்கள் அருமை விளங்கும். சிக்கிரம். முக்கிய விஷயம்-பேசல் வேண்டும்

சுசீலர்.—இலக்கணக்கடலன்று. இளவரசர் என்பதே வாக்கியம்.

ஜயத.—உம்.என்ன சமர்த்தையா? வாக்கியமே யப்படியோ அல்லது இளவரசரே அப்படியோ?

மதிசீலர்.—அவ்வாக்கியமே யவ்வாறுள்ளது.

ஜயத.—சுசீலரன்ருே ?

மதிசீ.—அன்று.

ஜயத.—ஆயின், இலக்கணக்கடலோ ?

மதிசீ.—ஆம்.

ஜயத.—இலக்கணக்கடலாயின் அச்சொல்லைப் பிரித்திருக்கமாட்டார் ? நான் ஒருவாறு பிரித்துக்காட்டியும் பொருள் தெரியாது ஒருவரையொருவர் பார்த்து விழித்துக்கொண்டிருக்கின்றீர்களே ! நீங்களா என்னைப் பரிகசிக்கின்றீர்கள் ? எனக்கு மயக்கமென்றீர்களே ! உங்களுக்கே மதிமயக்கமானதுபோலும்.

சுசீலர்.—[நகைத்துக்கொண்டு] தங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம். இதுவரையில் மௌனமாயிருந்தீர்களே.

மதிசீ.—மௌனமல்ல. அப்பெரிய நிலை இச்சிறியர் எவ்வாறறிவர் ? நம்மை யெவ்வாறு ஏளனஞ்செய்வதென்று யோசித்துக்கொண்டிருந்தார் ?

சுசீலர்.—நாம் அபசயமடைந்து விட்டோமென்ருரே.

ஜயத.—ஒருமுறையா ? பன்முறையுங்கூறுக. காட்டவேண்டுமோ ? வேண்டுமாயின் இப்போதே காட்டுகிறேன். அவ்வளவு இலேசாகவா எண்ணிவிட்டீர்.

சுசீலர்.—காட்டுவதில் மிக்க சமர்த்தரோ ?

ஜயத.—இதோ காட்டிவிடுகிறேன். வேண்டுமாயின்

சுசீலர்.—காட்டும். சீக்கிரம்.

ஜயத.—பிரிக்கத்தெரியாதென்று சொல்லிவிடும்.

சுசீலர்.—தாங்களே பிரித்துக்காட்டினுல்

ஜயத.—காட்டவா ? உம். எவ்விதம் ? உம். அப்படியா ? உம். இருக்கட்டும்.

மதிசீ.—ஒன்று விட்டுவிட்டீர்களே.

சுசீலர்.—ஒன்றேனும் விடமாட்டாரே! அடடா! எது?

ஜயத.—அப்படிச் சொல்லும்: தெரிந்துமா இன்னும் பேசுகின்றீர்.

சுசீலர்.—என்னவிட்டீர்?

ஜயத.—அவரையே கேளும்.

மதிசீ.—அவர் கேளாமுன் யானே சொல்லிவிடுகிறேன். இங்கு வந்ததுமுதல் "விஷயம் பேசவேண்டும்" "விஷயம் பேசவேண்டும்" என்றாரே. இப்போது மறந்துவிட்டனரே.

சுசீலர்.—பாபம். அவருக்கென் தெரியும் விஷயம்? அச் சொல்லின் மூன்றாவது எழுத்தை நீக்கிப் பேசுவர் போலும்.

ஜயத.—சரியாய்ச் சொன்னீர். சரியாய்ச் சொன்னீர். விஷமே. விஷமே போன்றிருக்கும்.

சுசீலர்.—அஃதென்னோ? கூறுக.

ஜயத.—ஆம். பேசவேண்டும். எடுத்த விஷயத்தை விடுத்து இவ்விஷயத்தை இப்போதேன் பேசல் வேண்டும்.

மதிசீ.—ஆயின் எடுத்த விஷயத்தைச் சீக்கிர முடியும்.

சுசீலர்.—தங்க ளிஷ்டப்படி செய்யுங்கள்.

ஜயத.—உம்மால் பிரித்துக்காட்ட முடியாதா?

மதிசீ.—அந்த வேலை தாங்களே செய்யவும்.

ஜயத.—இதோ. வாயினலா? அல்லது எழுதிவிடட்டுமா?

சுசீலர்.—குதிக்கவேண்டாம். அமர்ந்தே சொல்லுக, விண்ணுலகத்திற்குக் கிளம்பிவிடப் போகின்றீர். வாயினுற் காட்டினுற் போதும். கையால் எழுத வேண்டாம். வீணை வாசித்து விரல்களெல்லாம் பருமன.

னகக் காணப்படுகின்றன. எழுதுகோலை ஒடித்து விடப் போகின்றீர்.

மதிசீ.—கிளம்புவாரா? உம், இவரா? அடே அப்பாடி! கிளம்புவாரா? அடயோகஞ் செய்வாரா?

சுசீலர்.—அடையோகம், அடயோகம், அப்பயோகம், சையோகம் எல்லாவித யோகமுஞ் செய்வர்.

மதிசீ.—[நகைத்துக்கொண்டு.] வீணை வாசிக்கத் தெரியா தென்றீரே. மீண்டும் யாழ்வாசித்து விரல்களெல் லாம் பருமனாகக் காணப்படுகின்றன வென்ப தென்னை?

சுசீலர்.—இவரைக் கண்டால் நாரதரும் அவர் வீணையுமே யஞ்சும்.

மதிசீ.—ஏன்?

சுசீலர்.—அவ் வீணையிலுள்ள மெல்லிய தந்திகள் என்ன பாடுபடும் இவர் கரத்தில் தெரியுமா? அத்தந்தி களை உயிரோடு வையார். அதிலு மந்திரத்தந்தியை யதிகமாக அழுத்திச் சிவலோகஞ் சேர்த்துவிடுவர்.

மதிசீ.—அத்தகைய நிபுணரா இவர்? நல்ல வேலைதான்! யாருஞ் செய்யாத வேலை! அத்தகைய சாமர்த்திய முடையார் இவர் என்றிதுகாறு மறிந்திலனே.

ஐயத.—நீர் அறியாதிருந்தது மறியாமையேயாம்.

மதிசீ.—நீர் அறிவியாதிருந்தது முமதறியாமையேயாம்.

ஐயத.—தங்கள் வீணையைக் கொடுத்துப் பார்க்கினன்றோ தெரியும்.

மதிசீ.—சிவ! சிவ! வேண்டாம். உள்ளது மொழிய வேண்டுமா நொள்ளையா? வேண்டாம்.

சுசீலர்.—இருக்கட்டும். காட்டும். தங்கள் இலக்கணச் சாமர்த்தியத்தைக் காட்டும்.

மதிசீ.—இலக்கணத்தையும் உயிரோடு வையாரோ? உயிரெழுத்தைக்கூடவா? அவ்வுயிர் இவர் உயிரை யாட்டிவிடுமே.

சுசீலர்.—உயிரைமட்டுமா? மெய்யெழுத்தையும் வையார்.

மதிசீ.—அப்பாஷையில் அவ்வளவு தேர்ச்சியுற்றவரா? இன்றே அறிந்தேன். ஆயுத முதலிய யெழுத்துக் களை?

சுசீலர்.—கேட்கவும் வேண்டுமோ?

மதிசீ.—ஆம். உயிர் மெய்யையே ஒழிப்பார்க்கு ஆயுத முதலியன வாவா? செலவா?

சுசீலர்.—ஆம். அவர்க்கிது வோர் பொருளல்ல. பாடையி னவதாரமே இவர்.

ஜயத.—ஐயையா! என்ன? நான் என்ன அவதாரம்?

மதிசீ.—சுசீலர் செப்பியதைக் கேட்டீரா?

ஜயத.—பாடையவதார மென்றுரே. உம். ஏது? கொஞ்ச மதிகமாக.

சுசீலர்.—உஸ். சீ. சீ. பாடையேறு மப்பனே!

ஜயத.—பாடை யென்றதுமன்றி, உஸ். சீ, சீ யென்கின் றீரே.

சுசீலர்.—பாடை யென்னில் பிணந்தூக்கிப் பாடையென்று நினைத்துவிட்டீர்?

மதிசீ.—ஜயதத்தரே! பாடையென்பது பாஷையென்றறி யீரா?

ஜயத.—ஆம். தெரிந்தது. என்னைச் சொல்லவில்லை. பாஷையைத்தான் சொன்னீர். சின்னவனு யிருந்த

போது பொன்னையா வென்னு முபாத்தியாயர் என்றோ ஓர் நாள் அமாவாசை போலிருக்கிறது. அன்று பாஷை யென்பதைப் பாடை யென்றுஞ் சொல்லலா மென்றார். இப்போதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. என்ன? பாடை. உம்ம பாஷை நிரம்ப நல்லாயிருக்கிறது. சொற்களிப்படி மாறிவருவதுஞ் சொகுசுதான். கிரகங்கள் மாறிவருவது போலிருக்கிறது.

மதிசீ.—அமாவாசை யன்று சொன்னபடியால் அடியோடே மறந்துவிட்டீர் போலிருக்கிறது. இவர் மறந்ததே மேல்தான். மறவாதிருந்தால் பாடையையே ஒழிக்க வந்த இந்த பீடைப்பிரபுவினிடத்தில் என்ன பாடு படுமோ அப்பாடை.

சுசீலர்.—ஆம், புலியல்லவா? பழம்புலியல்லவா? உண்மையென்னுஞ் சொல் இவரிடத்தில் அகப்பட்டு விழிக்கிறதே. நோய்ப் பார்த்து வயிறெரிகிறோமே. தெரிந்திலீரா? இவர் இலக்கணத்தைக் கரைத்துக் கரைத்து மென்று மென்று தின்று தின்று இவரையொத்த இலக்கணப் புலவர்களை வென்று வென்று குன்றிய குருட்டுப் புளுவராயிற்றே. போப்பையரிலக்கணத்திலுள்ள எழுத்துக்களை யெல்லாம் பொறுக்கிவிட்டபோலிப்புலவ மணியாயிற்றே.

மதிசீ.—கரைத்து மாத்திரங் கஞ்சிபோல் குடித்தா ரென்றன்றோ நினைத்தேன். உம். மென்று மென்று. ஆயின் ஐயதத்தரே பிரித்துக்காட்டும்.

சுசீலர்.-- சாக்கிரதையாய்ப் பிரியுங்கள். எழுத்து அறுந்துவிடப்போகிறது.

ஜயத.—அருந்தும் விடாது. அருந்தும் விழாது. விழுந்தாலும் விடமாட்டேன். என் பேர் தெரியாதா ?

மதிசீ.—ஆம். தெரியும். வீர தீர மகாதீர சூர அதிசூர விநோத கோர அகோர இலக்கண இலக்கிய சூன்ய சண்டப்பிரசண்ட கெண்ட பேரண்ட வாதபித்த சிலேத்தும ரோக வைத்திய ராஜப் பிரபல அந்தர மந்திர யந்திர தந்திர அதம சோதிடக்களஞ்சிய வித்துவ அவதான அவிவேக அவதார பானு என்று யாவரும் புகழத்தக்கவ ராயிற்றே.

ஜயத.—கவனிக்க. கவனிக்க.

உள் + மை = உண்மை.

மதிசீ.—பளா. பளா. அருமை.

சுசீலர்.—இப்போதேனும் மிக அருமையாகப் பிரித்து விட்டார்.

ஜயத.—குற்ற மின்னதென்று புலப்பட்டதா ?

மதிசீ.—யாது குற்றம் ?

ஜயத.—இவ்வித ஞாபகக் குறைவா ? உத்தம மாணவர் என்றன்றோ நினைத்தேன். இதுவரையிற் புத்தியிற் பதியுமாறு நன்கு விளக்கியும் பயனில்லையே. மறந்து விட்டீரோ ?

மதிசீ.—எதை ?

ஜயத.—எதையா ? சரிதான். இன்னும் எத்தனை முறை சொல்லலாம்.

சுசீலர்.—“என்ன விசேடம் கண்டீர்” என வினவிய வாக்கியத்தி லிருந்தல்லவா இவ்விலக்கணங்களை யெல்லாம் குப்பை குப்பையாகக் கொட்டி விட்டார். அவ்வாக்கியத்தைக் கவனித்தீரோ என்றும் இனி

அவர் எடுத்துரைக்கக் கருதியுள்ள குற்றத்தையு மறிந்துகொண்டீரோ என்றுமே கேட்கின்றனர்.

மதிசீ.—அப்படியா ?

சுசீலர்.---அவ்வாக்கியத்தின் இரண்டாவது சொல் என்னே?

மதிசீ.—விசேடம்.

சுசீலர்.—அவ்விசேடம் என்னு மொழியில் முதலெழுத்தை நீக்கிவிடின்.

ஜயத.—சுசிலரே! என்ன விபரீதமிது. குருவுக்கு மிஞ்சிய சீடராய்விட்டீரே. இரண்டெழுத்துகளைச் சேர்த்துவிட்டீரே.

சுசீலர்.—அவ் என்னும் எழுத்துக்களைப் புணர்த்திச் செப்பியதானே விபரீதமாமா.

ஜயத.—நான் விபரீதமாமாவா ?

மதிசீ.—மாமாவுமல்ல மைத்துனருமல்ல. திருவாசகத்தைப் பார்த்திருக்கின்றீரா ?

ஜயத.—பார்த்தா ? அடடா! வாசித்துமுள்ளேனே! எந்தத் திருவாசகம்?

மதிசீ.—எந்தத் திருவாசகமா ? மிகவும் அழகாயிருக்கின்றது. எத்தனைத் திருவாசகங் கண்டீரோ ?

சுசீலர்,—திருவாசகமென்பது தமிழ்வேதமென வறியீரோ?

ஜயத.—என்ன வேதம் ? இன்னொரு முறை சொல்லும். அமிழ்வேதமா ? அமிழ்ந்த வேதம் மறுபடியுங் கிளம்புமா ?

மதிசீ.—இவரையா புலியென்றீர்.

சுசிலர்.—ஆம். அவர் புலித்தனத்தை யினிக்காட்டுவர்.

ஜயத.—என்ன ? தமிழ்வேதமா ? வருகிறது ! வருகிறது! இதோ சொல்லுகிறேன் பாரும் !

மதிசி.—யாதோ வருகிறது? யாதும் வந்திலதே!

ஜயத.—வருவது போலிருந்ததே! உம்! மறந்துபோய் விட்டதே!

மதிசி.—ஞாபகத்திற்கு வரவில்லை யென்கிறீரோ?

ஜயத.—ஆம். இப்போது வந்துவிட்டது! வந்துவிட்டது! என்னை யாரென்று நினைத்துக்கொண்டீர்? சிவவாக்கிய ரியற்றியதா? அல்ல. ஔவையாரா? அல்ல. ஸ்ரீமத் மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய வேதந்தானே.

சுசீலர்.—புலி மட்டுமா! சிம்மமென்றுஞ் சொல்லலா மன்றோ!

மதிசி.—ஆம். அத்திராவிட வேதந்தான்.

ஜயத.—என் வாழ்நாளெல்லாம் அத்திருவாசகத்தையே யாராய்ச்சி செய்தவனுயிற்றே.

மதிசி.—நங்கா யிதென்ன தவம் என்னும் அடியையுடைய பாசுரத்தைக் கூறுங்கள் பார்ப்போம்.

ஜயத.—எத்தனை நாழிகை யாகும்? இதுவொரு பிரமாதமா!

மதிசி.—உமக்கு அது பிரமாதமு மல்ல. பிரவருடமு மல்ல. சீக்கிரஞ் சொல்லும்.

ஜயத.—புத்தகங்கொண்டு வருவீரானல்!

சுசீலர்.—இந்த பவிஷுக்கா இவ்வளவு நீட்டினீர்?

மதிசி.—புத்தகமென்று சொல்லலாகுமா அவ்வரிய வேதத்தை? புத்தகத்திற்கும் வேதத்திற்குமுள்ள வித்தியாசம் தெரிந்தால் அங்ஙன முளரூர்.

சுசீலர்.—பாபம். நிரட்சர குட்சிக்கு என் தெரியும்?

ஜயத.—மதிசிலரே! நீரே சொல்லிவிடுமே.

மதிசீ.—தங்கள் வாக்கால் கேட்கவேண்டுமென்றுதான்.

ஜயத.—நீர் கூறினும் நான் சொல்லினும் ஒன்றுதானே!

சுசீலர்.—தெரிந்தாலன்றோ வோதுவர்.

ஜயத.—எனக்கா! உம். முதலடியை மீண்டுங் கூறுக மதிசீலரே!

மதிசீ.—இப்படி யவதிப்படுவதேனோ! தெரியாதென்று ஒப்புக்கொள்ளின்.

சுசீலர்.—ஜயதத்தரே! நான் ஓதிவிடட்டுமா?

ஜயத.—நானே ஓதுகிறேன். "நங்காயது" அப்புறமென்ன? உஸ். வாயில்லையே. இப்படி யென்னை மோசம் பண்ணுகிறதே யிந்த அடி. என்னையே யிப்பாடு படுத்தினால் உங்களை யெல்லாம் என்னதான் செய்யாது. பகலாயிருப்பின் காட்டி விடுவேன். எப்போதும் இராக்காலத்தில் இத்திருவாசகம் இப்படியே செய்கிறது.

சுசீலர்.—ஓதுதற்கு அருகரல்லாத உளறுவாயரே! ஏன் தவிக்கின்றீர்? நங்காயதுவன்று. நங்காயிதுவென்று ஆரம்பியும்.

ஜயத.—தாமே ஓதுங்கள் சுசீலரே! ஞாபகத்திற்குக் கொண்டுவந்தாலும் ஓடிப்போகிறது.

சுசீலர்.—மற்ற மூன்றடிகளைத் தாங்களே சொல்லவேண்டும். "நங்கா யிதென்ன தவம் நரம்போ டெலும்பணிந்து."

ஜயத.—மதிசீலரே! இது முதலடிதானே! சுசீலர் ஓதினபோது தவறினரோ?

மதிசீ.—இல்லை. தவறாதுரைத்தனர்.

ஜயத.—நீங்கள் தவறினதை மறந்துவிட்டீரோ? இது

விஷயத்திலல்ல. அது வேறுவிஷயம். பின் சொல்லு கிறேன். ஆயினும் இரண்டாவதடி. யென்ன?

மதிசி.—திருவாசகத்திலுள்ள பாக்களையெல்லாம் ஆராய்ந்து விட்டேனென்றீரே!

ஐயத.—சிறிய வயதி லாராய்ந்து.

சுசீலர்.—இம்முதிய வயதில் விட்டுவிட்டீரோ?

ஐயத.—சரி இதுவே சரி.

மதிசி.—இது வேசரியாமே. வேசரி யென்றால் கழுதை யன்றோ? அடயோகத்தால் கிளம்புவாரென்றீரே கழுதையாய்விட்டாரே!

சுசீலர்.—அடயோகத்தாற் பாதியுஞ்சையோகத்தாற் பாதியுமாக வறிவை யிழந்தார் வேசரியேயாவர். இவருக்குக் கோபம் பிறக்கும்போது நீர் கண்டதில்லைபோலும். வேசரிக்கு மிவருக்கும் பேதமில்லை யென்னும்படி கால் கைகளை யுதறிக்கொண்டுகத்துவார். அவரே வேசரியென் றொப்புக்கொண்டாரே.

மதிசி.—மனிதவேசரிபோலும். வந்ததுமுதல் வீணாகவே கத்துகிறார். இனி தன்னுடைய காலை நீட்டுவார் போலும்.

ஐயத.—காலமாகிறது. வந்த விடயத்தையும் மறந்து விடுவேன்போலிருக்கிறது. இரண்டாவ தடியைச் சொல்லுஞ் சீக்கிரம்.

மதிசி.—வந்தவிஷயம் யாதோ!

சுசீலர்.—காரியமின்றி வருவாரா? அரண்மனை காரதால்லவா? அவ்விஷயத்தைக் கேட்டல்வேண்டும். மதிசில! அப்பாவை முடித்துவிடு.

ஐயத.—ஐயையோ! அப்பாவையா முடித்துவிடப்போ

இன்றீர்? தங்கள் தந்தை உத்தமசீலராயிற்றே! அவரை வைத்துக்கொண்டல்லவோ நீர் கொண்டா னடித்தல்வேண்டும். சுவரை வைத்துக்கொண்டா லல்லவா சித்திரமெழுதலாகும்?

மதிசீ.—சுசீலர் அப்பாவையும் அம்மாவையும் ஒழிக்க வேண்டுமென்றுரில்லை. முன்கூறின பாசுரத்தை முடித்தல் வேண்டுமென்றனர்.

ஜயத.—அப்படியா? சந்தோஷம். விரைவாகச் சொல்லி முடியும். இன்னூர் தோற்றூர் இன்னூர் வெற்றி யடைந்தார் என்று தெரிந்தபின்னரே நீங்களிருவ ரும் வற்புறுத்துகிற விஷயத்தைச் சொல்லவேண் டும்.

மதிசீ.—கூறுகின்றேன்.

கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடி
கங்காள மாமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.

ஜயத.—இதுதானு? அருமையானதாக விருக்குமென் றல்லவோ நினைத்தேன்?

சுசீலர்.—இவ்வருமையினு மருமை யாதுளது?

ஜயத.—வட்டி லுள்ளதுதானே!

சுசீலர்.—வடா. அவ்வேதத்திலுள்ளதேயாகும்.

ஜயத.—வட்டி லுள்ளதைப் பாடுவது அருமையாகுமா? நானும் அறிவேன். யாவரு மறிவரே.

மதிசீ.—தெரிந்திருந்தால் எங்களை யேனிவ்வாறு வற் புறுத்தல் வேண்டும்? தாங்களே அப்பாசுரத்தைப் பாடி முடித்திருப்பி னலமா யிருந்திராதா?

சுசீலர்.—ஜயதத்தரே! நீரே கூறியிருப்பின் இவ்வாறு

காலாதீதமாகாது. மதிசீலரும் எதன்பொருட்டு இப்பாவை உபமானமாகக் கூறினரென்று விளக்கி நீர் அறியாத சொன்னயம் பொருணய முதலிய வெல்லா விஷயங்களு மெடுத்துகாட்டி யிருப்பாரே. தாங்கள் கருதிவந்த விஷயமு முடிவுற்றிருக்குமன்றோ?

ஜயத.—நான் கருதிவந்த உத்தேசம் எனக்குரியதல்ல.

மதிசீ.—யாருக்குரியதோ ?

ஜயத.—சொல்லவேண்டுமோ ?

மதிசீ.—ஆம். அவாவுகின்றேன்.

சுசீலர்.—வெளியிடாதிருப்பாரா ?

ஜயத.—அதன் பொருட்டன்றோ இங்கு வந்துள்ளேன். இளைஞர்களாதலாலிவ்வண்ணம் அவாவுகின்றீர்கள் போலும். கூறுமுன்னரே இங்ஙன மவாக்கொண்டலைபவர்கள் கூறிவிடின், அடடா! ஏது! இது வரையிற் பேசிய இலக்கண இலக்கிய தருக்கங்களெல்லாம் பறந்துவிடும்போலிருக்கிறதே!

சுசீலர்.—அவசியமே. ஆயினும் இப்போதே அவசியமில்லை. நீர் கூறிய வண்ணம் நாம் எடுத்துக்கொண்ட விஷய முடிந்த பின்னரே. சாவதானமாகச் செப்புக.

ஜயத.—சாவதானமா? சதாவதானஞ் செய்யச்சொல்கிறீர்களே ஒரு நொடியில். ஆயின் அப்பாசுரம் ஏன் கூறினீர் ?

மதிசீ.—விபரீதமாமா என இளவரசர் கூறினாரல்லரா ?

ஜயத.—ஆம்.

மதிசீ.—'விபரீத மாமாவா நான்" என்றீரல்லவா நீர் ?

ஜயத.—ஆம். வாஸ்தவம்.

மதிசீ.—அவ்வாறு வினவலாகுமா ?

ஜயத.—கேட்டாலென்ன? மறுமுறையும் கேட்கிறேன். விபரீத மாமாவா நான்?

மதிசீ.—பலமுறை கேட்பினும் நன்மைதான்.

சுசீலர்.—அவர் எத்தனைமுறை யறியாமையாற் கேட்பினும் இடித்திடித்துக் கூறி அவ்விபரீத ஞானமாய குற்றத்தை யொழித்தல் புண்ணியந்தான்.

ஜயத.—எனக்கும் புண்ணியத்தினும் புண்ணியந்தான்.

சுசீலர்.—புண்ணியமா? உமக்கா புண்ணியம் வரும்? எவ்வாறு பெறுவீர் புண்ணியத்தை?

ஜயத.—என்னிடத்துள்ள குற்றத்தை யுணர்த்தியவழி நீர் புண்ணியத்தைப் பெறுவான் கருதியுள்ளது போல உங்களிருவருக்குமுளதாய ஆபாசஞானத்தை யகற்றியவழி யானும் புண்ணியனாகேனா?

சுசீலர்.—யாங்கள் ஆபாஸஞானிகளாயினன்றோ நீயிர் அறிவு கொளுத்தல் வேண்டும்?

ஜயத.—தெரிவிப்பேன். விடுவேனா? ஜயதத்தர் என்பது என்பேரன்றோ? உம்மைப்போலவா அரையுங் குறையுமாகச் சொல்வேன் என நினைத்துவிட்டீர்? என் விபரீத ஞானத்தை வெளியிடுக. பார்க்கலாம். உம். அவ்வளவு இலேசாகவா? நானாவிபரீதமாமா?

மதிசீ.—விபரீதமாமா யென்னின் யாது பொருள் கொண்டீர்?

ஜயத.—நீர் கொண்ட பொருள்தான் யானுங் கொண்டேன்.

மதிசீ.—நான் விபரீதமாகப் பொருள்கொள்ளின்.

ஜயத.—நானுமப்படியே.

சுசீலர்.—சொற்களைப் பிரித்தால்தான் பொருள்விளங்கும்.

மதிசீ.—கங்காளமாமா கேள் காலாந்தரத்திருவர் தங் காலஞ் செய்பத் தரித்தனன்காண் சாழலோ. என்னு மடியிலுள்ள சொற்களைத் தனித்தனிப் பிரிக்கத் தெரிந்திருப்பின் விபரீதமாமா என்பதி லுள்ள சந்தேகம் நீங்கிவிடும்.

ஐயத.—இப்போதே விளங்கியது. திருவாசகத்தைப் பற்றியுமிச் செய்யுளைக்குறித்து மனுவசியமாகவே வார்த்தையாடுகின்றீர் என நினைந்தேன். இச்செய் யுளை உபமானமாகக் காட்டற்கே உரைத்திரோ? நீர் புத்திமானே யாவீர். எவ்வாறு பதச்சேதஞ்செய் தல் இவ்வடியை? இளவயதில் பதச்சேதஞ் செய்த வன்தான் நான். கொஞ்சங் கொஞ்சமாக.

மதிசீ.—முழுது மறந்துவிட்டீரோ இவ்வயதில்.

ஐயத.—ஆம். நீரே விளக்கின்.

சுசீலர்.—மதிசில. நன்குவிளக்கி மூளையிற்செலுத்துக.

ஐயத.—மதிசிலரே! மூளையுள்ளா? வேண்டாம். மூளை யிற் செலுத்திவிட்டால் குடைந்துவிடுமென்றஞ்சுகி றேன். பாட்டைக் கேட்கும்போதே பகிரென்கிறது. செவி வழியாகச் செலுத்திவிடுக.

மதிசீ.—கங்காளம் + ஆமா. எனப் பிரித்தல் வேண்டும்.

ஐயத.—அவ்வாறே நானும் எண்ணினேன். உமக்கும் தெரிந்திருக்குமோ இன்றோ எனச் சோதித்தேன்.

சுசீலர்.—இதுபோலவே விபரீதமாமா என்பதைப் பிரித் தல் வேண்டும். தெரிந்துகொண்டீரா?

ஐயத.—அறிந்துகொண்டு அரைமணியாயிற்றே;

சுசீலர்.—யாது தெரிந்துகொண்டீர்? சொல்லும்.

ஐயத.—தாமே சொல்லிவிடின்.

சுசீலர்.—உமக்கின்னும் புலப்படவில்லைபோலிருக்கிறதே.

ஜயத.—அவ்வாறு எண்ணிவிடாதீர். யாவர் சொல்லினும் ஒன்றே என்பது என் கருத்து.

மதிசீ—தயை செய்து தாமே சொல்லிவிடுக.

ஜயத.—நீ வேண்டுகிறவரையிலா எதிர்பார்ப்பது. இதோ [மீசையை முறுக்கிறார்.]

சுசீலர்.—வேண்டாம். விபரீதமாமா! விழப்போகிறீர். பெரிய சரீரம். போனால் மீண்டும் வாராது.

மதிசீ.—நம்மீதா வீழ்வர். விழவுந் தெரியுமோ?

சுசீலர்.—இவர். எப்போதும் வீழ்வதில்லை. வீழ்ந்தாலும் எழுவதில்லை அருமையாகவே வீழ்வர். யாவரும் கண்டு அழுமாறும் வீழ்வர்.

மதிசீ.—எழாவிட்டால் என்ன கதியடைவர். கதியா? அதோகதிதான்.

சுசீலர்.—எதன்மீது வீழ்கின்றாரோ அதற்கே இரையாய் விடுவார்.

மதிசீ.—இம்மண்மீது தவறி வீழ்ந்துவிடின்.

சுசீலர்.—தவறியா? தவறாமலொழிவர். முன்னேயே செப்பினனே. மண்ணிற்கே தத்தந்தான்.

ஜயத.—என்னை தத்தமா செய்யப்போகின்றீர்? உம். செய்வீர். ஏமாந்தால் செய்யமாட்டீர்களோ? நான் தத்தமாகிறபோது உங்களை விட்டாபோவேன் என நினைத்தீர்கள். முன் உங்களிருவரையு மொழித்து விட்டு தானே மறுவேலை செய்வேன்.

மதிசீ.—மறுவேலை யென்றால்?

ஜயத.—தப்பிப் பிழைத்துக்கொள்வேன். இதைக் கூடவா கேட்டல் வேண்டும் புத்தியிலாதவரே!

சுசீலர்.—அவ்வாறு செய்யும்போது பார்த்துக் கொள்ளலாம். விரைவாகப் பொருள்கூறி முடியும்.

ஜயத.—என்ன ! புத்தியிலாதவனு யான் ?

மதிசீ.—கோபிக்காதீர். புத்தியில் நீர் ஆதவன் என்றார்.

ஜயத.—நிரம்ப சந்தோஷம். கவனியுங்கள். விப + ரீதமாமா எனப்பதஞ் சேதஞ் செய்தல் வேண்டும். அல்லது விபரீத + மாமா என்றும் விபரீ + தமாமா எனவுஞ் சேதஞ் செய்யலாம்.

சுசீலர்.—சொற்களைத் தவறிச் சேதஞ் செய்து விட்டீர். அவ்வாறு செய்யற்க. விபரீதம் + ஆமா என்னும் இரண்டுமொழிகளும் புணரும்போது விபரீத மாமா என நிற்கும்.

மதிசீ.—இப்போதேனும் எவ்வாறு பதச் சேதஞ் செய்தலென்றறிந்து கொண்டீரா ?

சுசீலர்.—நம்முடன் பழகிவிட்டமையின் ஆதிசேடராய் விட்டனரே. இன்னும் இலக்கண விசேஷங்களை அறிந்துகொள்ளாமலிருப்பாரா ? பெரிய மண்டையுடையாராயிற்றே.

ஜயத.—சபாஷ். அப்படிச் சொல்லும் சுசிலரே ! நான் ஆதிசேடனே. ஆதிசேடனே.

மதிசீ.—நீர் ஆதிசேடர் ஆவீரா ? ஆதிசேடராயின் அனியாயமா யறிவுடையார் அஞ்சிப் பரிகசிக்குமாறு மனம் போனபடி சொற்களை மாற்றித் தோல்வி யடைந்துவிடுவீரோ.

ஜயத.—யார் தோற்றுவிட்டது ?

மதிசீ.—நீரே தோல்வித்தானத்தை யடைந்தீர். அடைந்

தீர். வெற்றியே யடைவர் ஆதிசேடர். நாங்களும் வெற்றிபெற்ரோம். (காகோஷஞ்செய்கிருர்.)

ஜயத.—யான் வெற்றியுற்றவனுதலினன்ரே ஜயதத்தன் என்னும் பேர்பெற்றிருக்கிறேன். ஆறெழுத்துகளை யுடைய பெயரின் அர்த்தமறியாத நீரா ஜயமடைவீர். இவ்வாறு கூறுவதினும் நாம் இருதிறத்தாருஞ் சமத்தானத்தை யடைந்தோமென்னலே நலம். போதும். வாயைமூடும். உம்முடைய கவர்வத்தைக் காப்பாற்றிக்கொள்ளும். உலகமெல்லாம் நகைக்கும்படி செய்துவிடுவேன். உம்முடைய சேடந் தெரியாதவரா என்னை ஆதிசேடனல்லவென்று தர்க்கிக்கின்றீர்.

சுசீலர்.—ஆம். விசேடம் என்னுஞ் சொல்லின் முதலெழுத்தை நீக்கச்சொன்னீரல்லவா? அந்த சேடத்தைக்குறித்தே மீண்டும் அனுவதிக்கின்றீரோ?

ஜயத.—ஆம். ஆம். புலப்பட்டதோ? அல்லது புலப்படுத்த வேண்டுமோ?

சுசீலர்.—புலப்படுத்துக புளுகரே!

ஜயத.—தமிழ்வேதத்தைப் பாராயணஞ் செய்யும்போது விதிப்படி யன்ரே ஓதல் வேண்டும்.

சுசீலர்.—ஆம். ஆம்.

ஜயத.—விதிதவறி ஓதலாகுமா?

மதிசீ.—இங்கு விதிதவறி ஓதினர்யாவர்?

ஜயத.—வினவிற்கு விடைதருக. வேறு கேள்வி வேண்டாம்!

மதிசீ.—விதி விலகலாகாது!

ஜயத.—விதி வழுவாது ஓதல்வேண்டுமென்றறிந்தும் வழுவுதல்?

சுசீலர்.—குற்றத்தினுங் குற்றமாகும்.

ஜயத.—சுசிலரே! சுசிலரென்னும் பேர் தகும் உமக்கு. சுயநயம்பாராட்டாது பேசுவாருள் தாமே தலைவரானீர். அவ்விதமே பேசுக. குற்றத்தினுங் குற்றமென்றதே சரி. பாதகத்தினு மகா பாதகமென்றுஞ் சொல்லலாமன்றோ?

சுசீலர்.—ஆம்.

ஜயத.—அப்பாதகத்தால் நரகப்பிராப்த மெய்தாதா?

மதிசீ.—எய்தும். எய்தும்.

ஜயத.—மதிசிலரே! யாவரோ தவறினர் என்று கேட்டீரல்லவா?

மதிசீ.—ஆம்.

ஜயத.—அவ்வாறு கேட்டதும் பெருந்தவறு.

மதிசீ.—உள்ளதே.

ஜயத.—வேதவிதிக்குமாறாக உரைத்தார் யாவர் என்னில் நீரே முறைகைச் செப்பினீர். பாராயணஞ் செய்தற்கு ஆரம்பிக்குமுன் திருச்சிற்றம்பலம் என்றீரா? செப்பினேனல்லனே.

சுசீலர்.—இல்லை. மறந்துவிட்டீர்.

ஜயத.—தவறுதானே.

மதிசீ—மறத்தலுந் தவறுமா!

சுசீலர்.—தவறு தவறே. மறத்தலினுக்கில்லை கேடு

ஜயத—மதிசிலரே! ஒப்புக்கொள்ளமாட்டீரோ?

மதிசீ.—ஒப்புக்கொண்டேன்.

ஜயத.—இரண்டாவது அத்திருப்பதிகங்களை எங்ஙனம் ஓதல் வேண்டும்.

மதிசீ.—பண்ணுடன் வரிசைக்கிரமமாக ஓதல் வேண்டும்.

சுசீலர்.—செவ்விநோக்கி முதலுங் கடையுமாக ஓதினும் பொருந்துமென்பர் பெரியோர்.

ஜயத.—மதிசிலரே! நீர் முதற்றிருப்பதிகத்தில் மூன்றடிகளையே சொல்லி நிறுத்திவிட்டு மற்றொன்று விரித்தல் தகுதியாமா?

சுசீலர்.—மதிசீல! நன்றே போதித்தனர் நம்புலவர். வியக்கற்பாலதே இவர் திறம்.

மதிசீ.—ஆம் நமக்காரம். நமக்காரம்.

சுசீலர்.—இதையே சேடமென்றீர் போலும்.

ஜயத.—ஆம்.

சுசீலர்.—என்னைக்கூடவா குற்றவாளியாக்கினீர்.

மதிசீ.—தம்மையல்ல. என்னையே.

ஜயத.—உம்மையும் சேர்த்தே சுசீலரே! அவர் பிறழ்ந்தபோது நீர் ஏன் அக்குற்றத்தை யெடுத்துக் காட்டாதிருந்தீர். அல்லது அவர் கூறுதுவிடுத்த மற்ற இரண்டடிகளையும் தாமாகிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்தீரா?

மதிசீ.—பூர்த்தியே செய்திருப்பர். அச்சமயத்தில் நீர் வந்ததாலேயே வந்தது இக்கேடு.

ஜயத.—வந்த கேடுமக்கேயாகுக. எனக்கல்ல.

சுசீலர்.—கூறியதுண்மையே. எமக்கேயாகுக. நீர் வரினும் வாராதுவிடினும் எமது கடமையை யாமே செய்திருத்தல் வேண்டும்.

ஜயத.—விட்டுவிடாதேயும். கூறிமுடியும்.

சுசீலர்.—திருச்சிற்றம்பலம்.

மதிசி.—"பெருந்துணையை பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே"

ஜயத.—அடடா? மதிசீலரே! நீர் மதிசீலராகமாட்டீர். என்தொண்டையும் நோகிறதே. சிவ. சிவா.

திருச்சிற்றம்பலம்

சுசீலர்—அருந்துணையை யடியார்களல்லல் தீர்க்கு மருமருந்தை
யகன்ஞாலத் தகத்துட்டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வருஞ்சுகத்தைப் போக மாற்றிப்
பொறுநீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

ஜயத.—ஸ்ரீமத் அப்பர்சுவாமிகள் திருவாக்கே திருவாக்கு. திருநாவுக்கரசல்லவா?

மதிசி.—ஜெயதத்தரே! ஆங்காங்கு விடுபட்ட விஷயங்களை யெல்லாந் தக்க விடை யிறுத்து சந்தோஷமடையச்செய்தீர்! அரிய வேத விதிகளையும் போதித்தருளினீர்! எப்போதும் பெரியோர் பெரியோரே யாவர்!

சுசீலர்.—நன்றுரைத்தீர். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே.

மதிசி.—எல்லா விஷயங்களையுங் குறைவின்றிக் கூறி முடித்தார் எனினும் ஒன்றையே கூறாது விடுத்தனர்.

சுசீலர்.—கூறாது விடுத்தனரென ஐயம் கொள்ளேல். பின்னர் அறிவிப்பதாய் முன்னரே உரைத்துள்ளார்.

ஐயத.—வெளியிடின் விசனமடைவீரோ ?

மதிசீலர்.—கவலையுறத்தக்க செய்தியோ கொடுவந்தீர் ?

சுசீலர்.—எதுவரினும் வருக. ஏதோ புதுமைபோலும்: கூறுக.

ஐயத.—உண்மையைச் சொல்லவேண்டியதுதான் ஆயினும் சிறிது அஞ்சுகின்றேன். ஏன் அஞ்சல் வேண்டும்.

சுசீலர்.—அஞ்சவும் வேண்டாம். இவ்வாறு ஆலோசித்தலும் வேண்டாம். உள்ளதை உள்ளவாறு உரைத்தலே உத்தமம்!

ஐயத.—வெருக்கத்தக்கதாகவேயிருக்கும். ஆயினுங் கூறுகின்றேன். கனி காயாகக் கண்டனன்.

சுசீலர்.—மதிசிலரே! என்ன! ஈதோர் அரிய விஷயமா ?

மதிசீ.—இருப்பினு மிருக்கலாம்! நன்கு விளங்கச்சொல்லுக!

ஐயத.—கனியும் காயாமா ? என்ன புத்தியப்பா! இப்போதாகிலும் கவனியுங்கள். யான் யாத்திரை செய்துகொண்டு வருங்கால் பார்வதிபாகன் எழுந்தருளியிருக்கும் ஓர் நகரத்திலுள்ள எனது நண்பனைக் காண்பான் சென்றபோது நன்னெறி யுடையான் ஒருவன் துய்ப்பான் கொண்ட ஆசையால் அவனது நெஞ்சகமாய நிலத்தில் யாவரும் அறியாவண்ணம் நல்லொழுக்கமே ஒருருவாய் வந்த ஓர் விதையை விதைத்து அன்பையே நீராகப் பாய்ச்சி வளர்க்க அஃது பூத்துக் காய்த்துப் பழுத்தபின்னர் அதன்

பயனை யடையும்பருவத்தை யெதிர்பார்த்து காதலோடுங் காவலோடுங் காத்திருக்க வேற்றார்க்கள் வணுகிய காந்தன் என்பானதைக் கொடுபோகும் போதையே நோக்கி யிருக்கின்றனனெனக் கேள்வியுற்றனன் ஆதலால் காயென்றேன். காயென்றால் காயென்றே தடிதடியாக அனர்த்தஞ் செய்கின்றீர்களே. நுண்ணறிவாளர்களா நீங்கள் ? கனியென்றதையுங் கனியென்றே கருதிக்கொண்டிருக்கின்றீர்களோ இன்னும் ?

மதிசீ.—நிறுத்தும்! தடியர்களே தடிதடியாகப் பொருள் கூறுவர். யாங்கள் நுட்பஅறிவுடையேமாதலால் நீர் அதிசயத்தக்கவாறே பொருள் சொல்வோம். சொற்பனங் கண்டீர்போலுமென நினைந்தேம். கன்னியெனற் பாலதாய பதத்தை நடுவெழுத்தை நழுவ விட்டே கனியென்றீர் எனத் தெரிந்தேம்.

சுசீலர்.—சாக்கிரத்தேயே கண்டனர் எனச்சந்தேகித்தேன் யான்.

ஜயத.—யாது கண்டேனெனச் சந்தேகித்தீர்.

சுசீலர்.—பார்வைக்குமாத்திரங் காய்போற் காணப்படுங் கனியைக் கண்டிருக்கலாமென முதற்கூறிய வாக்கியத்தால் சந்தேகமுற்றுப் பின்னுரைத்த வாற்றான் சுசீலன், சுசீலையை விவாகம்புரியக் காதலுற்றிருந்தானுயினும் அன்னவளைக் காந்தன் என்பான் வதுவை செய்யுங்காலத்தை யெதிர்நோக்குகின்றனனெனச் செப்பினீர். முன்னையது வியக்கத்தக்கதுமன்று. பின்னையது நம்பத்தக்கது மன்று.

மதிசீ.—நம்பத்தக்கதாகுமா ?

ஜயத.—சுசீலே இங்கிருக்கின்றனளா? சௌக்கியந்தானே!

சுசீலர்.—சுசீலையா ? மீண்டும் ஏன் விளையாடுகின்றீர் ?

மதிசீ.—ஜயசீலர் செல்விதானே ?

ஜயத.—ஆமாம்.

சுசீலர்.—சுபந்தான்! சுசீலையின் சுபாதிசயங்களைக் கேட்பானேன் ?

ஜயத.—அக்கன்னிகையை ஜயசீலர் தமது நாட்டிற்கு அழைத்துச் செல்ல உத்தேசித்திருப்பதாய்க் கேள்வியுற்றேன் சென்றமாதம் ஆதலால் அவ்வாறு விசாரித்தனன்.

சுசீலர்.—சுசீலையை அழைத்துப் போகவா?

மதிசீ.—காரணம்?

ஜயத.—காரணமில்லாமலா ?

சுசீலர்.—எதிநிமித்தம் ?

ஜயத.—திருமண விஷயமாகவே !

சுசீலர்.—என்ன ? திருமணமா ? யாருக்கு ?

ஜயத.—சுசீலைக்குத் தான் திருமணம் !

மதிசீ.—நம்பக்கூடிய வார்த்தைகளா யிவை ? [நகைக்கிறார்]

சுசீலர்.—இருப்பினு மிருக்கலாம்! பன்னிப் பன்னிப் பேசுகின்றாரே !

ஜயத.—சந்தேகமா ? நான் கூறின் சந்தேகமாய்த்தானிருக்கும். ஜயசீலரேவரின் சங்கை நீங்கிவிடும் போலும்.

சுசீலர்.—உண்மையோயிது ?

ஜயத.— ஆயின் நான் கூறியவையாவும் உண்மையன்றென்பதே உமது தீர்மானமோ ?

சுசீலர்.—வேடிக்கையார்த்தமாய்ச் சொன்னீரென்றே சந்தேகித்தனன்.

ஜயத.—சந்தேகம்வேண்டாம். சத்தியமே.

சுசீலர்.—சத்தியமாயின் என்னைச் சதிசெய்து அன்னவளை மணம்புணரும் பதியாவனோ?

ஜயத்.—மதனபுரியின் சிற்றரசனுப வீரகாந்தன் புத்திரனுக்கே சுசீலையைத் தத்தஞ் செய்வதாய் வாக்களித்து விட்டனர்.

சுசீலர்.—யாவன்?

மதிசீலர்.—வீரகாந்தன் செல்வனோ? மதனகாந்தனோ?

ஜயத.—ஆமாம்.

சுசீலர்.—உமக்குரைத்தார் யாவர்!

ஜயத.—ஜயசீலரே அங்ஙனமுரைத்தனர்.

சுசீலர்.—ஈதென்ன விந்தை? என் மாதுலரா அவ்வாறுரைத்தனர்?

ஜயத.—இன்னும் எத்தனைமுறை சொல்லலாம்.

சுசீலர்.—திருமணம் எப்போதோ?

ஜயத.—வருமாதத்திலென்றே கூறினர்.

மதிசீ.—ஜயசீலரை யெங்கு கண்டீர்.

ஜயத.—கண்டேன் மதனபுரியில்.

மதிசீ—[சுசிலரை நோக்கி] அவ்வாறாயின் இதுவாறும் தாம் அறியாததென்னை அரசே!

ஜயத.—வேற்றூரில் இரகசியமாய் நடத்த உத்தேசித்த விஷயம் சுசிலர் எவ்வாறறியக்கூடும்?

மதிசீ.—சுசிலரறியாமலுஞ் சுசீலைக்கு மணம் நடைபெறுமா?

சுசீலர்.—“இரகசியமா” யென்றனரே கவனித்திலிரோ?

மதிசீ.—ஆயின் தமக்குத் தெரிவியாமலேயே நடத்த உத்தேசமோ ?

சுசீலர்.—ஆம். அவ்வாறுதான் எனக்குந் தோற்றுகிறது. இதுகாறும் திருமணப்பத்திரிகையை அனுப்பாது மௌனஞ்சாதித்து நிற்றலே அவரது கபடக் கருத்தை விளக்குகின்றதன்றோ ? (ஜயசீலரை நோக்கி மீண்டும்) மதனகாந்தனுக்கா ?

ஜயத.—ஆம், ஆம், என்னை விடமாட்டீர்கள்போலிருக்கிறதே. ஐயையோ ! தெரியாமல் வந்து மாட்டிக்கொண்டேனே இங்கு. அப்பாதகன் செய்கின்ற பேரிழவு கல்யாணமும் நீங்கள் பெருமூச்செறிந்து சாகிறதும் என்னைப் படுத்துகிற பாடும் போதும். போதும்.

மதிசீ.—கோபித்துக் கொள்ளாதேயும்.

சுசீலர்.—திருமணப் பத்திரிகையைப் பார்த்தீரா ?

ஜயத.—மதிசீலரே ! நீர் ஏதேனும் கேளுமே.

சுசீலர்.—அது கிடக்கட்டும். கேட்டதற்கு விடைகொடுப்பதை விடுத்து வீண்வார்த்தை யெதற்காக ?

ஜயத.—என்ன கேட்டீர் ?

மதிசீ.—மறந்தொழிந்தீரா ? சரிதான் ! அவ்வளவு ஞாபகம்போலும்.

ஜயத.—ஞாபகமா ? கொஞ்சம் கொஞ்சமாக.

சுசீலர்.—சீக்கிரம்.

ஜயத.—வெளியே வந்ததும் உள்ளே போய்விட்டது.

மதிசீ.—தொண்டை விக்கிச் சாகப்போகிறீர். விடும் வெளியே. விடும் வெளியே.

ஜயத.—உம். வருகிறது. வருகிறது. விடாமல் வந்து கொண்டேயிருக்கிறது இரும். இரும்.

சுசீலர்.—முன் சொல்லும். சொல்லும். அந்த மதனகாந்தனுக்கும் உமக்கும் வாந்திபேதி விடாமலே வரட்டும் பின்.

ஜயத.—சொல்லவா ?

மதிசீ.—சொல்லும்.

ஜயத.—பொறும். பொறும். எல்லா தானங்களினுஞ் சிறந்தது நிதானம். என்ன கேட்கின்றீர் ? மணப்பத்தி யென்பதோடு ரிகை என்னும் இரண்டெழுத்துகளையுஞ் சேர்த்துப்பார்த்தேனு என்கின்றீரோ ? பார்த்தேனு ? என் மெய் சொல்லவேண்டும்.

மதிசீ.—என்ன சொன்னீர் ? என் மெய் சொல்லவேண்டுமோ ? ஆயின் பொய் சொல்லிப்போகவா வந்தீர்.

ஜயத.—உஸ். உங்கள் குரலைக்கேட்டாலே அஞ்சி வருவதுள்ளே போய் விடுகிறது. இந்த முறை உள்ளே போனல் மீண்டும் வெளியே வராது. பிறகு நான் உத்தரவாதியாகமாட்டேன்.

சுசீலர்.—மதிசீலரே ! வெறுமனேயிரும்.

ஜயத.—[யோசிக்கின்ருர்.]

சுசீலர்.—என்ன யோசிக்கின்றீர் ?

ஜயத.—உம். ஆய்விட்டது. இப்போதென்ன கேட்கிறீர் ?

சுசீலர்.—என்ன யோசிக்கின்றீர் ?

ஜயத.—ஒன்றுமில்லை. மெய்யேசொல்லி விடலாமா என்றுதான். இல்லை. இல்லை.

சுசீலர்.—என்ன இல்லை ?

ஜயத.—இல்லையென்று சொன்னேன் ? உம். சொன்னுல் தானென்ன ? திருமணப்பத்திரிகையில் மதனகாந்தன் பெயரும் சுசீலையின் பெயருமில்லாமற் போக

வில்லை. இன்னொரு சந்தேகம். தமது தந்தையார் பால் யோசியாமல் இங்ஙனஞ் செய்வாரா? நிருப மாகிலும் வரைந்திருப்பார் ஜயசீலர் எனக்கருது கின்றேன்.

சுசீலர்.—அங்ஙனம் வரைந்திருந்தால் எனக்குரையாது விடினும் எனது தாயாருக்குரைத்திருப்பாரன்றோ தந்தையார்? சுசீலை கதி இவ்வாறுமென யாவர் எண் ணினர்?

ஜயத.—ஒருவரையு மாலோசியா திங்ஙனஞ்செய்து விட் டனரே ஜயசீலர். திடீரென வீரகாந்தனுரைத்த சொற்களை நம்பாமலேயே தங்கள் மாதுலரைக் கேட் டனன். அன்னவரும் அங்ஙனமே கூறினர். அதன் பின்னரே உண்மையெனத் தீர்மானித்தேன்.

சுசீலர்.—மதனகாந்தனு மருகனுயினன்? உம். காலாதீத மாகிறதுமக்கு. நாளையாகட்டும் பேசலாம்.

ஜயத.—எனக்குத்திரவுதானே?

சுசீலர்.—செய்க. சுகுணசீலரை யின்னுங்கண்டீரில்லையா?

ஜயத.—இன்னுங் கண்டேனில்லை. முன்னர் தங்களுக்கறி விக்கும்பொருட்டே வேகமாய் வந்தனன். தமக்குந் தெரிந்திருக்கலாமென்றே எண்ணி வந்தனன். அவ ரையுமின்றே காணல்வேண்டும். ஜயசீலரும் சுசீ லையை யழைத்துப்போக வந்தாலும் வருவர் ஒரு வேளை.

சுசீலர்.—காணின் இவ்விவாக விஷயமாகப் பேசவுங் கருத் துளதோ?

ஜயத.—ஆம். அமைச்சருக் குரைத்த லவசியமன்றோ? அவ்விவாகத்தை நிறுத்தத்தக்க சூழ்ச்சியுஞ் செய்

வார். அன்னவரே தந்தையார்க்கு முறைப்பர் அவகாசம் நேரும்போது.

சுசீலர்.—ஆம். அவசியமேயாம். அவ்வண்ணமே செய்க? மாமா வருவதாய்ச் சொன்னாரா?

ஜயத.—சொன்னர்! சொன்னர்!

ஜயத.—மிகவும் வருந்துகின்றீரோ?

சுசீலர்.—வருந்துவதால் வருவதென்ன? பிராப்தப்படி நடக்கும் எல்லாம்.

ஜயத.—மாற்றலாகுமா அப்பா! மாற்றலாகாது.

சுசீலர்.—எதை.

ஜயத.—எதையா? [நகைத்துக்கொண்டு]

"தையலார் முழுமதி முகத்திற் றங்கிய
மையகட் காலவேல் மாற்ற லாகுமோ"?

சுசீலர்.—தையலென்ன? கிய்யலென்ன? தள்ளும்.

ஜயத.—அடடா! அர்த்த இராத்திரிலேயே அறத் துறந்து விடுவீர்போலும். விடுமா?விடாதப்பா விடாது. யாரையும் விடாது. உன்னையும் விடாது. என்னையும் விடாது.

கவி

"ஒருகோட்டுக் கலைமுனியு மொளிதிகழும்
புலியாடை யுடுத்த கோவும்
மருமலர்வாழ் திசைமுகனும் வானவர்க
ளுயகனு மயிடன் றானும்
கரியநிறத் திருமாலும் வாலியும்
பராசனுமே காம னம்பால்
பெருமையிழந் தனரொன்றாற் சிறுமனிதர்க்
கெப்படியோ பேசுங்காலே"

"வாசவனும் பிறர்மனைக்க வுடலானு
னொருவனரா வடிவ மானான்
றேசுபுகழ்க் கலைமதியு முடவிழந்தான்
மலர்வேதன் சிரமொன் றற்றான்
ஈசனுதல் விழிதிறந்தா னிராவணசுர்
தோபசுந்த ரிறந்தார் மண்மேல்
காசினிப்புன் மானிடரோ மோகசா
கரமதனைக் கடக்க வல்லார்"

சுசீலர்.—மோகசாகரத்தைக் கடந்துவிட்டேனென்று மொழிந்தேனோ? அல்லன். அக்கடலைக் கடக்கும் பருவம் இதுவல்ல.

ஜயத.—மணம் நடைபெற மகாதேவன் அருள்புரிக. [நிட்கிரமித்தல்.]

சுசீலர்.—மதிசீல! ஜயதத்தர் சொற்றவை உண்மையாகவே யிருத்தல் வேண்டுமன்றோ?

மதிசீ.—யான் சந்தேகித்த போதும் சத்தியஞ் செய்தனர் ஆதலால் உண்மையே யென்பதில் ஐயமில்லை. ஆயினுந் தக்க காரணமே கூறினர் இல்லை. தம்மாட்டுப் போன்புடையர் அன்றோ ஜயசீலர்?

சுசீலர்.—அன்பின் பெருக்கை ஆற்றுப் பெருக்கடித்துக் கொண்டுபோய் விட்டதுபோலும். இன்றேனும் அறிந்து கொண்டீரன்றோ அவர் என்பால்வைத்த அன்பின் அளவை? முன் அன்புடையராயிருந்தார். இப்போது அன்பின்மையும் அறிவின்மையுமுடையராயிருக்கின்றனர் போலும். இனி அன்புடையர் என்னாது அவ்வன்பை உடைப்பார் எனக்கூறலே அமைவுடைத்து.

மதிசி.—அவர் கண்ணுங்கருத்தும் அல்லும் பகலும் தங் கண்ணதே யென்றுந் தனதருந் தவச்செல்வியைத் தங்களுக்கே திருமணஞ் செய்விக்கும் போவா உடையரென்றும் நீவிர் ஆண்டிற் சிறியரேனும் அறிவிற் பெரியரென்றும் பன்முறை செப்பியதாக எனது தந்தையாருஞ் சுந்தா சிலருங் கூறக்கேட்டு அகமகிழ்ந்த யான் ஜயதத்தர் கூறியன கேட்டமுதல் அகமுடைந்து வருந்துகின்றனன் சால. ஆயினும் நீயிர் கவலையுற்றக. வீர காந்தருக்கு ஜயசிலர் வாக்களித்து விட்ட தானே மதனனுக்கு மாலை சூட்டி விடுவாரா சுசீலையம்மையார்.

சுசீலர்.—மதிசிலரே! நீர் மதிகேடரோ? யாதுரையாடுகின் றீர்? சுசீலையின் தந்தை ஜயசிலரோ அல்லது மதி சிலரோ?

மதிசி.—ஜயசிலர்தான் எனச் செப்பலும் வேண்டுமோ? அவர் தந்தையாயி னென்னை?

சுசீலர்.—அறியாதுரைத்தீர். அப்பெண்மணியின் தந்தை விரும்பிய வண்ணமே முடிவு செய்து விட்டபின்னர் மாலை சூட்டாமல் யாது செய்ய வல்லள் சுசீலை?

மதிசி.—தங்கள் மாதுலர் வேற்றூரில் வீரகாந்தன்பால் செப்பிய மாற்றமும் ஜயதத்தர் கூறியவையும் உண்மையேயாயினும் யாவும் வீணேயாகும். தாம் இவ்வாறு அலமால் அழகன்று. என்வாக்கு பொய்யாது. அவராவது! சொல்வதாவது! மணமாவது! முடிதலாவது! வெறுங்கதையேயாகும். சுசீலைமணியை மணம்புரிவான் உதித்துள்ள உத்தம மணவாளர்

சுசீலரே. மதனனடையவேண்டியது விதனமே. அப்பெயரை நினைந்து நினைந்தழவேண்டியதே அவனடைந்த பயன். அப்பெயர்க்குரியாளை மாலைசூட்டத் தக்கவனோ அவன்? அப்பெருமையுடையாளை மாலைசூட்டத்தக்கவனல்லன்.

சுசீலர்.—யோசியாது பேசுகின்றீரே!

மதிசீ.—யான் யோசித்தே கூறுகின்றனன். மதனனாவது! மாலைசூட்டவாவது! எட்டாதகனியை யிச்சித்தனன் போலும் இளித்தவாயன். சொற்பனங் கண்டனர் போலும் யாவரும் ஒருங்குசேர்ந்து மதனபுரத்தே. ஈதறிவிலார் கூற்றேயாம். வைக்கவிடந்தெரியாமல் வைத்துவிட்டாரே வைக்கோலில்.

சுசீலர்.—இங்ஙனம் உதாசினமாகப்பேசல் அடாது. மகப்பேறின்றி பன்னாள்வருந்தி அருந்தவமியற்றித் திருவாலவாய்க்கடவுள் கருணாவீட்சண்யத்தால் பயந்தனர் இப்பாவையை இந்துமதியம்மையார் என்பதை யான் அறிவேன் என்னில் ஈன்றோன் அறியானோ? தனது புதல்வியைக் கிணற்றில் தள்ளிவிடுவனோ? யாவருஞ் செய்யாரிவ்வண்ணம். அத்தவச் செல்வி நன்மணாளனோடு சுகித்து வாழுங்காலத்து அவ்வின்ப வாழ்வைக் காண்டலானுங் கேட்டலானுமடையு மார்வமுடையான் அவனோ அல்லது நாமோ? நாமன்றே! ஜயசீலரேயன்றோ? ஆதலால் தனது புத்திரியை எவ்வானுக்கு எக்காலத்து விவாகஞ் செய்விக்கத் தீர்மானிக்கின்றனரோ அவ்வானுக்கே அப்போதே எண்ணியவாறே செய்விக்கலாமன்றோ தந்தையாவான்? அக்கருத்தை மாற்றப் பிரா

லாமா ? அவரதபிப்பிராயத்திற்கு முரணுயுரைத்தல் நமக்குசிதமாகுமா ?

மதிசீ.—ஒருவர் அறிவீனமான காரியங்களைச் செய்யுங்கா லுணர்த்தி நல்வழியிற் செலுத்தல் உசிதமே யாகும்.

சுசீலர்.—அவ்வாறு வற்புறுத்தி அறிவுறுத்தி நமதிச்சையை முற்றுவிக்கச் செய்தலால் யாதோ பயன் ? தானே கனியாப் பழத்தைத் தடிகொண்டடித்தாற் கனியுமா ?

“வருந்தி யழைத்தாலும் வாராது வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா-இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்”

என்ற திருவாக்கி னுண்மையை யறியீரா ? வீரகாந்த னுக்கு வாக்களித்தபின் மறுப்பாரா ? மறுக்கார் ஆதலால் நீர் கூறல் ஒவ்வாது. நாம் கருதியவண்ணமே ஆமா ?

மதிசீ.—ஆம். ஆம். தமக்கே ஆம்.

சுசீலர்.—ஆம். அக்கன்னியை யீன்றோர் கருத்து மவ்வித மாயின்.

மதிசீ.—இல்லாவிடத்தோ ?

சுசீலர்.—ஆகாது. எங்ஙனம் நாம் எண்ணியவாறே ஆகும் என்றீர் ?

மதிசீ.—பிராப்த மிருப்பின் தமக்கே.

சுசீலர்.—[நகைத்துக்கொண்டு] பிராப்த மிருப்பின் ஆகுமென் பதை யான் அறியேனா ? அப்பாவை நல்லாளையே மணம் புணர விரும்பிய என் கொள்கையைப் பன் னுளா யறிந்திருந்து மற்றொரு வாளை நாடியதும் பிராப்தந்தானே ?

மதிசீ.—நாடி விட்டதே ஊழாகுமா ?

சுசீலர்.—காதலோடு கார்த்திருந்த இக்காவலனை வெறுத்து காந்தனை வரனெனத்தேடல் பிராப்தமென்றே கருதுகின்றனன்.

மதிசீ.—காந்தன் வரன், மதனன் வரன், என வாய்ப்பறை யறைதல் ஊழாகா. அது உளறலென்னப்படும். உத்தேசித்த வண்ணமே முற்றுமேல் ஊழ்வினையே.

சுசீலர்.—ஜயதத்தர் கூறியவாறு என் மாதுலன் முகூர்த்த நாள் நிச்சயித்துத் திருமணப்பத்திரிகை யனுப்பிய பின் தான் ஊழின் வலியென்பீர் போலும்.

மதிசீ.—ஜயசீலரா லனுப்பப்படுந் திருமுகத்தானும் பயனின்று.

சுசீலர்.—அவர் கையெழுத்து பயனற்றதா ?

மதிசீ.—அவர் கையெழுத்து சிற்சில விஷயங்களில் பிரயோசனப் படலாமாயினு மிவ்விவாக சம்பந்தமாக அவர் கைச்சாத்தொரு பிரயோசனமுந் தராது

சுசீலர்.—இவை யறிவுடையார் ஒப்பத்தக்கனவா ?

மதிசீ.—தம்மை யொத்த விவேகிகளே ஒப்புமாறு கூறுகின்றனன். சிற்றறிவுடைய மக்களாலெழுதப்படுவன நினைத்தவாறு முடியாதனவும் ஓர் காலத்தழியப்படுபனவுமாம். அங்ஙனமின்றி உள்ளங்கை நெல்லிக்கனியெனப் பயன்தருமெழுத்தே அயனாலெழுதப்பட்ட எழுத்தாகும். அவ்வெழுத்தே மெய்யெழுத்தாம்.

சுசீலர்.—மெய்யெழுத்தென்னின் ?

மதிசீ.—முன் செய்த கர்மத்திற் கீடாக ஆன்மாக்கள் அனுபவிக்கவேண்டிய சுகதுக்காதிகளைப்பற்றி முன்னரே

ஸிருஷ்டி கர்த்தாவால் எழுதப்பட்ட எழுத்துக ளையே இங்கு மெய்யெழுத்துகள் என்றேன். பிரத் தியட்சத்தில் நடை பெற்று வருவனவற்றிற்கேற்ற படி வரையப்பட்டன அவ்வித சத்தியமாகிய எழுத் துகள். தலையெழுத்தென்றுங் கூறலாகும்.

சுசீலர்.—ஜயதத்தர் சொன்னவையோ?

மதிசி.—ஜயசீலருடைய அபிப்பிராயத்தையே தெரிவித்தா ராதலின் அவை நம்பத்தக்கனவே. தானே புனைந் துரைத்தாரில்லையே! தமது சுகத்தையே நாடுகின் றவராதலால் மனம்பொறுமல் உமக்கறிவித்தனர்.

சுசீலர்.—ஆயின் மதனகாந்தனுக்கு விவாகம் நடை பெறுதா?

மதிசி.—நடக்கும். ஆனல் சுசீலைக்கும் அன்னவனுக்கும் நடவாது. எவ்வாற்றானும் நடவாது. அம்மங் கையர்க் கரசியார் அன்னவன் முகத்திலும் விழிக்கக் கருதார். தம்மையே தனது தலைவராகக் கருதி வழிபடுந் தன்மையிக்கார். யாவர் எத்தகைய ஆண் மையும் ஆற்றலும் உடையாராயினும் மகபதியோப் பாராயினு மொருபொருளாய் மதியாதமதியு மான்பு முடையாள். இன்பமெய்துங் காலத்துந் துன்ப முறுங் காலத்தும் துரைசிகாமணியாகிய சுசீல ரையே நாடும் நன்மனமுடையாள். தந்தை போதிப் பினுந் தன்னைப்படைத்தோன் போதிப்பினும் அணு வேனுங் கலங்காத அகமுடையாள். மேதக்கவரசே! தங்களுக்கே மேதகுகிழத்தியா யுதித்துள்ளார் உல கில் அம்மடந்தை சிரோமணி. அம்மின்னனுள் நாமத்தைச் சொல்வதற்கும் புண்ணியமிருத்தல்

வேண்டும். அவ்வடமீனனுளே சுசிலரை மணம் புணருஞ் சுதந்தரமுடையாள். அக்கற்பாசி தலைவன் பக்கல் தலையன்பார்ந்த தலைவி. திருவினுருவமிக்க அப்பெருமாட்டியை நாயகியென் றழைத்தற்குரிய நாயகர் வரு யுதித்தவர் தாங்களே.

சுசீலர்.—சுசீலே அத்தகைய பேரன்புவாய்ந்த உத்தம இலட்சணங்களுடையளா? அப் பெண்ணரசிக் கென்மீது காதலிருப்பினும் பெரியோர்கள் சம்மத மில்லாமல் தனதிச்சைவழி நடத்தல் நலம் ஆமா?

மதிசீ—அற்றன்று. தந்தை அறிவீனத்தால் படுகுழி யில் வீழ்த்தினல் தானும் அவ்வாறே வீழ்தல் வேண்டுமென்பது நம்போல்வார் ஒப்பத் தகுந்த தாமா? தாம் ஈன்ற புதல்வியர்கண் மனமிசைந்த நாயகர்களைத் தேடி மணஞ்செய்விப்பவர்களே பெற் றோராவார். அவ்வாறு செய்தலே உத்தமர்கட்கழகா கும். இல்லாவிடத்து கல்வியுடைய மங்கையர்கள் அவ்வீன்றோர்கட் கறிவுறுத்தி இல்லற தருமத் தைச் செவ்வனே நடாத்து மின்றியமையாத இலட் சணங்கள் வாய்ந்த புத்திமான்களையே புருடராய்க் கொள்ளல்வேண்டும். சாவித்திரி யென்பாளும் தம யந்தியென்பாளும் சுசீலையை நிகர்த்த அரசவம்ஸத் தினரேயாவர். அன்னவர்கள் தாந்தாம் விரும்பியவா றன்றோ தக்க நாயகர்களை மணந்தனர். அங்ஙனஞ் செய்தமையான் என்னோ குறையுற்றனர்? அப்பெண் மணிகள் பதிவிரதா சிரோமணிகளென்னப் போற் றப்படுகின்றனரல்லவா கற்றோர்களால் இன்னும்.

சுசீலர்.—மதிசீல! அரிய உவமையால் ஆனந்திக்கச் செய்

தனையாயினும் எனது அன்பிற்கினியாளை யென்னுந்தோறும் கவலையென்னும் கொடியன் வசமே ஆயது எனது நெஞ்சம். எந்தனை நீத்துறவிழையாத சிந்தனையுடையாள் அம்மதனனை விவாகம் புரியச் சம்மதியாள் என்றே எனக்குந் தோன்றுகின்றது.

மதிசீ.—[ஒருநிமிஷம் ஆலோசித்து] தோன்றுகின்றதா? இன்றிரவே இவ்விவாக விஷயத்தை இலிகிதமூலமாகத் தெரிந்தபின் காதல் என்னுங்கடலுள் மூழ்கிக் கண்ணீர் புரளப் பெருமூச்செறிந்துப் பிரலாபித்துப் பிணம்போற் கிடக்கின்றனர் அவ்வம்மையார் என்பதிற் சந்தேகமேயில்லை.

சுசீலர்.—என்ன? அப்படியா? எங்ஙனமறிந்தனையோ?

மதிசீ.—ஆருடபாகத்தாலாய்ந்துரைத்தனன்.

சுசீலர்.—சோதிட சிகாமணியே? இங்ஙனம் நின்போ போலும் கூறினர் யாவர்? யான் கண்டதே இல்லை இன்று வரையில். சோதிட ஆராய்ச்சியுடையாரும் விளக்கொணுதததேயாகும். மதிசீல! மதிசீலனே யாயினை! நீ சொல்லிய ஆருடமல்லவா ஆருடம்! இதன் பெருமை என்னென்றெடுத்துரைப்பேன்? ஆயின் சுசீலையும் அறிந்து கொண்டனளோ இவ் விஷயத்தை? சொல்வாயாக.

மதிசீ.—தினகரன் அஸ்தமித்தபின் சோதிட ஆராய்ச்சி செய்தலை விதிக்கு விரோதமென்றேவிலக்கியிருக்கின்றனர் விழுமியோர் ஆயினுந் தமக்காகக் கணிதஞ் செய்து செப்புவல். இன்னுஞ் சந்தேகம் நீங்கிலதா?

சுசீலர்.—சற்று நீங்கப்பெற்றேன்.

மதிசீ.—முற்றும் நீங்கல் வேண்டுமோ?

சுசீலர்.—ஆம். ஆசைக்களவுளதா? ஆசை வெட்கமறியா தன்றோ? என்பால் அன்னவள் அன்புற்று வருந்து கின்ற தன்மையோ? என்னையே மணம்புரியக் காத லுற்றிருக்கின்றனளோ?

மதிசீ.—[கணிதஞ் செய்து] பாரேநீ கடகத்தில் மதியு மாட்சி
பகர்தனுவில் சேயோனும் நட்பினூர்ந்து
கூரான புதனெட்டில் குருவு மாறில்
குலவுகின்ற ரவிமூன்றில் அரவம் ரெண்டில்
வீரான நவமதிலே சுங்கனின்று
வெறுப்பிலாச் சத்தமத்தோ னிலாபமேற
தாரான புஜண்டருமே கணிதநூலில்
தான்புகன்ற ராருடத்தின் பெருமையீதே.

சுசீலர்.—உதயம் சிம்மலக்கினமோ?

மதிசீ.—ஆம். சிம்மலக்கினமே. ஆரூடாதிபதியாகிய சுக் கிரன் ஒன்பதாம் வீட்டில் நின்றும் காமாதிபன், போகாதிபன், யோகாதிபன் என்னுமாதிபத்தியங்க ளெல்லாம் இச்சுக்கிரனுக்கு நேர்ந்து சஷ்டமத்தான மேறிய குருவானவர் பனிரெண்டை நோக்கிக் குடும்ப திருஷ்டியுற்று நின்றமையாலும் போகாதிபனுகிய சுக்கிரன் லாபத்தில் நின்ற சுகிர்தத்தாலும் தமக்கே சுசீலையார் மாலைசூட்டுவர்.

சுசீலர்.—ஆயின் நித்திரைக்கேகலாமோ?

மதிசீ.—ஆம்.

(தத்தம் சயன அறைக்குப்போகின்றனர்.)

களம் 2

இடம்.—சிங்காரமாளிகை.

காலம்.—இரவு.

பாத்திரம்.—சுசிலர்.

[சுசிலர் நித்திரையின்றி சுசீலை பாலுள்ள காதலால் அன்னவளைக்காணுமாறு வருத்துகின்ற நெஞ்சத்தை நோக்கி]

சுசீலர்.—ஆ! நெஞ்சே! நின்வன்மையே வன்மை! ஈதோ நின் தன்மை? கெட்டேன் என் வசம்! பட்டேன் உன் வசம்! மதியழித்தலில் வல்லையோ? மதிவிளக்குஞ் சக்தியுடையாயல்லையோ? எத்தகைய கல்வியுடை யாரையு மித்தகைய துன்பத்திற்கே யாளாக்கு வையோ? மடநெஞ்சே! மட மாதர் தமைநாடா மாத வரையு மால்கொண்டுழலச்செய்வாயென்னில் தைய லார் மையலிலே தாழ்ந்து விழக்கடவேமாய என் போல்வாரை யாது தான் செய்யாய்! சிற்றறிவினரா யமக்களைச் சிரழிக்குஞ் சமர்த்தனீயே என்றறிந்த னன். யான் மதியற்ற மன்னனுயினனே! எனது அறிவை மறைத்துக்கொண்டனையோ? நீயே மறைத் துக்கொண்டனையோ? அல்லது உனது சொரூபத் தைக்கண் டஞ்சி மறைந்து விட்டதோ? இன்றேல் நின்மயமாக்கி விட்டனையோ "இழுதை நெஞ்சம் இதென்படுகின்றதே" என்றுரே பெரியோர். நான் படும்பாடு சற்றல்லவே. நீ அறியாய் கொல்லோ? நின்னல் விளைந்ததை நீயறியாயா? எவர்பால் எடுத் துரைக்கேன்! மூண்டெரியு மனலிட்ட மெழுகாகி உள்ளம் பதைத்துருகச் செய்கின்ற மூடமனனே!

மானிடர்கள் தாம் அடைந்த சொல்லுதற்கரிய இன்பம் இத்தகையதென் றெடுத்துரைப்பினு முரைக்கலாகும். நீ விளைத்த பொறுத்தற்கரிய இத்துன்பத்தின் அளவை யெடுத்துரைக்க எவராலாகும்? சீச்சீ! இதுவரையில் ஒருநாளும் அனுபவித்தறியாத கொடுமை! அம்மம்ம! கொடிது! கொடிது! இன்னும் ஏதேது செய்வையோ! என்ன கற்றுமென்? கல்லாதவனே யான். மாயையா மதக்களிறே! உன்னுடைய மத்தகத்தைக் குத்தி மதத்தையடக்கி வீரத்தை ஒடுக்கக் கூடிய அங்குசம் எங்குள்ளதோ? எவர்பாலுள்ளதோ அறியேன். செல்வத்தால் பெறக் கூடியதா? அல்லவே. உன்னோடு போர் புரிந்து உன்னை வெற்றிகொண்டவரே அதிதீர ஞானவீரர். அவர்களே வீரக்கழ லணியத்தக்க வெற்றியாளர். யான் கடல்போன்ற கணக்கற்ற பற்பல சேனைகளையுந் தக்க சேனாதிபதிகளையும் வைத்திருந்து மென்ன பயன் உன்போன்ற பகைவனை ஜெயிக்காதபோது. அரசர்கட்குரிய வித்தைகள் எவ்வளவு கற்றுமென் உன்னுடைய கோட்டையை முற்றுகை போடும் வித்தையைக் கல்லாத விடத்து? உன்னுடன் போர் செய்யுந் திறனுடையானே போர்செய்யத்தக்கவன். உன்னுடைய கோட்டை மீது நாட்டுகின்ற வெண்கொடியன்றோ வெற்றிக்கொடியாகும். மற்றய செங்கொடிகளும் கருங்கொடிகளுப் எவ்வித நிறமுள்ள கொடிகளும் கொடிகளாமா? உன்னைத் தனக்கிரையாக்கு மாயுதமே தேவேந்திரனிடத்துள்ள வச்சிராயுதத்திலுஞ் சிறந்ததாகும். அத்தகைய ஞான

வாள் கொண்டன்றோ நின்னோடு யுத்தஞ்செய்தல் வேண்டும்? அஃதென்பா லின்மைகண்டே இன்னணம் துன்புறுத்துகின்றனைபோலும். யாங்ஙனம் நின் திமிரம் அகற்றும் தினகரன் ஆவேன் யான்? வியக்கற்பாலதே நின் திறம். உன் பெருமை அறியாமலே மூடன் எனப் பேரிட்டழைத்தேன்போலும். குற்றமேயாகும். அழைத்தல் வேண்டும் என்னும் ஆசையோடழைத்ததல்ல! உன் கொடுமை யாற்றாமலேயன்றோ பழித்தனன்? உன்னை எனக் கடிமையாக்கியபின் இவ்வாறு சொல்லினுந் தோடமில்லை.

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாங்
        கரடிவெம் புலிவா யையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
        கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
        வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணம லுலகத்துலாவலாம்
        விண்ணவரை யேவல் கொளலாஞ்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
        சரீரத்தினும் புகுதலாஞ்
சலமேனடக்கலாங் கனன்மேலிருக்கலாந்
        தன்னிகரில் சித்தி பெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
        திறமரிது சத்தாகி யென்
சித்த மிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
        தேசோமய யானந்தமே.

என்னும் ஸ்ரீதாயுமானவர் திருவாக்கும் வற்புறுத்துமே உன்மாயமகிமையை. உன்னையடிமைகொள்ளல் அசாத்தி

யம்! அசாத்தியம்! கன்மபந்தத்தினுற் செனமித்த பின்னர் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்தொழித்தலே வேண்டும் போலும். அவ்வண்ணம் அனுபவிக்குமாறு அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எண்ணியபோதே ஆமா? எங்ஙனம் ஆம்? ஆதலின் இற்றை நித்திரை நீத்து அதை நினைந்து நினைந்து வருந்தியதால் ஆவதென்ன? கல்வியாளர்க்கழகாமா? அடா சுசீலா! நீ அறிவிலியே யாவாய்! ஆங்காலத்தெவ்விடயமும் ஆம் என்றறிந்தும் அழுங்கல் ஏனோ? கல்லாதார் செய்கையை யொத்ததாம். நீ நித்திரைக்குப் போதலே நலம். அப்போதேனும் நீத்திருப்பாயின்னினைவை [நித்திரைசெய்யமுயன்றும் கண்ணயரவொட்டாதுவருத்துகின்ற காதலை நோக்கி] சீ காதலே! கவற்சியே பெரிதுந் தந்து கண்விழிக்கச் செய்து இவ்வண்ணம் கதறச் செய்கின்றனையே! நினக்கியற்கையோ எம்போல்வார் நிலையழித்துலையிலிட்ட மெழுகென்ன உளம்பதைக்கச்செய்தல்? வேண்டாம்! சன்மானம் ஏதேனும் பெறுவையோ இவ்விதமிச்சற்குணனையலைப்பதால்? என்பயன் எய்துமோ நினக்கு அறிகிலனே! சீ! ஒழிவாயாக என்னை விடுத்து. உம். மீண்டுமா? சீ! சீ! நினக்கு புத்தி புகட்டலினும் கங்கை தங்குஞ் சடையார்ந்த கருணை வள்ளலை, நினைந்துருகலே நலம் [சிவபெருமானைத் துதிக்கின்றார்]

பதினன்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இளவேனின் மாலையாய்க் குளிர்சோலை யாய்மல
 ரிலஞ்சிபூம் பொய்கை யருகா
யேற்றசந் திரகாந்த மேடையா யதன்மே
 விலங்குமா மியவணையுமாய்

தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போற்
றழைத்திடு நிலாக்கா லமாய்
தனியிளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை
தன்னிசைப் பாட லிடமாய்
களவே கலந்தகற் புடைமடவ ரல்புடை
கலந்தநய வார்த்தை யுடனுய்க்
களிகொள வருந்தவர்கள் கண்டசுக நின்னடிக்
கழனிழற் சுகநிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேலூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே,"

உம். தெரியுமே யெனக்கு! நின்னை வெல்லல் அரிதே போலும், பார்ப்பனனே!

தன்னிலே தானாக நினைந்து
கவிழ்ந்து சுக சமாதியாகப்
பொன்னிலே பணிபோலு மாயைதரு
மனமேயுன் புரைகள் தீர்ந்தா •
யென்னிலோ யான்பிழைப்பே னெனக்கினியா
ருன் போல்வா ரில்லை யில்லை
யுன்னிலோ திருவருளுக் கொப்பாவா
யென்னுயிர்க்கோ ருறவு மாவாய்."

"உறவுடலை யெடுத்தவரிற் பிரமாதி
யேனு முனை யொழிந்து தள்ளற்
கறவுமரி தரிதன்றோ யிகபாமு
முன்னையன்றி யாவ துண்டோ
யறிதிலுன்னை யசத்தென்னல் வழக்கன்று
சத்தெனவும் வாழ்த்துவே னென்
சிறுமைகெடப் பெருமையினின் சென்மதே
யத்தினினீ செல்லல் வேண்டும்."

"தீராத வென்சனன வழக்கெல்லாந்
   தீருமிந்தச் சனனத் தோடே
யாரேனு மறிவறிய சீவன்முத்தி
   யுண்டாகு மைய வையோ
காரேனுங் கற்பகப்பூங் காவேனு
   முனக்குவமை காட்டப் போமோ
பாராதியாக வெழுமண்டலத்தி
   னின்மகிமை பகர லாமோ."

என்றூரே தவராஜ சிம்ஹமாகிய தாயுமானவரும். பெரியோர்களாய கவிராசரையுந் தவராஜரையுந் திரணமாக மதித்துழலச் செய்கின்ற உன் இயற்கைகுணம் இப்புவி ராசனை இங்ஙனம் வருத்தல் அரிதா ? வருத்தாது விடுவாயா ? அதிசயிக்கத் தகுந்ததே யாகும். ஆயினும் வேரூன்றிய விருட்சத்தைப்போல என்னை விடாது பற்றி யீர்த்து சுசீலையின் மோகவாரிதிலாழ்த்தும் வன்னெஞ்சே! இவ்வாறு என்னை இம்சிப்பதைப்பார்க்கினும் தமயந்திபால் தூதாகச்சென்ற அன்னப் பறவைபோல என தின்னுயிருக் குயிராய அவ்வன்ன நடையினள்பால் ஏகி என் காதலை யறிவித்து கருத்தை முற்றுவிப்பையாயி னீடுவாழ்வாய்! இனி எவ வேண்டுகோளை நிறைவேற்றுவாயாயின் வந்திப்பேன். உனது நன்றியை மறவாது என்றும் சிந்திப்பேன். உன்னைப்போன்ற சிறந்த தூதுவனைக்காண்டல் எளிதல்ல. இக்காரணமாக வேறொருவரைத்தேடி யனுப்புவதினும் அழையா வீட்டிற்கு நுழையாச் சம்பந்தியைப்போல் வந்த வுன்னை அவள்பால் அனுப்பலே நலம். நின்னை நிந்தித்தல் அழகல்ல உன் பெருமை யறிந்தும்! வருவதெல்லாம் நன்மைக்கே யென

வையகத்தார் கூறும் வழக்கை யுன்னிடத்தேயே கண்டேன். எனது மந்திரிபோல்வாய்! எனக்கினி யுண்டாகுஞ் சுகத்தை முன் காட்டுதற்கே வந்தனைபோலும். இப்பெருதவிசெய்ய வலியவந்த ஐயாவே! என்ன பிரதியுபகாரஞ் செய்வேனோ? உபகாரமா! வேண்டாதவனல்லவா எதையும்! ஆம். எவ்வித உதவியையும் விரும்பாது தோன்றிய நீயே தக்க தூதுவன். செய்வினையறிந்து பிறரறியவொட்டாது என் குறையை உடனே நிறைவேற்றுஞ் சூழ்ச்சி புரிவாயாக! இன்னுந் தாமதியாதே! வாயுவேகத்தினும் அதிவேகமாகச் செல்லத்தக்க வல்லவ நீயே. அம்மடந்தை மனக்குறையை எளிதில் அறிந்துகொள்ளக் கூடியவனும் நீயே. அப்பேதை என்பாடு படுகின்றனளோ? விரைவிற் செல்வாயாக! செப்பியவாறே செய்வாயாக. இளங்கோவை மறவாள் அவ்விளங்கொடியாள். ஒருக்கால் என்மீது காதல் வையாதவளாயிருந்தால் எனதுருவத்தையும் எனது நாமத்தையு மறவாவண்ணஞ் செய்யவேண்டியனவற்றைச் செய்க. ஆயினும் உனக்குள்ள சக்தியை அவள்பால் முழுதுங் காட்டிவிடாதே. அப்பிரியை மணிபொறுக்காள். சகித்தற்கு அஞ்சி உயிர் நீத்துவிடுவளாயின் என் செய்வேன்? என் செய்வதோ? எனது உடலும் உயிரைத் துறக்கும் என்பது திண்ணம்.

[எதிரில் வைத்துள்ள சுசீலையின் உருவம் அமைந்த படத்தைப் பார்த்து.]

மணிகொண்ட திரைமகர வாரிபுடை
சூழ்புவிமா மந்தை யந்சப்
பணிகொண்ட மென்சாயற் பாவையுனைப்
பாரினிடைப் படைந்தான்யாவன்

அணிகொண்ட காமநா லாயப்பவர்க
ளறிந்துரைக்க வறிவார் கொல்லோ
அணிகொண்ட வரிவையரு மவாவுறுன
தழகாழி யார்ந்தேன் அந்தோ.

கண்மணி! நன்று. நன்று. நாயகமே! நன்றே முற்றியது! எண்ணிய வண்ணமொன்று எய்திய வண்ணமொன்றோ ஏந்திழையே! முடவன் கொம்புத்தேனுக்காசைப்பட்ட கதைபோலுமீது. வஞ்சித்தனையோ வஞ்சிக்கொடியே! வஞ்சிப்பையோ! நெஞ்சத்தைப் பிளக்கின்றதே நின்காதலாய அம்பு அஞ்சுகமே! நேர்ந்ததை யெண்ணிடின் பகீரென்கின்றதே. நமது திருமணவோலையைக் காணல் என்னுளோ வென்றவாவியிருந்த அகம் மறுமணலிகிதத்தைக் காணக்கருதுமா? கருதாவிடினும் நீ காணவுமாயதோ? காதற்பொக்கிஷமே! நின்காதலாலழிந்தேன் அக்காதல் ஒழியவுங்காண்பேனோ? கருத்தழிந்தேன் உன் கருத்தறியேன். கவலை நெஞ்சினன் அக்கவலைக் கடலை நீந்துவனோ? நின் துணையாலன்றோ நீந்திக்கரையேறல் வேண்டும்? மனமுடைந்தலமரலைக் கண்டிலையே மடந்தை நல்லாய்! நின்காதலை யெவ்வாறு நீத்திருப்பேன் காதற்கிளியே! நின்னை எவ்வண்ண மறப்பேன்! மறப்பறியேன் மாதரசே! நீ பிறரை மாலைசூட்டக் காணுமோ என் கண்கள்? கேட்குமோ செவிகள்? பொறுக்குமோ மனமும் பூவையே! ஆருத்துயரளித்தனையே ஆரணங்கே! நின்னாற்பெற்ற பயனீதோ? ஆற்றில் கரைத்த புளியாக்கினையே என் அன்பை யெல்லாம்! கட்டாணி முத்தமே! பெற்றனையோ நிருபம். கண்டனையோ விஷயம். கொண்டனையோ துயரம். சித்தம் கலங்கிற்றே சேயிழையே! உயி

ாற்ற உடலாயினையோ? உணவொழித்தனையோ? உறக்கமு மொழித்தனையோ ? உற்ற உறவை நீத்தும் உயிர் தரிப் பையோ ? நீயோ தரிப்பாய்? தரியாய்! தரியாய்! வீரகாங் தனை மருகனுக்க விரும்பினனோ உனது பிதா? தக்கார் தகவிலார் என்று பகுத்தறியுமறிவில்லானுயினனே அப் பாதகன். அவனும் சிற்றரசனே! அவனறிவும் சிற்றறிவே! கன்னியரசே! அவனது கபடநாடகம் அவகதையே! அவ னையும் அவனுல் கொள்ளப்பட்ட அற்ப மாப்பிள்ளையை யும் அவமதிப்பதே தகுதி! எனது தாய் தந்தையர் உன் பிதாவின் செய்கையை யின்னும் அறியாதிருக்கின்றூர்கள் போலும்! அறியுமிடத்து விஜயப்பிரதாபசிலர் யாதுசொ ல்வரோ! அன்னை ஏதேது நினைந்து துக்கிப்பளோ! இம் மணம் நடைபெறப் பார்ப்பர்களா? எவ்வித முடிவுறுமோ இவ்விவாகம். நடவாது நடவாதென்றனரே மதிசிலர்! உண்மைதானே ? உண்மையாயிருக்கலாம். மதனனுக்கு நடக்குமாயின் ? நம்மாலாவதென்ன ? கருணைத் தெய் வமே! எல்லாமுன்செயல்! இம்மனத்திற்கென்ன மாயா சக்தி கொடுத்திருக்கின்றுயோ ?

சொல்லானதிற்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டிலிட் டாட்டி யாட்டித்
தொடையினைக் கிள்ளல்போற் சங்கற்ப மொன்றிற்
ஞெடுக்குந் தொடுத்த ழிக்கும்

பொல்லாத வாதனை யெனுஞ்சப்த பூமியிடைப்
போந்துதலை சுற்றி யாடும்
புருஷனி லடங்காத பூவை போற்றுனே
புறம்போந்து சஞ்சரிக்குஞ்

கல்லோடிரும்புக்கு மிகவன்மை காட்டிடும்
　　காணாது கேட்ட வெல்லாங்
கண்டதாய்க் காட்டியே யணுவாய்ச் சுருக்கிடுங்
　　கபடநா டகசா லமோ
எல்லாமும் வலதிந்த மனமாயை யேழையாம்
　　எம்மா லடக்க வசமோ
இகபர மிரண்டினிலு முயிருனுக் குயிராகி
　　யெங்குநிறை கின்ற பொருளே.

என்ற அறிஞர்வாக்கை யறிந்து மேனோ பலவாறு கருதியும் சந்தேகித்தும் நித்திரைநீத்தும் புலம்புகின்றேன். புலம்பவே செய்கின்றதே புந்தி! இப்போது பாடிய பாட்டை இதற்குள் மறந்துவிட்டேனோ? நான் யாவும் நின்செயலென் றுணர்ந்தனன். அணுவுமசையாதே அருட்கடலே! நீயசைவியாவிடத்து. முற்றறிவு முற்றுணர்வுமுடைய முழுமுதற்பெரும! நீயே யறிவாய். சிற்றறிவுஞ் சின்னாளும் பல்பிணியுமுடைய இப்பாவியேன் யாதறிவேன். ஆ! சுசீலா! கண்ணே! யாது செய்யவல்லன்.

[மஞ்சத்தின்மீது அயர்ந்திருக்கின்றனர்.]

களம் 3

இடம்—சித்திரமாளிகையைச் சார்ந்த உய்யானவத்துள்ள பளிங்குமேடை.

காலம்—சந்திரோதயம்.

பாத்திரங்கள்—சுசீலை, வனஜலோசனை, மரகதா, மதிசிலர்.

சுசீலை.—[பளிங்கு மேடைமேலுட்கார்ந்துகொண்டு] எனதுயிர்ப்பாங்கி உரைத்தவை உண்மை யென்றே

என்னுகிறேன். இவ்வேளையில் யாரோ பாடினர். அக்கீதத்தைக் கேட்க மிக இனிமையாயிருந்தது. ஆடவர் குரல்போல் தோற்றுகின்றது! நீலலோசனை சொல்லியதற்கேற்றவாறு சுசீலரே பாடியிருத்தல்வேண்டும்! அல்லது வேறு யாவரோ? அன்னவர் நண்பரோ? பதினைந்து நிமிடங்களுக்கு முன் கேட்ட அரவம் இப்போது காணேமே! எதைக்குறித்துப் பாடியதாயிருத்தல் வேண்டும்? எங்கிருந்து பாடினர்? சித்தாந்த நிலயத்தாயின் எத்தகைய புருடர் குரலாயிருப்பினும் கேட்டல் கஷ்டமாயிருக்குமே! சித்தாந்த நிலயத்தில் தான் மதிசிலருடன் பேசக்கண்டதாய்ச் சொல்லினள். அவ்வாறு இருந்திருக்கலாம்! அவள் பொய் சொல்லாள்! ஆயினும் நாம் கேட்ட பாசுரம் அவ்விடத்தில் பாடப்பட்டதா? அல்ல. அவ்வோசை இடது புறமாகவே கேட்கப்பட்டது ஆதலால். ஒரு வேளை எதிரொலியோ? எதிரொலியு மல்ல. இப்போதே தோன்றிற்று. அருகிலுள்ள சிங்கார மாளிகையில்தான் யாவரோபாடினர். இவ்விடத்தில் இளவாசரையன்றி சொற்சுவை, பொருட்சுவை யமையப்பாடுவார் யாவர். "பாவையுனைப் பாரினிடைப் படைத்தான் யாவன்" என்னுமொரு அடியையே கேட்டனன். அருந்தமிழுணர்ச்சி யுடையரே அவ்வாறு கூறிஇருத்தல் வேண்டும். பதங்களைப் பொருத்தமாக அமைத்தும் பாடியிருக்கின்றனர். ஒரு நிமித்த மில்லாமல் பாவையென்று ஏன் பாடல்வேண்டும்? சென்றவளையுங் காணேமே இதுவரையில். எல்லாமறிந்துவருவள்போலும். அன்றி

யும் இங்குவந்ததுமுதல் ஓர்வித ஆனந்தமே நிகழ்கின்றது எனது மனதின்கண். மனோதுக்கம் சிறிது அகன்றதுபோலும். இனி முழுதும் நீங்கிவிடும் போல் காணப்படுகிறது. அம்மஞ்சமும் அம்மாளிகையும் துன்பத்திற்கே இடமாயிருந்தன. இவ்வுய்யானவனமோ என்னில் காணும்போதும் நினைக்கும் போதும் இன்பமே தருகின்றது. முன்னமே இங்குற்று இவ் வின்பத்தை அனுபவியாமல் அங்கு அத்துன்பத்திற்கு வீணே ஆளாயினது என் அறியாமையே! என்ன இது? இவ்வாறு பிதற்றுகின்றேனே! அங்கும் எனது ஆசைநாயகரைத்தானே நினைந்து நினைந்து வருந்தினேன். அவரைப்பற்றி எண்ணியவை துன்பமாகுமா? ஆகாது. ஆகாது. அச்சமயத்தில் மாத்திரம் எனக்குத் துன்பமாய்த் தோற்றியதுபோலும். துன்பத்தை விளைவிப்பது போல் தோற்றியதேயன்றி துன்பமே என்னலாமா? அவ்வாறு தோன்றுதற்கும் இன்பமே காரணமாகும். அவ்வித இன்பத்தை உதிக்கச்செய்தவர் அக்கட்டழகரேயன்றோ? அக்கட்டழகர் யாவரோ? என்னுயிரையிதுவரையில் உயிராயிருக்கச் செய்கின்ற உத்தமரல்லவா? அவர் பொருட்டன்றோ இன்னும் ஜீவித்திருக்கிறேன். இல்லாவிடில் என்கதி என்னவாயிருக்குமோ? என்பிதா எழுதிய கடிதத்தைக் கண்டபோதே இறந்திருப்பேனே! மண்மயமாயிருப்பேனே இப்போது. அவ்வுயிரின்னு மிருத்தலாலன்றோ இவ்வுடல் இங்கிருக்கவும் நேர்ந்தது. இவ்வுடலின் கிருத்தலாலல்லவா இது இன்பம் இது

துன்பம் எனப் பகுத்தறியும் அறிவும் அறியுஞ் சக்தியும் உண்டாயின. அத்தகைய பெருமை வாய்ந்த எனதுடலுக்கு முயிருக்குமுரிய வேந்தை எண்ணி எண்ணிக் கண்ணீர்வடித்தது அவ்வின்ப வுருவினனைக்கண்டு களிப்படைதற்கும் அவ்வின் பத்தை யனுபவித்தற்குமே யன்றோ? அவ்வின்ப அனுபவத்தை இன்னும் அடைந்திலனே அரசர் ஏறே! யான் இங்கிருந்தும் இல்லாதவளாயிருக்கின் றேனே நீரில்லாமையால். இங்ஙனம் என்னை நின் வசமாக்கிய உனது ஆற்றல்மெச்சத் தகுந்ததே மேலோனே! ஆயினும் இவ்விளங்காற்றால் இங் கடைந்த சுகத்தை என் மாளிகையில் அடைந்தே னில்லை. அங்கோ? என்தேகம் வெம்மையா யிருந் தது. இங்கோ? குளிர்ச்சியைப் பெற்றதுபோலும். (தேகத்தைத் தன்கரத்தால் தொட்டுப்பார்த்து) ஆம். ஈதோர் நற்குறியேபோலும்.

[வனஜலோசனை படுக்கையிலிருந் தெழுந்து சுசீலையையும் நீல லோசனையையும் அம்மாளிகையில் எங்குங் காணாளாய் மாகதா என்னு மற்றொரு பாங்கி யோடு உய்யான வனத்திற்கு வரு கின்றனள்.]

மரக.—இங்கேண்டி என்னை யழைத்துவந்தாய்.

வனஜ.—[அங்குமிங்குஞ் சுற்றித் தேடுகிறாள்]

மரக.—கேட்பதற்குப் பதில்சொல்லாமல் சுற்றிசுற்றித் திரிகின்றாயே. ஏதுக்கடி? பேய் கீய் பிடித்துக் கொண்டதோ?

வனஜ.—என்னடி மரம்போல் நின்றுகொண்டிருக்கிருயே? தேடிப்பாரடி?

மரக.—யாரையடி தேடவந்தா யிந்த ராத்திரியில்? உம். இந்தவேலை கூடவா? நீ கெட்டிக்காரிதாண்டி

வனஜ.—அந்தப்பக்கத்தில் பாரடி!

மரக.—என்னடி இது வயிற்றெரிச்சலா யிருக்கிறதே! தேடுதேடு என்றுல் யாரைக்கண்டு தேடச் சொல்கிருயடி. அந்தப் பக்கமோ எந்தப்பக்கமோ?

சுசீலை.—[மெல்லியகுரலால்] என்ன அரவமிது? ஐயையோ! இங்கும் வந்துவிட்டாளே! வெண்ணெ திரண்டு வரும்போது குடம் வுடைந்துபோய்விட்ட கதை யாயிற்றே?

வனஜ.—இவ்வளவு புத்தியில்லையா உனக்கு? கண் அவிந்தா போச்சு.

மரக.—இனி எனக்குக் கோபம் வரும். சும்மாயிரடி போதும்! தேடு தேடு என்றுல் என்னடி அர்த்தம்?

மரக.—யாரை? சொன்னுலல்லவா தெரியும்.

வனஜ.—ஏண்டி. இப்படி கூவித்தொலைக்கிருய். சுசீலையைத்தாண்டி.

மரக.—சுசீலையம்மாளையா? இங்கே ஏன் தேடுகிருய்? அந்தம்மாள் நித்திரை செய்துகொண்டிருப்பார்கள். பார்க்கவில்லையோ உள்ளே.

வனஜ.—எல்லாம் பார்த்தாச்சுதடி. பார்த்தாச்சு.

மரக.—சீ! நான்போய்ப்பார்த்துவருகிறேன். (மாளிகைக்குள் போய்ப் பார்க்கிருள்.)

வனஜ.—அடி நீலா! எங்கடி ஒழிந்துபோய்விட்டாய். நீ ஒழிந்தாலும் அவசியமில்லை, நீ தனியாய்ப் போகாது

தலைவியையும் ஏனோ அழைத்துப்போயினும். இருவரும் எங்கு சென்றீர்களோ ? இப்படி என்னுளும் பிரிந்துபோகமாட்டீர்களே. இப்படி என்னைப் பிரிவதற்குத்தான் முன்னமே போகச்சொன்னீர்களோ ? அதிசயமாயிருக்கிறதே. இப்படியும் ஒருவார்த்தை சொல்லாமல் நான் நித்திரையில் இருக்கும் சமயம் நோக்கிப் பறந்துவிட்டார்களே! என்னிடம் அவர்கள் கருத்தை அறிவிக்கக் கூடாதென்றும் எண்ணத்தோடு போய்விட்டனரோ அல்லது வேறு யாது கருதிபிரிந்தனரோ ? அப்படி போவதற்கும் காரணம் ஒன்றும் தோன்றவில்லையே. எனக்குத்தோன்ருவிடின், ஏதேனும் காரியமாய்த்தான் போயிருப்பார்கள். யார்தான் இன்னேரத்தில் அனுவசியமாய்ப் போவார்கள் ? அவர்கள் இருவரும் அறிந்தவிஷயமாய்த்தான் இருக்கவேண்டும். இருவரும் ஏகோபித்துச் சென்றதே போதுமான சாக்ஷி, அவ்விரகசியத்தை நான் அறியக்கூடாதா ? இப்படியும் செய்வார்களா? இவ்வித கபட எண்ணமா ? சுசீலையார்தான் என்னை வேண்டாமென்று தடுத்தனரோ ? நான் ஒன்றும் அறிகிலேனே! மாளிகையை விட்டு வெளியில் எப்போதும் போகமாட்டார்களே! பொன்னீத்த தாமரையைப்போலன்றே இருக்கிறது அம்மாளிகையு மஞ்சமமும்?

[மதிசிலர் தான் செப்பியதுபோல் சுசீலையார் நந்தவனத்தில் இருக்கின்றனரோ எனப் பார்க்கும்பொருட்டு வருகின்றனர்.]

மதிசீ.—இங்கு நீ தனியே என்ன செய்கின்ருய் ?

வனஜ.—[மௌனம்.]

மதிசீ.—விடைகொடாமல் ஊமைபோல் என் விழிக்கின் ருய் ?

வனஜ.—விடையளிக்க அவசியமிருந்தால் முன்னமே தக்கபடி பதில் உரைத்திருப்பேன். வந்தவேலை யைப் பார்த்துக்கொண்டு போம்.

மதிசீ.—அவசியமில்லாமலும் கேட்பேனு ?

வனஜ.—அப்படி ஒன்றும் அவசியம் இல்லை. போம். இங்கு ஆண்பிள்ளைகள் வரக்கூடாதென்றுமக்குத் தெரியாதா ? நான் ஏன் இங்கு தனியேயிருக்கிறே னென்றும் புரோகிதர் தெரிந்துக்கொள்ளக்கூடாதா ?

மதிசீ.—எந்த புரோகிதர்.

வனஜ.—இந்தவேளையில் நீரே அந்த பெரிய பட்டத்திற் குரியவராயிருக்கின்றீர்.

மதிசீ.—ஏது, நீ மகா சாமர்த்திபோலும்.

வனஜ.—முன்னுமில்லை, பின்னுமில்லை, நானு மதிசீலரோ ?

மதிசீ.—முழங்காலுக்கு மொட்டைத்தலைக்கு முடிபோடு கிருயே.

வனஜ.—முடிக்கவுமில்லை, அவிழ்க்கவுமில்லை. அந்த வித் தையில் தேர்ந்தவர் நீவிரேயாகும்.

மதிசீ.—நீ ஒன்றும் அறியாத பாலகியோ ?

வனஜ.—நீர் யாதுந் தெரியாத பாலகராயிருந்தாலல்லவா நான் பாலகியாயிருப்பேன்.

மதிசீ.—அவசியமாக சில விஷயங்களைக்கேட்கலாமென்று வந்தால் அனுவசியகமாக எதிர்த்துப்பேசுவதும் இவ்வாறு பதிலளிப்பதும் ஏற்றவையாமா ?

வனஜ.—தாம் வினவுவதெல்லாம் ஏற்றவையோ ?

மதிசி.—ஏற்றவையே.

வனஜ.—தமது கடாக்கள் தமக்கு ஏற்றவையாயின் எனது விடைகள் எனக்கு ஏற்றவையே !

மதிசீ.—ஏறுமாறுகப் பேசுகின்றுயே ?

வனஜ.—நானும் நீர் மதிமாறுட்டங் கொண்டிருக்கின்றீரெனத்தெரிந்து கொண்டேன் !

மர.—என்னடி ? இங்கு வீண்காலம் போக்கிக்கொண்டிருக்கின்றுய் ! ஏனடி வீண்வார்த்தை அவருடன் ? அவர்தான் இங்கே பேச்சில் மிகுந்தவரென்று பேரெடுத்தவராயிற்றே. தெரியாமல் அவரிடத்தில் அகப்பட்டுக் கொண்டாயோ ?

வனஜ.—சரியாய்ச் சொன்னுயடி. என்னேரமாக என் வாய்ச்சொல்லைப் பிடுங்கி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளுகிறுரடி. இவ்வளவு கெட்டிக்காரரா இவர் ?நல்லகாலந்தான் போலிருக்கிறது நீ இந்த சமயத்தில் இங்கேவந்தது. அதற்குஞ் சமயம் இல்லையா. வீடுபற்றிக்கொண்டு வேகிறபோது சுருட்டுக்கு நெருப்பு கேட்க வந்தவருக்குத் தமையனுரோ இவர். திடீரென யாவராகிலும் பார்த்தால் என்ன சொல்வார்.

மர.—இன்றிரவெல்லாம் பேசுவாரே. வாயைத்திறந்தால் ஈ நுழையாதே ! நீ அறியாயா ?

வனஜ.—இன்றிரவெல்லாம் பேசுவாரென்றுல் நாளைமுதல் பேசாமல் ஊமையாய் விடுவாரோ ? அல்லாமலும் ஈ மாத்திரம் நுழையாதென்றுல் யானை முதல் எறும்பு யீருக உள்ள மற்றவைகளெல்லாம் நுழை

யுமோ இவர் வாயில்? ஐயோ பாபம்! இந்த மனிதர் சிறியவராயிருக்கின்றரே! யானை முதலிய பெரிய ஜந்துக்கள் இவர்வாயில் நுழையுமானல் என்ன கதியாவாரடி? பிழைப்பாரா? இவர்பேசாம லிருத்தலே நலமாகும்.

மர.—ஈ நுழையாதென்றல் அவ்வளவு வேகமாகப் பேசக் கற்றவர் என்று பொருள் கொள்ளலே உசிதம்.

வனஜ.—பேசக்கற்றவரா? அதிலும் வேகமாகப் பேசக் கற்றவரா? பெண்பாலர்களிடம் அதிகவேகமாகப் பேசக் கற்றவரோ? கபடமாகப் பேசக்கற்றவரா? நல்லெண் ணத்தோடு பேசக்கற்றவரா? யாதொரு சம்பந்த மில்லாமலிருப்பினும் வலியவந்து பேசக்கற்றவரா? ஆந்தைபோல் விழிக்கின்றயே எனக்கேட்கக்கற்ற வரா? பெண்பிள்ளைகள் எங்கிருப்பினும் அங்கங்கு மோடி இங்குதனியே என்னசெய்கின்றயெனக் கேட் கக் கற்றவரா? தனியேயிருப்பார்க்கு அர்த்தராத்தி ரியில் அருந்துணையாயிருக்கக் கற்றவரா? நிலாக் காலத்தில் நீயும் நானும் எதிருமுழியும் என்று நிற்கக்கற்றவரா? என்னகற்றவரடி? எனக்குச் சந் தேகமாயிருக்கிறதே!

மர.—சந்தேகமா? பலவித்தைகளையுஞ் சந்தேகமறக் கற்றவரென்பதை நீயறியக்கூடாதவளாயினும் அவர் பேரைக் கொண்டாகிலும் அவர் கல்வியின் பெரு மையை யறியுஞ் சக்தியுமில்லாதவளாயிருப்பதை நினைக்க எனக்கு வெட்கமாகவேயிருக்கிறது. அல்லா மலும் நீ இதுவரையிலும் சொன்னவைகளைப் பற்றி ஆலோசிக்கும்போது அவ்விதமான விகட வினை

விடை உங்கள் இருவருக்கும் நடந்திருக்கவேண்டு மென்றே தோற்றுகிறது. ஏன்டி வனஜா! என்ன சமாச்சாரம்?

வனஜ.—தோற்றுதா? தோற்றும். தோற்றும். அவர் எதிரில் நின்று பேசும்போது தோற்றுதன வெல்லாம் தோற்றும். இன்னும் அவரைப் பார்க்கப் பார்க்க என்னென்ன தோற்றுமோ தெரியவில்லை.

மரக.—போடி, பட்டுக்கோட்டைக்கு வழியெது வென்றால் கொட்டைப்பாக்கு துட்டுக்கெட்டென்கிறாயே! இவ் விதமாகப் பசப்பக்கற்றுக்கொண்ட உன் சமர்த்தே சமர்த்தடி! நான்தானே நித்திரையைவிட்டு வேலைக் காரிக்குப் பிள்ளைமேல் சாக்கென்னும் பழமொழி யைப்போலும் யாரையோ தேடுவதுபோலும் இங்கு வந்து ஒரு ஆண்பிள்ளையிடம் தனியாக வாயாடிக் கொண்டிருந்தேன்? இப்போதல்லவா அறிந்தேன் உன் வித்தையை!

வனஜ.—நீ என்னடி செய்வாய்? இந்த சமயமே இவ்விதம் உன்னைப் பேசச்சொல்லியதுபோலும். இதுவரை யில் இவ்வாறு பேசியவளல்ல. என்மனமே எனக்கு சாட்சியாகும். தன்னுடன் சாசமாடத் தக்கவ ரில்லையெனத் தவித்திருந்தார்க்கு நீ தக்க துணையே யாயினையெனச் சந்தோஷிக்க வேண்டியதாயினுஞ் சமயம் நோக்காமற் சாசமாடுதல் சஞ்சலத்தையே விளைவிக்கின்றது. இன்னுங் காணோமே அம்மையை.

மரக.—விளையாடியதைக்குறித்து விசனிக்கலாமா? மாறாக நினைந்து மனம்புழுங்காதே! நீ மதிசிலரைப் பரிக சித்ததும் அழகல்ல. நான் விளையாடியதும் அழ

கல்ல. நீ வருந்தியதுபோல நடிப்பதும் அழகல்ல. இவ்வுய்யானவனத்திற்கு அவர் இராக்காலத்தில் வந்ததும் அழகல்ல. உன்னேடு வலியப்பேசி ஆந்தைபோல் விழிக்கின்ருயே யெனக் கேட்டது மழகல்ல. ஆடவர் கேட்பினும் அஞ்சாமல் நீ எதிர்த்துரைத்தது மழகல்ல. கடைசியாக நாம் காலத்தை யிங்கு விருதாவாகப் போக்குவதும் அழகல்ல. ஆதலால் நாம் போய் நீலாளைத் தேடிப் பார்க்கலாம் வா!

வன.—நாம் ஏன்போய்த் தேடவேண்டும். போனவர்க ளுக்குவர வழி தெரியாதா? எல்லோருக்கும் வழி காட்டுவாளே அவள்.

மர.—ஆம்! நீ சொல்வதுஞ் சரிதான்! தூக்கத்திற்குக் கேடாக ஒரு பிரயோசனமுமில்லாமல் நாம் என் வாயாடிக்கொண்டிருக்கவேண்டும். அவர்கள் எங்கு போயினர்களோ நமக்கென் தெரியும்? வாணிவிலா சத்தில் ஒருவேளை வாசித்துக்கொண்டிருப்பார்கள். பார்க்கலாம் வா. (போகின்றனர்)

சுசீலை.—(தனிமொழி) சென்றவள் இன்னும் வாராதகாரணம் தெரியவில்லையே! அங்கு யாது செய்துகொண்டிருக் கின்றனளோ? கண்டனரோ காவலரை? அல்லது கா ணுஞ் சமயத்தை எதிர்பார்த்திருக்கின்றனளோ! வீண்போது போக்காள் அங்கு! ஏதோ காரணமிருக் கும்! ஆ! என்ன இன்பமாயிருக்கிறது! அன்பார்ந்த இன்பே! இதுகாறும் இவ்விளங்கொடியாளை விடுத்து எங்கு ஏகினையோ? இப்போதுதான் என்மீது இரக்க முற்ருய்போலும்! இவ்வரிய இன்பத்தைச் சுகித்

தற்குரியாள் யாரோ! யானோ? யானுரைத்தது சரி யோ? அல்ல! தவறேயாம். என் அவ்வாறுரைத்த னன்? யான் ஒருத்தியே சுகிப்பதால் யாதுபயன்? என்ன அது? ஓ! சந்திர னுதயமாகின்றான்போலும்! இத்திங்களைப் பார்க்குந்தோறும் என்ன ஆநந்தம் நிகழ்கிறது! எனதாருயிர் நாயகர் அனுபவியாத இவ் வின்பத்தை யான் அனுபவித்தும் அனுபவியாத வளே! இச்சந்திரோதய காலத்தில் மந்த மாருதம் வீசும் நேரத்தில் மனோரம்மியமான நந்தவனத்தில் தனியேகிடந்து தவிக்கின்றேனே! ஆறுதலை செய் யுந் துணைத்தோழியும் இன்னும் வந்திலளே! இருப் பின்தேற்றி உற்சாக மூட்டுவளே! அவளும் என தன்புருவு மில்லாவிடினும் இச்சந்திரனும இத்தென் றலும் நற்றுணையாக வெனைக் காத்திருத்தலும் தெய் வத்தின் செயல்போலும். கலை நிறைந்த சந்திரா! எனது காதலன் வருகின்ற காலமிதுதான். அஞ்சேல் எனக் கூறற்கே வந்தனையோ? அல்ல! அம்மான் அனுப்பிய தூதனென்றே தெரிந்து கொண்டேன். மனவிருளாய துன்பத்தைப் போக்க வந்த மதிவிளக் கென்றல்லவா உன்னை நம்பியிருந்தேன்! மதிவிலக் கவா வந்தாய்? வேண்டாம்! அப்பா! பெண்பாவ மடா! நீ குளிர்ச்சி யுடையவ னெனப்பலருங்கூறக் கேட்டிருக்கின்றேன். அத்தகையதன்மை வாய்ந்தவ னல்லவோ? என்னை உருக்குகின்றாயே! சந்திரகாந்தக் கற்களும் நினது கிரணங்களால் உருகிவிடுமென்றால் என் போல்வார் உயிர் உருகல் ஓர் வியப்பா? நாய கன் தோள் சேர்ந்தார்களது உள்ளங்குளிர்ச்சிபெறச்

செய்வதாய நற்குணமும் அல்லாதாரை அக்கினியைப்போ லுருக்குந் தீயகுணமும் பொருந்தி யிருக்கின்றனவே நின்பால். மணந்தார்க்குச் செய்வது போல்தணந்தார்க்கும் ஒரே தன்மையாய்ச் செய்யாமை உன்குற்றமல்ல! நீ பழகுதற்கிடமான உன்னுடன் வந்த அமிழ்தமும் விடமுமாகிய இவ்விரண்டின் தன்மை! இம்மட்டோ! வடவாமுகாக்கினியுடன் பிறந்தாய்! கலை ஒன்றை அடைந்த பின்பு பரமசிவனது அக்கினிமயமான நெற்றிக் கண்ணோடு பழகிக் கொண்டு இருந்தாய்! பதினறு கலைகளும் நிறைந்து பூரணச் சந்திரனனபோது பாம்பின் விடமுள்ள வாயிலே தங்கினய்! ஆகையால் நீ வெப்பத்தைத் தருவது அரிதோ? மிகவும் எளிதாகும். நீ பிறந்த இடமாயினும் வசிக்குமிடமாயினும் பழகுமிடமாயினும் நல்லிடமாயிருத்தல் வேண்டும். இம் மூவிடங்களும் தீயனவாதலால் பிறர்க்குத் துன்பஞ் செய்தலாய தீநெறியிலேயே கைதேர்ந்தவனயினயாதலால் நன்மை யெவ்வாறு செய்வாய்? மையல் கொண்டுழலும் இம்மாதின் ஆவியைக்கவரவந்த மறலிபோல வருமதியோ? சந்தேகமென்ன? உனதுடலிலுள்ள களங்கமானது விடமல்லவா? ஆதலினன்றே இராகுவென்னும் பாந்தளும் உண்டு ஆற்றது உமிழ்ந்தது? என்னேடா! உனக்கு அம்மன்மதன் உறவுண்டோ? சந்திரன் என்னும் பேருக்கேற்ற சீரில்லையோ? குளிர்ச்சியைச் செய்விப்பாயென்றல்லவோ பரிவுற்றனன்? பரிவுறச் செய்தனையே! சுடுகின்றனையே! உனது பெருந்தன்மையை

யறிந்திலேயே! நீ எவ்விதத்தாலுஞ் சிறந்தவனு யிற்றே! நீ அறியாயாயினும் நான் கூறுவதையே னுங் கேட்பாயாக! திருமகளையும், ஐந்தருக்களையும், சிந்தாமணியையும், சங்கநிதி, பதுமநிதி என்னு மிரண்டினையும் பெற்ற அத்திருப்பாற் கடலிலன் றோ நீயும் உதித்தாய்! அமிர்தத்துடன் தோன் றியவாறு அரியகுணம் படைத்தும் அரிவை யை அல்லலுறச் செய்தல் அழகாமா? அம் மதனுடைய உறவைமாத்திரம் ஒழிப்பாயானல் உன்னை ஒப்பார் யாவர்? "நல்லிணக்கமல்ல தல்லற் படுத்தும் என்பதையறிந்து மிவ்விதஞ் செய்வது நலமாடா? பெற்றுரு மற்றுருந் தூஷிக்கவாவுட லெடுத்தாய்? நீ இவ்வுடலை வைத்துக்கொண்டிருப் பதினும் இறப்பதே நன்மை! அம்மகாதேவன் தேவர்களைக் காக்கும்பொருட்டு விடத்தை உண்டது போல உன்னையு முண்டிருந்தால் அப்போதே ஒழிந் திருப்பாயே! என்போல்வார் வருந்தார்களே! உன்னை உண்ணுது விடுத்ததென்னே? பொறுத்தற் கரிய அழலை வீசுகின்ற சந்திரன் என்னும் பொருந் தாப்பெயர்புனைந்த கனலே! உலகமெல்லாம் ஒருங்கு கொளுத்தும் ஊழித்தீயைத் தன்கண்ணில் தரித்த கண்ணுதற் கடவுளும் தன் சென்னியில் உனது பதினுறு கலைகளையுந் தரியாது ஒரே கலையைத் தரித்தாரென்றுல் நின்போலுங் கொடியரு முளரோ? விநாசகாலத்திற்கேற்ற விபரீத புத்தியோ? இந்த வாழ்வு நினக்கு எப்போதுமா நிலைக்குமென எண்ணி விட்டாய்? இன்னுங் கொஞ்சநேரந்தானடா!

வைகறையில் எழுஞ் சூரிய கிரணத்திஞல் நின்
ஞெளிகெட்டு நாசமடைந்து நீ ஒலமிட்டலறுவதை
நான் கண்டு மிகவும் சந்தோஷிப்பேன் என்று
நினைத்திலேயோ? ஒருவிஷயத்தில் நீ இங்ஙனஞ்
செய்தலும் நன்மையைக்கருதிதானே? என் தாதை
எழுதியவாறு சுசீலரை மணம்புரியாதிறப்பின் மறு
ஜன்மத்திலாகிலும் இதே எண்ணத்தோடுதித்து
அவரை மணம்புரிவேன் என்றுதான் இவ்வண்ணம்
செய்கின்ருய் போலும்! என்ன! இவ்விதம் புத்தி
மாருடுகிறதே! மணம்புரியாமலா? இக்குவலயம்
புரக்கும் குண கன மணிக்கு மாலே சூட்டலாமா?
எனதிறையே! நின்னை விவாகஞ் செய்யாமலா
இறக்க? நன்ருயிருக்கிறது. இறந்தபின்னர் என்
செய்ய? இதற்கா இவ்வளவுபாடு? கண்ணுள்ள
போதே காட்சியன்றி கண்கெட்ட பின்னர் காட்சி
யைக்கண்டார் யாவர்? அவாவே பிறப்பிற்கு
வித்து என்ற ஆன்ருேர் வாக்குண்மை யல்லவோ?
ஏன் ஐயுறல்வேண்டும்? மெய்ம்மையே கூறுவர்
மேலோர் என்றறிந்தும் இங்ஙனம் ஏனே வீணே
விஞஎழுப்பி விடையுங் கொடுக்கின்றேன் யான்?
பாபமே சம்பவிக்கும் போலும்! ஈட்டிய வினைக்
கீடாக இப்போது படுகின்றபாடு போதாதா?
"எண்ணிய எண்ணமெல்லாம் இறப்புமேல் பிறப்
புக்காசை" யாதலால் எனதாசை முற்ருது
இறப்பேனுயின் அஃதை அனுபவிக்க மறு
பிறவி யெடுத்தே தீரவேண்டும். ஆயினும் அச்
சன்மத்தினும் மானுடதேகமே கிடைக்கப்பெறு

வேன் என்பது என்ன நிச்சயம்? "இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ எது வருமோ அறிகிலேன்". மாதேவனருளால் மாநுட ஜன்மமே யெடுப்பினும் இப்பெண் ஜன்மமே வருமென்பது என்ன நிச்சயம்? பெண்ணுகவே பிறப்பினும் சுசீலே யென்னும் நற்பெயரையே புனைந்து வாழ்வேனே? பாலகலா நிதியென்ன யாவருங் கொண்டாடுவரோ? அப்பட்டம் பெறுதற் கிப்பிறவியில் அருந் தமிழே காரணமா யிருந்ததன்றே? அவ்வருந்திருவளிக்கும் ஒப்பாரு மிக்காரு மில்லாத தமிழ் மாதின் தண்ணருள் எய்தும் புண்ணிய முற்றுவாழ்வேனே? வாழினும் ஐயசீலனை யொத்தவ னொருவன் தகப்பனுய் வாய்ப்பானுயின் என் செய்வல்? இக்கருத் தென்னணம் நிறைவேறும்? அன்றியும் என்காதலரும் சுசீலரென்னும் நாமம் புனைந்திருப்பரென்ப தென்ன நிச்சயம்? ஒருகால் அப்பேர் வாய்ப்பினும் ஏகசக்ராதிபதியா யிருப்பரென்பது மென்ன நிச்சயம்? உஸ். சந்தேகக் கடலுள் மூழ்கிச் சாதற்கோ பிறப்பித்தனன் பிரமன். இறைவனருள்கூட்ட மறுபிறப்பினுமிம் மண்ணுலகிலேயே இப்பெண் ஜன்மமே யெடுத்து சுசீலையென்னும் நாமத்தையும் நாமகள் அருளையும் பெற்று நற்குலத்துதித்து அந் நாயகனையே மணஞ் செய்துகொள்ள மகிழ்ச்சியுற்றிருப் பேனுயினும் மணுளராய இளவரசர் முன்செய்த நல்வினைப் பயனுல் இவ்விளவயதிலேயே பன்னூலாய்ந்த பாவலர் திலகராய்க் கவிராசர் ஆசியேற்றுத் தவராசர்களுக்குத் திருத்தொண்டு செய்யும் பெருந்

தவ சீலராயிருத்தலால் சிற்றின்பவாழ்வை யொரீஇப் பேரின்பப் பெருவாழ்வையே நாடிப் பிறப்பிலியரு ளாற் பிறவியை யொழித்துப் பிறந்தபயனை அடைவாராயின் யான் பிறந்தும் பேர்பெற்று மென்பயன். மகிழ்வோடிருந்து மென்பயன். கடவுளை வேண்டி யென் காதலரை யென்பொருட்டனுப்புக வென்னினும் அனுப்புவரா? ஆசைக்கொழுநர் அரனடி யடைந்தனர் ஆதலால் அகிலத்திற்கு நின்பொருட்டு வாரார் என்று யாவரோ உரைக்கவல்லார்? உரைக்க வல்லார் உளரேனும் பற்றறுத பாவை பரமனடி யடைந்த பத்தாவைப் பார்ப்ப தெவ்வண்ணம்? என்ன செப்பினேன்? பரமனடி யடைந்த பத்தாவா? (யோசித்து) சீச்சீ! சுசீலர்! என் சொன்னாய்? இவ் வாறு நினைத்தல் நலமா? இங்குயிரோடிப்பாரை ஈசனடி யடையவா வேண்டுகின்றாய்? இளங்கோ வென்னை மணம் புரியாவிடினும் படைமன்னர் சூழ முடிதரித்துப் பாராண்டு நீடுபுகழெய்தி நீடூழி வாழ்தலே நன்று. கருணைப் பெருமானே! தேவரீர் முன் னின்றால் முடியாத பொருளுமுளதோ? என் விண் ணப்பத்தை முடித்தல் வேண்டும் விடையேறும் வித்தகனே! எல்லாமறிந்த நீர் எளியாள் காதலை யறியாமலா இருக்கின்றீர்? எந்தாய்! திருவுளச் சம்மத மெப்படியோ? தந்தை யெழுதிய அப்படியோ? அடியாளால் ஆவதென்ன?

[நீலலோசனை வருகின்றனள்.]

நீல.—நீர் நினைந்தவண்ணமே யாம்! திருவருள் கூட்டி வைக்கும்.

சுசீலே.—என்ன விரைவாக வந்தனையடி! நடு நிசியில் உன்னை உற்ற துணையென நம்பினால் நட்டாற்றில் தான் விட்டுவிடுவாய் போலும்! இன்னுஞ்சில மணி நேரங்கழித்தே நீ வருதல் வேண்டும். என் புண்ணியம் இவ்வளவு சீக்கிரத்தி லழைத்துவந்து விட்டது போலும்.

நீல.—விஷய மறிந்துகொண்டபின் விரைவாகவே வந்தனன். கால்நடையாகவே வந்தனன் மனுஷியாதலால். பறவையா யிருந்திருப்பின் பறந்து முன்னமே வந்திருப்பேன். முன்னேவரினும் பின்னே வரினும் எப்போதுவரினும் அறிவிக்குஞ் செய்தி ஒன்றேயாம்.

சுசீலே.—என்ன அவகதையடி? எங்கு சென்றிருந்தாய்? இவ்வழியாய் வருகின்றாயே!

நீல.—அவகதை யல்ல! அருங்கதையே! நந்தவனத்தினின்றும் சித்தாந்த நிலயத்திற்குச் சென்றபோது அக்கதவு மூடப்பட்டிருந்ததால் ஒருகால் உள்ளே சம்பாஷித்துக்கொண் டிருப்பர்க ளென நினைந்து வெளியே 30-நிமிடம் வீணே காத்துக்கொண்டிருந்தும் யாதொரு சத்தமுங் கேட்டிலே னதலால் தம்மைத்தனியேவிட்டு வந்தேனே யென்று வேகமாய் வரும்போது சுகுணசீலர் புதல்வரும் சுசிலரும் வார்த்தையாடிக்கொண்டிருக்கக் கேட்டுப் பின்புறஞ்சென்று அங்குள்ள சாளரவழியாக அவர்கள் உட்கருத்தை முற்றுந் தெரிந்து ஒருவர் கண்ணுக்கும் புலப்படாவாறு வேம்படிமால் வழியாக வருகின்றனன். திருமணம் நடைபெறும். நடைபெறும்.

சுசீலை.—அவர்கள் பேசிக்கொண் டிருந்ததாலேயே விவாகம் நடைபெறுமா ? என்ன பைத்தியமடி உனக்கு ? மாங்கல்யங் கழுத்தில் ஏறிவிட்டது போல் சந்தோஷமடைந்து விட்டாயே! அவ்வாறு உண்மையாகவே நடந்துவிட்டால் ஆனந்த சாகரத்தில் அழுந்தி இறந்துவிடுவாய்போலிருக்கிறதே. பொறுமை வேண்டாமா ? மதிசீலருடன் யாது பேசிக்கொண்டிருந்தனர்?

நீல.—சுசீலரு மற்றவருந் தங்களைப் பற்றியும் விவாக விஷயத்தைப்பற்றியுமே பேசிக்கொண்டிருந்தனர்.

சுசீலை.—சுசீலர் யாது கூறினர் ?

நீல.—சுசீலர் திருமணம் நடை பெறுமோ நடவாதோ வென்று சந்தேகித்தபோது மதிசீலர் சோதிட ஆராய்ச்சி செய்து மதனகாந்தன் மாலை சூட்டான் என்றும், தம்மை நாயகியென வழைக்கத் தக்க நாயகர் இளவரசரே யென்றும், எட்டாதகனியையே யிச்சித்தனர் மதனபுரத்தே வீரகாந்தனு மற்றோரும் என்றும், தம்மைக் காணும் பேராசைக்கொண்டு மரங்களுஞ் செடிகளுங் கொடிகளுந் தடாகமுந் தங்குமிடத்தில் தங்கியிருக்குந் தம்மைக் கண்டு களிப்பர் ஒருமணிநேரத்திற்குள் என்றும், ஜயசீலரது அபிப்பிராயம் அப்பிரயோசனத்தையே தருமென்றும் இயம்பினர்.

சுசீலை.—அபிப்பிராயமாவது அப்பிரயோசன மாவதாவது ! என்ன ஆச்சர்யமடி இது ! நிச்சயித்து வாக்களித்தனனென வரைந்தனரன்றோ நிருபம் ? அவரது கருத்திற்கு மாறாகச் சுசீலர் என்ன செய்யக்கூடும் ? விவாகந்தான் எங்ஙனம் நடைபெறும் ?

நீல.—எனக்கொரு சந்தேகம். யான் கேட்பது முறை யல்லவாயினுந் துணிந்து கேட்கின்றேன்.

சுசீலை.—கேட்கத் துணிந்துவிட்டபின் கேட்டுத் தீரலே வேண்டுமன்றோ ?

நீல.—தங்கள் கருத்திற்குமாறாகத் தந்தையாராயினு மற் றெவராயினும் என்செய்தல் கூடும் ?

சுசீலை.—வாசித்தவளாயிருந்தும் பிதா என் செய்யக்கூடு மென்று கேட்பது தகுமா ? என்செய்யினுஞ் செய்ய லாமன்றோ ?

நீல.—தந்தையார் யாது செய்யினுஞ் செய்க ! தம்மை வீரகாந்தன் புதல்வனுக்குத் தத்தம்புரியக்கருதி யது மாத்திரம் தக்கதன்று என்று எளியாள் அறி விற்குப் புலப்படுகின்றது. பிழையுளதேல் பொறுத் தல்வேண்டும். ஜயசீலர் எழுதியதுபோல் தாமும் அக்காந்தனை விழைந்தால் விவாக முடிவுபெறும். அவர் மணம்புரிந்து கொள்ளாவிடினு மானிலத் தைப் புரந்து மன்னர் பெருமானாய் நீடுவாழ்தலே நலம் என்று தங்கள் திருவாக்கே கூறியது. அத னால் தங்கள் மனமுகந்த மணவாளர் இளவரச ரென்றே தெரிந்தேன்.

சுசீலை.—நீ சொல்வது சரியே ! இளவரசர் எவ்வாறறிவர் இச்சங்கதி !

நீல.—எவ்வா றறிவார்களோ ? எனக்கென் தெரியும் ? யாவர் வந்தனரோ மதனபுரத்தி லிருந்து தெரிந் திலது ! வீரகாந்தன் ஒருவேளை மணவோலை யனுப் பினனோ ?

சுசீலை.—சென்ற உன்னை விசாரித்தால் என்னையே நீ

வினவுகின்றாய்போலும். அது கிடக்கட்டும். இப்போது மணியென்ன? ஒருமணி நேரமாயிராதா?

நீல.—ஆகின்ற சமயந்தான்! அவரும் அணுகுஞ் சமயந்தான்!

சுசீலை.—சமயஞ் சமயமென்று இருமுறை சொல்லலும் வேண்டுமா?

நீல.—ஒரு முறை சமயமென்றும், மறுமுறை அச்சமயம் என்னுஞ் சொல்லின் இரண்டாவது எழுத்தாகிய மகரத்தை நீக்கிச் சொல்லல் வேண்டும்போலும்.

சுசீலை.—மகரமென்றால் சுறாவன்றோ? அச்சுறாவங்குளதா?

நீல.—சுறாவல்ல?

சுசீலை.—மகரமாகிய உயிர்மெய்யெழுத்தையா?

நீல.—ஆம்.

சுசீலை.—சயம் என்னல்வேண்டுமோ?

நீல.—அவ்வாறு கூறலே பொருந்தும்.

சுசீலை.—எவ்வாறு பொருந்தும்?

நீல.— நறுமணம் வீசு மருமலர்கள் நெருங்கியுள்ள இந்த நந்தவனத்தின் வனப்பும் உமது சுந்தர வதனத்தின் வனப்பும் தண்மை வாய்ந்த கிரணங்களைப் பரப்பும் இப்பூரணச் சந்திரத் தோற்றத்தாலும் இன்று இங்கு வீசுந் தென்றலாலு முண்டாம் ஆனந்தமும் இனி இளவரசர் இங்கணைதலா லுண்டாம் பெருமகிழ்ச்சியும் இவ்வாறு சொல்லப் பிடர்பிடித்துந்தியதாதலால் யான் கூறியது பொருந்தும்.

சுசீலை.—இங்குவருவரேல் சயந்தான்! சயந்தான்!

நீல.—வருவர். வருவர். வந்தபின் மும்முறை சொல்லும்.

சுசீலை.—சுந்தரவதனம் என்றாகிலும் வதன வனப்பு என்

ருகினும் இரண்டிலொன்று சொல்வதை விட்டு சுந்தாம் என்றும் வனப் பென்றுங் கூறியதையே கூறுதலென்னே? சில சொற்களை ஞாபகத்தில் வைத்திருப்பதாலேயே அனுவசியமா யடுக்கிவிட வேண்டுமோ?

நீல.—அனுவசியமாகப் பிரயோகித்தே னில்லை. இருமுறையா? பன்முறையுங் கூறினுந் தகும். இயற்கையாய்த் தமக்கு அமைந்துள்ள அழகும் இளவரசனை நாயகாரயடையும் புண்ணியவழகும், நுதலில் விளங்கும் திரு நீற்றழகும், யாவரும் புகழுங்கல்வியழகும், இன்னனைய பிறவழகும் ஒருங்கே யமையப் பெற்ற மாதவத்தினழகும் (வாக்கியத்தை முடிக்குமுன்.)

சுசீலை.—நிறுத்து! நீலாள் நீட்டுவள் என்று தெரியும். இவ்விலட்சணங்கள் என்பால் உள்ளனவா? யானறியேன்.

நீல.—உண்மையே! கல்வியருமை யறியாத வெனக்குக் கல்விச்செல்வத்தை யளித்த கலாநிதியே! இங்ஙனம் பேசும் இப்பெருவாழ்வும் நீ இட்ட பிச்சையன்றோ? திரிகாணசுத்தியாக நவமாகக் காணப்படும் நலனை எனது ஒருநா எடுத்துரைக்கற்பாலதோ? நின்னை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் என்னை மறக்கின்றேன் எனதன்னய்! ஈசனடியை மறவாத இறைவியன்றோ? இத்தகைய தவமணியைத் தலைவியாய்ப்பெற்று யான்வாழ பென்ன புண்ணியஞ்செய்தனனே? அம்மணி! மலரினுள்ள மணத்தையும் மதுவையும் அம்மலரறியாதிருக்க எங்ஙனம் வண்

டினங்கள் மலர்மணக்குந் திசைநோக்கி அங்குற்று அத்தேறலை உண்டு சுகித்து எவ்வாறு அம்மகரந் தப் பொடியில் மயங்கிக் கிடக்குமோ அங்ஙனமே தங்கள் மதிமுகமலரினிடத்துப் பன்னரும் இலட்சணங்கள் பலவுளவெனவறிந்துளேம் யானுமென் போல்வாருமே.

சுசீலை.—அறிவீர்போலும்! என்னை மலருக்கு உவமையாக்கினையோ?

நீல.—சிந்தியாமல் உவமைகூறியதும் பிறழ்வே! அம்மலர் சடமாதலின் அறியாது. இம்மாமலர் சித்தெனவு மற்றும் யான் சொல்லவல்லளோ?

சுசீலை.—உபன்னியாசத்தை நிறுத்து! சோதிடம் பொய்த்தது போலும். அப்போதே சந்தேகித்தேன். இரவிற் சொன்ன சோதிடம் இருளிலேயே திண்டாடுகிறது போலும். ஆயினும் சொல்லுநர் வல்லுநராவரேல் எல்லாயினென்ன? எப்போதாயினென்?

நீல.—மற்றோர் சோதிடம் பொய்க்கலாம் ஒருவேளை? மதிசீலர் சோதிடம் பொய்க்காது.

சுசீலை.—மதிசீலர் சோதிடமென்று மொன்றுளதா? மன்னர் தடுமாற்றத்தை மாய்த்த சோதிடமே மதிசீலர் சோதிடம்.

நீல.—மாய்த்த சோதிடமன்று. மகிழ்வித்த சோதிடமேயாம். ஆக்கப்பொறுத்ததை ஆறப்பொறுத்தால் உண்மை விளங்கும்.

சுசீலை.—ஆயின் இலது என்று எண்ணினன் யான்? இரு

ளில் மருளும் என்றால் நிலவில் நிலவும் என்பதே பொருள் எனத் தெரிந்திலேயா ?

நீல.—நிலவிலே நிலவுமாதலால் நீர்தங்குஞ் சடையானை நினைந்து பாடுக அம்ம! எண்ணியாங்கே அருள்புரிவன் எம்பெருமான்.

சுசீலை.—நிலவுமென எதிர் காலத்தில் தானே செப்பினேன்! நிலவியபின்.

நீல.—எதிர்காலத்தில் எந்தல் வருவாராக எப்பாட்டும் பாடமுடியாது. ஆதலின் இப்போதே அப்பரமனைப் பாடுக. அகமுடையாருங் கேட்டானந்திப்பர்.

சுசீலை.—பாட்டிற்கே இன்புறுங் குருபரன் ஆதலால் கூறுவல்.

"பன்மாலைத் திரளிருக்கத்தமை யுணர்ந்தோர்
பாமாலைக்கே நீதான்பட்ச மென்று
நன்மாலை யாயெடுத்துச் சொன்னார் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாகக் கண்ணீர்சோரத்
தொண்டனேன் எந்நாளுந் துதித்துநிற்பேன்"

என்றனர் மெய்கண்ட மெய்ஞ்ஞானபானுவும். எம்பெருமான் எழிலிணையை யெஞ்ஞான்றும் எத்தி எத்தித் தொழுது அவ்வள்ளலையே யெண்ணி உருகல் வேண்டும்.

"என்னுகேன் என்சொல்லி என்னுகேனே
எம்பெருமான் திருவடியே யெண்ணினல்லாற்
கண்ணிலேன் மற்றோர்களை கணில்லேன்
கழலிணையே கைதொழுது காணினல்லா
லொண்ணுளே வொன்பது வாசல்வைத்தா
யொக்க வடைக்கும்போ துணரமாட்டேன்

புண்ணியனே உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே."

என்றனர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

நீல.—சோதிடமும் உண்மையாயிற்று.

சுசீலை.—சுசிலர் வந்தாலல்லவோ உண்மை யென்னலாம்.

நீல.—[சுசிலர் சற்று தூரத்தில் வருகிறனைத நோக்கி] அதோ! வந்துவிட்டனர். வந்துவிட்டனர். இப்போதேனும் பாடுக.

சுசீலை.—விளையாடுகின்றனையோ? எங்கு?

நீல.—தாங்களே பாருங்கள்! அதோ! மங்கள விலாசத்தி னருகே வந்துவிட்டனர்.

சுசீலை.—ஆமடி! அருள் சுரந்தனரன்று பெருங்கருணைத் தடங்கடல் எனக்கும். எனது உள்ளக்கிடக்கையை யுணர்ந்த தெய்வமே உத்தம தெய்வமடி. என்ன கைம்மாறு செய்கேனோ?

நீல.—"மொழிக்குமொழி தித்திப்பாக மூவர்சொல்லுந் தமிழ்கேட்குந் திருச்செவி" யன்றோ? திருத்தாண் டகமே செப்புக!

தேவாரம்

சுசீலை.—வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்தானை
கருத்தறிந்து முடிப்பான்றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றன்றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்துநின்றேன்
தாயானைத் தவமாய தன்மையானைத்
தலையாய தேவாதி தேவர்க்கென்றும்
சேயானைத் தென்கூடற் றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னனே.

சுசீலர்.—[நந்தவனத்தினருகே சற்றுநின்று] இவ்வொலி யே தோ தேரேன், தேரேன்.

பாங்குபெறு மாங்குயிலி னினியதிருப்
பாட்டொலியோ பகரு மந்த
தீங்கறுநா ரதன்கரத்திற் றிகழ்வீணை
தனதொலியோ தேவர் நாட்டி
லோங்குறுகந் தருவர்தங்கள் கந்தாத்தி
னுறுமொலியோ உணரே னம்மா!
வாங்குறுமிவ் வொலிநமது வஞ்சியின்பாட்
டொலியலால் மற்றதாமோ.

ஆம் இங்கு எனது ஐம்புலன்களையும் பங்கிட்டுக் கொண்ட சங்குவளையணிந்த குவளைக்கண்ணியே இத் தவள நிலவில் பவளவாய் திறந்து பாடிக்கொண்டிலவு கின்றனளோ!' அல்ல. சுசீலையல்ல! [சந்தேகித்துப்] பின் யாவரோ?

வனத்துறையு மோகினியோ மறைமலரி லுறைமாதோ
மனத்துறையு மடவரலோ மாரன்றன் பெருவாழ்வோ
முனத்துறையு மடப்பிடியோ இரும்புருக்கு மிசையினளோ
கனத்துறையுஞ் சுடர்மினலோ கரும்பனைய மொழியாளே.

பொன்னுட்டுத் திருவுருவோ பூங்காவின் பைங்கிளியோ
தென்னுட்டு மாமயிலோ தேடவருந் திரவியமோ
சென்னுட்டுங் குழற்குயிலோ தேவிட்டாத தெள்ளமுதோ
என்னுட்டி னேந்திழையோ எழுதரிய சித்திரமே.

என் ஐயுறல் வேண்டும்! பண்பறிந்த நண்பன் செப்பியவாறுபோல் என் மனங் குழைக்குங் கனங்குழையே இங்கு நிற்கினள்போலும். என்பொருட்டே நிற்கின்றனள் போலும். உய்யான வனத்துள்ளே சென்று அவளது உள்ளக்குறிப்பை அறியும் பொருட்டே யன்றே இங்குற்

ளும் அயலான்போல நின்று அழுங்குவதும் அறியாமை யேயாம். அஞ்சி நிற்றலினும் அருகே ஏகிக் கெஞ்சியே னுங் கொஞ்சியேனுந் தஞ்சமென்றாகிலுந் தற்போது கூறி வசப்படுத்தல் வேண்டும் வஞ்சியை. [உட் பிரவேசித்துத் தன்னைப்பாராது தன் துணையுடனிற்குஞ் சுசீலையை நோக்கி]

மட்டவிழ மலர்க்கோதாய்! மலரோனுரு
மனத்திடையே வதைத்தனனே மணியே! நின்னைத்
தட்டவிழுந் திருமகளைத் தருமுன்னே நீள்
தாணிதனிற் படைத்தனனே தையலார்கள்
நெட்டுயிர்த்து நெடிதேங்க நேர்ந்தா யென்றால்
நினையளித்தோன் பிரமனென நினைக்கற்பாற்றே
கட்டழகைத் தனிவேதன் கணித்திட்டானே
கண்ணுதலே யீந்தனனே கழறுவாயே.

நீல.—*அவ்விடயம் எமக்குஞ் சந்தேகமாய்த்தானுள்ளது.*

சுசீலை.—*அம்மட்டோ ?*

ஆயிரமாஞ் சிரம்படைத்திவ் வகிலந் தாங்கும்
ஆதிசேடன் தனதறிவை யவதானித்தே
மேயவொரு தலைகொண்டு விளம்பிட்டாலும்
மெல்லியலே! நின்னழகே மேலதாகும்
ஆயவொரு நூலினும்நின் னழகின் மேன்மை
அரைந்திலதா லரைதுவன்யா னன்பாய்க் கேண்மோ
நேயமிது நேரிழையே! நினைவி லேன்று
நிகழமொரு மேகலையே! நிதியின் வைப்பே!

நீயே அழகு என்னுஞ் செம்பதத்தைச் செம்மொழி யாக்கவந்த செந்தமிழ்ச் செல்விபோலும்.

அழகென்னுஞ் செம்பதத்தை யழதுசெய
வவதரித்த வாற்றைக் கேண்மோ

அழகென்னு மொழியின்முத லக்காமேவ்
வெழுத்தினுக்கு மாதியாம்போல்
அழகென்னுஞ் சொலினிரண்டா மக்காமேப்
பாடையினு மமையாவாறுன்
அழகமைந்த ததிசயமே அவ்வியப்பைக்
கடையெழுந்தே அறியுமாலோ.

சுசீலர்.—சுசீலா!

சுசீலை.—(நாணித் தலைகுனிந்து மௌனமாய் நிற்கின்றனள்.)

சுசீலர்.—விடைபகா விரும்பிலையோ விளங்கிழையே!

சுசீலை.—நீதியாமா? விடையளித்தற் குரியாள் சுசீலையன்றே!

சுசீலர்.—யாது? நீதியாகாதா? விடையளித்தல் ஆகாதா?

நீல.—விடையூர்தியைக் கேட்டால் விடையளிப்பர்.

சுசீலை.—ஆகாது! ஆகாது! யான் அளித்தல் முறையாகாது.

நீல.—ஆம்.

சுசீலர்.—என் ஆகாது? [நகைக்கிறார்.]

சுசீலை.—ஆமென்றும் ஆகாதென்றும் நீர் அறியீரா?

சுசீலர்.—அறிந்திருப்பின் இவ்வினாவிடை அனுவசியம் அன்றோ? அறியகில்லேன்.

சுசீலை.—நீதிபதியே! நீதியாகாது. சத்தியமே ஓர் உருவாய் விளங்குகின்ற தங்களுக்குரிய தருமமன்றோ அறநெறி நிற்றல்? அத்தலையாய தருமத்தை இன்னும் அறியாமலிருத்தல் தக்கதாமா தமக்கு?

நீல.—அறிந்து கொண்டிருத்தலே வேண்டும்! அறிந்து

மிருப்பர் ! இப்போது இங்கு வந்த பின்னர் மறந்து விட்டனரோ !

சுசீலை.—அறியாவினுவாயின் அறிவுறுத்தல் அவசியம். ஒருகால் அறிந்து மறந்திருப்பினும் இப்போதேனும் புலப்படவில்லையா ?

சுசீலர்.—இல்லை. புலப்படவில்லை இப்போதும்.

சுசீலை.—ஆயின் புலப்படுத்துகின்றேன். தாங்கள் மதி சீலருடன் யாதோ பேசிக்கொண்டிருந்தீர் ?

சுசீலர்.—யாங்கள் பேசிக்கொண்டிருந்ததை நீ யெவ்வா றறிவாய் ?

சுசீலை.—இக்கேள்வியால் நீர் பேசிய துண்மையென்றே விளங்குகிறதே !

நீல.—உண்மை உண்மையாய்த்தானே விளங்கும்.

சுசீலை.—என்ன பேசிக்கொண்டிருந்தீர் ?

சுசீலர்.—நின்னைப்பற்றியே!

சுசீலை.—ஆடவர்கள் பெண்பாலர்களைப்பற்றிப் பேசல் அனுவசியமன்றோ ?

சுசீலர்.—ஆம். அனுவசியந்தான் ! பெண்களெனப்படாத பெண்களைப் பற்றிப் பேசல் அனுவசியமாயினும் பெண்ணரசியெனத்தக்க நின்னைப்பற்றிப் பேசல் எனக் கவசியமே யாதலின் மதிசீலருடன் வார்த்தை யாடிக்கொண்டிருந்தேன்.

சுசீலை.—என்னைப்பற்றியா பேசினீர் ? யான் தோழிமார் களுடன் இங்கிருந்தேனே ! என்னை யெவ்வாறு பற் றினீர் ?

சுசீலர்.—மனத்தால். அது காரணமாகவே பேச நேர்ந்தது.

சுசீலே.—நீர் மனத்தாலே பற்றினல் இம்மாதினுக்காவதென்ன ?

சுசீலர்.—மனத்தால் பற்றியதே போதாதா ? ஆவதென்ன இன்னும் ? நீ விரும்பியவாறு விவாகமே ஆகும்.

சுசீலே.—[வெட்கமும் வெறுப்பு முற்றவள்போல முகத்தை முன்றானையால் மூடிக்கொண்டு திரும்பி,] வாடிபோகலாம் ! ஆடவர்களுக்குக் கொஞ்சம் இடங்கொடுத்தால் ஆராவாம் அநிசஞ் செய்வார்கள்.

நீல.—இளவரசருக்கும் இயற்கையோ ?

சுசீலே.—அரை நிமிஷம் அனுபவம் போதாதா ?

நீல.—இவ்விஷயம் அறிந்துதான் பதில் கொடாதிருந்தீர்கள் போலும் ! ஏதோ விவாகமாம். அஃதும் தங்களுக்கே யாம். யானறியாமலும் விவாகம் நடக்குமா ?

சுசீலர்.—கவனித்தனையா ? உனது தோழியும் உனக்கே யாம் என்கின்றனள். அறிந்தே யுரைத்தனளோ அறியாதுரைத்தனளோ அறியேன். அசரீரி வாக்கியம் போலும் !

நீல.—அரசே ! நானே அம்மைக்கு விவாகம் என்றேன். ஈதென்ன ? அதிசயமா யிருக்கிறதே !

சுசீலே.—பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோ லிருக்கிறதே இக்கதை ! கேட்பதற்கு அசங்கதமா யிருக்கிறதே !

நீல.—ஆயினும் அதைத் தெரிதலும் அவசியமென்றே தோற்றுகிறது.

சுசீலர்.—ஆம். அவசியமே ஆம்.

சுசீலே.—என்பால் கூறத்தக்க மொழிகளோ இவைகள் ?

சுசீலர்.—உன்பால் கூறத்தகாத மொழிகளாயின் உரைக்கத் துணிவேனா? நின்பாலே நிகழ்த்தல்வேண்டும்!

சுசீலை.—யாருக்கு மணம்?

சுசீலர்.—உனக்கும் வேறொருவர்க்கும்.

சுசீலை.—வேறொருவர் இருந்தால்தான் விவாகம் நடக்கும். இந்தவிஷயத்தை இளைஞரும் அறிவார். அவ்வாறு மறைத்துச் சொன்னால் யான் அவ்வேறொருவர் இன்னாரென்று எப்படி தெரிந்துகொள்ளக்கூடும்? வேறொருவர் என்ற பேருடையாரும் ஒருவர் இருக்கிறாரா?

சுசீலர்.—மதனபுரந் தெரியுமோ?

சுசீலை.—பேரைக்கேட்டதன்றி ஊரைக் கேட்டதில்லையே!

சுசீலர்.—மதனபுரத்துச் சிற்றரசன்

சுசீலை.—யாவன் அவன்?

சுசீலர்.—அவன் சுகப்பனுக்கு அச்சிற்றரசன் மகன்! அவனே வீரகாந்தன். அவ்வீரகாந்தன் மகனே மதனகாந்தன்.

சுசீலை.—இவனுக்கு மகனில்லையோ?

சுசீலர்.—இல்லை.

சுசீலை.—தற்காலம் இவனுக்கு இவனே மகன்போலும். அம்மதம் பிடித்தோனைக்குறித்துக் கூறுத் துணிதலுஞ் சம்மதமாயிருக்கிறதோ தங்களுக்கு? ஈசன் இப்படியும் விதித்திருப்பான்போலும்.

சுசீலை.—தங்களுக் கெப்படி தெரியும்?

சுசீலர்.—தெரியாமலா?

சுசீலை.—தெரிந்துதான்! யாரோ உரைத்தார்?

சுசீலர்.—உரைத்தார் எவராயினென்?

சுசீலே.—உற்றாரோ மற்றோரோ என்று அறியவேண்டியே?

சுசீலர்.—உற்றாரே யறிவித்தல் வேண்டுமோ? நான் உறவினன் அன்றோ?

சுசீலே.— உரைத்தற்குரியார் உரைப்பின் உண்மையாயிருக்குமென்றும் இங்கோ வேறு எங்கோ விளைந்தது இவ்வினையென்றும் சூதுமார்க்கமாகவே நடத்த உத்தேசித்திருக்கின்றார்களோ அல்லது நிச்சயமாய் விட்டதோ என்றும் நிச்சயமாய் விட்டிருப்பின் எப்போதோ நடத்தப்படும் என்றுந் தெரிந்துகொள்ள வேண்டியே உசாவினன்?

சுசீலர்.—யான் உரைத்தற்கு உரியன் அல்லனோ? உண்மையாயிராதோ நானுரைத்தல்.

சுசீலே.—உண்மை அல்ல என்று கூறவில்லையே! நீர் கூறுவது நிச்சயமாயின் எங்ஙனம் அறிவீர் அவ்விடயம்.

சுசீலர்.—இங்கு விளைந்ததல்ல அவ்வினை. மதனபுரத்தே நின் தந்தையால் நிச்சயிக்கப்பட்டதென்று நிகழ்த்தினர் ஐயத்தர்?

சுசீலே.—ஜயசீலர் மற்றொருவனை மருகனாக்கிக்கொள்ளத் தீர்மானித்து வாக்களித்துவிட்டனரா?

சுசீலர்.—ஆம்.

சுசீலே.—நன்றாயறிவீரா?

சுசீலர்.—ஆம்! கண்மணி!

சுசீலே.—ஒருவனுக்கு தத்தஞ்செய்யப் பெரியோர் வாக்களித்தது சத்தியமாயின் உரிமையுடையார் உற்றாராயினும் அன்னவர்க்கு யாதுஞ் சம்பந்தமில்லையாதலால் அதைக்குறித்து அடிக்கடி அடியாளோடு பேசுதலும் பிறழ்வன்றோ?

சுசீலர்.—[மௌனம்.]

சுசீலை.—மௌனமாயிருந்தால் ?

சுசீலர்.—[தலையசைக்கின்றனர்.]

சுசீலை.—ஆதலின் பிறர்க்காகத் தீர்மானிக்கப்பட்ட பெண்ணை அப்பெயரிட்டழைத்தலே அநீதியென்றறிந்துங் கண்மூடிக்கொண்டு கண்மணியென்றும் மூக்குமணியென்று மொழிதல் முறையாமா ?

சுசீலர்.—ஆம். வேறு பெயராலழைக்க முறையாகும் இனி.

சுசீலை.—வேறு நாமம் புனைந்தா ?

சுசீலர்.—ஆம்.

சுசீலை.—யாவருக்கு ?

சுசீலர்.—நினக்கே !

சுசீலை.—பெற்றோரும் உற்றோருங் கற்றோரு மற்றோருஞ் சூழவிருந்து சுபதினத்தில் சுசீலை யெனப் பெயர் சூட்டியிருக்க அதை வேரோடுகளைந்து 'வேறு நாமம் புனைய விரும்பி விரதம் பூண்டிருந்தீரோ ? வேண்டாம் ! வேறு பெயரும் வேண்டாம் ! வேடமும் வேறாக வேண்டாம் ! இதுகாறும் யான் கேளாததும் வழக்கல்லாததுமாகவன்றோ விருக்கிறது. [நீலாளை நோக்கி] ஈதென்ன காலக்கேடோ தெரிந்திலேனே ! கிணறு வெட்டப் பூதம் புறப்படுகின்றதே.

நீல.—ஆம். புதுமை புதுமையாகப் புனைகின்றார். புதுமையாகிய நாமம் புனைந்த பின்னர் விருந்தும் அருந்துவேன் போலும் யான்.

சுசீலர்.—அருமைப் பெயர் பெருமையே யளிக்கும்.

சுசீலை.—பேரில்லாதார்க்குப் பேரளித்தல் பெருமை

தான்! பேர் நிலைத்திருப்போர்க்குப் பெயரிடுதலால் தமக்கும் பேர் நிலையாது. உள்ளதும் குலையாது. உலகமும் மலையாது.

சுசீலர்.—நின் சீரும் அலையாது. என்பெருந் தொலையாது.

சுசீலை.—ஆயின் அத்தகைய நாமம் யாது?

சுசீலர்.—மணிமேகலா என்பதே அது.

சுசீலை.—சு என்னும் எழுத்தை மான மணி யென்னு மங்கல மொழியையும், சீலா யென்னும் பதத்தை யொப்ப மேகலா யென்னும் வார்த்தையையும் அமைத்தோ மணிமேகலா என்றீர்.

சுசீலர்.—கலைமகளுக் கொருமகளோ கமலினுக்கு
வரும்பொருளோ கயமை நீக்கு
மலைமகளுக் கொருபணியோ மாதவமா
மணிகலையே மகிழ்வே யின்றுன்
புலமைதனைப் புகட்டியரும் பொருளுரைக்கப்
போந்தபெரும் புயலோ வன்றித்
தலைமகற்காங் காதறனைத் தணிக்க வந்த
தண்டமிழோ சாற்றுவாயே!

மணிமேகலா!

வியந்தேன், மிகவியந்தேன். அமையாதுரைத்தேன் யான். அமைத்தேயுரைத்தாய் நீ. அறிவும் ஆற்றலும் அறிவாளர் அதிசயிக்கததக்கதேயாம்.

சுசீலை.—இளங்கோவே! இங்ஙனம் இயம்பி இறும்பூதெய்தியதால் என்னே பயன்?

சுசீலர்.—இளங்கொடியே! நின்னைப் பெறுதலே பெரும் பயன். இதனினுஞ் சிறந்த பயனும் உளதோ? பன்முறை தெரித்தேனே! ஏனோ கவனித்திலை.

இம்முறை தெரிப்பேன் இனிய தேனே! நுந்தை சுசீலை யென்னும் பெயரையே தத்தஞ்செய்ய வாக்களித்ததல்லாமல் அப்பெயர் ஆர்ந்த நின்னையல்ல. மதனனை நீ கனவிலும் நினையாவிடினும் நின்னை விவாகம் புரியக்கருதிய அக்காந்தனும் நின்னுடைய நாமங்கேட்டே காதல்கொண் டிருப்பானல்லாமல் நேரே கண்டு நின்னுடன் வார்த்தையாடி நின் அபிப்பிராயத்தை யறிந்து நின்னை மணஞ்செய்தானில்லை. எவ்வாற்றானும் அவனுக்குச் சம்பந்தமில்லை. நின் பிதாவும் தன் கருத்தின்படி வாக்களித்தனனன்றி நின்னை யாவருமறிய தத்தஞ்செய்து விட்டதில்லை. ஆதலால் நினக்கொரு குறையுமில்லை. அவர்கள் கருத்திற்கு நீயும் இசைந்ததில்லை. அவர்கள் அறியாமையால் நிச்சயித்ததை யறிந்த முதல் அப்பெயரைத்தாங்கி யிருத்தற்கும் நினக்குப் பிரியமில்லை. அம்மதனனை மணம்புரிய நினக்கு ஒரு சிறிதுங் கருத்தில்லை. ஆக அன்னியர் காதலித்த அப்பெயரை அகற்றி இன்று இந்நாமஞ் சூட்டினேனாதலின் எந்தனுக்குகந்த இளவரசியாக மதுமலர்க் குழல் மாதுமையாள் திருவருள் புரிவாளாக மணிமேகலா!

நீல.—அவரிட்ட பெயரின் பொருளை முன்னரேதாம் விரித்திருக்க மீண்டும் மணிமேகலா என்கின்றனரே! ஒருகால் கொண்டு வந்தனரோ?

சுசீலை.—[நகைக்கின்றனள்.]

சுசீலர்.—யாதோ கொடுவந்தனன்?

சுசீலை.—யாதடி கொண்டுவந்தார் என்கிறாய்?

நீல.—சொல்லினரே கவனித்நீரில்லையோ. அழகுவாய்ந்த மேகலாபாணத்தையே.

சுசீலை—காத்திலிருந்தால் தெரியாதா?

நீல.—காந்து வைத்திருப்பின் தெரியுமோ?

சுசீலர்.—பொருளை வேறுபொருளாக்குகின்றீர்களே! அவ்வாபரணத்தையல்ல.

நீல.—ஆபரணமல்லவாயின் நூலோ.

சுசீலை.— சங்க நூலோ?

நீல.—ஆம். அந்நூல்தான். அச்சங்க நூல் சங்கத்தன்றோ கிடைக்கும்.

சுசீலை.—ஏன் மதுரைக்குப்போதல் வேண்டும் அதன்பொருட்டு? நம்பாலுளதன்றோ?

நீல.—வேண்டுமேல் கொண்டுவருகின்றேன்.

சுசீலர்.—அந்நூல் என்னிடத்துமுள்ளது. அதைவேண்டினேனல்லன், யான்விரும்பிய மணிமேகலை அம்மணிமேகலை யல்ல. வெண்ணெயைக் காத்தில் வைத்துக் கொண்டு நெய் தேடுவானேன்? இம்மணிமேகலையே. [சுசீலையைச் சுட்டிக்காட்டுகிறார்.]

நீல.—அம்ம! மணியிழைத்ததல்லவே யெனச் சந்தேகித்தேன். மணி யென்பதற்கு இங்கு அழகு எனப் பொருள் கொண்டனரோ?

சுசீலை.—(தோழியை நோக்கி)யானும் அப்படியே சந்தேகித்தேன் ஆதலின் தாழ்த்தனன். (சுசீலரை நோக்கி) பொறுக்க! நீர் காதலித்த இம்மேகலையையே பெறுக. [கைகுட்டையை வணங்கித் தருகின்றனள்.]

சுசீலர்.—தாழ்குழலே! பெற்றேன். பெற்றேன். நின்னையே பெற்றேன். நின் திருவாக்காற் செப்பவும்

பெற்றேன். நின் திருக்காத்தா லளிக்கப்பெற்ற பாக்கியமே பெரும் பாக்கியம். இதுபோன்ற இன்னும் எது தரினும் பெறுவேன்: நின் பரிசம்பட்ட மாத்திரையே பாவசமடையப் பெற்றேன். பாவசமென்று......கூற. எடுத்துரைக்க....என்னென்று எடுத்துரைக்க. இப்பேறன்றோ பெற விரும்பினேன் பெண்மணி. எத்தகையரும் பெறலரிய பேறு. பேறெனப்படுவது ஈதேயாம். இப்பேற்றைப்பெற்றாரே மக்களெனப்படுவர். மேகலையை யடைந்தோரே மேன்மையுடையார் ஆவர். என் மனோதம் நிறைவேறல் என்றோ என ஏக்க—முற்று-ஆ-அம்மம்ம. நின்காதற் கடலுள்மூழ்கிப் பிரேதம்போற் கிடந்ததை யாவரறிவர். நின் திருமுகத்தைக் காணுஞ் சமயம் வாயாததால் நின்னைக்காண்பதற்குப் பதிலாக நினதுருவமைந்த படத்தை இன்றிரவுகண்டபோது மஞ்சத்தின்மீது நித்திரைநீத்து பெருமூச்செறிந்து உயிர்துறக்கத் துணிந்த தன்மையையாவரறிவர். ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாய்க் கழிந்ததை யாவரறிவர். ஆரணங்கே! அவை எங்ஙனமாயினுமாகுக. அவை யிற்றைப் பேசுவதால் யாதோர்பயன்? நின்னோடு கொஞ்சிக்குலாவி வானுடருந் தீண்டரிய நின் சண்பகமனைய செம்மேனியைத் தீண்டப்பெற்ற புண்ணியம் வாய்ந்த இன்னாளே நன்னாள். இப்பிறவியா லடையும் பயனுமின்றே சித்தித்தது. யான் எண்ணியவெல்லாம் இன்றே எய்தியது. இன்னும் இவ்வுலகிற் பெறவேண்டிய இன்பம் யாதுளது? யான் கருதியவாறே முற்றுவித்த நான்முக னுளும்

வாழ்க. வாழ்க. என்னுடல்பொருள் ஆவியெல்லாம் நின்வசமே யாகுக. இன்றுமுதல் நினக்கு மணிமேகலா என்னும் நாமமே வழங்குக. வழங்குக. வழங்குக. இச்சுசிலனுங் காதலனை இம்மேகலையேபெற்று நீடுவாழ்க! வாழ்க! பொற்கொடியே!

மணிமேகலா—இங்கில்லையே. மணிமேகலா என்பாளே இங்குள்ளாள்.

நீல.—யான் அறியாத பொற்கொடி இங்கு எங்கு இருக்கின்றது?

சுசீலர்.—உள்ளதே! இங்குள்ளதே! இல்லையா? கண்இல்லையா? இப்பூங்காவனத்தேயே யுள்ளது! உங்கள் நேத்திரங்களுக்குப் புலப்படாவிடின் எனது நேத்திரங்களுக்கும் புலப்படாமலா இருக்கும்?

நீல.—இருந்தா லன்றோ யெமக்குப் புலப்படும்?

சுசீலர்.இதோ உள்ள இச்செடிகளினின்றும் படர்ந்துள்ள கொடிகள் போன்றதன்று அப்பொற்கொடி. இப்பூமியினின்றுந் தோன்றியதுமல்ல. மணியே! கவனிப்பாயாக! இந்துமதி மணிவயிற்றின் இனிது தோன்றி நீலாளைப்போன்ற பாங்குடைய பாங்கியர்கள்மருங்கு சூழப், பட்டவர்த்தனர் தாழ, அணிமுடி அணிந்து வெண்குடை நிழல் செய்ய வேந்தனென்ன விளங்கும் என்னுடன் மணி மகுடந் தரித்து மணிமேகலை யென்னப் பூவுலகம் புகழுமாறு பொன்னரி அணைமீது அமர்ந்திருக்கும் புண்ணியம் வாய்க்கப் பெற்றுளே அப்பொற்கொடி யாவாள் என்றறியாததென்னோ சிந்தாமணியே! சிந்தாகுலந் தவிர்ந்ததோ?

மணி.—காமம் புனையவல்ல நாயக!

சுசீலை யென்பது மணிமேகலையாய் அம்மணிமேகலை யுஞ் சிந்தாமணியாய் விட்டதோ ? இச்சிந்தாமணியையுஞ் சீக்கிரம் மாற்றிவிடுவீர் போலும். எத்தனையோ சிந்தா மணி யிருக்கின்றதே சிகாமணியே! திருப்பாற்கடலில் உள்ள சிந்தாமணியா ? வைத்திய சிந்தாமணியா ? வைத்திய ராச சிந்தாமணியா? பதார்த்த குண சிந்தாமணியா? சிந்தாமணி யென்னும் நூலா ? சீவக சிந்தாமணியா ? அபூர்வ சிந்தாமணியா ?

சுசீலர்.—விவேக சிந்தா மணியே! சிந்தாமணி யென்ன யான் அழைத்தற்கு நீஉரியவளே யாவாய். நினக்கு இத்தகைய நாமங்க ளெல்லாம் பொருந்தும்.

மணி—எவ்வாறு !

சுசீலர்.—சூளாமணியே! வைத்திய ராச சிந்தாமணி பிணி களின் குணங்களையும் அவைகளை நீக்கும் அவிழ்தங் களையும் கூறிப் பிணி யகற்றுமாறும், பதார்த்த குண சிந்தாமணியானது பதார்த்தங்களின் இலட் சணங்களை உணர்த்தி இன்பம் பயப்பதுபோ லும், சீவக சிந்தாமணி யானது கற்றோர்க்கு வேண்டிய விஷயங்களை யறிவிக்குங் களஞ்சியமா யிருப்பது போலும், நின்னைக் காணவேண்டி ஏக்க முற்று உணவற்று உறக்கமும் அற்று வருந்தியஎன க்கு நின்னையே மருந்தெனக்காட்டி அவ்வியாகுலத் தையோட்டி எனதுயிரைக்காக்க வீணையை மீட்டிச் சுருதிகூட்டி இங்கு வருவித்து மகிழ்வித்தா யாத லால் வைத்திய ராச சிந்தாமணியாயும், (அருமை யான பதங்களைப் பிரயோகித்துப் பொருளை யறிவிக் கும் கலாநிதியாயிருத்தலால்) பதார்த்தகுண சிந்தா

மணியாயும், (கற்பியலும் பிறவியலும் கல்விச் செல்வமாம் பெருஞ் செல்வமும் ஒருங்கே அமையப்பெற்றுக் கவிபச்செய்தனைப் பலகாலும் என்னை யாதலால்) சிவகசிந்தாமணியாயும் விளங்கு கின்றுயென்பது பொருந்தும்.

மணி.—[நகைத்துக்கொண்டு] பொருந்தும் பாவலர் ஏறே! பெறுதற்கரிய மானுட சரீரத்தாற் பெரும்பயனே இவை? நம்மதென்று நாமிருப்ப நாய் நரிகள் பேய் கழுகு தம்மதென்று தாம் கருதுகின்ற பொல்லாப் புழு மலிநோய்ப் புன்குரம்பையைப் புற்புதமென்றுணர்ந்து இப்பொய்யுலகிலும் பொய்யுடலிலும் பொய்யுறவிலும் பொய்ப்போகத்திலும் உள்ள பாச வீக்க நீக்கிப் பரமசுக நிஷ்டைகூடிப் பரமானந்தத்தை யனுபவித்துப் பரமனடி சார்தலைவிடுத்து, நம்மனைய அறிவாளிகள் அருவருக்கத்தக்க இவ்வற்ப சுகத்தின்பொருட்டு இங்குற்று தாம் பட்டபாட்டைப் பெரும்பாடாய்ப் பாராட்டிப் பன்னிப் பன்னிப் பாவையின் சேவையைப் புகழ்ந்து கோவை பாடி என்னைக் கண்ட கண்களே கண்கள் என்றும் என் சொற்கேட்ட செவிகளே செவிகளென்றும் கண்ணென்றும் மணியென்று மென்பால் கூசாது குறையிரத்தலினும் நந்தேவைப் பன்முறை வியந்து வியந்து நன் மாலையாஞ் சொன்மாலை நாவாரச் சூட்டித் துதித்தலே நன்மையன்றோ?

"கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

கன்றுதலா லயனேக்குங் கண்கவே கண்கள்
  கறைகண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணெருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
  பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னுவே நன்னுப்
  பான்சரிதையே கேட்கப்படுஞ் செவியே செவிகள்
அண்ணல் பொலங் கழலனைக்குநெஞ்சகமே நெஞ்சம்
  அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை

என்ற ஆன்றோர் வாக்கை மறந்தீரோ ?

திரு அங்கமாலை

திருச்சிற்றம்பலம்.

தலையே நீ வணங்காய் - தலை - மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத், தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ, கடல்-நஞ்சுண்டகண்டன் றன்னை
யெண்டோள் வீசிநின்றடும் பிரான்றன்னைக்,கண்காள்காண்
[மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ, சிவ-னெம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் றிறமெப்போதுஞ்-செவிகாள்
[கேண்மிகளோ.

மூக்கே நீ முரலாய், முது-காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை, மூக்கே நீ முரலாய்.

வாயே வாழ்த்து கண்டாய் மதயானையுரி போர்த்துப்
பேய் வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை-வாயே வாழ்த்து
[கண்டாய்.

நெஞ்சே நீ நினையாய், நிமிர்-புன்சடை நின்மலனை
மஞ்சாடுமலை மங்கை மணாளனை, நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர், கடி-மாமலர் தூவிநின்று [தொழீர்
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக், கைகாள் கூப்பித்
ஆக்கையாற் பயனென், அரன்-கோயில்வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றி யென்னுதவிவ், வாக்கையாற்
[பயனென்

காலிகளாய்ப் பயனென், கறைக்-கண்டனுறை கோயில்
கோலக்கோபுரக் கோகாணஞ் சூழாக்-காலிகளாய்ப் பயனென்.

உற்றரா ருளரோ, வுயிர்-கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லா லமக்கு, குற்றாருளரோ. [பட்டுக்

இருமாந் திருப்பன் கொலோ, வீசன்-பல் கணத்தெண்ணப்
சிறுமானேந்தி தன் சேவடிக் கீழ்ச் சென்றங், கிறுமாந்திருப்
[பன் கொலோ.

தேடிக் கண்டு கொண்டேன், திருமாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணுத் தேவனை யென்னுளே, தேடிக்கண்டு
[கொண்டேன்.

என்னுந் திரு அங்கமாலையை மறந்திரோ ?

திரு ஆரூர்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்கா டீவினைகா டிருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ணாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றே
னிடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே.

என்று தமிழ் வேதம் அறுதியிட்டுரைத்த தன்றோ ?

சுசீலர்.—உலகானுபவ மற்ற ஒண்டொடி !

நன்றே யுரைத்தாய் ! வாளாநகைத்தாய் ! அம்பிகை பாகன் திருவடியடைவான் வேண்டி உலகினர் நன்னெறியி லொழுகுமாறு நன்னீதியே புகட்டவந்த திருக்குறள் என்னுந் தமிழ் வேதத்தின் கண் தெய்வப்புலமைத் திருவள்

ளுவ நாயனுர் மக்கள் உயிர்க்குறுதிபயக்கும் அறம், பொருள், இன்பம் வீடு என்னுஞ் சதுர்வித புருடார்த்தங் களை அறத்துப்பால், பொருட்பால், காமப்பால் என முப் பாலாய் வகுத்தருளிய உண்மையறியாது கூறுகின்றாய். அம்மெய்நூலில் முதற்கட் கூறிய அறம் என்பதையும் இல்லறம் துறவறம் என இருபகுதியனவாக வகுத் துள்ளார். அவற்றுள் இல்லறமென்பது இல்லின் கணி ருந்து செய்யப்படும் அறம் எனப் பொருள்படும். அது தான் கல்வியானுன்ற தலைவனுங் கற்பானுன்ற தலைவியும் அன்பும் அருளுங் தாங்கி இன்சொல்லுடையராய் ஒத்த மனத்தோடு தென்புலத்தார், தெய்வம், விருந்தினர் சுற் றத்தினர் முதலியோரை நூல்கள் விதித்தவாற்றான் ஓம்பி அந்நெறிக்கண் வழுவாது ஒழுகுதலாம். இச் சிறப்பை நோக்கியே.

"இல்லற மல்லது நல்லற மன்று" என்றார் ஔ வைப் பிராட்டியாரும்.

"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை யஃதும்
பிறன் பழிப்ப தில்லாயி னன்று"
"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை"
"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல்தலை"
"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் துணை"

என்றார் குறளாசிரியரும்.

"இல்லறமே வாழ்வினுக்கு முயர்கதிக்கும் வேரு மாம் வித்துமாம் எனும் வேதம்"

என்றார் பிறரும். இன்னவையை பிற பிரபல பிரமாணங்

களும் இதனை வலியுறுத்தும். நல்லறநெறியாய இவ் வில்லற நெறிநின்ற அம்முதற் பாவலரும் அவர்போல் வாரும் இன்பந் துய்த்தலுக் கிடனுய இத்தேகமானது மலக்கூடு என்றும், புன்புலால், மயிர், தோல், நரம்பு, என்பு மொய்த்திடும் புலைக்குடி லென்றும், புழுக்கூடு என்றும், பன்னோய் மலிந்த பாண்டம் என்றும், பஞ்சபூதபேதத்தி னுல் ஆயதென்றும் நீர்மேற் குமிழிபோல் நிலையற்றதென் றும் அறியாமலா இருந்தனர்.

மணி.—சிவ! சிவ! அபசாரம்! அபசாரம்! அறிஞர் கள் இவ்வற்ப விஷயத்தை அறிந்துகொள்ளாமலும் இருப்பார்களா?

சுசீலர்.—அங்ஙனம் இத்தேக மனித்திய மென்றுமிதனுல் வரும்பயன் அற்பமென்றும் அறிந்த அறிஞர்கள் தானே?

மணி.—ஆம். அறிந்தோரே யாவர். அறிந்திருந்தும் கட் டுண்டிருந்த தென்னே இப்பாசத்தில்?

சுசீலர்.—பாசவீக்க நீக்கிய பற்றற்ற பரமஞானியைப் போல் நீ நடிப்பது நகை தருகின்றது நகைமயிலே! நந்தவனத்துள்ள நாமிருவரும் பசு ஞானிகளே என்பதை யறியாய்போலும். ஆன்மாக்களெல்லாம் அனுதியே பாசத்தில் கட்டுண்டவராயினும் இல்லற ஞானிகள் இச்சைவழி செல்லும் இயல்புடையார் அல்லர் ஆயினும் "வரையாநாளின் மகப்பேறு குறித்துப் பெருநலந் துய்க்கும் பெற்றித்தன்றே" "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதந ன்கல நன் மக்கட் பேறு" என்றவாறு புத்திரப்பே றுற்று அத

ஞல் நற்கதி யெய்துவான் வேண்டியே காமந்துய்த்தனர் என்றறிவாயாக.

மணி.—இப்பெற்றித்தாய இவ்வில்லற நெறிக்கணின்று புத்திரப்பேற்றைப் பெறுதலால் நற்கதி யெய்துமோ ?

சுசீலர்.—இல்லறத்தி லிருந்து நனி முத்தி பெற்றோர்
இல்லறத்திற் சிற்றின்ப வியல்பு நீக்கி
நல்லறமாந் துறவறத்தி னின்று பெற்றோர்
நற்பிரம சாரிகளா யருள்பெற் றுய்ந்தோர்
செல்கதிசற் குருவருளாற் சென்று சேர்ந்தோர்
சிவபூசை செய்து பா முத்தி பெற்றோர்
புல்லறிவு தவிர்ந்துதிரு வேடமே மெய்ப்
பொருளெனக் கொண்டானடிக்கீழ் பொருந்தப் புக்
[கோர்.”

என உமாபதி சிவாசாரியார் கூறியருளிய உண்மையால் இல்லற நடத்துவோர்க்கு நனிமுத்தி சித்திக்கும் என்பதில் ஐயமுண்டோ ? சித்திக்கும். முத்தியே சித்திக்கும். நமக்கும் நனிமுத்தி சித்திக்கும். சித்திக்குமோ அன்றோ எனச் சிந்திக்கவேண்டாம் !

மணி.—மகப்பே றில்லாவிடில் என்ன !

சுசீலர்.—“ மகப்பெறு மானிடர் வான் புகப்பெறுர் மன்னனே போந்து ” என்றாராதலின் புத்திரபாக்கியம் பெற்றாரே புனிதராவர். அல்லாதார் அல்லாதாரே.

“ பொன்னுடையரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாதவர்.”

என்பதை யறியாய் கொல்லோ ?

மணி.—செந்தமி மூய்ந்த செந்நாப் புலவ!

செப்பிய யாவுமென் செவிக்குணவாகும் புண்ணி யத்தை யின்றே பெற்றனன். அவற்றுள் சிற்சில சந்தே கங்களும் நிகழ்ந்துவிட்டன. ஆயினும் காலாதீதமாகிறது.

நீல.—ஆம் அம்மணி! வருக. இவ்விதம் கண்விழித்தால் தங்களுக்கு சௌக்கியக் குறைவாகும். அவசிய மாயின் நாளை அச் சந்தேகங்களை நிவர்த்தி செய்துக் கொள்ளலாம். வருக.

மணி.—ஆம். போதல்வேண்டும்.

சுசீலர்.—நின்பாங்கி கூறுவன கேட்டு ஆம் என விடை யளித்ததேபோல ஏனோ எனக்குத் தக்க விடை யளித்திலே? என் வினுக்களுக்கும் "ஆம்" என் னின் இழுக்கென்னோ? இன்றைக்கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்ற முதுரையை மறந்தாய்போலும்! "நாளை நாளை யென்பிராகி னமனுடை மூறைநா ளாவதுமறியீர் நம்முடை முறைநா ளாவதுமறியீர்." நாளையா? அறியாதுரைத்தீர்கள். காலாதீதமாயினும் காற் றுள்ளபோதன்றோ தூற்றிக்கொள்ளல்வேண்டும்.

நீல.—இளவரசர் கூறுவது முண்மையே யாகும். காய மனித்தியந்தான். காலையில் எழுந்திருப்போமென் பதும் நாளைக்கு இங்கு வருவோமென்பதும் நிச் சயமா? இப்போதே அச்சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்துகொண்டுபோய் விடுதலே நலமெனக் கருது கின்றேன். இருந்தநோ மிங்கிருந்து இவ்வொரு குறை ஏனோ?

மணி.—தாங்கள் "நந்தவனத்துள்ள" நாமிருவரும் பாச

ஞானிகளே யென்றும் நமக்கும் நனிமுத்தி சித்திக்கும் எனப் பலகாலும் வற்புறுத்துவ தென்னேயோ?

நீல—நான் முன்னமே இப்படியே நினைத்தேன். கேட்க வேண்டியதே.

சுசீலர்.—நீ இவ்வாறு வினவுவதால் எனக்குஞ் சந்தேகமே நிகழ்கின்றது. ஒன்று ஒன்றே. இரண்டு இரண்டே. இருவரும் என்னாது வேறென்னுரைக்க? மூவரென்பதா ?

மணி.—அல்ல.

சுசீலர்.—நினது பாங்கியும் சேரின் மூன்றுதான். அவ்வாறு நின் பாங்கியை நீக்கிக்கூறுறு தென்பதோ நின் கருத்து.

மணி.—அல்ல.

சுசீலர்.—அல்லது இருவரும் எப்போதும் ஒன்றே என்னல் வேண்டுமோ ?

மணி.—[நகைக்கின்றனள்]

சுசீலர்.—சரி. சரி. குற்றந்தான். இருவர் எனப் பிரித்துக் கூறியது குற்றந்தான்.

மணி.—அல்ல. அல்ல!

சுசீலர்.—நம் இருவருக்கும் உடலிரண்டானாலும் உயிர் ஒன்றே என்று விளக்கிக் காட்டல் வேண்டுமோ? சிநேகியல்லவா ?

மணி.—சினம் என்பதற்கு உயிர் என்றும் ஏகி என்பதற்கு ஒருத்தியென்றும் பொருள்கொண்டதும் பொருத்தமுடைத்தோ? அற்றன்று.

சுசீலர்.—மற்றியாதோ ?

மணி.—காவலரேறே? தம்முடன் யாரைச்சேர்த்து "நாம் இருவரும்" என்றீர்?

சுசீலர்.—கூட்டவேண்டியவர்களையே கூட்டி யுரைத்தனன்.

மணி.—யாவரோ அன்னார்?

சுசீலர்.—கேட்டலும் வேண்டுமா? முன்னரே அறிந்திருத்தல் வேண்டுமே? அறிவினாவோ?

நீல.—அறியாவினாவே!

சுசீலர்.—காதற்கனியே! கனிவுடன் நின்னையே யென்றறிவாயாக.

மணி.—[மௌனம்]

சுசீலர்.—ஈதென் மௌனம்? இம்மௌனம் நினது நன்னெஞ்சத்தின் ஆழத்தையும் வன்மையையும் கல்வித்திறனையுமே காட்டுகின்றது. நின் கருத்தை என்மாட்டுரைக்க வெட்கியோ, யான் அன்புடையனாயினும் யாது நினைப்பேனோ என்று அஞ்சியோ, பெண்பாலரே வாய்திறந்து சொல்லல் அழகல்லவென எண்ணியோ, "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்" என்னு மூதுரைக்கிலக்கியமா யிருக்கின்றனை யென்பதைக் காட்டும்பொருட்டோ, அவ்வாறு நீ இலக்கியமாயிருத்தலை அறியும் இலட்சணம் என்னிடத்துள்ளதோ வெனச் சோதிக்கும் பொருட்டோ, நின் அன்பை வெளியிடாது என்பால் அன்பிலாள்போல் நடிக்கும் பொருட்டோ, காதலர் நெஞ்சகத்து வேரூன்றிக் கிடத்தலாய நிலைமாறுத லிலா யன்பின் தன்மை எற்குள்ளதோ யெனத் தெளியும் பொருட்டோ, யான் அன்புடையனேனும் அவ்வன்புடைமையை அறிவுடையார்போல் அறி

விக்கும் பெருந்தகைமையும் அனுபவமும் உடைய னே என அறியும்பொருட்டோ, யான் ஆடவனாயி னும் பெண்களுக்குரிய பேதமைக்குணம் [அறிந்தும் அறியார்போன்றிருத்தல்] என்னிடத்துள்ளதோ வெ னத் தெரிந்துகொள்ளும் பொருட்டோ, உனது தகப்பனது அபிப்பிராயத்தைத் தழுவியே நடத்தல் வேண்டுமென்றோ, நின் கலியாணவிஷயமாக நடை பெறுவனவற்றை யெல்லாம் நன்கறிந்து என் அகக் குறிப்பைத் தெளிந்தபின் நாளடைவில் கருத்திற் கிணங்கி கவலையை நீக்கக்கருதியோ பேசாமடந் தையா யிருத்தல். அல்லது நூலொடு பழகியும் சேலன்ன விழியரைச் சேர்த்து "நாம் இருவேமும்" என்றது நலமன்று யென்பதோ நின்கொள்கை? இப் போதேனும் மெய்ம்மையே புகல்வாயென எண்ணு கின்றேன். தெரிந்தனையோ தீங்கனியே!

மணி.—இலனே இளமன்னே!

சுசீலர்.—ஏனோ ஏந்திழையே!

மணி.—நீர் சேர்த்த நங்கையாய தீங்கனி யென்பார் இங் கொருவரும் இலரே.

சுசீலர்.—இவ்வாறு காந்துரையாட எங்கு கற்றனையோ? காதற்கிளியே! கலந்துரை யாடும்போது காந்துரை யாடல் இயற்கையோ நினக்கு? தீங்கனியும் நீயே! நங்கையாய மங்கையும் நீயே யாவாய்! நின்னைச் சேர்த்தே நாம் இருவரும் என்றேன்.

மணி.—ஏன் உம்முடன் என்னைச் சேர்த்தீர் ஏந்தலே!

சுசீல.—நின் வாணாள் வீணாளாகா வண்ணமும் நற்கதி

யடையும் வண்ணமுமே நவின்றனன் நாயக ரத்தி னமே!

மணி.—[நீலாவை நோக்கி] வளர்கின்றது போலும் பிரசங்கம். வாடிபோகலாம்!

நீல.—காலமாகிறது. ஆயினும் நற்கதி யென்கிறாரே! அக்கதியைக் கேட்டு அகலலாம் அவரை விடுத்து.

சுசிலர்.—நற்றோழியே வாய்த்தனள் நாயகி.

மணி.—நாயகியா? உம். தங்களுக்கு ஏற்றவாறு பேசிவரின் தகுந்த தோழி யென்பீர்போலும். சமயோசிதமாகப் பேசப் பழகி யிருக்கின்ற சார்வபௌமா! என் வாழ்நாட்களை யெல்லாம் நன்னூல்கள் பயின்றும் நம்பன் அடியார்க்குத் தொண்டு செய்தும், நற்கதியடைய நன்னாட்களாகவே கழித்து வருகின்றனன். வீணாட்களாக்க முயன்றேன் இல்லை. முயல்கின்றேன் இல்லை. முயல்வேன் இல்லை. அல்லலை விளைக்கும் அதிக்கிரமமான சொற்களை உபயோகித்தல் அழகல்ல உமக்கு.

சுசிலர்.—கற்றார் தோள் சேர்ந்து வாழ்தல் அல்லல் ஆகாது. அல்லல் அறுப்பார் என் போன்ற அறிவுடையார்.

மணி.—அல்லலா அறுப்பீர். அறுக்கத்தான் பார்க்கின்றீர். எல்லாம் வாயேலேயே அறுப்பீர் போலும். பயனில்லாச் சொற்களே பகர்கின்றீர்.

“இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தை வழி
செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே”

என்ற பாவைக் கற்றும் காற்றிலே விடுத்தீரே வீணாக யென விசனிக்கின்றேன்.

நீல.—அவர் சொல்வதால் தங்களுக் கென்ன குறைவு? அவர் வாயோடேயே போகிறது.

மணி.—வாயோடா? கற்றூர் தோளோடு என்கிறூரே கவனிக்க வில்லையா? சில பெண்டு பிள்ளைகள் போல பண்டு பதார்த்தங்களில் இச்சைவைத்து தூங்குவதேதொழில் எனக்கருதி பெருந் தேவியம்மாளுக்கா எனது நாட்களை யெல்லாம் சிலவிடுகிறேன் யான். வீணுளாம். நாயகியாம். அல்லலறுத்தலாம். என்ன பாடமடி இது?

சுசீலர்.—வாணுதலாய்! வாசித்தவற்றை வாயுபகவானுக்கு வகை யறியாரே ஒழிப்பார். தீய விஷயங்கள் தீயன என்று தீயிலே விட்டாயென்றும் நல்லனவே நாடுகின்ற இந்த நாயகனையே நாடுகின்ற நாயகாத்தினமாய் விளங்குகின்றூ யென்றும் அறிந்துதான் அவ்வாறு அரைந்தனன். ஆயினும் வாதாடி வாதாடி இளைப்புங் களைப்பும் உற்று இருக்கின்றூயே என்றும் வருந்துகின்றேன். ஆதலால் யான் கூறுவன கேட்டு என் கூட்டுறவையே கோருவாயானல் குதூகலமடைந்து குறையெல்லாம் நீங்கப்பெற்று நீடுவாழ்வாய்! பற்றுடை யானையே பற்றல்வேண்டும் பாவாய்! குவலயம் போற்றும் கொற்றவன் என்று அறியாயா குணமிக்காய்?

மணி.—பற்றுடையாரைப் பற்றுடையாளே பற்றல்வேண்டும். பற்று அற்றவள் பற்று உற்றவரை ஏனே பற்றுதல் வேண்டும்? குவலயம் போற்றினும் குணமில்லாக் கொற்றவரைக் கொற்றவர் என்னலுங் குற்

றம் அன்ரோ ? தம்மைப் பற்றுவதால் பற்று பதி னாயிரம் பங்கு அதிகமாகும்.

நீல.—இளவரசர் பற்றறுக்காரா ? உள்ளபற்றை ஒழிப்பா ரென்றே நினைக்கின்றேன். பரமயோகி போலும்.

மணி.—நினைப்பாயடி நினைப்பாய். அவரும் நினைப்பார். நீயும் நனைப்பாய் நீரில். பரமயோகியா ? யோசியா மல் யோகியென்ருய். சரியை, கிரியை முடித்தோ ரன்ரோ யோகியாவார். "யோகியர்க்கே ஞானம் ஒழுங் காம் பராபரமே" என்ருரே மெய்ஞ் ஞானியார். யோகியர்கள் ஞானத்தையே நாடுவர், ஞானிகளையே தேடுவர். அப்பெரியோரையே கூடுவர். பேரின்பத் தையே பெற விரும்புவர். பெறுதற்குப் பாடுபடுவர். அப்பேற்றைப் பெற்றபின் அவ்வின்பத்தின் பெரு மையையே வியந்து வியந்து விதந்து விதந்து பேசா நிற்பர். அஃதே பெறலரிய பேறு'என்பர். அது விட யமாகவே திருவருளை நினைந் துருகுவர். வீண்காலம் கழியார். ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கருதாநிற்பர். அவர்கள் பசி, பிணி, நரை திரை முதலியனவற்ருல் வருந்தார். நங்கையர்க ளுலவும் நந்தவனத்தை நணுகார். நையார். இப் பண்டித சிகாமணியார் சிற்றின்பத்தையே நாடுகின் ருர். அதை வியந்தே பாடுகின்ருர். அறியாமை யால் ஆடுகின்ருர். அதன் பொருட்டே நங்கை யாய தீங்கனியைத் தேடுகின்ருர். பாவையரை நினைந்து வாடுகின்ருர். இதிநிமித்தம் இவர் பட்ட பாட்டைப் பாசிவம் அறியு மென்கின்ருர். அதையே பெரிதாக மதித்துப் பேசுகின்ருர். இப்பேற்றைப்

பெற்றதே பெரும்பாக்கிய மென்கின்றார். இதன் பொருட்டே இறைவனைப் பிரார்த்திக்கின்றார். அருமையாங் காலத்தை அவமாக்குகின்றார். மத்தேறி உடைதயிர்போல் மனங்கிடக்க வருந்துகின்றார். பாழாம்பிணியால் நொந்து நரைதிரை மூப்புக்கிரையாக விரைகின்றார். வாய்ப்பறை யறைகின்றார். உத்தியானவனத் துள்ளார்மீது குறையுரைக்கின்றார். இளவரசரென்றே அழைக்கப்படுகின்றார். எங்ஙனமடி யோகியாவர்? இவர் பற்றையே யொழிக்காதபோது என் பற்றை யெவ்வாறு ஒழிப்பாடி? இவர் தம் இளைப்பையுங் களைப்பையும் அறியாது யானிளைத்துங் களைத்து மிருக்கின்றேன் என்கின்றார். யானோ இளைத்திருக்கின்றனன்?

நீல.—அவரதிளைப்புந் தங்களதிளைப்பும் ஒன்றாகா. அவர் கண்ணொளி இளைத்திருப்பதால் பார்வைக்குத் தோன்றுவனவெல்லாம் இளைத்துள்ளன போலவே தோற்றப்படும்.

சுசீலர்.—என்னை? இளைப்பில் இருவிதமுளதோ?

நீல.—அரசே! இருவிதமா? பலவிதமுள்ளன. எனது பெருமாட்டிக் குற்ற இளைப்பு நித்திரையின்மையான். தமக்குற்ற காரணத்தைத் தாமே பலமுறை கூறிவிட்டீர்கள் ஆதலால் யான் சொல்லவேண்டியதனாவசியமாகும்.

சுசீலர்.—பிரசங்க சிந்தாமணியே!

எங்ஙனம் யோகியாவேனோ என்றனை. அதனால் யோகியாகேன் என மதித்தனைபோலும்! நீயே யோசியாது யோகியன்று என்றனை. பாங்கியுரைத்த பாங்கே

பாங்கு! பற்றற்ற பரமயோகிகளே பற்றொழிப்பார் என்ற பண்டிதையே! பற்றறுக்கேன்யான் என மதித்தனைபோலும். பற்றறுத்தேன் அல்லனோ? பற்றுவாயாக எந்தனையே! யான் பரமயோகி என்றறியாய் போலும். எப்போது நின்னை மணந்து நின்னுடன் வாழும் யோகத்தைப் பெற எண்ணினேனோ அப்போதே பரமயோகியானேன். யோகியர்க்குரிய இலட்சணங்கள் என்பால் இல என எங்ஙனங் கண்டனை? அமிழ்தினு மினிய தமிழ்மணங் கமழுஞ் செவ்வாயால் சிவமணங் கமழுந் தேவாரப்பதிகத்தை என் செவிக் கின்பமுட்டச் செவ்விதின் ஓதக்கேட்டு இங்குற்ற முதல் கண்களில் நீர்ததும்பக் கரணங்களோயக் கடவுளையும் அப்பெருந்தெய்வத்தைப் புகழ்ந்த நின்னையும் என்னை மறந்தே எண்ணி எண்ணி ஏத்தி நிற்கின்றேன். கற்றவளாதலாலும் குற்றத்தையே பாராட்டுகின்ற குணமுடையா ளாதலாலும் சிவபெருமானைத் துதித்தலே தக்கதென்றும் நின்னை நினைத்தல் தக்கதன்று என்றும் வினாவாகிய பாணத்தை யென்மீது எய்யும் அமயத்தை எதிர்பார்த்திருக்கின்றா யாதலாலும் அக்கடாவருமுன் தக்க விடையைத் தருகின்றேன். கவனிப்பாய்! எங்கும் வியாபித்து நீக்கமற நிறைந்த பரிபூரணன் நின்னிடத்தும் வீற்றிருக்கும் உண்மையாலும், நீறணியுங்கோலம் நின்பால் நிகழ்கின்றமையாலும்,

"எவரேனுந் தாமாக விலாடத் திட்டதிருநீறுஞ் சாதனமுங்
கண்டா லுள்கி
உவராதே அவரவரைக் கண்டபோ துகந்தடிமைத் திறநினைந்
துவந்து நோக்கி [தங்
இவர்தேவரவர்தேவ ரென்றுசொல்லி யிரண்டாட்டா தொழிந்
தீசன்திறமே பேணி

கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றப்பூர்
நடுதறியைக் காணலாமே.''

எனத் தமிழ்வேத முழங்குமாறும், பூதியணிந்தார் எவரேனும் அப்புண்ணியரைப்போற்றிப் புண்ணியமடையப் பெறுவாரும் புண்ணியரே யாதலானும், நீ அருட்பாவைப் பாடி ஆனந்தித்து அருளுக்குப் பாத்திரமாகும் பாக்கியத்தைப் பெற்றிருப்பதைச் சிவனை

'' செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந்தலை ''

எனச் செவிமடுத்து ஆனந்திக்கும் பெருஞ் செல்வத்தைப் பெற்று பசிப்பிணி முதலியன நீங்கி நின்மலமா யிருக்கின்றேன் இப்போது ஆதலாலும் பரமயோகியானேன் என்று அறிந்திலை போலும். இனி ஞானமுங் கைவரப் பெறுவேன் என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை. ஆதலால் என்னையே பற்றக் கடவாய்!

மணி.—ஒருவர் பாடும்போது மற்றையோர் இன்புறுதல் இயற்கையே ஆதலானும் அவ்வின்பத்தைச் சிறிது போது அனுபவித்தமையானேயே சிவாநந்த வாரியில் திளைத்திருக்குஞ் சிவஞானி யென்ன நீர் இறுமாந்து உபந்நியசிக்கத் தொடங்கியதைக் கேட்ட தோழியும் நகைக்கின்றனள். இந்த அவகதையை இந்நந்தவனமே கேட்டு மகிழவேண்டும். என்னிடத்திற் செல்லாது. எனக்கு உத்திரவு கொடும். போதாயிற்று-

சுசீலர்.—நீ சிறிது நேரம் பாடிவிட்டதை நினைந்தே சிற்றின்பத்தை முற்றும்வெறுத்த சிவனடியர் போலப் பகட்டு செய்தலை நின்னையொத்த சிற்றிடை யாரும்

சிற்றின்ப அனுபவம் இல்லாதாரும் யானும் என் போல்வாரும் எள்ளிநகையாடற் பாலதே. இவ்வெண்ணிலவும் தண்ணீர்மைக் கிரணங்களாய கண்ணீரைத் தாரை தாரையாய்விட்டு நகைக்கின்றதுபோல் அழுகின்றது. அநுபவமில்லாத ஞானம் ஆபத்தையே தரும் என்றறியாமல் நீயே யிருமாந்திருக்கின்றாய். ஓர் மலைமீது சென்று அங்குள்ள அற்புதங்களைக் காணவேண்டும் என்னும் ஆசையுடையான் ஒருவன் நிலத்திநின்ற வண்ணமாக எங்ஙனம் நினைந்த இடத்திற்குச் செல்வன்? படிப்படியாய்ப் போயின் அன்றோ குறித்த தானமாகிய அக்குன்றின் மீது ஏகல் கூடும்? நந்தவனத்திலேயே வாசாஞானத்தால் பந்தந் தொலைத்தோர் கதை எந்த நூலினும் இல்லை. சோபான முறையிலே நின்று சான்றோர் சொல்லிய நெறிப்படி பயின்று என் சொல்வழியாய நல்வழி கடைப் பிடித்து வதுவை புரிந்து வாழ்க. கொல்வழியாம் பல்வழியில் செல்லற்க. பின்னர் அஞ்ஞானம் விளங்கும்.

நீல.—அம்மையார் இதுவரையில் செல்வழியிலேயே செல்கின்றனர். பல்வழியில் போகச் சொல்லினும்போகார். ஆயினும் பாரியாள் பல்வழியில் எவ்வாறு புகுந்து போதல் கூடும்? பல் உடைந்துவிடாதா? சோபானம் என்றால் படி என்பதே பொருளோ?

சுசிலர்.—(நகைத்துக்கொண்டு) ஆம். என் சொற்படியே!

மணி.—இவர் சொற்படி நடக்குமாறும் இவரையே வதுவைசெய்து கொள்ளுமாறும் எந்த நூலிலடி சொல்லியிருக்கின்றார் சான்றோர்.

நீல.—வழி பல வழியாயினபோல் படியும் பலபடிகளாய் விட்டன.

மணி.—கற்படி பற்படி யாயினது அல்லவா ?

நீல.—ஆம். அப்பற்படியும் அவர் சொற்படியாய் விட்டது.

மணி.—எங்கே ஆய்விட்டது வதுவை? அந்த எண்ணம் போய்விட்டது. போய்விட்டது.

இன்போ அணுவா மதற்கிடரே மாமலையாம்
புன்போகம் வேண்டிப் புலம்பாதே.

என்ற வாக்கை யறிந்தும் அற்ப வாழ்வில்ஆசை கொண்டு பற்பலவாறு போற்றியும் தூற்றியும், மனதைத் தேற்றியும், சொற்களை மாற்றியும் வருகின்றனர் அல்லவா ?

சுசீலர்.—எண்ணமும் போகவில்லை. யாதும் போகவில்லை. வதுவை இருக்கிறது கொதுவையில். மீட்டுக் கொள்கின்றேன். சான்றோர் கூறியுள்ளவாறே சாற்றினன் யான். சாபம் வந்து நேரும் அற்பம் என்றால். அற்பம் ஆயின் பண்டைக் காலத்துப் பேராசிரியர்கள் அவ்விஷயமாக யாதும் பேசாதிருந்திருத்தல் வேண்டும். பிரமாணங்காட்டியும் பிரமாணமாகக் கொள்ளவில்லை போலும். கவனிப்பாய். திருக்குறள் ஆசிரியராய தெய்வப்புலவர் அறத்துப்பால், பொருட்பால் காமப்பால் என முப்பால் வகுத்தருளியது எற்றிற்கோ ? அத் தெய்வநூல் யாவரானுங் கொண்டாடத் தக்கதன்றோ ? நாமும் போற்றத் தக்கதன்றோ ? பரிமேலழகர் அந்நூலிலுள்ள முப்பாலுக்கும் உரை செய்த தெற்றிற்கோ ? முப்பாலுள் இப்பால் வேண்

டப்படாததாயின் அதை விடுத்தன்றோ மற்ற இரு பாலுக்கும் உரையியற்றல் வேண்டும். பாரெலாம் புகழும் பரிமேலழகர் உரையின் அருமையையும் மேதாவியர்க்கு அணிகலன் ஆய அம் மெய்ந்நூலின் பெருமையையும் விதந்து பேசார் யாவர்.

பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த வுரையாமோ தெளி.

எனப்பாயிரங் கூறவந்த பாவேந்தர் பண்பை அறியாதுரைத்தனையோ? பழிக்காளாக நேரிடும் என்று அஞ்சுகின்றேன் பாவையர் திலகமே! பல்லாசிரியர் பாராட்டும் தொல்லாசிரியராய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனுர் பல்காப்பியத்துள் சிறந்த தொல்காப்பியத்துள் தெருளதிகாரமாய பொருளதிகாரத்துள் சிற்றின்ப இலக்கணங்களையும் காதற் கிழமை இலக்கணங்களையும் பாக்கப் பகர்ந்தபான்மை அறியாய்போலும். தொன்னூலாகிய இந்நூலிற்கு நல்லாசிரியராய நச்சினர்க்கினியர் நல்லுரை கண்டது எற்றிற்கோ? திருவாதவூரடிகளாய மாணிக்க வாசகப் பெருமானுர் திருக்கோவை யாரைத் திருவாய் மலர்ந்தருளிய தெற்றிற்கோ? அப்பெருமான் ஒப்புயர்வில்லா அந்நூலை அருளற்கு அப்பணிந்த பெருமானே ஆதிகாரணர் அன்றோ? கொன்றை யணிந்த பரமேட்டியே கோவை பாடுக என்றாராயின் யான் கூறியதால் யாதோ குற்றம்? நூல்கள் வேண்டுமோயினுங் கொடுவருகிறேன் இப்போதே. என்னை இழித்துப் பேசுதல் அந்நூல்களையும் அவ்வாசிரியன் மார்களையும் நிந்தித்தலையே ஒக்கும்.

மணி.—அவ்வாறு சான்று கூறியாகிலும் சாதிக்க வேண்டும் என்னும் கருத்துற்று சஞ்சலத்தையே விளைத்து வருகின்றீர். வேம்பனைய சொற்களையே வீம்புக்காகப் பேசுதற்குத் தாம்பூலங் கொண்டுவந்தீர்போலும். நாராசங் காய்ச்சி விட்டதுபோ லிருக்கின்றது கேட்குந்தோறும். யான் வீட்டின்பத்தைப் பெறுவதிலேயே விருப்புடையேன். ஞானநூல்களையே ஓதும் ஞானமுடையேன். அத்தகைய நல்லோரையே நாடு மனமுடையேன். வீட்டின்பத்தைக் குறித்து விதந்தோதாத நூல்கள் என்னூல்களேனும் ஆகுக. எவ்வாசிரியரேனும் ஆகுக. வேண்டிலேன். வேண்டிலேன் இவ் வீண் வாதம்.

சுசீலர்.—பொன்னங்கொம்பே! கரும்பனைய மொழியெனக் கழறுது வேம்பென்றதென்னை? வேம்பை வேம்பென்னின் வேம்பென்றே கொள்வேன் யானும். கரும்பை வேம்பென்னல் கற்றோர்க் கழகன்று. அவ்வாறு உபயோகித்திருக்கின்றோர் யாவர்?

மணி.—“கன்னிகை யொருத்தி சிற்றின்பம் வேம்பென்னினும் (வெட்கி நிறுத்திவிடுகிறாள்).

சுசீலர்.—உம். அப்புறம்!

மணி.—விழுப்புறம்.

சுசீலர்.—பாட்டை முடிக்காவிடில் பாவம் சம்பவிக்கும்.

நீல —நீங்கள் ஆரம்பித்துவிட்டீர்கள். நான் முடித்துவிடுகிறேன். “சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே.”

மணி.—நீ முடித்த முடிபே முடிபு.

சுசீலர்.—முடித்தாலும் இப்படிதான் முடிக்கவேண்டும்.

முழுப்பூசனியைச் சோற்றூடு மறைத்ததைப்போல் முடித்த முடியும் முடியாமா! நீ மர்க்கடப்பிடியாக சாதித்தாயேனும், மறந்தே உரைத்தது உன்வாய். நீ என் செய்வாய்? எப்போதும் உண்மை உண்மையென்றே தெரிந்துகொள். நல்ல பிரமாணமே காட்டினும். யான் வேண்டிய பிரமாணமும் அதுவேயாகும். தெய்வமே சொல்லச் செய்தது.

"கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
கைகொள்வள் பந்த வத்திற்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னைஃற்
கருதிநகை யாவ ளதுபோற்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற் சுகா ரம்பமாம்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுக வாரியே"

என்றாரேயொழிய நின் பாங்கி குளறிவழிந்ததுபோல் குழைத்துவிட்டாரில்லை அரிய அடிகளே. ஊட்டின்ப அனுபவமில்லாத நீ வீட்டின்பத்தை நாடுதலைக் கேட்டின்புற்றேன் இல்லை. அஞ்சுகமே! யான் கூறிய நூல்கள் யாவும் வீட்டைக்குறித்த நூல்களேயாகும். நல்லாசிரியர் வாய்ப்போந்த அந்நூட்பங்களைப் பயிலாத குற்றம் நின் குற்றமேயாகும். சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய அந்தமில் இன்பத்தழிவில் வீட்டின்பத்தின் அப்பரிய தன்மை எழுதப்படுந் தகைமையதன்று. ஆதலின அன்றே வரையாது விடுத்தார் விழுமியோர். யான் அவ்வின்பத்தைப் பெறுதலில் விருப்புடையேன் அல்லன் என நீ கூறியதுங் குற்றம். அவ்வின்பத்தைக் குறித்துப்

பேசற்குரிய அதிகாரிகள் யாவர்? நாம் அல்லேம் என உணராததும் பெருங்குற்றம்.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காதலிரு வர்கருத் தொருமித்து—ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

என்ற பாசுரத்தை எங்கோ விட்டுவிட்டனை? இவ்வெண்பா வின் பொருள் உணராது மயங்கிய தென்னே? அச்செய் யுள் உணர்த்திய வழியும் யான் கூறுமாறும் இல்லறமாய நல்லறம் நடத்திப் பல்புகழ் நிறீஇ அப்பற்றை முற்றும் ஒழித்தார் ஆகிய பரிபக்குவிகளால் அல்லவா பெறப்படும் அவ்வீடு. அஃதும் அவனருளால் அன்றோ அடைதல் கூடும்?

"சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்" என்றும்.

நில்லாது தேகமெனு நினைவுண்டு தேகநிலை
நின்றிடவு மௌனி யாகி
நேரேயு பாயமொன் றருளினையையோயதனை
நின்றனுட் டிக்க வென்றால்
கல்லாத மனமோ வொடுங்கிவுப ரதிபெறக்
காணவிலை யாகை யாலே
கையேற் றுணும்புசிப் பொவ்வாதே நாளுமுன்
காட்சியி லிருந்து கொண்டு
வல்லாள ராயியம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க் கேவல் செய்து
மனதின் படிக்கெலாஞ் சித்திபெற லாஞான
வாய்த்துமொரு மனுவெனக் கிங்

கில்லாமை யொன்றினையு மில்லாமை யாக்கவே
இப்போ திரங்கு கண்டாய்.

என்ற பிரமாணத்தால் கல்வியறிவானும் கேள்வியறிவானும் இயற்கை யறிவானுஞ் சிறந்தாராயினும் இயமம், நியமம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியான முதலியன மேற்கொண்டொழுகு மாதவர்க்குத் தொண்டு புரியுமாட்சி யுடையாரேனும், எண்ணியவாறே எண்வகைச் சித்தியும் பெறக்கூடிய பெருமை யுடையாரேனு மெய்ஞ் ஞானங் கைவரப்பெறுதல் அசாத்தியம் என்றல்லவா மகான்கள் கூறியுள்ளார். ஆகலால் வாய்ப்பாட்டால் ஞானியாக மாட்டாய் வனிதா ரத்தினமே !

மணி.—இரண்டுமணி இருக்கும் போல் இருக்கிறதே !

நீல.—இன்னும் பத்தே நிமிடங்கள் இருக்கின்றன.

சுசீலர்.—ஆம். இரண்டு மணிகளே இங்கிருக்கின்றன. நீலானை நீக்கின் நிச்சயமாக இரண்டே மணிகள் என்று நீ யறியாமலா இருக்கின்றாய்.

நீல.—என்னை ஒழிக்கவா வழிதேடுகின்றீர்.

சுசீலர்.—கணக்கே உன்னைக் கழிக்கது. நான் கழிப்பேனா?

மணி.—உனக்காவ தென்னடி ? பருப்பில்லாமலா ?

சுசீலர்.—சரியே சொன்னாய் ! பருப்பில்லாமலா கல்யாணம் ?

மணி.—[நீலானை நோக்கி] என்ன ? பத்தா ? பத்துதானா ? ஒழிய வில்லையா ?

சுசீலர்.—ஆம். பத்து தானா யொழிந்துவிடும். இதோ பத்தா ! நான்தானே பத்தா ?

மணி.—நிமிடங்கள் பத்தா யென்றனன். தாங்கள் என் சிரமப்படுகின்றீர்.

நீல.—நேரமாகவில்லையா? வீண்பழிக்கு ஆளாகவா இப் பித்தவாதம்?

மணி.—ஆயின் போகலாமா?

சுசீலர்.—ஆயினும் போகல் ஆமா? நேரமாகவில்லை. மணி யெனக்குந் தெரியும் மணியே! ஏன் போதல் வேண் டும் என்கின்றாய்? இருத்தல் வேண்டும் இங்கு. நித் திரை செய்தல் நீடாயுளைக் குறைக்கும். தூக்கத்தை விரும்பி அந்த ஏக்கத்தால் அந்தப் புறத்திற்குப் போகத்துணிகின்ற நினக்கு மோக்கம் எவ்வாறு கிடைக்கும்? "நல்லோரை நாடு மனமுடையேன்" "ஞானமுடையேன்" என்ற தெல்லாம் பொய்யோ?

நீல.—இளவரசருடன் இன்றிர வெல்லாம்

மணி.—வீண் பேச்சு பேசிக்கொண்டிருந்தால் நல்லாள் என்பர்.

சுசீலர்.—இதுவரையில் அப்பிரயோசனமான விஷயங்க ளையா பேசிக்கொண்டிருந்தோம். என்ன வாசித்தும் என் பயன்? பெண்புத்தி பின்புத்தியே போலும். அந்நிலையிலிருத்தல் நும்போல்வார்க்குக் கூடா மையே.

மணி.—அரசிலிருப்போராய ஆடவராய தங்களையே பங் கஞ் செய்தது அஞ்ஞானம் என்றால்.

நீல.—நம்மிருவரையு மாத்திரம் பங்கஞ் செய்யவில்லை யல் லவா?

மணி.—நாமும் ஆடவர்களா?

நீல.—ஆம். ஆடவர்களா யிருந்தால் அவதிக்கே ஆளாக வேண்டும். அந்த மேலான நிலைவரு முன்னமே கைவந்து விட்டாரைப் போலவே பேசுவது மல்லா

மல் கன்னியரைப்போலவே கன்னியமாய் நடிக்கின்றனர் இளவரசர். ஆயினும் இளகியநெஞ்சுடையாரே.

மணி.—நன்று சொன்னையடி! கன்னியர்களாகிய நாம் அந்த நிலை கைவரப்பெற்றோர்களே யாவோம். கைவந்தும் விட்டவரே யாவார் இவர் விதிவசத்தால். அரசகுலத்தில் அறிவுடையராய்ப் பிறந்தார் அவ்விதமே நடிப்பரென்பதை அறியாமலே சொல்லிவிட்டாய். இளவரசர் இளகிய நெஞ்சினர் என்றதும் அநுபவம் இன்மையாம். கன்னெஞ்சரா யிருத்தலாலல்லவா கபடநாடக வேடதாரியாய் வந்து கற்பழிக்க இப்பாடு படுகின்றார்.

நீல.—பாடு பட்டவர்களையே பாடுபடுத்தும் அல்லவா? "சும்மா கிடைக்குமா சோணு சலன்பாதம்?"

" இந்தநிலை தேவியநா னெக்குருகி வாடிய
இயற்கை திருவுள மறியுமே "

என்றாரோ பன்னிலையிற்சிறந்த மெய்ந்நிலையாகிய அந்நிலையை யடைந்தோரும்.

மணி.—பக்கத்தில் வருகிற அடி நம்மையே பாதவிக்கச் செய்யும் என்று யோசியாமலும் வாசியாமலும் வீசி வீசிப் பேசினையடி.

சுசீலர்.—மணியே! ஆனந்தத்தை அடைய விரும்புவோர் அடிகளை மறத்தல் இயற்கையே. தண்டமும் விதித்தனை நின் பாங்கிக்கு நன்றாய்ச் சொல்லாவிடில் நாயடி யென்று. அருளிருந்தாலன்றா பொருள் விளங்கும். பூனை கண்மூடிக் கொண்டதால் புவனமுங் கண்மூடிக் கொள்ளுமா? நன்னெறி கைவந்து தீநெறியைக் கைவிட்டவன் நானே. விதியென்பது

நல்வினைக்குந் தீவினைக்கும் பொதுவாதலால் நல்வினை வயத்தாலேயே பெற்றேன் அந்நிலையை யென்று பொருள் கோடலே நலம். திருவுள்ளம் அறிய நெக்குருகிய திருவாளர் மற்றைய அடிகளில் யாதுரைத்தார் ?

மணி.—"இந்நிலையி லேசற் றிருக்கவேன் றன்மடமை
இதசத்ரு வாக வந்து
சிந்தைதுடி கொள்ளுதே மலமாயை கன்மந்
திரும்புமோ தொடு வழக்காய்ச்
சென்மம்வரு மோவெனவும் யோசித்து தேமனது
சிந்தையெனும் வாளு முதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத் தருள்செய் துவாமீ
பார்த்துமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே." என்றனர்.

சுசீலர்.—இதனால் யாதறிந்து கொண்டனை ?

மணி.—பாவலர் பரிகசிக்கத் தம்போல் மனம்போனவாறு மருண்டு பொருள் கூறுவேனென்று நினைந்துவிட்டீர்போலும். எம்மதமுஞ் சம்மதம் என்ன ஏத்தும் எந்தையார் வாக்கிற்கு எளியாள் உரை கூறத்தக்கவள் அல்ல. ஆயினும் எனக்கும் ஆராய்ச்சி உண்டு எனத் தெரிக்கும்பொருட்டும் தாங்கள் தெளியும் பொருட்டும் பொழிப்பாகச் சுருங்க விளக்குகிறேன். அறிவுடையீர் ! இன்றியமையாததாய அவ்வதீத நிலையை அடைவான் பகிரதப் பிரயத்தனஞ்செய்த அருமையை யறிந்து வியந்தாரேனும், அந்நிலையிலேயே என்ஞான்று மிருக்க அவாவுடையரேனும்,

மடமை யென்னும் பகைவன் குறுக்கே அடர்ந்து மனத்தில் குடிபுகுந்து அரசு புரிவனே எனவும், அதுபற்றி சகசமலப் பிணிப்புண்டு மாயவாரிதி யில் ஆழ்ந்த நேருமோவெனவும், அது பற்றிச் சென்மங்கள் பல எடுத்துழல நேருமோ எனவும், அங்ஙனம் பிறவியெடுத்து அல்லலுறு துய் வான் வேண்டியும் அவ்வாணவ மலவீக்கம் நீங்க வேண்டியு மெய்ஞ்ஞான தீரமுந் தந்து காத்தல் வேண்டுமென்று முறைத்தருளினர். யானும் அவ் வாறே பிரார்த்தித்து வருகின்றேன் பித்தனே.

சுசீலர்.—நீயா ? உம். பிரார்த்தித்தாவருகின்றாய்? பிராப்த மில்லாதபோது பிரார்த்தனையாலா வந்து சேரும். வரினும் ஒருகால்.

மணி.—மாயை யென்னுங் கடலில் மாழ்கிக் கிடப்பேன் என்கிறீர்களோ ?

சுசீலர்.—ஆம். கேட்கவாவேண்டும் ? என்னைக் காதலித் துக் கடவுளை நோக்கிப் பிரார்த்தித்தது எங்கே போய்விடும். எண்ணிய குறை நிறைவானபின் அல்லவா அம்மாயை ஒழியும். மாயைக்கும் பிறவிக் கும் மகான்களே அஞ்சினரென்றால் மாதர்கள் எம் மாத்திரம். சின்னாள் இச்சக்கிரவர்த்தியோடு சக்கிர வர்த்தினியா யிருந்து இகபோகங்களை யநுபவித்துச் சர்வதர்மங்களையும் நடாத்திச் சாத்திரங்கள்விதித்த வாற்றான் ஒழுகுங்காலத்து அப்பாக்குவம் எய்தும் முன்புரிந்த தவக்குறையிருப்பின். அக்காலத்தடை யும் அத்துவிதாநந்த அநுபவமன்றோ யாவருங் கொண்டாடத்தக்கதாகும். இப்பருவத்தில் “அத்து

வித வாஞ்சையாதல் அரியகொம்பிற்றேனை முடவன் இச்சித்தபடியாகும்." மலமாயை கன்மந் திரும்பும் தொடுவழக்காய். அதனால் மீளவுஞ் சன்மித்துக் கன்மந் துய்க்க நேரும். அப்போழ்தத்து எத்தகைய அல்லலுக்கு ஆளாகி அலமந்து நிற்பாயோ என் அறிவேன்.

மணி.—"மணம்" "மணம்" என்று மனவேதனையால் மயங்கி நிற்பதாலும் சாத்திரக் கட்டுகளை சாட்சியாக்கி சந்தோஷங் கொண்டிருப்பதாலும் என்னே பயன்? பூவேந்தர் கண்மூடி யிருப்பதுப்போல் இப் பூவையுங் கண்மூடிக்கொண்டோ நிற்கின்றனன்? நான் அறிந்த பிரமாணங்களைக் காட்டுவதாலேயே பிரமித்துவிடுவேனா? இத் தொல்லுலகினர் தொழுதேத்து மத்தொல்காப்பியத்தி னருமையுஞ் செச்சையப்ப னருளுறாஉம் நச்சினார்க்கினியர் நல்லுரையின் பெருமையுந் தாங்கள் மாத்திரமா அறிந்துள்ளீர்? யான் அறிதுள்ளவளன்றே? தொல்காப்பியமொன்றோ அறிந்துளேன் யான்? பல்காப்பியமுமுணர்ந்துளேன். தங்கள் அல்காப்பியமும் ஆய்ந்துளேன். திருக்குறளுந் தெரிந்துளேன். பரிமேலழக ருரையையும் பன்முறைப்பார்த்துளேன். நீர் உரையாது விடுத்த இறையனா ரகப்பொருளும் நக்கீரனார் நல்லுரையும் உணர்ந்துளேன். யான் காதல் கொண்டிருந்ததை நீர் எவ்வாறறிவீர்?

"மதிமயங்கி மணம்பேசி விரும்பித்தாலி கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலை தானே"

என்பதை வாசிக்கவில்லை போலும்.

"மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகைமன்னுகா ரோணத்தானை
நினையுமா வல்லீராகி லுய்யலா நெஞ்சி னீரே"

என்றருளினரோ திருநாவுக்கரையர். மணவினையால் மன விருள் ஒழிந்து விடுமா? இப்பந்தத்தில் அகப்பட்டுமல அவாவிசிற்றலும் அதிசயமே.

சுசீலர்.—அதிசயமே! அதிசயமே! அகத்தினழகு முகத்தில் விளங்காதா? நின்காதலை நின்வாக்கே வெளிப்படுத்தி வருகிறது. நினக்கு அக்காதல் இல்லாவிடத்து எனக்கு எங்ஙனம் கெழும். அப்பிரமாணங்களை அறிந்த விவேகியெனத் தெரிந்துதான் அங்ஙனம் செப்பினேன், கல்வி அறிவில்லாக் கன்னியைக் காதலித்துக் கடிமணம் புரியக் கருதுதல் கவலையே தருமென்பது உண்மைதான். மணம் புரிந்த பின்னரு மாதொல்லைதான். ஆயினும் அறிவானுன்ற என்போல்வார் நின்னை யொப்பாரைத் திருமணம் புணர்தல் உலகம் உவந்து வியக்கத்தக்கதே. மோனுக்கேற்ற மொட்டி வாய்ப்புழி சேர்ழிவுமுளதோ? உனது சிவசிந்தனையுஞ் சைவதவவடிவும் காண்டொறுங் காண்டொறுங் களிபேருவகை கொண்டு ஆனந்திக்கின்றன விழிகள். மாற்றங்கேட்டு மகிழ்கின்றன செவிகள்.

மணி.—இங்ஙனம் நீர் வதுவையை நினைந்து வருந்துதலினும் பிரமசாரியா யிருந்தே பிரம சொருபத்தை யறிய முயலல் நலமாயிருக்குமன்றோ? என்பொருட்டு ஏன்

எங்கல்வேண்டும்? என் கற்புக்கு ஏன் உலைவைக்க வேண்டும்? அதனால் பாபம் சித்தியாதா? வேண்டாம். இவ்வாச்சிரமமே தக்கது. வழிதெரியாது திகைத்து நின்ற உமக்கு வழியுங் காட்டிவிட்டேன். நித்திரை பங்கஞ் செய்து நின்றது போதும். நில்லாது போம். இனி வார்த்தை வேண்டாம்! (நீலாளை நோக்கி) வாடி போகலாம்.

நீல.—விரதமுங்கெட்டுச் சுகமுங்கெட்டு விருதா காலட்சேபத்தில் நல்ல காலத்தைச் செலவிட்டுத், தகாத விஷயமென்றும் தர்க்கத்தில் தலையிட்டு, உம்மைத் தொட்டு அவர் சஞ்சலப்பட்டுக், காத்தில் உள்ள வெண்ணெயை விட்டு,

மணி.—உஸ்! என்னடி! தொட்டா? என்னைத்தொட்டா? உம்! தெய்வம் நன்றாய்க் கொடுவந்து சேர்த்ததடி உன்னையும் இள மன்னையும்.

சுசீலர்.—யான் முன்னும் பிரமசாரியே. இப்போதும் பிரமசாரியே. அவ்வாச்சிரமமும் நின்னாலேயே நிலையழிந்தது. சேலை கட்டிய சேல் விழியாரை நம்புவதால் இல்லறமுங் கெட்டுத் துறவுந் தட்டுத்தடுமாற்ற முற்று துறவிலே உயிர்துறக்க நேரும்போலும்.

நீல.—ஈதென்ன அநியாயம்?

மணி.—(நீலாளை நோக்கி) இங்கு வார்த்தைபாடுதல் நமக்குத் தகாதென்று கூறியும் நீ கேளாததாலல்லவா இவ் வீண்பழிக்காளாக நேர்ந்தது.

சுசீலர்.—நீ கேளாததாலேயே! நின் பாங்கி என்செய்வள்?

மணி.—தயைகூர்ந்து வார்த்தைபாடுதலை விடுத்து வந்த வழியே மீளுங்கள்.

சுசீலர்.—அங்ஙனமே! வதுவைக்கு வழி யேற்பட்டால் வந்தவழி நோக்கவேண்டியதுதான். வார்த்தை யேதுக்கு? அப்பப்பா! இப்பாடா? என் வாட்டங் கண்டு கல்லும் உருகுமே. நின் கன்னெஞ்சம் உருக வில்லையே! நின் குறிப்பை இன்னுந் தோகில்லலேனே!

மணி.—என்னை விட்டுவிடுங்கள்! தாங்களும் இங்கு வருவீர்களென்று தெரிந்திருந்தால் நந்தவனத்திற்கு வந்திருக்கமாட்டோம் நாங்களும். உருகவில்லை யென்றறிந்தும் என் உபத்திரவப்படுத்தல் வேண்டும்? மனதை நெய்யாயுருக்கினும் உருகமாட்டேனென்று மல்லாடுகிறதே! நெருப்பும் இல்லையே உருக்க. குறிப்பறியாதார் குவலயம் ஆளமுடியுமா?

சுசீலர்.—உருகாது. உருகாது. ஏன் உருகும்? உருகினால் உயிர் நீங்காதல்லவா? நீக்குதற்கு வழி உருகாதிருத்தலேபோலும்.

‘நன்மனைதோறும் பெண்களைப் படைத்து
நமனை யேன்செயப் படைத்தாய்’?

மணி.—(நீலாளை நோக்கி) இதுவரையில் சிரோமணி, சிகாமணி யென்றனர்.

நீல.—அம்மட்டோ? சிந்தாமணி, விவேகசிந்தாமணி யென்றுஞ் சொல்லினரே!

மணி.—பலவித மணிகளென்றனர். இப்போது விவேக சூனிய மணி யெனக்கருதி “நாரியரைப் படைத்த பின் நமனை என் செயப்படைத்தாய்” என்றும் உயிருக்கு உலைவைப்பர் என்றும் வாளா வுரைத்து வருந்துகின்றார். இயமனுக் கஞ்சுவோர் இளவரசராவாரா?

சுசீலர்.—நமனென்றும் விட்டுவிடுவேனு ?

மணி.—எமனையும் விழுங்கி ஏப்பம் விடுவீரா ? என்னை விழுங்கமுடியாத நீங்களா நமனைப் பலஹாரஞ் செய்யப்போகின்றீர்கள் ? என்னை இயமன் என்னல் பொருந்தாது. நன்மனைகள்தோறும் உள்ள நங்கையரையே நமன் என்றனர். நந்தவனத்துள்ள நாரியர் என்ருரா அப்பபாட்டைச் செய்தவர் ? மணிமேகலா என்னும் பெயரும் போய்விடுமென்று முன்னமே யான் சொல்லினேன் அன்ரு ? ஆடவர் குணம் அடிக்கடி மாறிவரும்போலும் என நினைந்துதான் அவ்வாறு கூறினேன். பட்டம் பெற்றது போதும். இவ்விடத்தைவிட்டுப் பறக்கவேண்டியதுதான்.

[தோழியோடு மாளிகைக்குப் போகின்றனள்.]

சுசீலர்.—ஆணை கூறுகின்றேன். அடாது போதல்.

மணி.—[நின்று] ஆணையுங்கூறி ஆயிற்று. ஆட்சேபனை ஏனோ ? உயிரைப் போக்குதற்கா உய்யானவனத்துற்றது. ஆணையைப்போற்றி அடியாளை நினையாதிருத்தலே உத்தமம். திருநீலகண்ட நாயனுரும் " மற்றை மாதரார் தமையும் என் மனத்தினுந் தீண்டேன் " என்ருர்.

சுசீலர்.—திருநீலகண்டர் " மற்றை மாதரார் தம்மையே " மனத்தினுந் தீண்டேன் என்ருர். யான் நின்னையன்றிப் பிறரைத் தீண்டேன். இயற்பகையார், இளையான் குடிமாறர், அமர்நீதியார், அப்பூதி அடிகள், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் முதலியோர் இல்லறத்திலிருந்தே ஈசன் இணையடி யடைந்து இன்புற்றனர். அங்ஙனமே நாமும் அன்புற்று

இனிதே அவ்வறம் நடத்தித் திருநாவுக்காசு சுவாமி கள் அருளியது போல அவ்வினையுளேயே யழுந்தாது விமலனைப் போற்றி வேண்டியவாறு வீடுபெற் றுய்வேமாக.

மணி.—(மௌனம்)

சுசீலர்.—இனி மௌனஞ் சாதித்தல் உனக்கும் அழகல்ல. இக்கு வார்த்தையே கூறி நிற்றல் எனக்கும் அழகல்ல. இம்மௌனம் நினது சம்மதத்தையும் எனது தாமதத்தையுமே காட்டுகிறது போலும்.

[காதலியின் காத்துள்ள கைக்குட்டையைப் பற்றியீர்க்க அதிலுள்ள நிருபம் கீழே விழ அதை யெடுத்து]

அகவற்பா

பொங்குவெண் டிரைசூழ் மங்களப் புவியிற்
செங்கோல் செலுத்துந் துங்கவ னெவனோ
வடமொழி யுடன்தென் வளங்கெழு மொழிக்கடல்
வாரிவாய் மடுத்த மன்னவ னெவனோ
ஆதுலர் தமக்கு மடைந்தோர் தமக்கும்
வரையிலா தளிக்கும் வள்ளல் எவனோ
படைகுடி கூழமைச் சுடனட் பரணெனு
மறுவகைச் செல்வமு மமைவரப் பெற்ற
புண்ணிய னாய பூபதி யெவனோ
விஜயமார்த் தாண்ட வேந்தன் பயந்த
வெல்லருஞ் சீர்த்தி விறலோன் எவனோ
தண்ணளி யுடனொரு வெண்குடை நிழற்செயக்
கண்ணிமை போலக் காத்தளித் திடுவா
னுதித்தவர் தம்மு ளுயர்ந்தோன் எவனோ
அஷ்டலட் சுமிகளு மாணைக் கஞ்சி
யேவற் செய்யு மேந்தல் எவனோ

ஜெயஜெய வென்ன ஜெயவொலி யார்த்து
வாழிய வாழிய வாழிய மணமென
வண்டமிழ் வாணரு மாதவ முனிவரு
மகங்களி துளும்பி ஆசீர் கூறச்
சுசீலையை மணக்குந் தூயவ னெவனே
சுசில னென்னத் துலங்குஞ் சீரிய
நாமம் புனைந்த நாயக னெவனே
அப்பெருந் தகையா மன்புடைத் தோன்றல்
காண்டல் வேண்டுங் காண்டல் வேண்டும்
அகற்றல் வேண்டும் அடியாள் ஐயம்
என்னேன் பென்றே எளிதின் முற்றுறு
மதனா புரத்து மன்னன் புதல்வனுங்
காந்தனே என்னைக் கடிமணம் புரியு
முரிமை மிக்கான் உரைத்தல் வேண்டும்
உனதரு மாதுலன் உட்கிடை தன்னை
அறிந்தனை கொல்லோ அயர்ந்தனை கொல்லோ
திருவுளச் சம்மதந் தெரித்தல் வேண்டும்
கழிபெருந் துன்பக் கடலிடைப் படிந்து
காதல இங்ஙன் கண்ணீர் சொரிவல்
பெரியோய் நின்னைப் பேதையான் காண்பான்
போவாக் கொண்டு பேதுறு வேனல்
ஆதலி னுத! அன்புடன் வருகவென்
கவற்சியைப் போக்கக் காவல வருக
வருகவுய் யான வனத்திடை வருகையை
யெதிர்பார்த் தேங்கு மெளியா ளாக
வருகவென் வாழ்வே! வருகமா தவமே!

[என வாசித்துச் சந்தோடமுற்று

நேரிழையே! நீராழங் காணினும் நினது நெஞ்சாழங் காண்டல் அரிதே. அரிதே.

சுசி.—பஞ்சுகக்குஞ் சீறடியும் பண்ணுகக்குந் தேன்மொழியும்
ப்டைந்து வாழ
மஞ்சுகமே ! நின்சுகமே பெறநயக்கு மென்மீதி
லளவி லாசை
நெஞ்சகத்து வைத்துளநீ எட்டுணையு மியானறியா
நெறிமேற் பூண்டு
வஞ்சகமாங் களஞ்சியந்தை வாரியிரைந் திட்டதேனே
வழுத்தி டாயே

மணி.-கள்ளிருக்கு மலர்க்கமலப் போகுட்டிருக்கு மோதிமவா
கனத்தோன் றூய
வள்ளிருக்குந் திருநாவில் வாழ்ந்திருக்குஞ் செல்வியருள்
வாய்க்கப் பெற்றுந்
தெள்ளிருக்கு மருநூலுக் குள்ளிருக்குங் குறிப்பறியத்
தெரிந்த நீயென் [லையா
ளுள்ளிருக்குங் குறிப்பதனை யுணர்ந்துவக்கத் தெரிந்தி
லுரைக்கக் கேண்மோ.

மணி.—[*கண்ணீர் ததும்ப*]

ஆவியோ டாக்கை யாவையு முனக்கே
அமைந்தன னெயனென் றிருந்தேன்
பூவின னுய நான்முகன் பொறித்த
புள்ளியின் வன்மையோ அறியேன்
தீவினை யோவென் றாதையின் மதியைச்
சிலைத்ததத் தெய்வமுஞ் சதியே
பாவியேன் பண்டைப் பகாவொண்ணுத
பழியெனைப் புரிந்ததுே அறியேன்.

சுசீ.—*என்ன ? கண்ணீரா விடுகின்றாய் ! கண்டே ! பழமே ! தேனே ! கண்டு பயந்தேனே ! என் விழி நீர் பெருக்கி ஏங்குகின்றாய் ? ஓ ! பூவில்வாழும்*

பிரமனை நினைந்தோ? ஆம்! அஃதே கூறினையச் செய்யுளில். அவன் பொறித்த புள்ளியின் வன்மையை நினைந்தும் வருந்தலாமோ? இங்ஙனம் புலம்புவதினும் அப்புண்ணியனைப் புகழ்தல் வேண்டும். ஏனெனில் அவன் பொறித்த புள்ளி வன்மை யுடையதே. ஆதலால் என்மீது காதலை யெழுப்பி நின் பிடர் பிடித்து உந்தி விழி நீர் உகுத்து உருகச் செய்து உய்யானவனத்தே கூட்டிவைத்தது நாம் எண்ணியவாறே. அவ்வன்மையே யன்றோ ஜயசீலருக்கு அபஜய சீலரென்ற நாமத்தை நிலைக்கச் செய்தது. உன் தாதையின் மதியைச் சிதைத்தது உனது தீவினையல்ல. நீ செய்த நல்வினையும் அவனது தீவினையுமே யாம். அத்தெய்வமுஞ் சதி புரியுந் தன்மை யுடையதன்று. நானிலத்துள்ள மக்களுக்கு நன்மையே செய்யவல்ல நல்ல தெய்வம் நாம் தொழுந்தெய்வம். ஆயினுஞ் சத்தியந்தவறிய ஜயசீலருக்கும் அவரைச் சார்ந்தார்க்கும் சதி புரிந்த தெய்வம் என்பதிற் சந்தேகமே யில்லை. அவர்கள் கர்மம் வழி விட்டவாறு உதித்த கெடுமதிக்குத் தக்க தண்டனையே தந்தனர் சூரபன்மனைச் சங்கரித்த சுப்பிரமணியப் பெருமான். ஆதலால் நீ இவ்வாறு துக்கிப்பது அழகன்று. அன்றியும் பாவியென நின்னைப்பழிக்கத் துணிந்ததைக் கேட்டமுதல் பதைக்கின்றதே என் ஆவி. உன்காதல் முற்றுதபோதன்றோ உள்ளம் நைந்து பாவி யென்னல் வேண்டும். நிற்க நின் தந்தையின் அபிப்பிராயத்தை நீ எங்ஙனம் அறிந்தனை?

மணி.—பிராணேசா ! தமது மாதுலர் வரைந்த நிருபத் தால்.

சுசீலர்.—மாதுலனு ! யாவன் ? அப் பாதகனு மாதுலன் எனக்கு ?

மணி.—தாயற்ற என்னை அத் தந்தையுஞ் சதி செய்தா னன்றோ ?

சுசீலர்.—பிராண நாயகி !

நினக்காவதென்ன ! அது குறித்தோ இன்னும் வருந்துகின்றனை ? தாயற்ற நினக்குற்ற தாயுந் தந்தையு மாகும் அத்தயாபரன். அவ்வருள் வள்ளலாய இறை யன்றோ நின்குறையை நிறைவாக்கிற்று. இந்த மதியை இப்போது நினைந்தாவதென்ன ? இனி நடக்கும் விஷயங் களைக் கவனித்தல் வேண்டும். காலாதீதமாகிறது எனி னும் நின்னைப்பிரிதற்கு மனமில்லை. மதிசீலனும் கார்த்தி ருப்பன் மணியே ! நானே நினைச்காணவும் நேருமோ ?

மணி.—நேரும். இங்கிருக்க நேரின் அன்றோ இறையே ! அடியாளைக் கோருவதுபோற் காணநேரும்.

சுசீலர்.—ஏன் ? எங்கு செல்கின்றனை ?

நீல.—உரிய வனத்திற்குத் தங்கள் உத்திரவு பெற்றேகவே உத்தேசம்.

சுசீலர்.—உரிய வனமா? எவ் வனமோ? இவ் வுய்யான வனம் உரியதன்றோ?

மணி.—பூவேந்தே!புட்பவனம் அடியாளுக் குரியதன்றோ?

சுசீலர்.—யாதோ சந்தேகம்? நினக்குரியதேயாக என்னைக் கேட்பதேனோ?

நீல.—கேள்வரைக் கேளாமலேயே அங்கிருக்க நேருமென் றனரே அம்மையார். கேட்டிலிரோ ?

சுசீலர்.—அரசிக்கேற்ற அமைச்சியல் அறிந்திருக்கின்றனை. பின் வருவ தோர்ந்தே பேசுகின்றாய். மேகலை உன்னைப்பாங்கியாகப்பெற்றது மென்பாக்கியமேயாம் மணியே! அங்குபோதற்கு அவசியம் என்னோ?

மணி.—இந்திருபத்தில் இரண்டோர் தினங்களுக்குள் இங்குவருவதாக உத்தேசித்திருப்பதாய் வரைந்திருக்கின்றார். ஒருகால்வரினும் வருவார்! அவர் முகாலோபனஞ் செய்ய எனக்குக் கருத்தில்லை யாதலாலும் தாம் வனவேட்டை யாடும் பொருட்டு நிருமித்துள்ள பலவனப் பமைந்த அப் புட்பவனத்தின் காட்சியைக் காணப் போவா வுடையேன் ஆகலாலும் அங்கு போதல் அவசிய மெனக் கருதுகின்றேன்.

சுசீலர்.—சாசவசனி! சாச சல்லாப மொழிகள் கூறி உல்லாசமாயிருத்தற்குரிய ஏகாந்தமான இடம் அதுவேயாகும். உண்மையே யுரைத்தாய். எற்குகந்த* புட்பவனமே! நிற்குகந்த புட்பவனமே விரும்பினையோ? அப் † புட்பவனத்தைப் புட்பவனமாக்கப் புட்பவனமே! போதல் அவசியமே. ஆயினும் காட்சிகள் பல அங்கமைந்து கிடத்தலால் போதல் அவசிய மென்ற வாக்கியத்தை நின் வாக்கினின்றும் கேட்கச் சம்மதியேன்.ஏனெனில் நின்னைக் காணுங்காட்சியேபெருங் காட்சியென மகிழ்ச்சி யெய்தி இருத்தலிலேயே கருத்துடையேன் ஆகலின். ஆயினும் நின்னாலேயே அவ்வனத்திற்கு வனப் புளதாக வேண்டுமாக நீ போதல்நலமே. நினது செப்பற்கரிய வனப்பினுஞ் சிறந்த

* புட்பம்=பூ=அழகிய, அனமே=அன்னமே.
† புள்+பவனம்=பறவைகள் உறையும் இடம்.

வனப்புடையதன்று அவ்வனமாயினும், வனமோ ஒளியில்லா வனத்திற்கு வனப்புளதோ? நீயில்லாவி டத்து அவ்வனம் வனமேயாகும். நீ எண்ணியவாறு செய்தல் அவசியமே அக்காட்சி நின் காட்சியைக் கண்டு வியத்தல் வேண்டுமாதலால். ஆயினும் ஜயசீ லருக்கு அஞ்சி அங்குபோதல் எனக்கு யுக்தமாகத் தோற்றவில்லை. அவர்யாது செய்வர் என்றஞ்சுகின் றனை. மறு புலத்து மன்னர்கள் எத்தகைய ஆண்மை யுடையாரேனும் அரியினைக் கண்ட அத்தியைப் போல் அஞ்சி யோடி ஒளிப்பார் என்தந்தையின் பேரைக் கேட்டமாத்திரையானே யென்றறியாய்போ லும். அவரேனுமாக, எவரேனுமாக, நினக்கு யாது ங்குறைவு வரவொட்டாது நின்னைப் பாதுகாப்பேன் யான் என்பது நிச்சயம். விஜயப் பிரதாப சீலர் ஆணைக்கு மாறாக யாதும் நடவாது. ஜயசீலர் சாமர்த் தியம் விஜயப் பிரதாப சீலர் முன் ஒன்றும் செல்லா து. செல்லாது. சுசீலனது கூர்வாளுக் கிரையாவார்.

மணி.—அத்தனுக் கஞ்சுகின்றேனில்லை அப்புட்பவனத் தையே..........

சுசீலர்.—நாடுகின்றதோ இப்பூவைமனம். அங்ஙனேசெய்க.

மணி.—என் ஆருயிரே! தாங்கள் அங்கு....... ..

நீல.—வாராம லிருப்பரா?

மணி.—மறந்துவிடின்,

சுசீலர்.—மறவேன். மறவேன். மறப்பேனோ? மணிமே கலையை மறந்துமா? எங்ஙனம் துணிந்தனை அங்ங னம் கூற. தரிப்பேனோ? தரியேன். தரியேன். கண முந் தரியேன். சொரூபாலங்கார சுந்தர மணியே!

நின்னை அரைக்கணம் பிரிந்திருக்கவும் தரியேன். எனது ஆன்மா அங்கும் ஆகம் இங்கு மிருக்கும்.

மணி.—எப்போதோ வரு......

நீல.—இப்போதே வாச்சொல்லினும் வருவர். எப்போது வேண்டினும் வருவர்.

சுசீலர்.—நாளைவருவல்.

மணி.—நாளையா ?

நீல.— நாளையல்ல. அஞ்சற்க ! இன்றே ! இன்றே வருவர் போலும். இன்று என்பதையே நாளை யென்கிறார். இப்போதே இரண்டேமுக்கால் ஆகிறதே. அவர் குறித்ததினம் பிறந்து இரண்டேமுக்கால் மணி நேரம் ஆகிறது. இன்னும் அந்நாள் வந்ததில்லை யென நினைத்தார்போலும். [இளவரசரைநோக்கி] தாங்கள் நம் மணியோடு வார்த்தையாடி மகிழ்வெய்தி யிருந்தீராக மணியைக் கவனித்தி ரில்லை. தாங்கள் நாளை யென்னுது இன்று யென்றும் அங்கு வரும் வேளையும் கூறிவிடி னலமாகும் வேளே ! இல்லா விடத்து நில்லா தாவி.

[மணிமேகலை பாங்கியின் அறிவிற்குச் சந்தோஷித்து நகைக்கின்றனள்.]

சுசீலர்.—அஞ்சேல் ! அங்கு நின்னை விடுத்து இங்கு என்செய்ய ? இன்றே வருவல். 10 மணிக்கு அவ்விடம் பரிமீதேறிப் பரிந்து வருவல்.

மணி.—உண்மை தானே ? சீக்கிரமே !

சுசீலர்.—சித்திரக்கலாபமயிலே ! சீக்கிரமே வருவல்.

நீல.—வாருங்கள் அம்ம ! போது போகிறதே.

மணி.—ஆம். யாரேனும் வந்துவிடின்.

நீல—ஆம். அதற்காக அஞ்சுகின்றேன் இல்லை. இன்றிரவெல்லாம் கண் விழித்தீர்களே. சற்று நித்திரை செய்தால் நலமா யிருக்கு மன்றோ.

மணி.—வேண்டாம். போகலாம்.

நீல.—ஆம். அம்ம, வருக.

மணி.—வருகையே எதிர்பார்த் திருப்பேன்.

நீல.—பத்து என்றூர் ஆயினும் தம்பாலுள்ள பற்று ஒன்பதுக்கெல்லாம் கொடுவரும் அப்பதியை.

சுசீலர்.—மணியே! தனியே செல்லுந் துணிபுளதோ நினக்கு?

நீல.—அரசே! அதிசீக்கிரமாகவும் அதிஜாக்கிரதையாயும் அழைத்துச் செல்வேன் எனது நலவினை. அக்கவலை தங்களுக்கு வேண்டாம். அவ்வாறு செய்தல் எனது கடமையன்றோ?

சுசீலர்.—தக்க துணைவியே யாவள் நீலாள். செல்க என் செல்வமே!

மணி.—அன்னை பெற்றேன் அடியாள் ஆயினும் அருமைத்துரையே! விரும்புவல் ஒன்று.

சுசீலர்.—யாது விரும்பினும் பெறுதி.

மணி.—தங்கள் கணையாழியையே.

சுசீலர்.—வேண்டின் நின் காத்தாலேயே எடுத்துக்கொள்க.

மணி.—[கணையாழியைக் காத்தால் எடுத்து அணிந்துகொண்ட பின் தனது மாளிகைக்குப் போகின்றனள்.]

சுசீலர்.—கண்மணி! [அழைக்கின்றனர் மீண்டும்.]

மணி.—வேண்டிய தென்னையோ? [பாங்கியைக்கேட்கின்றனள்.]

நீல.—ஆம். தம்மையே,

சுசீலர்.—நின்னையே நேரிழையே! மறந்தேன். நின் கணையாழியை மறந்தேன். தருவாயாக.

மணி—[விரலினின்றும் எடுக்கும் போது]

சுசீலர்.—மெல்லியலே! உம். அருமையான விரல் நோகப் போகிறது. பக்குவமாகக் கழற்றுகிறேன்.

[தானே எடுத்துத் தன் விரலில் அணிந்துகொள்கின்றார்.]

நீல.—விசேட மொன்றுமிலதே. வேந்தே! காலமாகிறது.

மணி—புறப்படுதல் வேண்டுமன்றோ? உத்திரவுதானே பூமானே.

சுசீலர்.—(கண்ணீர் விட்டுக்கொண்டு) எங்ஙனம் பிரிவேன் கலைமானே! எவ்வா றுயிர்வாழ்வேன். செந்தேனே!

[மெய்ம்மறந்து நிற்றல்]

மணி.—ஏன்.

சுசீலர்.-தமிழணங்கைப் பிரிந்தந்தா ரணியில் வாழ்வேனோ.

தமிழ்தமிழென் றெவ்வெவருந் தாலசைக்கு மிம்மகிமை
தமியனுங்கின் றுணர்ந்தினையே தமிழணங்கே! வாழியரோ.

இமிழ்திரையா ரார்கலிசூ ழிவ்வுலகு மெவ்வுலகும்
அமிழ்தமெனப் பாராட்டு மருமைமிகுந் தமிழணங்கே!

பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றறியாப் பேதையற்குச்
சீரின்பந் தருவதருஞ் செந்தமிழென் றுணர்ந்தினையே.

சொற்றிடினும் வாய்மணக்குந் தொட்டிடினுங் கைம்மணக்குங்
கற்றிடினும் புகழ்மணக்குங் கவின்தெரித்தல் தகவேயோ.

தீங்கனியே நீயுரைத்த தீங்கவியைச் செவிமடுத்தேன்
ஈங்குதனியேன் செயல்மறந்தேன் எழிலணங்கே! ஓங்குகவே.

இனித்தநறுந் தேனினுமிக் கினிமையெமக் கூட்டுகின்ற
தனித்துலவுந் தகைமைதனைச் சாற்றலுமென் னளவேயோ.

புலவரெலாங் கூட்டுணவிப் புவனமெலாம் வழங்கிடவே
நிலவுமுன்றன் பெருமைதனை நிகழ்த்திடலென் னளவினதோ.

சிவானந்தத் தேன்ததும்புந் தெள்ளுதமிழ்ப் பெரும் பயனும்
பவானந்தப் பேறடைந்தேம் பண்ணுதவம் பலித்ததுவே.

தமிழறியுந் தெய்வமெனத் தனிமுதலும் விளங்குமெனில்
தமிழருமை யறியாதார் தவம்புரியாத் தன்மையெனே.

மெய்ம்மறையுங் காண்பரிய விழுப்பொருளைத் தூதுசெலச்
செய்ததெனி லந்தமிழின் றிறந்தினையா ருரைப்பவரே.

அகத்தியனுர் முதலாய அளவில்பெரு முனிவரெலாஞ்
சகத்தினின்மேம் பட்டதெலாந் தண்டமிழா லன்றுகொலோ.

மணி.—வருந்தற்க. [கண்மழை பொழிந்த வண்ணமாய்] வருக சீக்கிரம் சீமானே !

சுசீலர்.—ஆம். போதாயிற்று. போம். வருவல்.

[மூவரும் நந்தனவனத்தை விட்டு நீங்குகின்றுர்கள்.]

மணி.—[மாளிகைக்குப் போகும்போது பாங்கியை நோக்கி] வனஜா நித்திரைசெய்து கொண்டிருப்பாளோ ?

நீல.—அம் மூதேவிக்குச் சொந்த வேலைதானே அது.

மணி.—மாகதா ! [அழைக்கிருள்.]

நீல.—அவள் விழித்திருந்தாலும் தூங்குவதைப் போலவே நடிப்பாள்.

மணி.—நடித்தால் என் செய்வள் ? [பேசிக்கொண்டேபோய் தனது மஞ்சத்தின்மீது உட்காருகின்ருள்.]

நீல.—காலதாமஞ் செய்கின்றீர்களே !

மணி.—அவர்கள் யாது செய்கின்றனர் ? போய்ப்பார் !

நீல—[சென்று பார்த்து] நல்ல நித்திரையி லிருக்கின்றனர்

மணி.—இதுவே சமயம். நமக்கு வேண்டிய [இளவரசர் வேட்டை யாடுதற்குரிய] வுடைகளை யெல்லாம் கொண்டுவா !

[உடைகளைக் கொண்டுவந்த பின்னர் இருவரும் உடுத்திக்கொண்டு புட்பவனத்திற்குப் புறப்படுகின்றனர்.]

முதற்பாகம் முற்றிற்று

MADRAS. G.C. LOGANADHAM BROS. THE GUARDIAN PRESS,